D
V211, 31'N6'
N67.5.2
65024

MADRAS STATE ARCHIVES
49601
22 JUL 1968
EGMORE, MADRAS
767

வெளியீடு—7—5—1968]
Issued—7—5—1968]

தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

வியாழக்கிழமை, 1967 ஜூலை 13
Thursday, 13th July 1967

தொகுதி V—எண். 2
Volume V—No. 2

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

211,31 'N67
N67.5.2

V211,31 N67
N67.5.2
65024

பொருளடக்கம்

	பக்கங்கள்
1 வினாக்கள்—விடைகள்	93–144
2 உரிமைப் பிரச்சினைகள்—	
(அ) உறுப்பினர் திரு. டி. மார்டின் மீது .. .. (இ) முரசொலி நாளிதழில் கோவை [illegible] கைகள் பற்றி வந்துள்ள செய்தி	145–153
3 ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்—	
(அ) மேட்டூரில் உள்ள மதரூஸ் அலுமினியத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலை நீக்கமும், உண்ணு நோன்பும்	153–154
(இ) கோவை பொறியியற் கல்லூரியில் 'ராகிங்' (ragging) காரணமாக மாணவர் தற்கொலை	154–155
4 கவன ஈர்ப்பு—பார்க் டவுன் தொகுதியில் சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப் படுதல்	155–156
5 1967–68-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி)—	
(அ) கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள் அச்சுத் துறை .. .. (இ) கோரிக்கை எண் XXII—கதர் .. .. .. (உ) கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன .. .. (எ) கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள் உதவி மானியங்கள்	156–193 194–241
6 அறிவிப்பு—அண்ணாமலை பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்தல்	193–194
7 பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்	241

MADRAS STATE ARCHIVES
22 JUL 1968
MADRAS

தமிழக சட்டப் பேரவை

வியாழக்கிழமை, 1967 ஜூலை 13.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு, சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் வினாக்கள்-விடைகள். 296 எண்ணுள்ள வினா தள்ளிவைக்கப்படுகிறது.

இலவசப் படிப்பு.

*297 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வி முதல் கல்லூரிப் படிப்பு வரை உணவு-உடை-புத்தகம் முதலிய சகல விதமான பொறுப்புக்களையும் சர்க்காரே ஏற்று, படிக்க வைக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், எப்போதிருந்து அமுலில் வரும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : இப்பொழுது மிகவும் பின்தங்கிய ஏழை மக்களாகியவர்களுடைய குழந்தைகளை படிக்க வைக்க வேண்டும் என்று தான் நாம் உதவித் தொகைக் கொடுப்பதாக இருந்தாலும், மேற்கொண்டு அவர்களுக்கு எவ்வளவோ பணம் செலவு ஆகக்கூடிய நிலைமை இருக்கிறது, விலைவாசி உயர்ந்திருக்கக்கூடிய இந்த நேரத்திலே. ஆகவே தான் இன்று அவர்களுக்கு எல்லாமே இலவசமாக இல்லை என்று சொன்னாலும், ஹாஸ்டலுக்கு ஆகக்கூடிய செலவுத் தொகையையும், புஸ்தகங்களுக்கு வேண்டிய செலவுத் தொகையையும் மட்டுமாவது சர்க்கார் ஏற்றுக்கொள்ள உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை. சாதாரணமாக துவக்கப் பள்ளிகளில் மதிய உணவு தருவதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டு வருகின்றன. சீருடையைப்பொறுத்த வரையில் ஆங்காங்கு நன்கொடைகள் அவர்களாகவே வழங்கும் முறை கையாளப்பட்டு வருகிறது. அரசாங்கம் கல்விக்காக ரூ. 54 கோடி செலவழித்தாலும், கல்விப் பயிற்சி அளிக்கக்கூடிய அத்தகைய முயற்சிகளை மேற்கொள்வதற்குப் போதுமான அளவில் இன்னும் செலவிடப்படவில்லை என்ற குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய யோசனை நிதி வசதி இல்லாத காரணத்தினால் இப்பொழுது இல்லை ; நிதி வசதியைப் பொறுத்துத்தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

*298 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சர்க்கார் சிப்பந்திகளின் பிள்ளைகளுக்கு கல்லூரிப் படிப்புப் படிக்க ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மாதம் ரூ. 200 சம்பளத்திற்கு உட்பட்டவர்களுக்காவது இது போன்ற உதவியைச் செய்ய இனிமேலாவது ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதுவரையில் ரூ. 1,500 வரையில் தான் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களுக்கும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் அரைச் சம்பளம் என்ற வகையில் சலுகை இருந்துவந்தது : தாழ்த்தப்பட்டவர்கள், பிற்பட்ட வகுப்பினர், பழங்குடி மக்கள் ஆகியோர்களைப் பொறுத்து, ரூ. 2,000 என்ற அளவுக்கு இந்தச் சலுகை வரம்பு இந்த ஆண்டு தான் உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற வகுப்பினர்களுக்குப் பொருளாதார அடிப்படையில் ரூ. 1,500 என்ற அடிப்படையில் இந்த ஆண்டு தான் பி. யூ. ஸீ.யில் இலவசச் சம்பள வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இப்பொழுது அதை உயர்த்துவதாக இல்லை.

* 299 வினா.—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கல்லூரி வரை இலவச கல்விச் சலுகை அளிக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன் : ஏற்கனவே ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு சகல துறைகளிலும் உதவி தருவதாக சொல்லப்பட்டு வந்தது. ஆக, இப்பொழுது இல்லை என்று சொன்னாலும், இனிமேலாவது அதை கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த ஏழை ஆசிரியர்களுடைய குழந்தைகளைப் படிக்க வைத்து முன்னுக்கு கொண்டு வருவதிலே கவனம் செலுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் கூறியபடி 1,500 ரூபாய்க்கு உட்பட்டு வருமானம் வருபவர்களுக்கு இந்த இலவசக் கல்விச் சலுகை கிடைக்கக்கூடும். ஆனால், இப்படி ஆசிரியர்களை மட்டும் எடுத்துக்கொண்டால், இதுபோன்று பல்வேறு தரத்தினர்கள் இருக்கிறார்கள். உதாரணமாக பொற்கொல்லர் வகுப்பினர், கைத்தறி நெசவாளர்கள் என்று பல்வேறு தரத்தினர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கும் பொழுது எல்லா மக்களுக்கும் இலவசக் கல்வி என்ற நிலை வரும்பொழுது தான், இந்த யோசனை பொருந்தி வருமே தவிர, ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு பார்த்தால் நிதி வசதி இடம் கொடுக்காத நிலைதான் இருக்கும்.

திரு. கே. விநாயகம் : ஆசிரியர்கள் தான் நாட்டிலிருக்கிற கல்லாமையை ஒழிப்பதற்குக் காரணமாக இருக்கின்ற கருவிகளாக கருதப்படுகிறார்கள். அவர்கள் குழந்தைகள் பள்ளிகளில் இலவசமாக படிக்கமுடியாத அவல நிலை நம்முடைய அரசாங்கத்திற்கு வந்து விட்டதா ? அறியாமையை போக்குவதற்குக் காரணமாக இருக்கிறார்களோ அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்கு வேண்டிய பொருளாதார வசதி, அது உடையாக இருந்தாலும் சரி. புத்தகமாக இருந்தாலும் சரி, கல்லூரி, பாடசாலை கட்டணம், சம்பளமாக இருந்தாலும் சரி, இலவசமாக எல்லா ஆசிரியர்களுக்கும் (ஃப்ரம் தி எலிமென்டரி ஸ்கூல் டீசர் அப் டு தி காலேஜ் லெவல்) செய்துகொடுப்பதற்கான ஒரு தனித் திட்டத்தை இனியாகிலும் தீட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களுக்கு அவர்கள் பார்க்கிற வேலைக்கு ஊதியம் தரப்படும் நிலைமையும் கவனிக்கப்பட்டு வருகிறது. அதைப் பொறுத்து இதே நிலையில் இருப்பவர்கள் சமுதாயத்தில் பல்வேறு தரத்தினர், வகையினர் இருக்கிறார்கள். அப்படிப் பலரையும்

உள்ளடக்கிக்கொண்டு தான் ஜனநாயக அரசாங்கம் ஒரு முடிவு எடுக்க வேண்டுமே தவிர, ஆசிரியர்களுக்கு, கல்லூரி ஆசிரியர்களுக்கு ரூ. 600, 700 சம்பளம் வாங்குபவர்களுடைய பிள்ளைகளுக்கு இந்தச் சலுகை அளித்தால், சமுதாயத்திலுள்ள அதைவிட குறைந்த வருமானம் உள்ளவர்கள் அந்தச் சலுகை தங்களுடைய பிள்ளைகளுக்கும் அளிக்கப்படவேண்டும் என்று கோருவார்கள், அதில் நியாயமும் இருக்கும். ஆகவே, நிதி வசதி வளர வளரத்தான் இப்படிப்பட்ட முயற்சி கவனிக்கப்படவேண்டியதாக இருக்கும்.

திரு. ஆலடி. அருணா : மாணவர்களுக்கு இலவசமாக புத்தகம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு ஸ்வீடன் நாட்டிலிருந்து மத்திய அரசாங்கத்தின் மூலம் இந்த மாநில அரசுக்கு முன்னால் பேப்பர் கொடுக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசினுடைய விதிகளுக்கு மாறாக, முன்னாலிருந்த மாநில அரசு அந்தப் புத்தகங்களை மாணவர்கள் மத்தியில் விற்பனை செய்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக பொதுக் கணக்குக் குழு தன்னுடைய ஆட்சேபணையை தெரிவித்திருக்கிறது. இந்த விற்பனைக்குக் காரணமாக இருந்த அதிகாரிகள் அல்லது முன்னாள் கல்வி அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இந்த உப கேள்விக்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம் மிகக் குறைவாக இருக்கிறது. அதனால் அவர்களுக்கு அவர்களுடைய பிள்ளைகளை வெளி ஊர்களில் படிக்க வைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அதை உத்தேசித்தாவது ஆரம்ப ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு கட்டாயம் அரசாங்க ஹாஸ்டலில் இடம் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் சொல்லியபடி இப்பொழுது அத்தகைய யோசனை இல்லை. சமுதாயத்தில் இருக்கிற பல தரப்பினர்களை மனதில் வைத்துக்கொண்டு, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய நிலை ஏற்படும்.

Thiru T. MARTIN : May I know from the Hon. Minister whether the Government will come forward at least to help the children of teachers who have got more than 5 children in the matter of education?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த எண்ணிக்கையைப் பொறுத்தல்ல. அரசாங்கத்தினுடைய எண்ணிக்கையே குறைந்தது 2 குழந்தைகள், 3 குழந்தைகள் இருக்க வேண்டும் என்பது தான். 3 குழந்தைகளுக்கு மேற்பட்டு குழந்தைகள் உள்ளவர்களுக்கு சலுகை இல்லை என்று வேறு சில மாநிலங்களிலே உள்ள அரசினர் முடிவு செய்திருக்கின்றனர். எனவே, குழந்தைகளுடைய பிரச்சினையை வைத்து இதில் முடிவு எடுப்பதற்கில்லை.

திரு. எம். சுரேந்திரன் : ஸ்காலர்ஷிப் ரூ. 1,500 என்று நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த வருமானம் பல்வேறு விதத்தில், முறையில் வருகின்றவர்களுக்கு, அடிப்படை வருமானத்தை மட்டும் கணக்கிடப்படுமா அல்லது அவர்களுக்கு மேற்கொண்டு வருகிற பஞ்சப்படி, போனஸ் போன்ற பல்வேறு விதங்களில் வருகிற வருமானத்தையும் சேர்த்துக் கணக்கிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக வருமானம் என்று இருப்பதால், அவர்களுக்கு எல்லா வகைகளிலும் வருகின்ற வருமானத்தையும் சேர்த்துத்தான் கணக்கிடப்படும்.

Regional School of Printing

*300 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) Whether the Government propose to shift the Regional School of Printing at Broadway to Adyar ; and

(*b*) If so, what alternative use, would this building be put to?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) வட சென்னையில் உள்ள வட்டார அச்சுத்தொழில்பள்ளி அவ்விடத்திலிருந்து மாற்றப்பட்டவுடன், அக் கட்டடங்களில் மகளிர்க்கான அரசாங்கக் கலைக்கல்லூரியை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : இந்த அச்சுத் தொழில் பள்ளியை அடையாறில் நிறுவுவதற்கு போதிய அளவிற்கு இப்பொழுது இட வசதி இருக்கிறதா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : இங்கே பெண்கள் கலைக் கல்லூரி நிறுவுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. ஆகையினால் அச்சுத் தொழில் பயிற்சிப் பள்ளியை அடையாறு காம்பஸுக்குள் கொண்டு போவது பல்வேறு வகையில் பொருத்தமுடையதாக இருக்கும், அங்கு வேறு பல பாலிடெக்னிக்குகளும் இருக்கின்றன. கல்லூரி கட்டடத்திற்காக ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதால், அந்த நிலையில் அங்கே பெண்கள் கலைக் கல்லூரி நிறுவுவதற்கு அந்த இடம் பயன்படும்.

Industrial Estate at Martandam

*301 *Q.*—THIRU M. WILLIAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to set up some Departmental Units in the Industrial Estate at Martandam : and

(*b*) the number of units that are working in the Martandam Estate?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) மூன்று தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட நான்கு தொழில் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. திரு. எஸ்கே மோட்டார்ஸ் நிறுவனத்துக்கு ஒதுக்கப்பட்ட ஒரு தொழில் பிரிவு இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

THIRU M. WILLIAM : Mr. Speaker, in view of the backwardness of the area, will the Government be pleased to consider the question of opening some departmental units as is being done in Pettai and other Industrial Estates?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கூறுகின்ற அத்தகைய கருத்தைப்பற்றி இப்பொழுது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அதைக் கருத்தில் கொண்டு ஆராயப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பல ஆண்டுகளாக அரசாங்கத்தினால் கட்டப்பட்ட ஒரு தொழில் நிறுவனமும் துவக்கப்படாமல் இருக்கும் அந்த இடத்திலே, அதற்கு முக்கியத்துவம் அளிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான கூறுபாடுகளை அதற்குள்ள அதிகாரிகள் மூலம் தெரிவித்தால், எந்தத் தொழிலை ஆரம்பிக்கலாம் என்பதை யோசித்து, அதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம்.

ஆசிரியர்களின் சம்பளம்

* 302 வினா.—திரு. எஸ் சிவசுப்ரமணியன் :
திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :
திரு. ப. மகாதேவன் :
திரு. கே. விநாயகம் :
} மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநிலத்தில் உள்ள பள்ளி ஆசிரியர்கள் ஊதியத்தைத் திருத்தியமைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

THIRU K. VINAYAKAM; Whereas the scales of pay paid to the teachers of our State are very low and whereas it has been considered that a discontented teacher is a source of national danger, will the Minister think of the possibility of constituting a committee or commission or whatever it may be to go into the question again and thus go to the help of the teachers?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய புதிய சம்பள விகிதம் எப்படி இருக்க வேண்டுமென்று கோத்தாரி கல்விக் கமிஷனே சிபாரிசு செய்திருக்கிறது. அந்தச் சிபாரிசுகளின் அடிப்படையில் இப்போது கல்லூரி ஆசிரியர்களின் சம்பள விகிதங்கள் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. பள்ளி ஆசிரியர்கள் சம்பள விகிதங்களை மாற்றி அமைக்கும் வகையிலும் மத்திய சர்க்கார் உதவி செய்ய வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அண்மையில் கூடிய கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலும் எல்லா மாநிலக் கல்வி அமைச்சர்களும் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை மாற்றி அமைப்பதில் ஏற்படக் கூடிய செலவிலே 80 சதவிகிதத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதே மாதிரி உயர்வை மத்திய அரசு பள்ளி ஆசிரியர்களின் சம்பள விகிதங்களை மாற்றி அமைப்பதற்கும் தரவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. இந்தியக் கல்வி அமைச்சர் இதைப்பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார். அந்த முடிவு வந்த பிறகு இந்தத் திட்டம் அமலுக்குக் கொண்டுவரப்படும்.

திரு. ப. மகாதேவன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து வித்வான் படித்தவர்களுக்கும், முந்திய திருவாங்கூர் ராஜ்யத்திலிருந்து படித்த தமிழ் வித்வான்களுக்கும் கொடுக்கப்படுகிற சம்பளத்தில் வித்தியாசம் இருப்பதால் அதை மாற்ற அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அதன் மீது முடிவு எடுத்த பிறகு நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கு எல். டி. சி. ஸ்கேலும், செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு யூ. டி. சி. ஸ்கேலும் கொடுக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ? படிப்புக்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்று வரக்கூடியவர்களுக்கு இப்போது இருக்கிற சம்பள விகிதம் குறைவாக இருக்கிறது. மத்திய சர்க்காரின் உதவி வருவதற்கு முன்பே அரசாங்கம் இதைப் பற்றி யோசித்து அந்த அளவுக்குக் கொடுக்க முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி, நிதி வசதியைப் பொறுத்துச் செய்யவேண்டியிருக்கிறது. எல்லா மாநில அரசுகளும், கோத்தாரிக் கல்விக் கமிஷன் சிபாரிசுகள் அமல் நடத்தப்பட வேண்டுமென்றால் அதை அமல் நடத்தச் சொல்லுகிற இந்திய அரசு இதற்கு ஆகக்கூடிய செலவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கின்றன. கல்லூரிகளைப் பொறுத்த வரையில் 80 சதவிகிதச் செலவை மத்திய அரசு ஐந்து ஆண்டுகளுக்கு

ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதே முறையில் பள்ளி ஆசிரியர்களுடைய சம்பள விகிதங்களை மாற்றி அமைப்பதைப் பற்றியும் இப்போது பரிசீலிக்கப் பட்டு வருகிறது.

திரு. கே. விநாயகம் : ஸார், இப்போது இந்த ஆசிரியர்களுக்கு ஊதியத்தை உயர்த்திக்கொடுக்க மத்திய அரசு கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போல் கொடுக்க முன்வந்தால்தான் இந்த அரசு முன் வந்து கொடுக்குமா ? அல்லது அவர்கள் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டால் இவர்களை கைகழுவிவிட்டு நட்டாற்றில் விடுவது என்பது யோசனையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் கொடுக்க முடியாது என்று சொல்லவில்லை. பரிசீலனை செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். கல்லூரிகளைப் பொறுத்தவரையில் கொடுக்கச் சம்மதித்து இருக்கிறார்கள். ஆகையால் நட்டாற்றில் விடுவது ஒன்றும் இல்லை; வீட்டில் வைத்துக் காப்பாற்றப்படும் நிலைமைதான் இருக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஏனைய ஆசிரியர்கள் சம்பளத்தைவிடத் தமிழ் ஆசிரியர்கள் சம்பளம் குறைவாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : அதனுடைய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. பொதுவாக எந்தெந்த ஆசிரியர்களுக்கு எந்தெந்தச் சம்பளம் தரப்படுகிறது என்றால், 1960-ல் எடுக்கப்பட்ட முடிவின்படி இப்போது வழங்கப்பட்டு வருகிறது. வேறு பல நிலைமைகள் கோத்தாரிக் கமிஷன் அறிக்கையில் இருக்குமானால், அது பரிசீலிக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்படுகிற நிலையில் அமலுக்குக் கொண்டு வரப்படும்.

Dr. H. V. HANDE: Sir, the grievance of the school teachers is a very serious grievance. Even when the Ruling Party was in the opposition, they will recollect that number of representations were made to them as Members of the Opposition. I want to know from the Minister for Education whether this Government is going to take any step to see that their grievances are immediately redressed without waiting for the implementation of the Kothari Commission's recommendations and whether there has been any representation regarding grievances from the Teachers' Guild or the Teachers' Associations which can be immediately solved at least to a certain extent by the State Government?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆசிரியர்களிடமிருந்து பல்வேறு விதமான கோரிக்கைகள் வந்திருக்கின்றன. பணச் செலவு இல்லாத கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கு—செகண்டரி கிரேடு, பி.டி., பி.டி. அஸிஸ்டெண்ட்ஸ், ஹெட்மாஸ்டர்ஸ் அளவுக்கு—கோத்தாரிக் கமிஷனின் சிபாரிசுகளின்படி சம்பள விகிதங்களை அமைக்கவேண்டுமென்றால் 210 லட்சம் ரூபாய் உடனடியாகத் தேவைப்படுகிறது. ஆகவே, இந்த நிலையைப் பொறுத்து, இந்திய அரசின் உதவியைப் பெற்று, அதை மாற்றி அமைக்கும் முயற்சிகளை அரசு விரைவிலே மேற்கொள்ளும்.

திரு. இ. ராமசாமி : தலைவர் அவர்களே, மலைப் பகுதியில் இருக்கிற ஆசிரியர்களுக்குப் பஞ்சப்படியோ, ஹில் அலவன்சோ அதிகமாகக் கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது அது பற்றிய விவரம் இல்லை. அது தக்கபடி ஆராயப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஸார், பார்ட்-டைம் க்ராஃப்ட் டீச்சர்ஸ் போன்றவர்களுக்கு இப்போது 30 ரூபாய் சம்பளம் வழங்கப்படுகிறது. அவர்களை முழு நேர ஆசிரியர்களாக ஆக்கி, கூடுதல் சம்பளம் கொடுக்க இந்த அரசு வழி செய்யுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. பரிசீலனை செய்த பிறகு அவர்களை எந்த அளவுக்குப் பயன்படுத்தலாம் என்றும், எந்த அளவுக்கு சம்பளத்தை உயர்த்தலாம் என்பது பற்றியும் முடிவு செய்யலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, விலைவாசி உயர்ந்திருக்கிற இந்த நேரத்தில் தேசம் பூராவும் ஒரே மாதிரியான குறைந்த பட்ச அடிப்படைச் சம்பளத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்பதுதானே கோத்தாரித் திட்டத்தின் நோக்கம் ? அப்படி இருந்தும் இப்படி அதை அமல் படுத்தாமல் காலதாமதம் செய்யக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : காலதாமதம் ஆவதற்கான காரணத்தைத் தான் நான் முதலிலேயே சொன்னேன். மத்திய அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. கல்லூரி அளவுக்கு மத்திய அரசு உதவி அளிக்க ஒப்புக்கொண்டு, அந்தச் சம்பள விகிதங்கள் 1-4-1966-லிருந்து அமலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. செகண்டரி பள்ளிகள், துவக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பரிசீலனை முடிந்து, மத்திய அரசின் உதவி கிடைத்தவுடன் அமலுக்குக் கொண்டு வரப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : ஸார், இப்போது மூன்றாவது வகுப்பிலிருந்து இங்கிலீஷ் சொல்லிக் கொடுக்கலாம் என்று திட்டம் வகுத்திருக்கிறோம். சில செகண்டரி ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களாக 3-வது வகுப்புகளில் பாடம் சொல்லிக்கொடுக்கும் நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் 100-லிருந்து 150-க்குள் தான் இருப்பார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர் கிரேடு பதவிகளில் இருந்தாலும் செகண்டரி கிரேடு சம்பளம் கொடுக்கப்பட்டு, ஃபேஸ்ட் ப்ரொக்ராம் அடிப்படையில் ஆண்டுக்காண்டு அவர்களுக்கு ஊதிய உயர்வு தரும் முறையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கொடுக்க இப்போது உத்தேசம் இல்லை என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுக்கு வீட்டு அலவன்ஸாவது—அவர்கள் சைக்கிளில் போய்க்கொண்டிருக்கிறார்கள்—சைக்கிள் அலவன்ஸாவது அரசாங்கம் கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, அரசாங்கத்தினுடைய பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும், அரசாங்க உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுகிற சம்பளம், திருநாள் முன்பணம், படிகளில் இருக்கிற வேறுபாட்டை நீக்கி, அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களுக்குக் கொடுக்கிற அளவுக்கு இவர்களுக்கும் கொடுக்க அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய நிலைமைகள் பரிசீலனையில் இருந்துவருகின்றன.

திரு. டி. தங்கப்பன் : தலைவர் அவர்களே, தீவுப் பகுதிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு ஐலண்டு அலவன்ஸ் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கைத்தொழில் ஆசிரியர்களை (Craft Teachers) வேலையிலிருந்து நீக்கப் போவதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. அது அரசாங்கத்தின் எண்ணத்தில் இருக்கிறதா ? அப்படி அவர்கள் நீக்கப்பட்டால், அவர்களுக்கு மாற்று வேலை கொடுக்க அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நீக்கவேண்டுமென்று அத்தகைய முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. அத் தொழிலை எப்படிப் பயன்படுத்தலாம், ஆசிரியர்களை எப்படிப் பயன் படுத்தலாம், கொடுக்கிற கல்வியை மாணவர்கள் பின்னால் பயன்படுத்திக் கொள்ளும் முறையில் செய்யலாமா என்ற கருத்துதான் தெரிவிக்கப் பட்டிருக்கிறதே தவிர, முடிவு எடுக்கப்படவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, whereas teaching has been considered the noblest of all professions but the sorrowest of all trades, will the Hon. Minister think of the possibility of bringing in fresh taxation proposals to the tune of Rs. 2 crores, in case the Central Government do not come to our aid, as the people are willing to pay towards the salary of the teachers by way of educational cess or educational tax?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் கூறும் கருத்து, நான் அமைக்கப்போகும் கல்வி ஆலோசனை குழுவில் வைத்து, எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு, நிறைவேற்ற வேண்டும் என்றால், பல வகைகளில், பல வசதிகளை கொடுக்க செயல்படலாம். அந்த அந்த கல்வி நிலையங்களைப் பொருத்து, துறையைப் பொருத்து, ஆசிரியர்கள் நிலையைப் பொருத்து, வளர்ச்சி பெறும் வாழ்க்கையைப் பொருத்து, சகல கட்சி தலைவர்கள் குழு முடிவு எடுத்தால், அது உறுதுணையான பலனைக் கொடுக்கும் என்று கருதுகிறேன்.

*303 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : } மதிப்பிற்குரிய கல்வி-
திரு. கே. விநாயகம் : }

தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கல்லூரி ஆசிரியர்களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : 1-4-1966 முதல் கல்லூரி ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழுவின் சிபாரிசுகளின் அடிப் படையில் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது.

பயணிகள் கார்களுக்கு வரி

*304. வினா.—திரு. என். சங்கரய்யா : மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:

(அ) சென்னை மோட்டார் வாகனச் சட்ட விதிகளின்படி பயணி களின் காரியங்களுக்காக (for Tourist purposes) என்ற வகையில் சில கார்களுக்கு வரிக் கட்டணம் குறைக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், பயணிகளின் காரியங்களுக்காக என்று பயன் படுத்தப்படும் கார்கள் அனைத்திற்கும் இந்த வரிக் கட்டணக் குறைப்புச் சலுகை நீட்டிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இருக்கை ஒன்றுக்கு கால் ஆண்டுக்கான சலுகை வீத வரி யாகிய ரூ. 10 சீருலா வண்டிகளுக்கு (Tourist Luxury Coaches) மட்டுமே பொருந்தும். சுற்றுலாவிற்குப் பயன்படுத்தப்படும் வண்டிகள் அனைத்திற்கும் இந்தச் சலுகையை நீட்டிக்கும் செயற்குறிப்பு இல்லை.

[கேள்விகள் 305—311 ஒற்றிவைக்கப்பட்டன.]

நீதிமன்றங்களில் வழக்குகள்

* 312 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீதி மன்றங்களுக்கு வரும் வழக்குகள் குறிப்பிட்ட காலத்திற் குள் முடித்தாக வேண்டுமென கட்டுப்பாடு ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(இ) இப்போது மிகவும் காலதாமதம் ஏற்படுகிறதென்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(உ) இவைகளை பரிசீலனை செய்ய ஒரு கமிஷன் ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) தெரியாது.

(உ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இப்பொழுது நீதி மன்றங் களிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு வழக்கும் பல வருஷக் கணக்கில் தாமதம் செய்யப்படுகின்றன. சில கேசுகள் 5 அல்லது 10 வருஷம் கூட ஆகின்றன. அது போன்ற நிலையைத் தவிர்க்க, இப்பொழுது இல்லை என்றாலும், அவற்றை குறிப்பிட்ட காலத்திற்குள்ளாவது முடிக்க வேண்டும் என்று ஏதாவது முடிவு காண உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் ஆகின்றன என்பதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. அது தவறான செய்தி. ஒரு வழக்கு பல நீதிமன்றங்களுக்குப் போவதனால், பல ஆண்டுகள் ஆகலாம். அதற்கு நீதி மன்றம் பொறுப்பில்லை. நீதி மன்றங்களுக்குச் செல்வோர்தான் காரணம். அவர்கள் அப்படி பல நீதிமன்றங்களுக்கும் செல்ல உரிமை உண்டு. இருந்தாலும், காலதாமதம் ஆகக்கூடாது என்றுதான் முயற்சிக்கிறோம். புதிய நீதிமன்றங்கள் தேவை என்று உயர்நீதி மன்றம் யோசனை சொன்னால், அதையும் கேட்டு வருகிறோம்.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of of the fact that in the disposal of most of the civil and criminal cases there are three factors like persons contending the case, the judge deciding the case and the lawyer arguing the case. Even though there is an inordinate delay, will the Government issue a general circular to the courts concerned requesting them, in the interest of the people, to dispose of the cases immediately wherever it is humanly possible ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: "ஹ்யூமன்லி பாஸிபிள்" என்று சொன்னார்கள். காரணங்களையும் அவர்களே சொன்னார்கள், கால தாமதத்திற்கு. ஜுடிஷரி ஒரு தனிப்பட்ட, தன்னாட்சி பெற்ற, ஸ்தாபனம். அதில் தலையிட அதிகாரம் கிடையாது. அவ்வப்பொழுது, உயர் நீதி மன்றத்திற்கு தெரிவித்து, அவர்களோடு ஆலோசனை செய்கிறோம். கால தாமதம் ஆகக்கூடாது என்று உயர் நீதி மன்றம் ஒவ்வொரு மாவட்ட

கோர்ட்டுகளுக்கும் அறிக்கை விடுகிறது. ஒவ்வொரு மாவட்ட கோர்ட்டு களிலும் எத்தனை தேங்கிக் கிடக்கின்றன என்பது போல் "பர்ட்டிகுலர்ஸ்" அவ்வப்பொழுது உயர் நீதிமன்றம் பெறுகிறது. அவ்வப்பொழுது அது பற்றி உத்தரவும் பிறப்பிக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : ஜமீன் ஒழிப்புக்குப் பிறகு, செட்டில்மென்ட் கோர்ட்டிலும், ட்ரிப்யூனலிலும் வழக்குகள் தாமதமாக தீர்க்கப்படுகின்றன. 1956 லிருந்து, 12 வருஷ காலமாக ஒரு வழக்கு தீர்க்காமல் இன்னும் நடக்கிறது. ஒவ்வொரு கோர்ட்டாக மாறி மாறி வருவதால், விவசாயிகள், குடிகள், அதிகமான அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதைச் சீக்கிரமாக முடிகக வேறு ஏதாவது வழி செய்யமுடியுமா ? திரும்பத் திரும்ப கீழ்க்கோர்ட்டுக்கும், மேல் கோர்ட்டுக்கும் அலையாமல் இருக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செட்டில்மெண்ட் கோர்ட் என்றால் அது தனியாக ஏற்படுத்தப்பட்டது. ஓரளவுக்கு வேலை முடிந்து அவை எடுக்கப்பட்டுவிட்டன. · ஏதாவது ஹைகோர்ட்டுக்கு ரிட்டிற்குச் சென்றிருந்தால், திருப்பி அனுப்பி விசாரணை செய்ய வேண்டும் என்றிருந்தால், விசாரணையில் இருக்கலாம். அதிக காலதாமதம் ஏற்படுவதாகத் தகவல் இல்லை.

திரு. எ. பாலசுப்ரமணியன் : அவைத் தலைவர் அவர்களே, 'Justice delayed is Justice denied' என்று சொல்லுவார்கள். அதுபோல, கட்சிக்காரர்கள் தாமதம் ஒரு புறம் இருந்தாலும், நீதிமன்ற பக்கத்திலும் அவசர உணர்ச்சியோடு தாமதத்தைத் தவிர்க்க நீதிமன்றங்களுக்கு இந்த அமைச்சரவை வேண்டுகோள் தெரிவித்து, துரிதப்படுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கெனவே சொன்னபடி, நம்முடைய உயர் நீதி மன்றத்தோடு அவ்வப்பொழுது கருத்து பரிமாறிக் கொள்ளுகிறோம். உடனடியாக பைசல் செய்யவேண்டும், தீர்ப்பு அளிக்க வேண்டும் என்றும் சொல்லுகிறோம். நம்முடைய நாட்டிலேயே, தமிழகத்திலேதான் அதிகக் காலதாமதம் இல்லாமல் நீதி வழங்கப்படுகிறது என்பது யாருக்கும் தெரியும்.

திரு. செ. பாலசுப்ரமணியன் : ஹைகோர்ட்டுக்குப் போகும் ரிட்டுகள் கூட ஃபைனல் டிஸ்போஸல் ஆக இரண்டு வருஷங்கள் ஆகின்றன. ஆகவே குறைந்த காலத்தில் இவற்றை முடிவு செய்ய, மேலும் அதிகப்படியான ஜட்ஜுகளை நியமித்து, வழக்கை சீக்கிரமாக முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர் நீதி மன்றத்திலே ரிட்டுகள் ஏராளமாக போடப்படுகின்றன என்பது உண்மை. அரசியல் அமைப்புச் சட்டத்திலே எந்த சட்டத்தையும் பற்றி விவாதிக்க உயர் நீதி மன்றத்தில் ரிட் மூலம் தான் கேட்கவேண்டும் என்று இருக்கிறது. காலதாமதம் என்றால், இந்தியா முழுவதிலும் ஒப்பிட்டுப்பார்த்தால், நம்முடைய உயர் நீதி மன்றம் 1,033 வழக்குகளை பைசல் செய்திருக்கிறார்கள். ஆனால், உயர் நீதி மன்றங்கள் மாநாட்டிலே சிபாரிசு செய்யப்பட்டது, ஒரு ஆண்டுக்கு 650 வழக்குகள் தான். ஆனால் நம்முடைய உயர்நீதி மன்றம் 1,033 வழக்குகள் பைசல் செய்திருக்கிறார்கள். நம்முடைய நீதி மன்றம் சிறந்த முறையில் பணியாற்றியிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : பல நீதி மன்றங்கள் இருப்பதால் காலதாமதம் ஆகிறது. அதோடு ஒரே நீதி மன்றத்திலேயும் பல ஆண்டுகள் ஆகிறது. ஆகவே, என்னதான் கவனத்திற்குக் கொண்டு போனாலும், நீதி மன்றங்கள் குறைவாக இருப்பதால் தாமதம் ஏற்படுகிறதா அல்லது என்ன காரணத்தால் ஏற்படுகிறது என்று கண்டு ஆராய்ந்து மேலும் பல நீதி மன்றங்கள் தேவைப்பட்டால் ஆரம்பிக்க அல்லது அதற்காக சட்டத்தைத் திருத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்குத் தனி ஆராய்ச்சி தேவையில்லை. கனம் உறுப்பினர் திரு. விநாயகம் குறிப்பிட்டது போல வழக்கறிஞர்கள் அறிவார்கள் ஏன் காலதாமதம் என்று. அவ்வப்பொழுது நடவடிக்கை எடுக்கிறோம். ஒரே நீதி மன்றத்திலும் காலதாமதம் என்று பல நீதிமன்றங்கள் இருக்க வேண்டும் என்கிறார்கள். இப்பொழுது சார்ட் போடச் சொல்லுகிறோம். ஒரு ஆண்டு வழக்குகள் எத்தனை, ஆறு மாதங்கள் தேங்கி நிற்பது எத்தனை, ஏன் காலதாமதம் ஆகிறது என்றும் காரணம் கேட்கிறோம். சரியான காரணமாக இல்லாவிட்டால், உடனடியாக தீர்ப்பு அளிக்க ஆலோசனை குறிப்பிடப்பட்டுவருகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இப்பொழுது நீதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்கிற குற்றச்சாட்டு இருக்கிறது. இப்பொழுது கோர்ட்டுகள் 11 மணிக்கு துவங்குகின்றன. அதை மாற்றி 10 மணிக்கு துவங்க எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா அலுவலகங்களும் 11 மணிக்குத் துவங்கப்பட்ட போது ஏற்பட்ட நியதி. அதில் மாற்றம் தேவை என்றால் உயர் நீதி மன்றம் பரிசீலிக்கும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், அரிசனங்களுக்கு நிலங்களை அக்விஸிஷன் செய்த கேசுகள் ஹைகோர்ட்டுக்குச் ரிட்டுக்குச் சென்று இரண்டு, மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் ரிட்டு பெண்டிங்காக இருக்கின்றன. அதனால் ஏழை ஹரிஜனங்கள் வீடு இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அப்படிப்பட்ட கேசுகளையாவது ஹைகோர்ட்டிலே விரைவில் முடிவுசெய்ய வேண்டும் என்ற யோசனையை இந்த அரசு சொல்லுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நில ஆர்ஜிதம் செய்யக் கூடிய வழக்குகள் துணைக் கோர்ட்டிகளில், சப்-கோர்ட்டில், செக்ஷன் 18 படி, க்வாண்டம் டிஸைட் செய்வதற்காக, செல்லும். தனிப்பட்ட நபர் நிலத்தை எடுக்கக்கூடாது என்று சொல்ல உரிமை அரசியல் சட்டப்படி உண்டு. அதை உயர் நீதி மன்றத்தில் நிலைநாட்ட உரிமை உண்டு. அதை மறுப்பதற்கில்லை.

திரு. வெ. முனுசாமி : தலைவர் அவர்களே, சிவில், கிரிமினல் கேசுகளை கால தாமதமின்றி விசாரிக்க மாஜிஸ்ட்ரேட்-கம்-முனிசீப் நியமிக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிரிமினல் நீதி மன்றங்களில் இரண்டு மாதங்களுக்கு மேல் இருக்கும் கேசுகளுக்குக் காரணம் கேட்கப்படுகிறது. அதற்குமேலும் அதிக காலதாமதம் ஏற்பட்டால், எந்த குறிப்பிட்ட நீதி மன்றத்திலாவது ஏராளமான வழக்குகள் அப்படி காலதாமதப்படுகிறது என்று தெரிவித்தால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : சபாநாயகரவர்களே, வழக்குகள் உடனுக்குடன் விசாரிக்கப்படாமல் குவிந்து வருவதால், "க்ளயன்ட்ஸ்", வக்கீல்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதே அனுபவம் அம்பாசமுத்திரம் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில், ஏராளமான வழக்குகள் "டிஸ்போஸ்" செய்யப்படாமல் இருப்பதால் அனுபவமுள்ள ஒரு முன்சீப்பைப் போட்டு அந்த வழக்குகளை உடனடியாக "டிஸ்போஸ்" செய்ய அரசாங்கம் முன் வருமா என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றித் தகவல் எழுதி அனுப்பினால் உயர்நீதிமன்றத்தோடு ஆலோசிக்கலாம்.

அரசு ஆட்சிமொழிச் சட்டக் குழு

*313 வி**ன**.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆட்சி மொழிச் சட்டக் கமிட்டி, எப்போது அமைக்கப்பட்டது அதன் உறுப்பினர்கள் யார், யார் ?

(இ) முழுநேர சம்பளம், பகுதி நேர சம்பளம் யார் யாருக்கு? இதர டி.ஏ., டீ.ஏ. முதலியவை எவ்வளவு?

(உ) இதுவரை அதற்காக செலவு ஆன தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) சட்டத் துறையில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ந் தேதியன்று வெளியான 1785-ம் எண் அரசாங்க ஆணையின்படி கீழ்க்கண்ட உறுப்பினர்களடங்கிய அரசாங்க ஆட்சி மொழி (சட்ட) கமிஷன் அமைக்கப்பட்டது:—

1	திரு. நீதிபதி எம். அனந்தநாராயணன், தலைமை நீதிபதி, சென்னை உயர்நீதி மன்றம்.	தலைவர்.
2	திரு. எஸ். வெங்கடேஸ்வரன், ஐ.சி.எஸ்., ஓய்வு பெற்றவர்.	பகுதி நேர உறுப்பினர்.
3	அரசாங்கச் செயலாளர், சட்டத்துறை, சென்னை-9.	அலுவல் முறை உறுப்பினர்.
4	தமிழ் வளர்ச்சித் துறை நெறியாளர், சென்னை-9.	,,
5	திரு. எஸ். ரங்கராஜன், மாவட்ட நீதிபதி, மதுரை.	உறுப்பினர்.
6	டாக்டர் மு. வரதராசன், தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்.	பகுதி நேர உறுப்பினர்.
7	திரு. கா. அப்பாதுரை, நூல் ஆசிரியர் (அன்னை இல்லம், 8, அப்பாதுரையார் தெரு, சென்னை-18).	முழு நேர உறுப்பினர்.

இக்கமிஷன் 1966-ம் வருடம் பிப்ரவரி மாதம் 19-ம் தேதி தொடங்கப்பட்டது.

(இ) இக் கமிஷனின் பணியாளர்கள், பிற உறுப்பினர்கள் ஆகியோரின் ஊதியமும், படிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

(i)	தலைவர், அலுவல் முறை உறுப்பினர்கள்.	சம்பளமின்றி மதிப்பியல்பால் அவர்கள் பணியாற்றுகிறார்கள். படிகள் இல்லை.
(ii)	முழுநேர உறுப்பினர் ..	நிலையான சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 900, அகவிலைப்படி மாதத்திற்கு ரூ. 120, ரொக்கப்படி மாதத்திற்கு ரூ. 50 (இது வீட்டில் அரசாங்க ஏவலாள் அமர்த்திக் கொள்ளாதிருப்பதற்காகும்).
(iii)	பகுதிநேர உறுப்பினர்கள் ..	ஒவ்வொரு கூட்டத்திற்கு வந்து போகவும் கட்டணம் ரூ. 25.
(iv)	முழுநேரச் செயலாளர் ..	துணை நீதிபதி ஒருவரின் தரத்தில் இப்பதவி உள்ளது. இப்பதவி வகிப்பவருக்கு துணை நீதிபதி சம்பள விகிதத்தில் அவருக்குரிய சம்பளமும் மாதத்திற்கு ரூ. 120 அகவிலைப்படியும் அளிக்கப்படுகிறது. அத்துடன் சிறப்புச் சம்பளமாக மாதத்திற்கு ரூ. 100-ம் வீட்டில் அரசாங்க ஏவலாள் வைத்துக் கொள்ளாதிருப்பதற்காக ரொக்கப்படி ரூ. 50-ம் அளிக்கப்படுகிறது.
(v)	பகுதிநேரக் கூட்டுச் செயலாளர்.	தமிழ்நாடு சட்டசபையின் துணைச்செயலாளர் இப்பதவியை வகிக்கிறார். அவருக்கு வழக்கமாக அளிக்கப்படும் சம்பளம், படிகளுடன் ரூ. 100 சிறப்புச் சம்பளம் அளிக்கப்படுகிறது.
(vi)	உதவிச் செயலாளர் ..	கல்வித் துறையைச் சேர்ந்த உதவிப் பேராசிரியர் தரத்தில் இப்பதவி உள்ளது. இப்பதவி வகிப்பவருக்கு உதவிப்பேராசிரியர் சம்பள வீதத்தில் அவருக்குரிய சம்பளத்துடன் மாதத்திற்கு ரூ. 110 அகவிலைப்படியும் ரூ. 75 சிறப்புச் சம்பளமும் அளிக்கப்படுகிறது.
(vii)	தலைவரின் தனி உதவியாளர்.	சட்டசபை நிருபர்களின் வீதத்தில் அவருக்குரிய சம்பளத்துடன் மாதத்திற்கு ரூ. 120 அகவிலைப்படியும் ரூ. 50 சிறப்புச் சம்பளமும், ரூ. 40 சுருக்கெழுத்துப்படியும், ரூ. 50 அலுவல்படியும் அளிக்கப்படுகின்றன.
(viii)	உதவியாளர்	140—10—240 என்னும் விகிதத்தில் சம்பளம் மாதத்திற்கு ரூ. 90 அகவிலைப்படி.
(ix)	தமிழ் சுருக்கெழுத்து—தட்டெழுத்தாளர்.	90—4—110—3—140 என்னும் சம்பள விகிதத்தில் சம்பளமும் வேறு பணிக்கு நியமித்தனுப்பியதற்காக அடிப்படைச் சம்பளத்தில் 20 சதவீதத் தொகையும் மாதத்திற்கு ரூ. 40 சுருக்கெழுத்துசிறப்புச் சம்பளமும், ரூ. 90 அகவிலைப்படியும்.
(x)	ஏவலர்கள் (Peons) ..	50—1—60 என்ற விகிதத்தில் சம்பளமும் மாதத்திற்கு ரூ. 47 அகவிலைப்படியும்.

இக் கமிஷனின் தலைவரோ அல்லது உறுப்பினர்களோ அல்லது பணியாளர்களோ இதுவரையில் அலுவல் காரணமாக எங்கும் பயணம் செய்யவில்லையாதலால், பயணப்படி அளிப்பது பற்றிய கேள்விக்கே இடமில்லை.

(உ) இக்கமிஷன் செயல்படத் தொடங்கியதிலிருந்து, அதாவது 19-1-1966 முதல் 30-4-1967 வரையில் ஏற்பட்ட செலவு தோராயமாக அறுபத்தைந்தாயிரத்து எழுநூறு ரூபாயாகும் (ரூ. 65,700).

முற்பகல் 9-30 **திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், இந்தக் கமிஷனில் உத்தியோகப் பற்றற்றவர்கள் தவிர உத்தியோகத்திலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்களையெல்லாம் நியமனம் செய்வதன் விளைவாக இது எந்த அளவிற்கு உதவிகரமாக இருக்கிறது என்பது தெரியுமா? அதேபோல முழுநேரச் சம்பளம், பகுதிநேரச் சம்பளம், சிறப்புச் சம்பளம் என்று உத்தியோகத்திலே இருக்கக்கூடியவர்களையெல்லாம் சேர்த்து அவர்களுக்குக் கொடுப்பதன் காரணமாக இதிலே தீவிர கவனம் செலுத்துகிறார்களே தவிர அவர்கள் வகிக்கக்கூடிய உத்தியோகத்தில் தீவிர கவனம் செலுத்த முடியாத நிலை காரணமாக அந்த வேலைகள் தடைப்படுகிறது என்பது தெரியுமா? ஆகவே, உத்தியோகப் பற்றற்றவர்களாக எல்லோரையும் நியமிக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்ய உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உத்தியோகப் பற்றற்றவர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தினந்தோறும் அதில் வேலை செய்கிறார்கள். இந்தக் குழு எப்பொழுதாவது ஒரு முறை கூடுகிறது. அந்தக் குழுக் கூட்டத்திலே இந்த உத்தியோகத்திலுள்ளவர்கள் கலந்துகொள்வார்கள். அவர்களுக்கு உத்தியோக அனுபவமும், சட்ட ஞானமும் இருக்க வேண்டிய அவசியமிருப்பதால் அப்படிப்பட்டவர்களை இதில் நியமித்துள்ளோம்.

திரு. மா. பொ. சிவஞானம் : இந்தக் குழுவிற்கு ஏதேனும் வேலைகள் வரையறுக்கப்பட்டு கொடுக்கப்படுகின்றனவா? அவ்வாறு கொடுக்கப்பட்டால் அவை என்னென்ன வேலைகள்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : முதலிலே சட்ட சொற்களைத் தொகுப்பது. அந்தப் பணியில் அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையாவது சட்டங்கள், ஆர்டினன்ஸ், விதிகள் இவைகள் தமிழிலே மொழி பெயர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். மத்திய சர்க்காரினுடைய சட்டங்களையும் நாம்தான் மொழி பெயர்க்க வேண்டுமென்று சொல்லி வருகிறோம். அந்த வேலைகளை இந்தக் குழு செய்ய இருக்கிறது. இதுதவிர, இந்த வேலைகளெல்லாம் முடிந்தவுடன் சட்ட புத்தகங்களையும்கூட அவர்கள் மொழிபெயர்ப்பு செய்யலாம் என்று ஆலோசனை இருக்கிறது. அது பின்னால் கவனிக்கப்படும்.

DR. H. V. HANDE : Sir, in answer to the Hon. Member Mr. M. P. Sivagnanam's question, the Minister said that they are on the job right now. Will the Minister tell us the quantity of work that they have turned out, whether they have brought out any leaflets or brochures and, if so, will the Minister place them on the table of the House so that we can start learning what they have already started producing?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினரே இது பற்றிய செய்தியைப் பார்த்திருக்கலாம் என்று நினைக்கிறேன். முதல் பணி சட்ட சொற்களைத் தொகுப்பது. "ஏ" டு "ஹெச்" வரை சட்டச் சொற்கள் தொகுக்கப்பட்டு நம் முதலமைச்சரவர்கள் அதை வெளியிட்டிருக்கிறார்கள். அதன் நகலை எல்லா அங்கத்தினர்களுக்கும் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. மா. இராசாங்கம் : ஆட்சி மொழிச் சட்டக் கமிட்டி எங்கே கூடுகிறது? இதுவரை எத்தனை கூட்டங்கள் நடத்தியிருக்கிறது? அதனுடைய குறிப்புகள் ஏதாவது சர்க்காருக்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியவர்கள் அப்போதைக்கப்போது அந்தக் கூட்டத்தைக் கூட்டி வருகிறார்கள். எந்த இடத்திலே கூட்ட வேண்டுமென்று அவர்கள் நிர்ணயிப்பார்கள்.

பள்ளிகொண்டா பாலம்

* 314 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு ஜில்லாவிலுள்ள பள்ளிகொண்டா பாலத்தை உயர்த்திக் கட்டும் உத்தேசம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) அவ்விதமான திட்டமொன்றும் உத்தேசிக்கப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இங்கு சர்க்கரை ஆலைக்குக் கரும்பு கொண்டு செல்ல வேண்டுமென்றால் அந்தப் பாலத்தின் வழியாகத்தான் செல்லவேண்டும். ஆகவே, ஒவ்வொரு வருஷமும் மழைக் காலத்திலேயெல்லாம் அந்தப் பாதையிலே செல்ல முடியாத அளவிற்கு பாதிக்கப்படுகிறது என்பது கனம் அமைச்சரவர்களுக்குத் தெரியுமா? இன்று சர்க்கார் பணத்திலிருந்து அந்தப் பாலத்தைக் கட்டவில்லை என்று சொன்னாலும் சர்க்கரை ஆலையிலிருந்து வாங்கக்கூடிய "செஸ் நிதி" பணத்திலிருந்து அந்தப் பாலத்தைக் கட்ட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்தப் பாலம் கட்டுவதற்காகச் செலவு ஒதுக்கீடு ரூ. 20 லட்சம் என்று குறிப்பிட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பாலத்தில் இருக்கிற கஷ்டம் தெரிவது போலவே அதைக் கட்டுவதற்காக நிதிக் கஷ்டம் இருக்கிறது என்றும் அமைச்சரவைக்குத் தெரிகிறது.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவரவர்களே, சென்னை அடையாறு எஸ்பிளனேடு பாலம் பழுது பார்க்கப்பட்டது சரியாக இல்லையென்றும், அதில் பஸ்களை விட்டுப் பார்த்தபோது பாலம் ஆடியது என்றும், அதைப் பூகம்பம் என்று நினைத்து மக்கள் பயந்து விட்டார்கள் என்றும் காலையில் ஒரு கட்சிப் பத்திரிகையில் செய்தி வெளிவந்ததே, அது உண்மையா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்விக்கு அது தொடர்பு இல்லை என்றாலும், ஒரு பயங்கர செய்தியை மாண்புமிகு உறுப்பினரவர்கள் பத்திரிகையில் பார்த்ததாகச் சொல்லுகிறார்கள். அந்தப் பத்திரிகைச் செய்தி முற்றிலும் தவறானது. அங்கு ஒன்றும் பூகம்பம் ஏற்படவில்லை. எந்தப் பயங்கரமும் நிகழவில்லை. அது பத்திரிகைச் செய்தி என்பதால் அதைப்பற்றி நான் அதிகமாக விளக்க விரும்பவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : அதை 20 லட்சம் ரூபாய் செலவு செய்து பெரிய பாலமாகக் கட்டவில்லை என்றாலும் 4 அடி உயரமாவது உயர்த்த 5 லட்சம் ரூபாய் செலவிலே கட்ட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது ஏற்கெனவே அங்கு ஊடுபாதை இருக்கிறது. உறுப்பினர் சொல்லும் யோசனைகள் பரிசீலிக்கப்படும்.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : தலைவரவர்களே, அடையாறு பாலத்தைப்பற்றி இப்படித் தகவலை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினு எண் 320 அடையாறு பாலத்தைப்பற்றி இருக்கிற காரணத்தினுல் அந்த வினுவையும் இப்பொழுது எடுத்துக்கொள்ளலாம்.

Adyar bridge

* 320 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) Whether the Adyar bridge is in a damaged condition ;

(*b*) if so, the extent of the damages ; and

(*c*) the steps taken to restore the bridge to a fit condition ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ), (இ) : அடையாறு பாலத்தில் மைலாப்பூர் முனையிலிருந்து 11, 12, 14, 15-ம் கண்களில் பல வெடிப்புகள் ஏற்பட்டுள்ளன.

(உ) வெடிப்பு ஏற்பட்டுள்ள வளைவுகட்டுமானத்தின் மேல் பளு தாங்கும் கான்கிரீட் பலகை அமைத்து அதன் மேற்பகுதிக்கு வலு வூட்டவும், தேவையான இடங்களில் பாலத்தின் அடிதளச் சுவர்களை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வி. எஸ். கோவிந்தராசன் : அடையார் பாலம் பற்றி இப்படி பல தகவல்களும் எழுதியிருப்பதிலிருந்து பாலத்திலும் ஏதாவது சதி செய்ய யாராவது முன்கூட்டித் திட்டமிட்டிருப்பார்களா ? அதற்குப் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தவருன செய்திகளை வெளியிடுகின்ற அந்தப் பத்திரிகையைப் பற்றி இந்த அரசு அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை.

திரு. கே. விநயகம் : செங்கற்பட்டு மாவட்டத்திலிருந்து சென்னைக்கு வருகிற பொதுமக்கள் உபயோகப்படுத்துகிற வழிகளில், இந்த அடையார் பாலமும் ஒன்று. ஆகையால், சைதாப்பேட்டைப் பாலத்தை அகலப்படுத்தியிருப்பதைப்போல், இந்த அடையார் பாலத்தைப் பழுது பார்ப்பதைவிட, இதை எடுத்துவிட்டுப் புதிய பாலமாக, பெரியதாகக் கட்ட அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : புதிய பாலம் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதற்கான திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டன. அதன்படி அந்தப் பாலத்திற்கு நாற்பது லட்சம் ரூபாய் செலவாகும் என்று பொறியாளர்கள் எடுத்துக் கூறியிருக்கிருர்கள். இதற்கிடையிலே, இந்த அரசு பொறுப்பேற்றதும் அந்தப் பாலத்தால் ஏற்படக்கூடிய ஆபத்தை மிக விரைவிலே தவிர்க்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்களாலும் பொறியாளர்களாலும் எடுத்துக் சொல்லப்பட்டது. கிட்டத்தட்ட ஐந்தாறு நாட்களுக்குள்ளேயே சீர்கெட்டு, திடீரென்று எந்த நேரத்திலும் உடைந்து விடக்கூடும் என்ற பயங்கர நிலைமையில் இருந்த அந்தப் பாலத்தை உடனடியாக, குறைந்த செலவில், புழுது பார்த்து, பிறகு பெரும் திட்டமாக நாற்பது லட்ச ரூபாய் செலவில், பெரிய பாலத்தை அதற்குப் பக்கத்தில் அமைக்கலாம் என்ற எண்ணத்தோடு தான் முதலில் இந்தப் பாலத்தைச் சீர்திருத்துவதற்கான காரியம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்தப் பாலத்தை எப்பொழுதுதான் சீர்திருத்தப்போகிருர்கள் ? இன்னும் எத்தனை நாட்களுக்குள்ளே அந்தப் பாலத்தின் மீது மோட்டார்கள், பஸ்கள், லாரிகள் செல்லலாம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : இந்தப் பாலத்தின் வேலையில் ஒரு பகுதி முடிந்து விட்டது. முழுவதும் மொத்தமாக எடுத்து வேலை செய்யப்பட்டால், அங்கே போக்குவரத்துக்கு இடையூறு நீண்ட காலமாக இருக்கும் என்ற காரணத்தால், இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அந்தப் பாலம் பழுது பார்க்கப்பட்டது. இப்பொழுது ஒரு பகுதி வேலை முடிந்து விட்டது. அந்தப் பகுதியிலே இப்பொழுது போகக்கூடிய வாகனங்கள் போய்க்கொண்டு இருக்கின்றன. போக்கு வரத்திற்கு இடைஞ்சல் இல்லாத அளவிற்கு வாகனங்கள் விடப்படுகின்றன. அடுத்த பகுதி வேலை ஏறக்குறைய ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதத்திற்குள் முடிந்துவிடக் கூடும்.

திரு. கே. விநயகம் : இந்தப் பாலம் பழுது பார்க்கவேண்டிய நிலைமைக்குச் சீர்கேடாகப் போயிருந்திருக்கிறது. இது அதனுடைய வயதைப் பொருத்து சீர்கேடாகப் போய் விட்டதா ? அல்லது வேறு யாராவது—கனம் உறுப்பினர் ஒருவர் சொன்னதைப்போல்—சதி வேலை செய்து, உடைத்து விட்டதால், திருத்தியமைக்க வேண்டும் என்ற நிலைமைக்கு அரசாங்கத்தைக் கொண்டுவந்து விட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : காலம் செய்த சதிதான். (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னுல் தள்ளிவைக்கப்பட்ட வினு எண் 296 இப்பொழுது எடுத்துக்கொள்ளப்படுகிறது.

கள்ள நோட்டுகள்

*296 வினு.—திரு. எஸ். ஜே. ராமசாமி : மதிப்பிற்குரிய முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு பிப்ரவரி, மார்ச்சு திங்களில் வடார்க்காடு மாவட்டம், வேலூரில் கள்ள நோட்டு சம்பந்தமாக யாரேனும் கைது செய்யப்பட்டுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள் ? அவர்கயள் ஙார், யார் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

DR. H. V. HANDE ; Sir, are the Government aware of the fact that there is a strong rumour or a serious apprehension that a number of counterfeit notes are manufactured in a number of places in Tamil Nad and this is probably one of the causes for inflation and if so, what steps our Government are taking to prevent it ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Sir, the answer to the question is appropriate. The question was, 'whether anybody had been arrested for counterfeit crime.' The answer was 'No.' But as the hon. Member has stated, there is an apprehension and there is also an investigation. Certain persons were held up for counterfeiting notes and they had also stated wherefrom they got the Counterfeit notes and they were also apprehended and taken into custody. Since the real culprit has not yet been taken into custody, they were let off but investigation is going on.

திரு. கே. பி. எஸ். மணி : இம்மாதிரி கள்ள நோட்டுகள் சிவகாசி வட்டாரத்திலும் மற்ற இடங்களிலும் அதிகமாக இருப்பதாக அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : நல்ல தந்திர குணம் படைத்த, அச்சகம் வைத்திருக்கும் யாரும் செய்யக்கூடியதுதான். சிவ காசியில் மட்டுமல்ல.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கடந்த பிப்ரவரி, மார்ச் திங்களில் நடத்தப்பட்ட ஊர்வலங்களில் இரண்டு ரூபாய் கள்ள நோட்டுகளின் புழக்கம் இருந்ததாகச் செய்தி வந்தது அரசினருக்குத் தெரியுமா ? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இது ஒரு குறிப்பிட்ட பகுதியில் நடைபெற்றதாகக் கருதப்படும் கள்ள நோட்டு வழக்கைப் பற்றி யது. கனம் உறுப்பினர் அவர்கள் கேட்பது, வேருரிடத்தில் கள்ள நோட்டுப் புழக்கம் இருந்ததைப்பற்றிய கேள்வியாகும். அதைப்பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், விவரம் சேகரித்துத் தரப்படும்.

THIRU B. VENKATASWAMY ; Sir, is the Government aware of the fact that the increase in the price of food grains and other articles is due to counterfeit coins and notes?

THE HON. THIRU C. N. ANNADURAI ; No Government can recognise counterfeit notes and cite as an instance for price rise but we can say this much, that the more the notes are printed the higher the prices.

THIRU K. VINAYAKAM : Sir, whereas printing of counterfeit notes has become almost a contageous disease not only in our State but all over the country, and whereas the notes so produced are far in excess of the quantity of notes that are legal tenders in our country and whereas the rise in price is mainly due to counterfeiting notes and whereas there cases are dealt with under the ordinary Criminal Procedure Code which is no good to tackle the problem, will the Government sensibly put forward to the Central Government a proposal that they should bring forward fresh legislation to deal with it in such a manner with a view to dispose of such cases quickly instead of having means of appeal to the higher courts and thus delay the dispensation of justice?

THE HON. THIRU C. N. ANNADURAI : However heinous a crime may be, no Government will dispense with the ordinary course of justice.

THIRU K. VINAYAKAM : Led them bring forward a fresh legislation for this purpose.

THE HON. THIRU C. N. ANNADURAI : No fresh legislation can be thought of, which will run counter to the norms of judicial enquiry and courts of appeal.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்தில் போளுர், ஆரணி ஸ்டேட் பாங்குகளில் ஐந்து ரூபாய் கள்ள நோட்டுகள் பிடிபட்டன என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : அதுபற்றிய தகவல் இப் பொழுது என்னிடத்தில் இல்லை.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : கள்ளநோட்டு மோசடி என்பது ஒரு பக்கம் இருக்க, நோட்டை இரட்டிப்பது (டப்ளிங் ஆப் கரன்ஸி) என்ற மோசடியும் நடந்து வருகிறதே, அதுபற்றி சர்க்காருக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : பல மோசடிகள் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்பதைப் போல, இந்த மோசடியும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, however much we may strive hard to put an end to this kind of mistake, are the Government aware that unless the national character of the average Indian is developed, these things cannot be put an end to. So, what steps are the Government taking to spread that kind of national character and that kind of being above suspicion?

THE HON. THIRU C. N. ANNADURAI : The building up of the national character is not the monopoly of any Government. Any hon. Member can do it.

திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் : ஐயா, கள்ள நோட்டுகள் பரவலாக நட மாடுவதாகச் சொல்லப்படுகிறதே, அந்த நபர்களின் இல்லங்களில், கணக்கு கள், ரொக்க இறுப்புத் தொகை முதலியவைகளைச் சோதனை செய்ய அரசுக்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : வழக்கமாக இப்படிப்பட்ட நேரங்களில் போலீஸ்காரர்கள் என்ன என்ன முறையைக் கையாளுவார் களோ அதைத்தான் கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். சில வேளைகளில் அதே முறைகளைப் போலீஸ்காரர்கள் கையாளுகிறபோது, நம்மிலே சிலர்தான் இந்த முறைகள் அதிகம் என்றும் வாதாடுகிருேம்.

திரு. ஜெ. பெள்ளி கௌடர் : கள்ள நோட்டு அச்சடிக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுகிற தண்டனை குறைவாக இருக்கும் காரணத்தால்தான், இத் தகைய குற்றம் அதிகரிக்கிறது என்று கருதப்படுகிறது. ஆகவே, இந்த அரசு அப்படிப்பட்ட குற்றம் செய்பவர்களுக்குக் கடுமையான தண்டனை விதிக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : இதுபற்றி சட்ட நிபுணர் கள் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அப் பொழுது அதுபற்றி யோசிக்கலாம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் பதினுலாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள ஐந்து ரூபாய் நோட்டு கள் ஒருவருடைய வீட்டிலிருந்து பிடிக்கப்பட்டதாகவும், அவர் பதினைந்து நாட்கள் வரையிலும் பாதுகாப்பில் வைத்துக் கேட்கப்பட்டு விடுதலை செய்யப் பட்டு விட்டதாகவும் சொல்லிக் கொள்ளுகிருர்களே, அது உண்மையா ? அப்படியென்ருல், அவர் யார் ? அதன் நோக்கம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : கனம் உறுப்பினர் சொன்ன தகவல் உண்மை. தொகைதான் கொஞ்சம் அதிகம். பதி னுலாயிரம் ரூபாய் என்று குறிப்பிட்டார்கள். ஆருயிரம் என்பது சர்க் காருக்கு வந்த தகவல். கள்ள நோட்டுகள் எந்த எந்த இடத்தில் நட மாட்டத்தில் இருந்தனவோ, அந்த இடத்தில் இருந்தவர்கள் விசாரணைக் குக் கொண்டுவரப்பட்டார்கள். மேற்கொண்டு, அது விசாரணை நடைபெற்று கொண்டிருக்கிற இந்த நேரத்தில், பெயர்களை வெளியிடுவது விசாரணையைக் குந்தகப்படுத்தும்.

திரு. மு.ச. சிவசாமி : தலைவர் அவர்களே, இரட்டிப்பு நோட்டு வழக்கிலும், கள்ள நோட்டு வழக்கிலும் தண்டனை பெற்றவர்கள் முதல் வகுப்பில் சௌகரியமாக இருப்பதாலும், பலர் விடுதலை அடைந்து விடுவ தாலும் இந்தக் குற்றங்கள் மாநில அளவில் பரவி வருவதால், இப்படிப் பட்ட குற்றங்கள் செய்பவர்களைப் பாதுகாப்புக் கைதிகளைப்போல அரசாங்கம் ஏன் நடத்தக் கூடாது என்பதை அரசாங்கம் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் இத்தகைய குற்றங்களைச் செய்தவர்களை "ஏ" வகுப்பிலே வைப்பதே அதிகம் என்று குறிப்பிட்டுவிட்டு, அவர்களை ஏன் பாதுகாப்புக் கைதிகளாக நடத்தக் கூடாது என்றார்கள். பாதுகாப்புக் கைதிகளாக வைப்பது என்றால், அவர்களுக்கும் இன்னும் அதிகமான வசதிகளும், சௌகரியங்களும் கிடைக்கும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தேனி 2 ரூபாய் கள்ள நோட்டு வழக்கு என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதைப்பற்றித் தனிக் கேள்வி போடவும்.

Commercial Taxes Department

*305 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to prune the excess staff found in the Commercial Taxes Department in the State ; and

(*b*) if so, the details of the same and when would it be given effect to?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) No Sir.

(*b*) Does not arise.

THIRU K. VINAYAKAM : Is the Minister aware of the fact that in the Commercial Tax Department there are various officers doing the same kind of work like the Assistant Commercial Tax Officer doing the same work as the Deputy Commercial Tax Officer and is it not enough that one set of officers are retained whereas in the highest strata there is the Deputy Commercial Tax Officer who can tackle any appeal ?

THE HON. THIRU C. N. ANNADURAI : Does it mean that the hon. Member approves of the principle that wherever there is duplication, there ought to be retrenchment?

THIRU K. VINAYAKAM : (Sitting) Yes, certainly. (Standing) The Chief Minister has inspired me to put some other question.

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Member has answered my question sitting. Therefore it may not go into the proceedings. Therefore he better stand and give the answer.

THIRU K. VINAYAKAM : Is the Minister for Commercial Taxes aware of the fact that this kind of duplication of work can be tackled and retrenchment may be effected so as to get more coffers to the Government for development work?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Certainly. The Government has already taken steps and that is why our Hon. Chief Minister wanted to know whether the member agrees with the step that has been taken by the Government.

Guests Control Order

*306 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have amended the "Madras Guests Control Order, 1965" restricting the number of persons to be fed at ordinary parties to 25 and at marriages or funerals at 50 from 14th April 1967 ; and

(*b*) if so, the reasons for such amendment ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தமிழ்நாடு 1965-ம் ஆண்டு விருந்தினர் கட்டுப்பாட்டு ஆணையில் உள்ள கட்டுப்பாடு, தடை செய்யப்பட்ட உணவு பொருட்களைப் பரிமாறுவதற்குமட்டுமே பொருந்தும். 1967-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் தேதியிலிருந்து இந்த ஆணை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

(இ) தடை செய்யப்பட்ட உணவு வகைகளைப் பரிமாறுவதனால் திருமணம், ஈமக்கடன் போன்ற விருந்தில் 50 பேருக்கும், சாதாரண விருந்தில் 25 பேருக்கும் உணவளிக்கலாம் என்ற இந்த எண்ணிக்கை மிகவும் குறைவு. இந்தக் கட்டுப்பாட்டினைத் தளர்த்தும்படி அரசிற்கு அடிக்கடி வேண்டுகோள்கள் வந்தன. அதனால் அரசு இந்த எண்ணிக்கையை சாதாரண விருந்தானால் 50 ஆகவும் திருமணம் முதலிய விருந்தானால் 100 ஆகவும் உயர்த்துவதென முடிவு செய்துள்ளது. தடைசெய்யப்பட்ட உணவு வகை என்பதற்குரிய விளக்கமும் தளர்த்தப்பட்டுள்ளது. முதலில் இது எல்லா தானியங்களிலிருந்தும் தயாரிக்கப்படும் பொருட்களையும் அவற்றின் பண்டங்களையும் குறித்தது. சென்னைக் கடைகளில் அரிசியைத் தவிர, மற்ற தானியங்கள் அதிகமாக கிடைக்காததால் தடை செய்யப்பட்ட உணவு வகை என்பதன் விளக்கம் மாற்றப்பட்டு அரிசியையும், அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களையும், அவற்றின் பண்டங்களையும் மட்டுமே இப்போது குறிக்கின்றது.

THIRU K. VINAYAKAM : Is the Minister aware of the fact that the Madras Guests Control Order, 1965, was not followed in spirit or even in letter and frequently it has been violated by feeding a large number of guests in different sets of rooms which usually came to one thousand and odd and is he also aware of the fact that the relaxation of this order does not improve the position very much.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த உத்தரவு ஆணைகள் எல்லாம் மீறப்படுகின்றன என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அரசின் ஆணைகளை மீறப்படாமல் பார்த்துக்கொள்வது பொது மக்கள் தலைவர்களுடைய பொறுப்பு. நமது உணவு நெருக்கடியில் சிக்கனத்தை ஏற்படுத்துவதற்காகத் தான் இந்த விதி முறைகள், ஆணைகள் இருக்கின்றன. அதற்குப் பதிலாக இதையே எடுத்துவிடலாம் என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் செய்வது உணவு நெருக்கடியை அதிகரிக்கத் தான் வழி செய்யும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த விருந்தினர் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து தப்புவதற்காகச் சிலர், திருமண அழைப்பிதழில் "Bring your ration" என்று அச்சடித்துவிட்டு, திருமண வீட்டுக்காரர்களே விருந்து கொடுக்கிறார்களே, அதுபற்றி என்னென்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதுபோன்ற தந்திர உபாயங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்பநாடார் : இந்த ஆணையை மீறியவர்கள்மீது அரசாங்கத் தரப்பிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆணையை மீறுகிறவர்கள் மீது "கிரிமினல் புரசீஜர் கோட்" பிரகாரம் வழக்குத் தொடர அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனுல் அதிகாரத்தை அரசாங்கம் பயன் படுத்தவில்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : விருந்துகளில் முக்கியமாக, ஏழைகளுக்குச் சாப்பாடு போட வேண்டுமென்று நினைக்கிருர்கள். ஆயிரம் ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவது ஒரு தர்ம காரியம். கலியாணம் போன்ற வைபவங்களில் இந்த மாதிரி விருந்து வைத்து ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவதற்குத் தடையாக இருப்பதால், இது ஒரு அர்த்தமில்லாத ஆர்டர் என்பது அரசாங்கத்திற்கு ஏன் தெரியவில்லை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு நெருக்கடி நேரத்தில் நம்முடைய சமுதாயத் தேவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் இந்த ஆணையின் உள்ளடக்கம்.

Wheat for Madras

*307 *Q.*—THIRU K. VINAYAKAM : } Will the Hon. the Minister
THIRU K. B. S. MANI : }
for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Soviet Union of Russia have supplied about six thousand tons of wheat to Madras State ; and

(*b*) if so, whether it was supplied as a gift?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) வினவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that a shipload of wheat arrived in Madras port and the Chief Minister as well as the Minister for Food went to the ship and accepted the present for distribution in our State ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம், ஐயா. சோவியத் ரஷ்யா இந்தியாவுக்கு 2 லட்சம் டன் கோதுமைப் பொருளைக் கொடுக்க முன்வந்தது. அதில் 6 ஆயிரம் டன் அளவுள்ள கோதுமைப் பொருளை ஏற்றிக்கொண்டு வந்துள்ள ஒரு கப்பல் சென்னைத் துறைமுகத்திற்கு வந்துள்ளது. அந்தக் கப்பலிலுள்ள கோதுமைப் பொருளை நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள். அதை வாங்குகிற பாக்கியம் தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, பகிர்ந்து கொள்ளும் அதிகாரம் நமக்கு இல்லை—மத்திய அரசாங்கத்திடத்தில்தான் அந்த அதிகாரம் இருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : சார், இப்படி நம் மாகாணத்திற்கு வேண்டிய அரிசியை, மத்திய அரசாங்கம் கொடுத்துத்தான் நாம் வாங்க வேண்டுமென்ற காலம் எதுவரையில் நீடிக்கும் ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட குடிமக்களாகச் செயல்படுகிற வரையில் அது எப்போதும் இருக்கும் என்பதுதான் இதன் பொருள்.

நில உச்சவரம்பு—

முற்பகல் 10–00

*308 வின—**திரு. வி. கே. கோதண்டராமன் :** }
திரு. கரு. சீமைச்சாமி : } மதிப்பிற்குரிய உணவு
திரு கே. ஆர். ஞானசம்பந்தன் : }
வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) நில உச்சவரம்பு சட்டம் எந்த ஆண்டில் நிறைவேற்றப்பட்டது ?

(இ) அது எப்போது அமுல் படுத்தப்பட்டது ?

(உ) அதன் மூலம் கிடைத்த மிச்ச நிலம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தமிழ்நாடு 1961-ம் ஆண்டு நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணய) சட்டம் (தமிழகச் சட்டம் 58/1961) 1962-ம் ஆண்டு மே திங்களில் தமிழக அரசிதழில் வெளியாயிற்று.

(இ) இது 6–4–1960-ல் இருந்தே பயன் தரும் வகையில் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (இது மூல மசோதா வெளியிடப்பட்ட தேதியாகும்.)

(உ) 1–3–1967-ல் இச்சட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட உபரி நிலம் 24,351 ஏக்கர் ஆகும். (நன்செய் 9,167 ஏக்கர், புன்செய் 15,184 ஏக்கர்).

*309 வின—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா.

கோயில்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமான நிலங்களுக்கு உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

*310 வின.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) சென்னை நில உடமை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் உபரியாக கிடைத்த நிலங்களுக்கு நஷ்டஈடு கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் என்ருல், அதன் விபரம் என்ன ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN (*a*) Yes.

(*b*) The Madras Land Reforms (Compensation for surplus Land) Rules, 1966, which were placed on the table of the House on 27th March 1967 provide the mode of payment of compensation bonds.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் கிடைத்த மிச்ச நிலங்களை எந்த எந்த விவசாயிகளுக்கு தொழிலாளர்களுக்கு எந்த அளவு பங்கீடு செய்யப்பட்டிருக்கிறது ? இல்லை என்று சொன்னல் எப்போது? எந்த அடிப்படையில் விநியோகம் செய்வதாக உத்தேசம் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மொத்தம் 23 ஆயிரம் ஏக்கராவில் 16 ஆயிரம் ஏக்கரா தான் சுவாதீனப்படுத்தப்பட்டது நம் அரசாங்கத்தால். அவற்றில் 14,546 ஏக்கராக்கள், 6,770 விவசாயிகளுக் குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். ஞானசம்பந்தம் : ஐயா, 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று வரம்பு கட்டியதனுல் அதிக நிலங்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தினுல், அதை 20 ஸ்டாண்டர்ட் ஏக்கராகக் குறைத்து, விதிவிலக்கு களை ரத்து செய்து கோவில், மடங்களுக்குச் சொந்தமான நிலங்களையும் இந்தச் சட்ட வரம்புக்குள் கொண்டு வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : நில உச்சவரம்புச் சட்டம் இன்னும் எப்படி எல்லாம் திருத்தப்பட வேண்டுமென்று நாம் முன் கூட்டிப் பேசிக்கொண்டிருப்பது அப்படிப்பட்ட சட்டங்களில் இருந்து மக்கள் தப்புவதற்கு யோசனை சொல்வதாக அமைந்துவிடும்.

திரு. வி. கே.கோதண்டராமன் : திருத்தப்படுவதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதே நேரத்தில் மடங்களுக்கும், கோவில்களுக்கும் உச்ச வரம்புச் சட்டம் பொருந்தாதா ? அவர்கள் ஹைக்கோர்ட் வரையில் சென்று அந்த வழக்கின் தீர்ப்பு அடிப்படையில் அந்த நிலங்களுக்கு உச்ச வரம்புச் சட்டம் வரவில்லையா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மடங்கள் முதலியவற்றின் விவகாரத்தில் 'Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961' விதியின் கீழ் இப்போது 20 ஏக்கரா வுக்கு மேல் நிலம் இருந்தால் 'the trustee of the Public Trust shall lease out the lands in such excess to—

(i) a co-operative farming society ; or

(ii) any person who is already a cultivating tenant : or

(iii) any person who not being already a cultivating tenant. executes an agreement with the public trust that he will contribute his own physical labour or that of any member of his family in the cultivation of the land so leased out to him . . . , (கொடுத்து வருகிருர்கள்). ஆகவே, அவை தர்ம ஸ்தாபனங்களின் சட்டப்படி விதிவிலக்குப் பெற்று விடுகின்றன. அதுபற்றி சட்ட சம்பந்த மாகத்தான் ஆலோசனை செய்யவேண்டும்.

வீட்டுக்கு உச்சவரம்பு நிர்ணயம்

*311 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) வீட்டுக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கும் பொருட்டு சட்டம் கொண்டு வரும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமித திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தற்சமயம் (at present) இல்லை.

(இ) இவ் வினுவிற்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தற்சமயம் இல்லை என்று சொன் னுலும் மற்ற நிலத்திற்கோ, மற்றவைகளுக்கோ உச்சவரம்பு கொடுத்துக் கொண்டு வரக்கூடிய நேரத்தில் வீடுகளைக் கட்டி, வாடகைக்கு விட்டு, கொள்ளை லாபம் அடிக்கக்கூடிய அளவில் நிலைமை வளர்ந்து வருகிறது அல்லவா ? ஆகவே உடனடியாக, கண்டிப்பாக வீடுகளுக்கும் உச்சவரம்பு கட்ட ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : தற்சமயம் இல்லை என்று அளிக்கப்பட்ட பதிலிலேயே, எதிர்காலத்தில் இருக்கலாம் என்ற பதில் தொக்கியிருக்கிறது.

சேத்தியாதோப்பு அணைக்கட்டு

*315 வினு—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதி லளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகா, சேத்தியாதோப்பு அணைக்கட்டு பஸ் போக்கு வரத்துக்கு இடைஞ்சலாக ரொம்பவும் குறுகி இருப்பதால் அதை புதுப்பித்துக் கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

(இ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி : (அ) and (இ) உறுப்பினர் குறிப்பிட்ட வேலையை மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் நான்காவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எடுத்துக் கொள்வதற்கான ஒரு திட்டம் அரசின் பரி சீலனையில் உள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு வழியாக போக்குவரத்து அதிகம் இருக்கிறது. இப்போது தமிழக அரசு பஸ்களும் போகின்றன. ஆகவே உடனடியாக அந்தப் பாலத்தைக் கட்ட நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணுநிதி: மத்திய அரசாங்கத்தில் இருந்து நமக்கு சாலை நிதி ஒதுக்கத்தில் 129 லட்சம் ஒதுக்கப்பட வேண்டும். அது ஒதுக்கப்படுகிற நேரத்தில், இந்தப் பால வேலை எடுத்துக்கொள்ளப்படும். பொறியாளர்கள் இதற்கான வரைப்படத்தையும், மதிப்பீட்டினையும் தயார் செய்து வருகிருர்கள். 20 லட்சம் ரூபாய் தேவைப்படும் என்கிருர்கள். ஆகவே அந்த நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறபோது நான்காவது ஐந் தாண்டுத் திட்டத்தில் இது செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துக்கொள் கிறேன்.

Tahsildars in Kanyakumari district

*316 *Q.*—Thiru A. CHIDAMBARANATHA NADAR: will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) how many Tahsildars are there from other Districts working in Kanyakumari district, and

(*b*) if so, on what special grounds they have heen posted to this district ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : (*a*) Two Tahsildars from Tirunelveli district are working in Kanyakumari district.

(*b*) Qualified Tahsildars are not available in Kanyakumari district.

Thiru A. CHIDAMBARANATHA NADAR : Sir, may I know who are the Tahsildars from other districts who are working now in the Kanyakumari district ?

The Hon. Thiru K. A. MATHIALAGAN : I am not expected to know the names of each tahsildar. Perhaps the hon. Member because of his familiarity with the Kanyakumari district may have known those names.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தகுதி வாய்ந்த நபர்கள் கன்னியாகுமரி ஜில்லாவில் தாசில்தாராக வருவதற்கு இருக்கிறுர்கள். டபிள் டிகிரி ஹோல்டர்கள் இருந்தும் வேண்டுமென்றே அவர்களுடைய சீனியாரிடியைப் புறக்கணித்து, வெளியில் இருந்து ஆட்களைக் கொண்டுவந்து அவர்களுடைய் ப்ரமோஷன்களைத் தடை செய்வதற்குக் காரணம் என்ன?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is incorrect to say that there are qualified people. Kanyakumari district is short of qualified personnel to man the posts of Deputy Tahsildars and Tahsildars. Persons are included in the lists year after year by grant of concessions and exemptions from rules. Notwithstanding this, it has become necessary to borrow staff from Tirunelveli district to man certain posts in the Civil Supplies Branch. The number of persons so taken on deputation depends on the number of persons that cannot be filled by local qualified personnel from time to time. Both the persons now working in Kanyakumari district are already in the list of Tahsildars for Tirunelveli district. No one included in the list of Tahsildars for Kanyakumari district is acting in a lower post.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : கன்னியாகுமரி மாவட்டத்திலேயே தாசில்தாராக வருவதற்குத் தகுதியான நபர்கள் இருந்தும் அடுத்த மாவட்டத்தில் இருந்து அங்கே கொண்டுவருவதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தவருன வாதத்தை திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்வது நியாயம் ஆகாது. தாசில்தாருக்குள்ள விதிகளை பல தடவைகள் தளர்த்தியும் கூட, அந்தப் பகுதியில் இருந்தே தாசில்தாராக வருவதற்கு தகுதி உடையவர்கள் இல்லை. ஆகவே வெளியில் இருந்து கொண்டுவர வேண்டியதாக இருக்கிறது.

அரசு மருத்துவ மனைகள்

*** 317 விறு.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குறிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகா சேத்தியாதோப்பில் இருக்கும் அரசாங்க மருத்துவ நிலையம் (Maternity Centre) சுமார் 6 மாத காலமாக மூடிக் கிடப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) அதை உடனடியாக திறக்க உத்தேசம் எதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) சேத்தியாத் தோப்பிலுள்ள அரசு மருத்துவ மனையும், மகப்பேறு இல்லமும்அமைந்துள்ள கட்டிடம் சீர்கேடான நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததாலும், அந்தக் கட்டிடத்தைப் பயன்படுத்துவது ஆபத்தானதென்று பொதுப் பணித்துறை அதிகாரிகள் அறிவித்திருந்ததாலும், மேற்படி மருத்துவ மனையையும் மகப்பேறு இல்லத்தையும் மூடுமாறு மருத்துவத்துறை நெறியாளர் கருத்துதெரிவித்தார். இத்திட்டத்தை அரசு எற்றுக் கொண்டது. எனவே மருத்துவ மனையும் மகப்பேறு இல்லமும் 22—2—1967 முதல் 21—5—1967 வரையில் மூடப்பட்டிருந்தன.

(உ) வாடகைக்கு வேறு கட்டிடம் அமர்த்தப்பட்டது. சேத்தியாத்தோப்பிலுள்ள அரசு மருத்துவ மனையும் மகப்பேறு இல்லமும் அந்த வாடகைக் கட்டிடத்தில் 22—5—1967 முதல் மீண்டும் செயல்படத் தொடங்கின.

* 318 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state —

(*a*) the present bed strength of the Government Hospital at Colachel :

(*b*) whether there is any proposal to increase the bed strength of this Hospital in view of the over increasing number of in-patients and

(*c*) the steps taken so far to increase the bed strength ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) பதினுன்கு.

(இ) & (உ) இம்மருத்துவ மனையில் 20 படுக்கைகளுடன் கூடிய கூடுதலான வார்டு ஒன்று கட்டுவதற்கான செயற் குறிப்பைப் பற்றி அரசு ஆலோசனை செய்தது. அரசின் நிதி நிலைமை, கடினமாக இருப்பதால் இச்செயற் குறிப்பு தள்ளி வைக்கப்பட்டது.

திரு. எ. சிதம்பரநாத நாடார் : குளச்சல் நகரமானது ஜனநெருக்கம் கூடுதலாகப் பெருகிக் கொண்டு வருகிற காரணத்தால், ஆஸ்பத்திரியில் கூடுதலாக படுக்கை வசதியை எற்படுத்த சர்க்காருக்கு அபிப்பிராயம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றி இப்போது அரசாங்கத்தின் கவனத்தில் இல்லை.

Water supply to Panruty

*319 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal with the Government to provide protected water supply to Panruty town in South Arcot district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பன்ருட்டி நகரத்திற்கான நீர் வழங்கும் திட்டம் ஒன்றைப் புலனுய்வு செய்வதற்கு ஒப்பும் கோரிக்கை ஒன்றை அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. எஸ். ராமச்சந்திரன் : பன்ருட்டி நகரம் தென்னுற்காடு மாவட்டத்தில் வியாபார இடமாக இருப்பதாலும், எராளமான மக்கள் வந்து போவதாலும், அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தர சர்க்கார் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : உடனடியாக நடவடிக்கை எடுக்க சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறது.

உடுக்குறியிடப்படாத விறுக்கள்.

கவர்னர் மாளிகை பணியாளர்கள்

1 விறு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய முதல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கவர்னர் மாளிகையில் (ஊட்டி and சென்னை) பணிபுரிபவர்களுக்கென்று கட்டப்பட்ட வீடுகள் மொத்தம் எத்தனை ?

(இ) அவைகளுள் எத்தனை வீடுகள் காலியாக உள்ளன?

(உ) இவைகளை வீடில்லாமல் கஷ்டப்படும் இதர சிப்பந்திகளுக்கு வாடகைக்கு விடும் உத்தேசம் உண்டா?

விடை—

	சென்னை.	உதகமண்டலம்.
(அ) உறைவிடங்களின் மொத்த எண்ணிக்கை.	187	299
(இ) காலியாக உள்ள உறைவிடங்கள்	..	133

(உ) உதகமண்டலத்திலுள்ள கவர்னர் மாளிகையில் காலியாக உள்ள 133 உறைவிடங்களில், 102 இடங்களை ஏனைய துறைகளுக்கு ஒதுக்கப்படுவதற்காக அவற்றை ஏற்கனவே பொதுப்பணித்துறைக்கு மாற்றியாகிவிட்டது. எஞ்சியுள்ள 31 உறைவிடங்களைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு அத்துறை கேட்கப்பட்டுள்ளது.

கவர்னர் உதகமண்டலத்திற்குச் சென்று தங்கும்போது, அவருக்குத் தேவைப்படும் குறைந்த அளவு உறைவிடங்களையே ராஜ்பவனம் தன் கைவசத்தில் வைத்துள்ளது. இவ்வுறைவிடங்கள் கோடை காலத்தில் மட்டுமே தேவைப்படும், எனினும் அவற்றைத் தனியே ஒதுக்கி வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது.

A.—

	Madras.	*Ootacamund.*
(*a*) Total number of quarters ..	187	299
(*b*) Vacant quarters	..	133

(*c*) Out of the 133 vacant quarters in the Raj Bhavan at Ootacamund, 102 quarters have already been transferred to the Public Works Department for allotment to other Departments. That department has also been requested to utilise the remaining 31 vacant quarters.

Only the minimum-number of quarters as are required for occupation when the Governor takes up residence at Ootacamund is being retained with Raj Bhavan and it is necessary to keep them reserved, though they are required only during the season.

மின் கழக சோதனைகள்

2 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 ஜனவரி முதல் டிசம்பர் வரையில் மின்சாரம் கள்ளத்தனமாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்டு பிடிப்பதற்கான மின்சார போர்டு சோதனைகள் நடத்தியதா?

(இ) ஆம் எனில், ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை இடங்களில் சோதனைகள் நடத்தப்பட்டன?

(உ) எத்தனை சோதனைகளில் அவ்வாறு நடந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டது?

விடை—

(அ) ஆம்.

(இ) & (உ)—

	மாவட்டம். (1)	சோதனைகளின் எண்ணிக்கை. (2)	எத்தனை சோதனைகளில் கள்ளத்தனமாக பயன்படுத்துவதை கண்டு பிடிக்கப்பட்டது. (3)
1	சென்னை	3	1
2	வட ஆற்காடு	12	8
3	தென் ஆற்காடு	..	..
4	தஞ்சாவூர்	..	..
5	செங்கற்பட்டு	5	2
6	மதுரை	2	1
7	ராமநாதபுரம்	3	1
8	கோயம்புத்தூர்	6	4
9	திருச்சி	3	1
10	நீலகிரி	..	..
11	திருநெல்வேலி	2	1
12	கன்னியாகுமரி	1	..
13	தர்மபுரி	..	..
14	சேலம்	17	11

A.—

(*a*) Yes

(*b*) and (*c*)—

	Serial number and district. (1)	*Number of Inspection conducted.* (2)	*Number of cases detected.* (3)
1	Madras	3	1
2	North Arcot	12	8
3	South Arcot	..	..
4	Thanjavur	..	..
5	Chingleput	5	2
6	Madurai	2	1
7	Ramanathapuram	3	1
8	Coimbatore	6	4
9	Tiruchirappalli	3	1
10	The Nilgiris	..	..
11	Tirunelveli	2	1
12	Kanyakumari	1	..
13	Dharmapuri	..	..
14	Salem	17	11

நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னிமலை

3 வினா.—**திரு. செ. பாலசுப்பிரமணியம் :** மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் சென்னிமலை நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் 1965-66 வருட வரவு செலவுத் கணக்கு தணிக்கை செய்யப்பட்டதா?

(இ) ஆம் எனில், அத்தணிக்கை அறிக்கையில் செலவினங்களின் ஒழுங்கீனங்கள் சுட்டிக் காட்டப்பட்டனவா?

(உ) ஆம் எனில், அவற்றின் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன?

விடை—

(அ) சென்னிமலை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் 1965-66 வருட வரவுச் செலவுக் கணக்கு தணிக்கை இன்னும் முற்றுப் பெறவில்லை.

(இ) and (உ) வினா எழாது.

A.—(*a*) The final Audit of the Chennimalai Weavers' Co-operative Society for the year 1965-66 has not been completed

(*b*) and (*c*): Do not arise.

பம்பு செட்டுகளுக்கு மின்சாரம்

4 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா-

(அ) பம்பு செட்டுகளுக்கு அளிக்கப்படும் மின்சார வசதிக்காக வாங்கப்படும் " செக்யூரிடி டிபாசிட் " பணத்திற்கு வட்டி உண்டா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

விடை—

(அ) and (இ)—வேளாண்மைக்கு மின்சாரம் உபயோகிப்பவர்கள் உள்பட, மின்சாரம் உபயோகிப்பவர்கள் ஒவ்வொருவரும் செலுத்தும் ரொக்க பிணைவைப்புத் தொகைக்கு தமிழக மின்குழு ஆண்டொன்றுக்கு 3½ சத வீதம் வட்டி அளிக்கிறது. ஆனால் பிணைவைப்புத் தொகைக்கு ரொக்கத்திற்கு பதிலாக செலுத்தப்படும் அரசாங்கக் கடன் பத்திரங்களும், தமிழக மின் குழுவின் கடன் பத்திரங்களும் தமக்குரிய வட்டியை பெறுவதால், அக்கடன் பத்திரங்களுக்கு வட்டி கொடுக்கப்படுவதில்லை.

A.—(*a*) and (*b*)

The Madras State Electricity Board pays interest at the rate of 3½% per annum on the security deposits tendered in cash by the consumers including the agricultural consumers. But in the case of security deposit tendered by way of securities of the Government and the Madras State Electricity Board loan bonds, in lieu of cash, no interest is paid, as the securities themselves earn interest

தொழில் நுட்பக் கல்வி.

5 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தொழில் கல்வி கல்லூரிகளில் (Polytechnic) படித்து தேறியவர்களுக்கு வேலை கொடுக்க, தேறிய உடனே அவர்களின் பெயர்களை முறையாக ரிஜிஸ்தர் செய்து வைத்து, முறையாக தொழிற்சாலைகளில் வேலை கொடுப்பதற்கான ஏற்பாடு செய்யும் உத்தேசமுண்டா?

விடை—

வேலை தேடுபவர் அனைவரும் (தங்கள் பெயர்களை) வேலை வாய்ப்பகங்களுக்குத் தாங்களாகவே போய் பதிவு செய்து கொள்ளவேண்டும். தொழில் நுட்பக் கல்வியில் தேர்ச்சி பெற்றுள்ளவர்கள் தங்கள் பெயர்களை வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து கொள்ளலாம். வேலை தரும் அதிகாரிகள், காலி இடங்களைப்பற்றி அறிவித்தவுடன், அவர்கள் குறிப்பிட்டுள்ள கல்வித் தகுதி, அனுபவம் இவற்றை உடையவர்களை வேலை வாய்ப்பகம் அந்த அதிகாரிகளிடம் அனுப்பிவைக்கிறது. இவர்களுக்குத் தகுதியான வேலை தேடித் தருவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

A.—

Registration with Employment Offices is voluntary and it is open to all persons seeking employment assistance to get registered normally with the Employment Exchanges. Candidates passing out of Polytechnic, can get themselves registered with Employment Exchanges. When vacancies are notified by employers, applicants are sponsoed according to the qualifications, experience, etc. as prescribed by the employers. All efforts are made to find suitable employment for these persons.

தொழிற்பேட்டை, அரக்கோணம்

6 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குறிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணத்தில் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், எப்போது?

விடை—

(அ) ஆம்.

(இ) அரக்கோணம் தொழிற்பேட்டையில் கட்டப்பட்ட ஆறு தொழிற்சாலைப் பிரிவுகளும் 1965 செப்டம்பர் மாதத்தில் தொழிலதிபர்களுக்கு ஒதுக்கப்பட்டன. இப்பிரிவுகள் தொழிலதிபர்களால் கீழ்கண்டுள்ள தேதிகளில் எடுத்துக்கொள்ளப்பட்டன—

பிரிவின் வகை.	எடுத்துக்கொள்ளப்பட்ட தேதி.
(1)	(2)
ஜி-1	27—12—1965
ஜி-2	25—11—1965
ஜி-3	17—11—1965
ஐ-1	8—12—1965
ஐ-2	18—10—1966
ஐ-3	29—11—1966

A.—(*a*) Yes.

(*b*) All the six factory units constructed in the Industrial Estate, Arkonam, were allotted to the Industrialists in September 1965. The Units were occupied on the following dates.

Type of Unit. (1)	*Date of occupation.* (2)
G—1	27th December 1965
G—2	25th November 1965
G—3	17th November 1965
I—1	8th December 1965
I—2	18th October 1965
I—3	29th November 1966.

பள்ளி இறுதித் தேர்வு.

7 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெற்ற பள்ளி இறுதித் தேர்வு எழுதுவதற்காகப் பதிவு செய்து கொண்ட மாணவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

(இ) தேர்வுக்குச் சென்ற மாணவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) 187,699.

(இ) 183,133.

A.—(*a*) 187,699

(*b*) 183,133

தோல் பதனிடும் தொழிற்சாலை

8. வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தோல் பதனிடும் தொழிலை அபிருவித்தி செய்யும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

(அ) and (இ) வட ஆற்காடு மாவட்டம் விண்ணமங்கலத்தில் மாநிலச் சிறு தொழில் கார்ப்பரேஷனின் கீழ் செயலாற்றுகின்ற தோல் பதனிடுதல் தோல் மெருகிடுதல் பணிமனையும், சென்னை அடையாற்றிலுள்ள மத்தியத் தோல் ஆராய்ச்சி நிறுவனமும், சென்னை தோல் ஏற்றுமதி ஊக்குவிப்பு மன்றமும், தோல் பதனிடும் தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்கனவே மேற்கொண்டு வருகின்றன.

A.—(*a*) and (*b*) The Tanning and Finishing unit at Vinnamangalam (North Arcot district) functioning under the State Small Industries Corporation as also the Central Leather Research Institute, Adyar, Madras and the Leather Export Promotion Council, Madras are already taking necessary steps for the development of Leather Tanning Industry.

ஸ்ரீபூமீஸ்வரர் தேவஸ்தானம், மரக்காணம்

9 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் வட்டம் மரக்காணத்திலுள்ள ஸ்ரீபூமீஸ்வரர் தேவஸ்தானத்தில் நிர்வாக தர்மகர்த்தா குறித்து சர்க்காருக்கு புகார் வந்திருக்கிறதா?

(இ) ஆமெனில் அதன் பேரில் சர்க்கார் எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(இ) ஆலயத்தில் ஒழுங்கீனங்களைச் சரிசெய்வதற்கும் ஆலயத்தைச் சிறந்த வகையில் நிர்வகிக்கவும் ஒரு நிர்வாக அதிகாரியை 1959-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் 45-வது பிரிவின்படி ஏன் நியமிக்கக்கூடாது என்று குறித்து நிர்வாக அறக்காவலருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை 27—6—1967-க்குத் தள்ளிப் போடப்பட்டது.

A.—(*a*) Yes.

(*b*) Notice has been issued to the Managing Trustee as to why an Executive officer should not be appointed under section 45 of the Hindu Religious and Charitable Endowments Act, 1959 to set right the irregularities and to ensure better administration of the temple. The enquiry stands posted to 27th June 1967.

ஆலயங்களிலுள்ள ஆபரணங்கள்

10 வினா.—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-67-ல் எத்தனை ஆலயங்களில் ஆபரணங்கள் சரி பார்த்து மதிப்பிடப்பட்டன?

(இ) இதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி, அவருடன் சேர்ந்துள்ள உதவியாளர்கள் போன்றோர்க்கு பிரயாணப்படி, சம்பளம் போன்ற செலவுகள் எவ்வளவு?

விடை—

(அ) 98

(இ) சரிபார்க்கும் அதிகாரிக்காகவும் (Verification Officer) அவருடைய பணியாளர்களுக்காகவும் சம்பளம், பயணப்படி வகையில் ஆன மொத்தச் செலவு வருமாறு :—

	ரூ.
1 சம்பளம்	23,108·79
2 பயணப்படி	2,938·55

A—(*a*) " 98 "

(*b*): The total expenditure incurred towards the salaries and travelling allowance of Verification Officer and his staff is as follows :—

	RS.	P.
(1) Towards salary	23.108	79
(2) Towards travelling allowance ..	2,938	55

மதிய உணவுத் திட்டம்

11 வினா.—திருமதி கே. பி. ஜானகியம்மாள் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள நகரவை, பஞ்சாயத்துக்கள் போன்றவைகளில் பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டத்தின் கீழ் அரசுக்கு 1965-66-ஆம் ஆண்டு ஏற்பட்டுள்ள செலவுத் தொகை எவ்வளவு?

விடை—

1965-66-ஆம் ஆண்டு மதிய உணவு அளிக்கும் திட்டத்தின் கீழ் அரசுக்கு ஏற்பட்ட செலவு—

(1) பஞ்சயத்து யூனியன் பகுதிகள், ரூ. 1,39,85,587 ;

(2) பஞ்சாயத்து யூனியன் அல்லாத பகுதிகள் (நகரப் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளையும் சேர்த்து)—ரூபாய் 28,37,816.

மொத்தம்—ரூபாய் 1,68,23,403.

A—Expenditure incurred on account of subsidy grant to the municipalities and panchayats for the midday meal scheme for the year 1965-67:—

	RS.
(1) Panchayat Union areas ..	1,39,85,587
(2) Non-panchayat Union areas (including schools in municipal areas)	28,37,816
Total ..	1,68,23,403

கடில நதியின் குறுக்கே பாலம்

12 வினா.—திரு. மு. கந்தசாமி படையாச்சி : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு ஜில்லா, உளுந்தூர்பேட்டை தொகுதியிலுள்ள திருவெண்ணெய் நல்லூர் போகும் ரோட்டில் உள்ள 20-வது மைலில் கடில நதியின் குறுக்கே பாலம் கட்ட எஸ்டிமேட் தயார் செய்து ஐந்து வருஷங்களாகியும் இதுவரையில் வேலை துவங்காததற்கு காரணம் என்ன?

(இ) எப்போது துவக்கப்படும்?

விடை.—

(அ) அங்கத்தினர் குறிப்பிட்ட பால வேலை 21/1 மைலில் உள்ளது. 1958-59-ம் ஆண்டில் இதற்கு தென்னார்க்காடு ஜில்லா போர்டு தலைவரான மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் நிதி வசதி போதாத காரணத்தால் வேலை துவக்க முடியவில்லை.

(இ) இதனை மத்திய சாலை நிதி திட்டத்தில் சேர்த்து, மத்திய அரசினரின் ஒப்புதலுக்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

A.—(*a*) The bridge work referred to by the Member is at mile 21/1. It was approved in 1958-59 by the Collector and Special Officer, District Board, South Arcot. But the work could not be taken up for execution for want of funds.

(*b*) This is being considered for inclusion in the list of works under the Central Road Fund Scheme to be approved by the Government of India.

18. *Q*.—THIRU A M. RAJA :
THIRU K. M. RAMASWAMY GOUNDER : } Will the Hon. Minister for Public Works be pleased to state—

(*a*) when the construction of bridge across Palappalayam Pallam on the Erode to Sathiamangalam road at the fifth mile from Kavandapadi was completed ; and

(*b*) whether it has been opened to the public ?

A.—(*a*) The bridge was completed on 23rd November 1963

(*b*) But the bridge could not be opened for traffic as there are objections to acquisition of lands required for formation of approaches.

திருச்சி கொதிகலன் தொழிற்சாலை

14 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி அருகே அமைக்கப்பட்டுள்ள பாய்லர் தொழிற்சாலைக்காக இடம்வாங்கும் விஷயமாக ஏற்பட்ட மோசடியின் காரணமாக எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள் யார், யார் ?

(இ) இவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை.—

(அ) கீழ்க்கண்ட முப்பத்தைந்துபேர் :—

பொதுப பணித்துறை அதிகாரிகள்.

1. திரு. பி. கே. வேதநாயகம், பொறியாளர், மாநில வீட்டு வசதி போர்டு, சென்னை.
2. திரு. ஆர். ஸ்ரீநிவாசன், நிர்வாகப் பொறியாளர், பொதுப்பணித் துறை.
3. திரு. எஸ். ஸ்ரீநிவாசன், உதவிப் பொறியாளர், பொதுப்பணித் துறை.
4. திரு. எம். ஏ. நாராயண், உதவிப் பொறியாளர், பொதுப்பணித் துறை.
5. திரு. கே. வாசுதேவன், உதவிப் பொறியாளர், தமிழக அரசு போக்குவரத்து துறை, சேலம்.
6. திரு. எம். ஏ. வஹாப், உதவிப் பொறியாளர், சிறுபடைக்கலத் திட்டம், திருச்சிராப்பள்ளி.
7. திரு. ஜே. டி. பர்னபாஸ், இளநிலைப் பொறியாளர், சிறு பாசனத் சிறப்புத் திட்டம், பாளையங்கோட்டை.
8. திரு. எஸ். நடராஜன், இளநிலைப் பொறியாளர் தொழில் நுட்ப பிரிவு, தலைமை பொறியாளர் அலுவலகம், பொதுப்பணித்துறை (பொது), சென்னை.
9. திரு. எம். பாலசுப்பிரமணியம், பிரிவு அதிகாரி.
10. திரு. வி. ஜெயராமன், பிரிவு அதிகாரி, பொதுப்பணித்துறை,
11. திரு. இ. ராமசாமி, பிரிவு அதிகாரி, பொதுப்பணித்துறை.
12. திரு. எம். ராமசாமி, பிரிவு அதிகாரி, பொதுப்பணித்துறை. காரைக்குடி.
13. திரு. ஜே. துரைராகவ ராஜா, பிரிவு அதிகாரி, உணவு உற்பத்தி திருச்சுழி, ராமநாதபுரம் மாவட்டம்.
14. திரு. ஜி. பச்சமுத்து, மேற்பார்வையாளர், கல்லணைக்கால்வாய்த் கோட்டம், வடவாறு.
15. திரு. சி. கிருஷ்ணன், வரைவாளர் (தட்சிண இரயில்வே) முன்னர் மேற்பார்வையாளராக இருந்தவர், திருச்சி.
16. திரு. எம். திருநாவுக்கரசு, மேற்பார்வையாளர், பாசனம்-திட்ட உட்கோட்டம், திருவண்ணாமலை.

ஒப்பந்தக்காரர்கள்.

1. திரு. என். பஞ்சநாதன்.
2. டாக்டர். என். ஏ. சுப்பராயன்.
3. திரு. என். நாகநாத ஐயர்.
4. திரு. டி. எஸ். ரத்னசலம் ஐயர்.
5. திரு. என். சேஷசாயி.
6. திரு. என். ராஜுபிள்ளை.
7. திரு. எஸ். ரமணி.
8. திரு. என். துரைசாமி ஐயர்.
9. திரு. டி. எம். ராஜகோபால் நாயுடு.
10. திரு. ஏ. ராமமூர்த்தி.
11. திரு. என். எஸ். கிருஷ்ணசாமி.
12. திரு. டி. ஆர். தனபால்.
13. திரு. எஸ். தப்பிரமணியப் பிள்ளை.
14. திரு. டி. மருசை.

15. திரு மதன்மோகன்.
16. திரு என். மகாதேவன்.
17. திரு என். சங்கரநாராயணன்.
18. திரு எஸ். ராமமூர்த்தி ஐயர்.
19. திரு என். வேங்கடராமன்.

(இ) இத் துறையைச் சார்ந்த 16 அதிகாரிகளில் 4 பேர் குற்ற உடைந்தைச் சாட்சிகளாயினர் (approvers) மற்றவர்களின் மீது 27—10—1965-ல் துவாக்குடி போலீஸ் நிலையத்தில் குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டது. வழக்கு நடந்து வருகிறது.

A.—

(*a*) Thirty five. They are the following :—

(i) *Officers of the Public Works Department.*

1. Thiru P. K. Vedanayagam, Engineer, State Housing Board, Madras.
2. Thiru R. Srinivasan, Executive Engineer, Public Works Department.
3. Thiru S. Srinivasan, Assistant Engineer, Public Works Department.
4. Thiru M. A. Narayan, Assistant Engineer, Public Works Department.
5. Thiru K. Vasudevan, Assistant Engineer, State Transport Department, Salem.
6. Thiru M. A. Wahab, Assistant Engineer, Small Arms Project, Tiruchirappalli.
7. Thiru J. D. Barnabas, Junior Engineer, Special Minor Irrigation Project, Palayamcottai.
8. S. Natarajan, Junior Engineer, Technical Section, Office of the Chief Engineer, Public Works Department (General), Madras.
9. Thiru M. Balasubramaniam, Section Officer, Since resigned.
10. Thiru V. Jayaraman, Section Officer, Public Works Department.
11. Thiru E. Ramaswamy, Section Officer, Public Works Department.
12. Thiru M. Ramaswamy, Section Officer, Public Works Department, Karaikudi.
13. Thiru J. Durairaghava Raja, Section Officer, Food Production, Tiruchuli, Ramanathapuram district.
14. Thiru G. Pachamuthu, Supervisor, Grand Anicut Canal Division, Vadavaru.
15. Thiru C. Krishnan, (Draftsman, Southern Railway) then Supervisor, Tiruchi.
16. Thiru M. Thirunavukkarasu, Supervisor, Irrigation and Planning Sub-division, Tiruvannamalai.

(ii) *Contractors.*

1. Thiru N. Panchanathan.
2. Dr. N. A. Subbarayan.
3. Thiru N. Naganatha Iyer.
4. Thiru T. S. Rathnachalam Iyer.
5. Thiru N. Seshasaye.
6. Thiru S. Raju Pillai.
7. Thiru S. Ramani.
8. Thiru N. Doraiswamy Iyer.
9. Thiru T. M. Rajagopal Naidu.
10. Thiru A. Ramamoorthy.
11. Thiru N. S. Krishnaswamy.
12. Thiru T. R. Dhanapal.
13. Thiru S. Subramania Pillai.
14. Thiru T. Marudai.
15. Thiru B. Madan Mohan.
16. Thiru N. Mahadevan.
17. Thiru N. Sankaranarayanan.
18. Thiru S. Ramamurthy Iyer.
19. Thiru N. Venkataraman.

(*b*) Of the 16 departmental Officers, 4 turned approvers and a Criminal case has been registered in Thuvakkudi Police Station on 27th October 1965 against all the others and the case is still in progress.

தமிழக அரசு விரைவு பஸ்கள்

15 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பிரஸ் பஸ்களில் எந்தெந்த மாடல் பஸ்கள் ஓடுகின்றன?

(இ) ஒவ்வொரு மாடலிலும் எவ்வளவு பஸ்கள் ஓடுகின்றன?

விடை—

(அ) அசோக் லேலண்ட் கம்பெனியைச் சேர்ந்த **காமட் மாடல்** பஸ்கள்.

(இ) 15—5—1967-ஆம் தேதியிலுள்ளபடி 178 பஸ்கள்.

A.—

(*a*) The Comet Model buses of Ashok Leyland.

(*b*) 178 buses as on 15th May 1967.

சர்க்கரை

16 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சர்க்கரை மீது அட்மினிஸ்டிரேடிவ் சர்சார்ஜ் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் எந்த ஆண்டு முதல் எவ்வளவு வசூலிக்கப்படுகிறது ?

(உ) ஆண்டு ஒன்றுக்கு அதன் மூலம் எவ்வளவு தொகை கிடைக்கிறது?

(எ) அதில் ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரின் பங்குகள் முறையே எவ்வளவு?

விடை.—

(அ) சர்க்கரையின் எல்லா விற்பனை மீதும் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 2·00 வீதம் நிர்வாக மேல்வரி வசூலிக்கப்படுகிறது.

(இ) இந்த மேல்வரி, 23—6—1965-லிருந்து வசூலிக்கப்பட்டு. வருகிறது.

(உ) 23—6—1965 முதல் 22—3—1967 வரையில் தொழிற்சாலைகளிலிருந்து அனுப்பப்பட்ட 30,17,246 குவிண்டால் சர்க்கரை மீது நிர்வாக மேல்வரியாக தோராயமாக ரூ. 60,34,492 வசூலிக்கப்பட்டது. (நிர்வரக மேல்வரியாக வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை, தமிழகத்தில் பயன்படுவதற்காகத் தொழிற்சாலையிலிருந்து அனுப்பப்படுகிற சர்க்கரையின் அளவைப் பொறுத்து மாறுபடும்.)

(எ) நிர்வாக மேல்வரி முழுவதையும் இம்மாநில அரசே பெறுகிறது, மத்திய அரசிற்கு இதில் பங்கு இல்லை.

A.—

(*a*) Yes, Sir. An administrative surcharge of Rs. 2 per quintal is collected on all sales of sugar.

(*b*) This surcharge is being collected from 23rd June 1965.

(*c*) During the period 23rd June 1965 to 22nd March 1967 approximately a sum of Rs. 60,34,492 was collected as administrative surcharge on a quantity of 30,17,246 quintals of sugar released from the factories. (The total amount collected by way of administrative surcharge will vary with the quantity of sugar that is released from the factories for consumption in Madras State).

(*d*) The entire administrative surcharge is appropriated by the State Government and the Centre has no share in it.

புயல் நிவாரணம்

17 வினா.—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மதிப்பிற்குரிய உணவு, வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்தில் அண்மையில் அடித்த புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசாங்கம் அளித்துள்ள நிவாரணங்களின் விவரமென்ன?

விடை.—

(1) ரொக்க மானியம் ரூபாய் 1,25,620·00 (ஏறக்குறைய).

(2) வழங்கப்பட்ட அரிசியின் விலை ரூபாய் 4,570.

	கடன் தொகை.	உதவித் தொகை
	ரூ.	ரூ.
(3) சிறு படகுகளைப்பழுது பார்த்தலும் மாற்றலும்.	63,980·00	63,980·00
(4) காணாமற்போன அல்லது பழுதடைந்த கட்டுமரங்களை மாற்றுதல்.	1,49,300·00	1,49,300·00
(5) பருத்திநூலைப் பழுது பார்த்தலும் புதுப்பித்தலும்.	24,392·00	48,793·00
(6) நைலான் வலைகளைப் பழுது பார்த்தலும் புதுப்பித்தலும்.	21,075·00	21,075·00
மொத்தம் ..	2,58,747·00	2,83,138·00

A.—

(1) Cash grants Rs. 1,25,620·00 (Approximately).

(2) Cost of rice supplied Rs. 4,570.

	Loan.	*Subsidy.*
	RS.	RS.
(3) Repairs and replacement of canoes.	63,980·00	63,980·00
(4) Replacement of catamarans lost or damaged.	1,49,300·00	1,49,300·00
(5) Repairs and renewals of cotton yarn.	24,392·00	48,793·00
(6) Repairs and renewals of nylon nets.	21,075·00	21,075·00
Total ..	2,58,747·00	2,83,138·00

குடும்பக் கார்டுகள்

18 வினா.—**திரு. நா. காசிராமன் :** மதிப்பிற்குரிய உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் 31-ந் தேதியோடு முடிவடையும் காலத்தில் கும்பகோணம் நகரில் மொத்தம் எவ்வளவு குடும்பக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன?

(ஆ) நகரில் கார்டுகள் கொடுக்கப்பட்டுள்ள எல்லா குடும்பத்திலுமாக மொத்தம் உள்ள நபர்கள் எத்தனைபேர் ?

(இ) கும்பகோணம் நகரில் குடும்ப கார்டுகள் வழங்க வேண்டிய அவசியம் இல்லாத குடும்பங்கள் எத்தனை?

(ஈ) அக்குடும்பங்களில் உள்ள மொத்த நபர்கள் எத்தனை பேர்கள்?

விடை.—

(அ) 17,927 குடும்பக் கார்டுகள்.

(ஆ) 92,246 நபர்கள்.

(இ) 4,077 குடும்பங்கள்.

(ஈ) 20,385 நபர்கள்.

A.—

(*a*) 17,927 family cards.

(*b*) 92,246 persons.

(*c*) 4,077 families.

(*d*) 20,385 persons.

உணவு உற்பத்தி

19. வினா.—**திரு. க. ர. நல்லசிவன் :** மதிப்பிற்குரிய உணவு, வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாநிலத்தின் உணவு உற்பத்தியில் உபரி, தன்னிறைவு, பற்றுக்குறை மாவட்டங்கள் முறையே என்ன, எவை ?

விடை.—தமிழ் நாட்டில் அரிசி ஒரு முக்கிய உணவுப் பொருள் ஆகும். செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வடஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நெல் தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகிறது.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர் ஆகியவை ஓரளவு பற்றுக்குறை மாவட்டங்களாகும்.

சென்னை, நீலகிரி ஆகியவை பற்றுக்குறை அதிகமாக உள்ள மாவட்டங்களாகும்.

A.—

Rice is the staple diet in Tamil Nad. Chingleput, South Arcot, North Arcot, Thanjavur and Tiruchirappalli districts are surplus in production of paddy.

Madurai, Ramanathapuram, Tirunelveli, Kanyakumari, Salem, Dharmapuri and Coimbatore are partly deficit districts. Madras and the Nilgiris districts are highly deficit districts.

நவீன விவசாயக் கருவிகள்

20 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் விவசாயம் செய்பவர்களுக்குக் கொடுத்து உதவி செய்வதற்காக எந்தெந்த விதமான நவீன விவசாயக் கருவிகள் உள்ளன ?

(இ) அவைகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றனவா ? அல்லது வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றனவா ?

(உ) 1957 முதல் 1966 வரையில் ஜில்லா வாரியாக வாடகை விவரம் என்ன ?

விடை.—

ஒரு விவர அறிக்கை [a] இணைக்கப்பட்டுள்ளது.

A.—

A statement [a] is appended.

a 242–244-ம் பக்கங்களில் I இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

சந்தனக் கட்டைக் கடத்தல் வழக்குகள்

21. வின.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் சந்தனக் கட்டை கடத்தப்பட்ட கேஸ்கள் எத்தனை போடப்பட்டன ?

(இ) எத்தனை வழக்கில் தண்டனை கொடுக்கப்பட்டது ? எத்தனை தள்ளுபடி ஆனது? 1957 முதல் 1966 வரை ஜில்லா வாரியாக ?

விடை—

ஒரு அறிக்கை * இணைக்கப்பட்டுள்ளது.

A.—

A statement * is appended.

குழாய்க் கிணறுகள்

22. வின.—**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு முடிய குழாய்க் கிணறுகள் தோண்ட எத்தனை ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது ?

(இ) அக்கிணறுகளிலிருந்து பம்பு செட்டுகள் மூலம் தண்ணீர் இறைவை செய்ய மின் விஸ்தரிப்பு கொடுக்கப்பட்டதா ?

(உ) ஆம் எனில், எத்தனை கிணறுகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது ?

விடை.—

(அ) வடிமுனைக் குழாய்க் கிணறுகள் தோண்டும் திட்டத்தின்படி 31—12—1966 முடிய கொடுக்கப்பட்ட கடன் தொகை ரூ. 35·40 லட்சம்.

(இ) ஆம்.

(உ) 674 கிணறுகளுக்கு.

முறைப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்கள்

23. வின.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முறைப்படுத்தப்பட்ட விற்பனை கூடங்கள் (Regulated markets) நமது ராஜ்யத்தில் இதுவரை எத்தனை ஏற்படுத்தப்பட்டன ?

விடை.—

இம்மாநிலத்தில் இதுவரையில் 84 முறைப்படுத்திய சந்தைகள் திறக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திலும் சந்தைகள் திறக்கப்பட்டுள்ள இடங்களின் பெயர்களைக் காட்டும் விவர அறிக்கை† ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கீழ்க்கண்ட முறைப்படுத்திய 3 சந்தைகளும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள முறைப்படுத்திய 13 சந்தைகளும் சம்பந்தப்பட்ட சந்தைக் குழுக்களினால் மூடப்பட்டுள்ளன—

மாவட்டத்தின் பெயர். (1)	எடுக்கப்பட்ட முறைப்படுத்திய சந்தைகளின் பெயர். (2)
தென் ஆர்க்காடு மாவட்டம்	1 சிதம்பரம்.
	2 சேத்தியாதோப்பு.
	3 பெண்ணாடம்.

* 245–248 பக்கங்களில் II இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

† 249–252 பக்கங்களில் III இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் பெயர். (1)	எடுக்கப்பட்ட முறைப்படுத்திய சந்தைகளின் பெயர். (2)
தஞ்சாவூர் மாவட்டம்	1 சீர்காழி.
	2 முத்துப்பேட்டை.
	3 அதிராமப்பட்டிணம்.
	4 மன்னார்குடி.
	5 குத்தாலம்.
	6 கும்பகோணம்.
	7 திருவாரூர்.
	8 பாபநாசம்.
	9 கொரடாச்சேரி.
	10 செம்பனார்கோயில்.
	11 மதுக்கூர்.
	12 பேராவூரணி.
	13 திருத்துறைப்பூண்டி.

முறைப்படுத்திய இச்சந்தைகளை மூடியதற்கான ஆணைகள் வெளியிடுவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

A.—

(*a*) There are so far 84 Rugulated Markets opened in the State. A Statement[a] giving the names of the places where they have been opened in each District is appended.

The following 3 Regulated Markets in South Arcot District and 13 Regulated Markets in Thanjavur District have been closed by the respective Market Committees:—

Name of the district. (1)	Namé of the regulated markets retrenched. (2)
South Arcot	1 Chidambaram
	2 Sethathope
	3 Pennadam
Thanjavur	1 Sirkali
	2 Muthupet
	3 Adiramapattinam
	4 Mannargudi
	5 Kuttalam
	6 Kumbakonam
	7 Tiruvarur
	8 Pappanasam
	9 Koradacheri
	10 Sembanarkoil

a Printed as Appendix III on pages 157-160.

Name of the district. (1)		Name of the regulated markets rentretched. (2)
Thanjavur—*cont.*	..	11 Madukkur
		12 Peravurani
		13 Tiruthuraipoondi.

The question of issuing formal orders closing these regulated markets is under consideration.

விவசாயக் கருத்தரங்கு, வடார்க்காடு மாவட்டம்

24. விஞ.—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 டிசம்பர் 3, 4 தேதிகளில் வடார்க்காடு மாவட்ட விவசாய கருத்தரங்கு நடைபெற்றதா ?

(இ) ஆம் எனில், அதற்காக பிரதிநிதிகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

விடை—

(அ) ஆம்.

(இ) கருத்தரங்கு ஏற்பாடுகளைக் கவனித்துக்கொள்ள வடார்க்காடு கலெக்டரால் அமைக்கப்பட்ட பொதுக்குழு, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலிருந்தும் கீழ்க்கண்டவர்களை மட்டுமே வரவழைப்பதென நிச்சயித்தது:—

(1) பஞ்சாயத்து யூனியன் தலைவர்.

(2) மூன்று பயிர்கள் விளைவிப்பதில் முன்னணியில் உள்ள உழவர்கள் மூவர் இவர்களைப் பஞ்சாயத்து யூனியன் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(3) வட்டார வளர்ச்சி அதிகாரி.

(4) விரிவாக்க அதிகாரி (வேளாண்மை).

மேற்குறிப்பிட்டவர்களல்லாமல் அந்த மாவட்டத்தின் சட்டசபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுறவு மத்திய பாங்க், கூட்டுறவு விற்பனைச் சங்கம் இவற்றில் முன்னணியில் உள்ளவரும் அழைக்கப்பட்டனர். வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை ஆகியவற்றிலிருந்து தொழில்நுட்ப அதிகாரிகளும் வந்திருந்தார்கள். இந்த கருத்தரங்கு பெருங்கூட்டமாகப் போகாத வகையில் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடிய பிரதிநிதிகளை ஒன்று கூட்டுவதே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் கையாண்ட பொதுக் கொள்கையாகும்.

A.—(*a*) Yes Sir.

(*b*) It was decided by the General Committee in charge of the arrangements set up by the Collector of North Arcot to restrict the number of invitees to the following persons from each Panchayat Union:

(1) Panchayat Unicn Chairman.

(2) Three leading ryots representing the three different crops to be selected by the Panchayat Union.

(3) Block Development Officer.

(4) Extension Officer (Agriculture).

In addition to the above, all Members of the Legislative Assembly, Members of Parliament and Members of

Legislative Council of the district, leading persons connected with the Co-operat ve Central Bank and Cooperative Marketing Society were invited. Technical officers from the Departments of Agriculture and Cooperation were also present. The general principle was to bring together as far as possible persons representing different shades of opinion subject to limits of organisation.

முந்திரி விளைச்சல்

25. விஞ.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் முந்திரி எத்தனை ஏக்கராவில் விளைகிறது, மாவட்டவாரியாக ?

விடை.—

இம்மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், முந்திரி விளையும் நிலப்பரப்புக் குறித்த விவரங்கள், கீழே அளிக்கப்படுகின்றன :—

மாவட்டத்தின் பெயர்.	எக்கர்களில்.
செங்கற்பட்டு	248
தென்னார்க்காடு	41,151
வடார்க்காடு	..
சேலம்	2
கோயம்புத்தூர்	..
திருச்சிராப்பள்ளி	30,630
தஞ்சாவூர்	14,732
மதுரை	..
இராமநாதபுரம்	3,757
திருநெல்வேலி	77
நீலகிரி	..
கன்னியாகுமரி	7,534
மொத்தம் ..	98,131

A.—

The particulars relating to the extent of cashew cultivation in various districts of this State are furnished below—

Name of district. (1)				In acres. (2)
Chingleput	..	..	..	248
South Arcot	..	..	..	41,151
North Arcot	..	..	..	..
Salem	..	..	..	2
Coimbatore	..	..	..	..
Tiruchirappalli	..	..	..	30,630
Thanjavur	..	..	..	14,732
Madurai	..	..	..	..
Ramanathapuram	..	..	..	3,757
Tirunelveli	..	..	..	77
Nilgiris	..	..	..	..
Kanyakumari	..	..	..	7,534
			Total ..	98,131

[1967 ஜூலை 13

கோழி வளர்ப்பு

26. வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோழி வளர்ப்புக்கு உதவித் தொகை அளிப்பதில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் கொள்கை என்ன ?

விடை.—

கோழி வளர்ப்பவர்கள் தங்களது கோழிப்பண்ணை பிரிவுகளைச் சரிவரப் பேணிவரும் பொருட்டு உதவித் தொகையும், கடன்களும் வழங்கு வதன் மூலம் கோழிப்பண்ணை மேம்பாட்டிற்கு வகைசெய்வது அரசின் கொள்கையாகும். குஞ்சு பொரிக்கும் நிலையில் உள்ள முட்டைகளையும் கோழிகளையும் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலருக்கு வழங்குவது பலனளிக்கவில்லை. எனவே, கீழ்க்கண்ட திட்டங்களின் கீழ் கோழி வளர்ப்பவர்களுக்கு உதவி வழங்கப்படுகிறது. அத்திட்டங்களின் மூலம் கோழி வளர்ப்பவர்களுக்கு இனப்பெருக்கத்திற்கான கோழிகள் தீனி சாதனம், தொழிற்நுட்ப ஆலோசனை, நோய்க்கட்டுப்பாடு, விற்பனை ஆகிய வசதிகள் ஒரே சமயத்தில் செய்து கொடுக்கப்படும்:—

1. **கோழிகளை தரம் உயர்த்துதல்.**—பரிமாற்ற அடிப்படையில் டேசி இனச் சேவல்களுக்குப் பதிலாக வெளி நாட்டு விடைச் சேவல் களை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பஞ்சாயத்து ஒன்றிப்புகள் இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றன.

2. **கோழி வளர்ப்பவர்களுக்குப் பயிற்சி.**—கோழி வளர்ப்பதில் மேம்பாட்டு முறைகளைக் கையாளுவது குறித்து கோழி வளர்ப்ப வர்களுக்கு 6 வாரங்கள் பயிற்சி அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். பயிற்சிக்கான அளவு முழுவதற்கும் பயிற்சி பெறுபவ ருக்கு ரூ. 60 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

3. **கோழி இருப்பிடங்களுக்கு மேம்பாடுகள்.**—புதிய கோழி இருப்பிடங்களைக் கட்டுவதற்கு அல்லது பழைய கோழி இருப்பிடங்களைச் செப்பனிடுவதற்கு ரூ. 50 அல்லது செலவில் பாதி இவற்றில் எது குறைவாய் உள்ளதோ அத்தொகையை உதவித்தொகையாக வழங்குவதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

4. **குஞ்சு பொரித்து வெளிவந்து ஒரு நாள் ஆன கோழிக் குஞ்சுகளை வழங்கும் திட்டம்.**—கோழி வளர்ப்பவர்களுக்கு ஒவ்வொன்றும் 50 காசு என்ற சலுகை வீதத்தில் கோழிக் குஞ்சுகளை வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

5. **அடைக்காப்புச் சாதனம்.**—இத்திட்டத்தின்கீழ் குஞ்சுபொரிக்கப் படுவதற்காக கோழிக் குஞ்சு வளர்ப்பவர்களுக்கு கடன் அடிப்படையில் அடைகாப்புச் சாதனம் (ஓரடுக்கு உள்ளது) வழங்கப்படும்.

6. **கோழிப்பண்ணை விற்பனை நிலயங்கள் மும்முரத் திட்டம்.** காட்டுப்பாக்கம் நிலையத்தைப் பொறுத்தவரையில் தெரிந்தெடுத்த கோழி வளர்ப்பவர்கள் 300 பேர்களுக்கும், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களிலுள்ள நிலையங்களைப் பொறுத்த வரையில் 100 பேர்களுக்கும் ஒருவருக்கு ரூ. 1,000 என்ற வீதத்தில்

1967 ஜூலை 13]

கடன் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கடன் வாங்குபவர் கள் கடனை முட்டைகளாகவும், கோழிகளாகவும் திருப்பிச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் விற்பனை வசதி முதலியவற்றுக்கான அவசியமான துணை வேலைத் திட்டங்களும் செயல்படுகின்றன.

7. **கோழிப்பண்ணை மும்முர வளர்ச்சி வட்டாரங்கள்.**—மூன்றாவது திட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட இரண்டு வட்டாரங்களிலும் விரைவுத் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட 6 வட்டாரங்ளிலும் தேர்ந்தெடுத்த கோழி வளர்ப்பவர்கள் 25 பேருக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 என்ற வீதத்தில் கடன் வழங்கவும், ரூ. 250 என்ற வீதத்தில் உதவித்தொகை வழங்கவும், விற்பனை வசதி போன்றவற்றை வழங்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.

நான்காவது திட்டத்தின்கீழ், கூட்டுறவு அடிப்படையில் கோழி வளர்ப்பு மேம்பாட்டு வட்டாரங்களை நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங் இயுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சங்கத்தின் மூலம் உதவி வழங்கப்படு இறது. ஒவ்வொரு சங்கத்திலும் 50 கோழிகளை வைத்துவருகிற 75 " எ " வகுப்பு உறுப்பினர்களும், 25 கோழிகளை வைத்துவரும் 50 " பி " வகுப்பு உறுப்பினர்களும் உள்ளனர். " எ " வகுப்பு உறுப்பினர்களுக்கு ரூ. 1,000 வரையில் கடன் உதவியும், " பி " வகுப்பு உறுப்பினர்களுக்கு ரூ. 500 வரை கடன் உதவியும் வழங்கப்படுகிறது.

A.—

The general policy of Government in regard to Poultry Development is to grant assistance by way of subsidy and loans to the Poultry breeders for proper maintenence of their Poultry units on scientific lines. As stray distribution of hatching eggs and birds to isolated individuals did not prove successful, assistance is granted to breeders under the following schemes which provide facilities to the breeders in the form of breeding stock, feed, equipment, technical know-how, disease control and marketing, simultaneously :—

1. *Upgrading of Poultry.*—The scheme aims at issue of exotic cockerels for 'desi' cocks on exchange basis. This is implemented by Panchayat Unions.

2. *Training of farmers.*—The scheme envisages imparting training to poultry farmers on improved methods of Poultry keeping for a period of 6 weeks. The trainee is paid a subsidy of Rs. 60 for the entire period of training.

3. *Improvement of Poultry houses.*—The scheme envisages the payment of a subsidy of Rs. 50 or half the cost whichever is less towards the construction of new poultry houses or repairs to old ones, as the case may be.

4. *Day old chicks distribution scheme.*—The scheme envisages the supply of chicks at concessional rate of 50 paise each to breeders.

5. *Brooding Equipment.*—Under the scheme brooders (single tier) are supplied on loan basis to Poultry farmers to brood their chicks.

[1967 ஜூலை 13

6. *Intensive Egg and Poultry Production*-cum-*Marketing Centres*.—The scheme envisages issue of loans to 300 selected breeders in respect of Kattupakkam and 100 in the other 4 centres at Trichy, Madurai, Coimbatore and Salem at Rs. 1,000 each to be repaid in the form of eggs and birds, with necessary supporting programmes for marketing, etc.

7. *Intensive Poultry Development Blocks*.—The scheme envisages issue of loan of Rs. 1,000 and a subsidy of Rs. 250 to each of the 25 selected breeders in the two blocks established under Third Five-Year Plan and 6 blocks established under Crash Programme with supporting programmes for marketing, etc.

Under the Fourth Five Year-Plan, the Government have sanctioned the establishment of the Poultry Development Block on Co-operative basis. Under this scheme assistance is routed through the Society. Each Society will consist of 75 'A' class members maintaining 50 layers and 50 'B' class members maintaining 25 layers. The 'A' class members are given loan assistance upto Rs. 1,000 while B class members are given loan assistance upto Rs. 500.

ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டம்

27. வினா.—**திரு. டி. மார்டின் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் தாலூக்காவிலுள்ள ஆலந்தலை, மணப்பாடு, பெரியதாளை கிராமங்களிலும் நாங்குனேரி தாலூக்காவிலுள்ள உவரி, கூட்டப்பனை, கூந்தன்குளி, இடிந்தகரை, கூட்டப்புளி, பெருமணல் முதலிய கிராமங்களின் கடற்கரையிலும் ஆழ்கடல் மீன் பிடிப்புத்திட்டம் கொண்டுவரும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில் அதன் விவரங்கள் யாவை ?

விடை—

(அ) & (இ) தற்பொழுது நமது மாநிலத்தில் ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டம் உருவாக்கப்படவில்லை.

A.—

(*a*) & (*b*) No scheme for organising Deep Sea Fishing operations in this State has been evolved at present.

அரிஜன நலப் பள்ளிகள் தென் ஆர்க்காடு மாவட்டம்

28 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967–68-ல் தென் ஆர்க்காடு ஜில்லாவில் தாலூக்காவாரியாக ஹரிஜன நல பள்ளிக் கட்டடங்கள் கட்ட திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், எந்தெந்த கிராமங்களுக்கு கட்டடங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது ?

1967 ஜூலை 13]

விடை—

(அ) இல்லை. அதுபோன்ற திட்டம் எதுவும் இல்லை. ஹரிஜன நலப் பள்ளிகளுக்காகப் புதுக்கட்டடங்களை கட்டுவதற்கான மதிப்பீட்டுக்கு ஒவ்வோர் ஆண்டும் அந்த ஆண்டின் வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டையும், கட்டடங்கள் கட்டுவதற்கான அவசியத்தையும் பொறுத்து ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(இ) தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஹரிஜன நலப்பள்ளிகளுக்காக புதுக்கட்டடங்களும் கூடுதலான கொட்டகைகளும் கட்டப்படும் கிராமங்களில் பெயர்கள் அடங்கிய விவரம் தாலூகாவாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை 1967–68-ல் கட்டி முடிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:—

கடலூர் தாலூகா—

1. சுந்தரவாண்டி.
2. கோழிப்பாக்கம்.
3. மேல்பாதி.
4. கொங்கராயனூர்.
5. ராமாபுரம்.

திண்டிவனம் தாலூகா—

1. தைலாபுரம்.
2. பான்கொளத்தூர்.
3. புளிச்சபள்ளம் (கூடுதல் கொட்டகை).

விழுப்புரம் தாலூகா—

1. கப்பூர் (கூடுதல் கொட்டகை).

செஞ்சி தாலூகா—

1. கரியமங்கலம்.
2. கல்லாலிப்பட்டு.

சிதம்பரம் தாலூகா—

1. வெய்யலூர்.
2. பின்னலூர்.
3. துரிஞ்சிக்கொல்லை.
4. மதுராந்தகநல்லூர்.
5. ஓடையூர் (புவனகிரி).
6. வளையமாதேவி.
7. (சி) சாத்தமங்கலம்.

விருத்தாசலம் தாலூகா—

1. எடையூர்.
2. சிறுமங்கலம்.
3. ஊமங்கலம்.
4. தீவளூர்.

A.—

(*a*) No. There is no such Scheme as such. Estimate for the construction of new buildings for Harijan Welfare Schools are sanctioned every year with reference to availability of budget allotment for the year and the necessity for the construction of buildings.

(*b*) A list of Villages, talukwise in South Arcot District where new buildings and additional sheds for the Harijan Welfare Schools are under construction is furnished below. These are expected to be completed during the year 1967–68.

Cuddalore Taluk

1 Sundaravandi
2 Kolipakkam
3 Melpathi
4 Kong .rayanur
5 Ramapuram.

Tindivanam Taluk

1 Thailapuram
2 Ponkolathur
3 Pulichapalayam (Add. shed.)

Villupuram Taluk

1 Kappur (Add. shed).

Ghingee Taluk

1 Kariyamangalam
2 Kallalipattu.

Chidambaram Taluk

1 Vaiyalur
2 Pinnalur
3 Thurinjikollai
4 Maduranthaganallur
5 B. Odaiyur
6 Valayamadevi
7 C. Sathamangalam.

Vridhachalam Taluk

1 Edaiyur
2 Sirumangalam
3 Oomaugalam
4 Deevalur

அரிஜனங்களுக்கு வீடுகள்

29 வினா—திரு. ந. மருதாசலம் : மதிப்பிற்குரிய அரிஜன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா ?

(அ) கோவை ஜில்லாவில் 1962 முதல் 1967 வரை வீடில்லாத அரிஜனங்களிடமிருந்து வீடு கட்ட நிலம் வழங்கக் கோரி வந்துள்ள விண்ணப்பங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றுள் எத்தனை பேருக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) 10,532.
(ஆ) 9,992.

வட மதுரை கூட்டுறவுப் பண்டகசாலை.

30 வினா—திரு. என். வரதராசன் : மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தாலுக்காவில் உள்ள எ. 1,507 வட மதுரை கூட்டுறவு பண்டக சாலையில் 1964–65-ம் ஆண்டில் பம்பு,* செட்டு விற்பனையில் மோசடி நடந்ததாக அரசுக்கு ஆடிட் அறிக்கை கிடைத்ததா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இந்த நட்டத்திற்குக் காரணமாக உள்ளவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

A.—

(a) Yes.

(b) Suitable action is being taken against the person responsible for the loss.

இரத்த தானம்.

31 வினா—திரு. எஸ். வெங்கட்ராமன் : மதிப்பிற்குரிய சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966 ஏப்ரல் முதல் 1967 மார்ச் வரையில் [illegible] உள்ள இரத்த வங்கிகளில் இரத்தம் வழங்கியவர்கள் ஆண்கள், பெண்கள் எத்தனை பேர் ?

(ஆ) அவர்களில் இரத்தத்தை இலவசமாக வழங்கியவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ)	ஆண்கள்	30,126
	பெண்கள்	97
	மொத்தம் ..	30,223

(ஆ) அவர்களில் இரத்தத்தை இலவசமாக வழங்கியவர்கள்—

ஆண்கள்	3,496
பெண்கள்	31
மொத்தம் ..	3,527

வைசூரியால் பாதிக்கப்பட்டவர்கள்

32 வினா—திரு. எஸ். வெங்கட்ராமன் : மதிப்பிற்குரிய மருத்துவ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-67-ல் நமது மாநிலத்தில் வைசூரி (பெரியம்மை) நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர், மாவட்டவாரியாக ?

(ஆ) எத்தனை பேர்களுக்குத் தடுப்பு முறை வைத்தியம் [illegible], மாவட்டவாரியாக ?

(இ) இறந்தவர்களின் எண்ணிக்கை என்னவு, மாவட்டவாரியாக ?

A.—

Names of the Districts.	Number of persons attacked.	Number of people vaccinated primarily.	Number of people re-vaccinated.	Number of those who died of smallpox.
(1)	(2)	(3)	(4)	(5)
Chingleput	9	1,09,186	3,10,584	3
Tiruchirappalli	12	1,45,610	5,95,047	3
South Arcot	74	1,39,078	5,86,783	14
Thanjavur	Nil.	1,53,343	3,16,945	Nil.
Madurai	6	1,73,255	5,23,530	Nil.
Ramanathapuram ..	Nil.	1,17,165	5,35,045	Nil.
Tirunelveli	Nil	1,36,730	6,62,944	Nil.
North Arcot	53	1,62,393	9,41,910	17
Salem	144	1,30,165	5,43,669	35
Dharmapuri	372	83,942	3,39,452	84
Coimbatore	43	1,67,193	5,32,715	15
The Nilgiris	Nil.	30,146	1,04,218	Nil.
Kanyakumari	Nil.	[illegible],414	1,85,396	Nil.
Madras City	70	66,442	7,31,477	9

பூதான இயக்கம்

33 வினா.—திரு வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பூதான இயக்கம் ஆரம்பித்தது முதல் இதுவரை எத்தனை ஏக்கரா நிலம் கிடைத்துள்ளது ?

(இ) அவை, எவ்வாறு பயன்படுத்தப்பட்டு வருகின்றது?

விடை.—

(அ) 23,284 ஏக்கராக்கள்.

(இ) மேலே குறிப்பிடப்பட்ட நிலங்கள் யாவும் நிலமில்லாத ஏழை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களில் 6,116·81 ஏக்கரா நிலங்கள் மானியங்கள், கடன்கள் முதலிய உதவியுடன் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மீதமுள்ள நிலங்கள் நிதி வசதியில்லாத காரணத்தால் சாகுபடி செய்யப்படவில்லை.

A.—

(*a*) 23,284 acres.

(*b*) All the lands referred to above have been distributed to the landless poor persons. Of the lands thus distributed, 6116·81 acres have been cultivated by the donors, with help of the loans and grants given to them. The remaining lands have not been cultivated for want of financial assistance.

கைக்குத்தலரிசி உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம்

34 வினா—திரு. செ. பாலசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், தென்முகம், வெள்ளோடு கைக்குத்தலரிசி உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்தின் 1965–66 வருட வரவு-செலவுக் கணக்கு தணிக்கை (Audit) செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அத்தணிக்கை அறிக்கையில் என்னென்ன ஒழுங்கீனங்கள் சுட்டிக் காட்டப்பட்டன ?

விடை.—

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

A—

(*a*) No.

(*b*) Does not arise.

[*குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) உறுப்பினர் திரு. மார்டின் மீது

(இ) முரசொலி நாளிதழில் பேரவை நடவடிக்கைகள் பற்றி வந்துள்ள செய்தி.

MR. SPEAKER : I take up the question of privilege brought forward by the hon. Member Mr. Martin which I adjourned till to-day. In the notice of the privilege motion the only point raised by the hon. Member is that the same passage has been held to constitute a *prima facie* case of breach of privilege. No other point or ground is raised. The only point is that the Speaker has held the passage in the 'Navasakthi' is a breach of privilege and therefore the passage in the 'Murasoli' should be so held. The implication is obvious. That is how a breach of privilege arises against the hon. Member. I said that the allegation made by the hon. Member was untrue and I also read the passage which was already held to constitute a breach of privilege. The only issue therefore is whether these two passages are the same. I have got the dictionary here. The meaning of the word 'same' is 'unvarying', 'unchanged', 'identical' 'Unchanged' and 'Identical' is the meaning given in the Oxford Dictionary. I have checked up also with the Chamber's Dictionary and it contains exactly the same words 'unchanged' and 'identical'. For convenience I have passed on the two passages to the Hon. Leader of the Opposition and also to the Hon. Chief Minister. The only issue on which I would like to have enlightenment is : Are these two passages the same as alleged by the hon. Member Mr. Martin.

திரு பி. ஜி. கருத்திருமன் : இந்த விஷயத்தைப்பற்றி நேற்றைய தினம் தாங்கள் கொடுத்த தீர்ப்பில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை மீது He has alleged என்பதாக கனம் சபாநாயகர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கனவேயே நான் இதைப் பற்றிக் குறிப்பிட்டது என்னவென்றால், It is not an allegation. He has quoted you.

MR. SPEAKER : The notice given by the hon. Member Mr. Martin may first be read "The Speaker has held . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : ப்ரைமாபாசி கேஸ் அதில் இருப்பதாக தாங்கள் கொடுத்துள்ள தீர்ப்பை நான் வைத்திருக்கிறேன்.

THE HON. THIRU C. N. ANNADURAI : The hon. Leader of the Opposition is saying that the hon. Members merely quoted the ruling given by the Speaker. But when the Speaker refers to the allegation against the Speaker, what he means probably is that the hon. Member Mr. Martin has stated that an identical passage has appeared in the 'Navasakthi' and you have given a ruling. That is the clarification.

திரு. பி. ஜி. கருத்திருமன் : முதலிலே நான் விளக்கிவிடுகிறேன். கனம் அங்கத்தினர் மேல் சபாநாயகர் . . . .

(மாண்புமிகு பேரவைத் தலைவர் எழுந்திருந்தார்.)

நான் பேசுவதற்குக் கூடத் தாங்கள் இடம் கொடுக்கவில்லை என்றால் என் உரிமை பாதிக்கப்படுகிறது என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். கொஞ்சம் பொறுமை வேண்டும். சபாநாயகர் கொடுத்த தீர்ப்பு—அபிஷியல் ரெக்கார்டு இதோ இருக்கிறது. அதையே நான் வாசிக்கிறேன்.

"The Hon'ble the Speaker has held that the above passage pnblished iu the daily "Navasakthi" constitutes a *prima facle* case of breach of privilege. The words used are "The Hon. Speaker *has held*".

அதோடு மட்டுமல்ல. நீங்களே சொல்லியிருக்கிறீர்கள், அதற்கு ஆதாரம் இருக்கிறது என்பதாக. அந்த அங்கத்தினர் ஒன்றும் கற்பிக்கவில்லை. ஒரு பத்திரிகையில் வந்துள்ள செய்தியே இன்னொரு பத்திரிகையில் வந்திருக்கிறது என்கிறபோது அந்தப் பத்திரிகை சம்பந்தப்பட்ட ரூலிங் இதற்கும் பொருந்தும். தமிழில் ஒரு கருத்தை எடுத்து இன்னொருவர் சொல்கிறபோது அந்தக் கருத்துத்தான் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். எழுத்துக்கு எழுத்து அப்படியே இருக்க வேண்டும் என்பது இல்லை. அதில் வந்துள்ள செய்தியின் சாராம்சம், பொருள் இன்னொன்றில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். "It is certainly a breach of the privilege of the House. I hold that in respect of the portion marked 'A' a *prima facie* case exists" என்று அபிஷியல் ரெக்கார்டில் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் அதுபற்றி தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். என்றாலும், ஒரு பத்திரிகையில் வந்துள்ளது உரிமையைப் பாதிக்கிறது என்கிறபோது அதே போல் இன்னொரு பத்திரிகையிலும் வந்திருப்பதை கனம் உறுப்பினர் எடுத்துக்காட்டியுள்ளார். அது எந்தப் பத்திரிகை என்பது வேறு விஷயம். வந்துள்ள விஷயத்தில் சாராம்சம் என்ன ?

"Therefore with regard to 'B' also, a *prima facie* case exists.... Therefore having held that a *prima facie* case does exist in respect of all the three portions marked and brought to the notice of the House, I have to see whether I would deal with it sending it to the Committee of Privileges."

என்று சபாநாயகர் சொல்லியிருக்கிறார்கள்.

"ஸேம்" என்பதற்கு டிக்ஷனரியில் என்ன பொருள் சொல்லப்பட்டிருக்கிறது என்று சபாநாயகர் சொன்னார்கள். நாம் இவ்வளவு பெரியதாகப் பொருள் பார்க்கவேண்டிய பிரச்சினை இதில் இல்லை. முதல் அமைச்சர் சொல்லாத ஒன்றை சொன்னதாக ஒரு பத்திரிகையில் வந்துள்ளது போலவே இன்னொன்றிலும் வந்திருக்கிறதா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். சபாநாயகர் அவர்கள் "This is supposed to be the statement made by the Hon. the Chief Minister on the floor of this House. That is not in accordance with the record of the proceedings, nor is this true".

என்று சொல்லியிருக்கிறார்கள். 'நவசக்தி' பத்திரிகையிலே வந்திருக்கும்படியான செய்தி என்ன ? நவசக்திப் பத்திரிகையிலே வந்திருப்பது "காங்கிரஸ் என்றால் காமராஜோ பக்தவத்சலமோ கருத்திருமனோ அவர்கள் பேசுவதைத் தான் நான் பொருட்படுத்துவேன். மற்ற பேச்சுக்களை காங்கிரசை வைத்துப் பிழைக்கும் பேச்சாக நான் கருதுகிறேன்." முரசொலி பத்திரிகை சென்னையிலே 1967-ம் வருடம் ஜூலை மாதம் 6-ம் தேதியும் வெளியூர்களிலே 1967-ம் வருடம் ஜூலை மாதம் 7-ம் தேதியும் வந்ததிலே "காங்கிரஸ் என்றால் நான் காமராஜர், கருத்திருமன், பக்தவத்சலம் போன்றவர்களையே பார்க்கிறேன். மற்ற பேச்சுக்களையெல்லாம் காங்கிரசை வைத்து பிழைப்பு நடத்துகிறவர்களது பேச்சாகவே கருதுகிறேன்" என்று இருக்கிறது. போன்றவர்கள் என்றோ அல்லது பார்க்கிறேன் என்றோ இருக்கலாம். முதலமைச்சர் அவர்கள் கண்ணியமாக சொல்லியிருக்கலாம். அவர்கள் நினைத்துச் சொன்ன சூழ்நிலை சந்தர்ப்பம் வேறாக இருக்கலாம். ஆனால் கனம் சபாநாயகர் அவர்கள் தீர்ப்புக் கொடுத்திருப்பதைக் குற்றச்சாட்டாக சொல்லக் கூடிய முறையில் இல்லாமல்—ஏனென்றால் ஹைகோர்ட்டிலோ அல்லது சுப்ரீம் கோர்ட்டிலோ கொடுத்த தீர்ப்பை வைத்துத்தான், அதைக் காட்டித் தான் தீர்ப்பை நாடுவார்கள்—அந்த முறையில் தான் கனம் சபாநாயகர் அவர்கள் கொடுத்த தீர்ப்பை திரு. மார்டின் அவர்கள் சொல்லியிருக்கிறார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. அதற்காக அதைச் செய்கிறேன் இதைச் செய்கிறேன் என்று சபாநாயகர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்களுக்குப் பொறுப்புள்ள பதவியை நாங்கள் எல்லாம் சேர்ந்து வழங்கியிருக்கிறோம். அவர்கள் நியாயம் வழங்குவதில் பேர்போனவர்கள் என்பதை நாங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் என்னுடைய கட்சி அங்கத்தினர் திரு. மார்டின் அவர்கள் அலெஜ்டாக எதுவும் கொடுக்கவில்லை—சபாநாயகர் அவர்கள் டிக்ஷனரியை எல்லாம் பார்த்தார்கள்—"you have already held" என்று கொடுத்திருப்பதை திரு. மார்டின் அவர்கள் "Speaker has held" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லியிருப்பது சபாநாய்கர் மேல் குற்றச்சாட்டாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை மனதிலேயிருந்து அகற்றிவிட்டு, நவசக்தியிலேயும் பிரசுரம் வந்திருக்கிறது, முரசொலியிலேயும் அதே மாதிரி பிரசுரம் வந்திருக்கிறது. ஆகவே அதற்காகத் தங்களுடைய தீர்ப்பை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, இரண்டு பிரிவிலெஜ் மோஷன்கள் பேரவையின் முன் இருக்கின்றன. ஒன்று முரசொலிப் பத்திரிகையின் பேரில் திரு. மார்டின் அவர்கள் கொண்டுவந்த உரிமைப் பிரச்சினை. மற்றொரு உரிமைப் பிரச்சினை திரு. மார்டின் அவர்கள் கொண்டு வந்ததில் சில குறைபாடுகள் இருப்பதாகச் சட்ட மன்றத் தலைவர் கருதி ஒரு உரிமைப் பிரச்சினையை அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். இப்பொழுது நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் இரண்டையும் ஒன்று சேர்த்துப் பேசாமல் முதலிலே கனம் மார்டின் அவர்கள் பேரில் உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருப்பதற்குக் காரணம் இருக்கிறதா என்பதைப்பற்றி முதலிலே ஆராய்வது நல்லது என்று சொன்னார்கள். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது கனம் மார்டின் அவர்கள் சபாநாயகர் அளித்த முந்தையத் தீர்ப்பை மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்கள். மேற்கோளாகக் காட்டுவது நியாயமானது, அதிலே எந்தவிதமான உரிமைப் பிரச்சினையும் எழவில்லை என்று சொல்கிறார்கள். அதை நான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கிறேன். சபாநாயகர் அவர்கள் தீர்ப்பையோ அல்லது முந்தைய சட்ட மன்றத் தலைவர்களுடைய தீர்ப்பையோ யார் அளித்த தீர்ப்பையும் மேற்கோளாகக் காட்டுவது நியாயமானது மட்டுமல்ல, தேவையானதும்கூட. ஆனால், சபாநாயகர் அளித்த தீர்ப்பைத் தான் மேற்கோளாகக் காட்ட வேண்டும் ; சபாநாயகர் அளிக்காத தீர்ப்பை மேற்கோளாக்க் காட்டக் கூடாது. சபாநாயகர் அவர்கள் அளித்த தீர்ப்பைத்தான் திரு மார்டின் அவர்கள் சொல்லியிருப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நவசக்தி பத்திரிகையிலே வந்த இன்னின்னவைகள் உரிமைப் பிரச்சினைக்கு இடம் அளிப்பதாக இருக்கின்றன, அதற்கு மேலெழுந்தவாரியாக "*prima facie* case" இருக்கிறது என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். திரு. மார்டின் அவர்கள் முரசொலிப் பத்திரிகையிலே வந்திருக்கிற ஒரு வாக்கியத்தைக் காட்டி, அது போன்ற வாக்கியம் நவசக்தியில் வந்தபொழுது உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள் என்று சொல்லி மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்கள். நவசக்தியிலே அதுமாதிரி வாக்கியங்கள் வந்திருக்கின்றன. அதனால் உரிமைப் பிரச்சினை என்று சொல்கிற சட்டமன்றத் தலைவர் அவர்களுடைய தீர்ப்பை அவர்கள்

திரித்துச் சொல்லியிருக்கிருர்கள். தான் சொல்லாததைச் சொல்லியிருக்கிருர்கள் என்ற கருத்தைத் தலைவர் அவர்கள் தெரிவித்து இருக்கிருர்கள். இதற்கு ஒரு முழுமையான பொருள் காணவேண்டுமென்ருல் இரண்டாவது பிரச்சினையையும் இதோடு தொடர்புபடுத்திக்கொள்ள வேண்டும். நவசக்தி பத்திரிகையில் வந்ததுதான் முரசொலிப் பத்திரிகையிலும் வந்திருக்குமாஞல் நவசக்திப் பத்திரிகைக்கு என்ன தீர்ப்பு அளிக்கப்பட்டதோ அதேமாதிரி தான் முரசொலிப் பத்திரிகைக்கும் தீர்ப்பளிக்கப்பட வேண்டும். முரசொலிப் பத்திரிகையில் வந்ததுதான் நவசக்தியிலும் வந்திருக்குமாஞல் தீர்ப்பு ஒரேமாதிரிதான் இருக்க வேண்டும். ஆஞல், நவசக்தியிலே வந்திருக்கிற வாக்கியமும், முரசொலியிலே வந்திருக்கிற வாக்கியமும் ஒன்றுதாஞ என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி நவசக்தியிலே வந்திருக்கிற வாசகங்கள்தான் முரசொலியிலும் வந்திருந்தால் நவசக்திக்கு அளிக்கப்படுகிற தீர்ப்பு என்னவோ அதே தீர்ப்புத்தான் முரசொலிக்கும் அளிக்கப்படவேண்டுமென்பதை யாரும் ஒப்புக்கொள்ளலாம். ஆஞல் இரண்டிலேயும் வந்திருக்கிற வாசகங்கள் ஒன்றுதாஞ என்று பார்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றிரண்டு வார்த்தைகள் மாறுபாடாக இருந்தால் அதையெல்லாம் கவனிக்கக் கூடாது, பொதுப்படையான கருத்தைத் நான் கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள வேண்டுமாஞல் அப்படிப்பட்ட தாராளங்கள் இருக்கலாம். ஆஞல், பிரச்சினைகளை எழுப்புகின்ற பொழுது, வழக்கு மன்றங்களிலோ சட்ட மன்றங்களிலோ ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு விதமான பொருள் நிச்சயமாக இருக்கும். எடுத்துக்காட்டாக "கொல்வது" என்பதற்கும் "கொள்வது" என்பதற்கும் ஒரு எழுத்துத்தான் வித்தியாசம். அந்த ஒரு எழுத்துத் தானே வித்தியாசமாக இருக்கிறது, அந்த ஒரு எழுத்து வித்தியாசத்திற்காகப் பொருளை மாறுபாடாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று யாரும் சொல்லமாட்டார்கள். "கொல்வது", "கொள்வது" என்ற இரண்டிற்கும் ஒரே ஒரு எழுத்துத்தான் வித்தியாசம், அதஞலே ஒன்றும் பொருள் மாறிவிடாது என்று மாணவர்கள்கூட வாதாடுவது இல்லை. ஆகவே, ஒரு எழுத்துத்தான் வித்தியாசம் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வாதாடக்கூடாது, வாதாடமாட்டார்கள் என்று கருதுகிறேன். நவசக்தியிலே வந்திருப்பது :"காங்கிரஸ் என்ருல் காமராஜோ, பக்தவத்சலமோ, கருத்திருமனே அவர்கள் பேசுவதைத்தான் நான் பொருட்படுத்துவேன். மற்ற பேச்சுக்களை காங்கிரசை வைத்துப் பிழைக்கும் பேச்சாக நான் கருதுகிறேன்". "பேசுவதைத்தான்" என்று வந்திருப்பதிலிருந்து அந்த மூவரைத் தவிர மற்ற யாருடைய பேச்சையும் காங்கிரஸை வைத்துப் பிழைக்கும் பேச்சாகக் கருதுவதாக பொருள் தருகிறது. ஆங்கிலத்திலே விளக்கவேண்டுமாஞல் "காங்கிரஸ் என்ருல் காமராஜோ, பக்தவத்சலமோ கருத்திருமனே அவர்கள் பேசுவதைத்தான் நான் பொருட்படுத்துவேன்" என்று இருப்பது " **It excludes every other congressman except the three people** " என்று சொல்வதாகும். ஆகவே, இந்த மூன்று காங்கிரஸ்காரர்களைத் தவிர மற்ற எல்லோரையும் நீக்கி அவர்கள் பேசுவதைத் தான் பொருட்படுத்துவேன் என்று இருப்பது, கற்க கசடறக் கற்க என்று அடித்துச் சொல்வதைப் போல் அந்த மூவரைத் தவிர மற்ற காங்கிரஸ்காரர்கள் எல்லாம் பேசுவது காங்கிரசை வைத்துப் பிழைக்கும் பேச்சாக நான் கருதுகிறேன் என்ற முறையிலே அமைந்திருக்கிறது. ஆஞல் நான் அந்த முறையிலே சொல்லவில்லை. முரசொலியிலே அதே மாதிரிதான் வந்திருக்கிறது என்று சொன்ஞர்கள். ஆஞல் முரசொலியிலே "காங்கிரஸ் என்ருல் நான் காமராஜர், பக்தவத்சலம் போன்றவர்களையே பார்க்கிறேன். மற்ற பேச்சுக்களையெல்லாம் காங்கிரசை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்களது பேச்சாகவே கருதுகிறேன் " என்று வந்திருக்கிறது. "போன்றவர்கள்" என்று வந்திருக்கிற ஒரே வார்த்தையின்மூலம் இதிலே விஷம் நீக்கப்பட்டிருக்கிறது. போன்றவர்கள் என்று வந்திருப்பதால் அந்தப் பட்டியலில் எட்செட்ரா, எட்செட்ரா என்று ஆங்கிலத்தில் சொல்வதைப் போல மற்றவர்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். "போன்றவர்கள்" பட்டியலில் வரு

கின்ற மற்றவர்களையும் சேர்த்துக்கொண்ட பிறகு மற்ற பேச்சுக்களை காங்கிரஸை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவர்களது பேச்சாகக் கருதுகிற முறையில் தனிப்படுத்திக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கும் அதற்கும் வித்தியாசம் இருக்கிறது, இரண்டும் தனித்தனியாக இருக்கிறது. இதிலே உரிமைப் பிரச்னை இருக்கிறதா என்பதை முடிவு செய்யவேண்டிய பணி சட்ட மன்றத் தலைவர் அவர்களுடையது. இரண்டு வாசகங்களிலே பொருள் வித்தியாசம் அந்த ஒரு வார்த்தையைப் பயன்படுத்துவதிஞலே நிச்சயமாக இருக்கிறது. இன்னும் ஒன்றும் நவசக்திப் பத்திரிகையில் வந்திருக்கிறது. "காமராஜர், பக்தவத்சலம், கருத்திருமன் தவிர மற்றவர்கள் வயிற்றுப் பிழைப்புக்காரர்கள்" என்று சொன்னதாக நவசக்திப் பத்திரிகையில் வந்திருக்கிறது. காமராஜர், பக்தவத்சலம், கருத்திருமன் "தவிர" என்ருல் மு.ப. 10–30 கனம் விஞயகம் அவர்களைக்கூட வேறு பக்கத்திலே சேர்த்து விட்டதாகத் தான் பொருள்படும். முரசொலிப் பத்திரிகையின் வாசகத்திலே தான் எல்லோரும் சேருகிருர்கள். "காமராஜர், கருத்திருமன், பக்தவத்சலம், விஞயகம், பொன்னப்ப நாடார். . . ." என்று எல்லோரும் அதிலே தான் வருகிருர்கள். "தவிர" என்று வைத்துவிட்டால் "இந்த மூன்று பேரைத் தள்ளி வைத்து விட்டதாகும்". இதை எழுதியவர்கள் பதங்களை எப்படி வேண்டுமாஞலும் பயன்படுத்தலாம் என்று எழுதியதாக இருக்கலாம். தமிழ் ஓர் உயிருள்ள மொழி. தமிழ் மொழியைப் பயன்படுத்துகிறபோது பொருள் அறிந்து பயன்படுத்த வேண்டுமென்பது இதிலிருந்து பெறப்படுகிறது. ஆகவே, "தவிர" என்ற வார்த்தை வேறு, முரசொலியில் உள்ள "போன்றவர்களை" என்ற வார்த்தை வேறு, இரண்டு வாசகங்களுக்கும் பொருள் வேறு வேருகிறது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது இருக்கும்படியான பிரச்சினை முதலிலே எங்களுடைய கட்சியைச் சார்ந்த அங்கத்தினர் சபாநாயகர் கொடுத்த தீர்ப்புக்கு "அலிகேஷன்" கொண்டு வந்தாரா என்பது ஒரு பகுதி. தீர்ப்புக் கொடுக்கப்பட வேண்டியது இன்ஞெரு பகுதி. இப்போது நான் முதல் பகுதிக்குத் தங்களுடைய தீர்ப்பை முதலிலே கேட்க விரும்புகிறேன். ஏற்கனவே சபாநாயகர் அவர்கள் "பிரைமா ஃபாஸி கேஸ்" இருக்கிறது என்று கூறியிருக்கிருர்கள். இறுதியான தீர்ப்புச் சொன்னதாக நாங்கள் சொல்லவில்லை. கனம் மார்டின் அவர்கள் "பிரைமா ஃபாஸி கேஸ்" இருக்கிறது என்று தாங்கள் சொன்னதைக் குறிப்பிட்டு அதுமாதிரியான "பேஸேஜ்" வந்திருப்பதை கொடுத்திருப்பதைத் தாங்கள் "அலிகேஷன்" என்று சொன்ஞல் . . . . .

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, முந்திய தீர்ப்பை மேற்கோளாகக் காட்டுவது உரிமைப் பிரச்சினை ஆகாது. அது அல்ல அவர்கள் சொன்னது. "நான் எந்த வாசகத்தை வைத்து நவசக்தியின் பேரிலே உரிமைப் பிரச்சினை இருப்பதாகச் சொன்னேஞே அந்த வாசகம் அல்ல முரசொலியில் வந்திருப்பது, இதைப் போன்ற வாசகத்திற்கு நீங்கள் தீர்ப்பளித்திருக்கிறீர்கள் என்று சொல்லுவது உரிமைப் பிரச்சினை" என்று தான் சொல்லியிருக்கிருர்கள். எடுத்துக்காட்டாகச் சொல்லுகிறேன்—கனம் மார்டின் அவர்கள் முரசொலியில் சொல்லப்படுகிற வார்த்தையை மட்டும் கொடுத்து "இது உரிமையைப் பாதிக்கிறது" என்று கொடுத்திருந்தால் இந்தப் பிரச்சினைகள் எழுந்திருக்காது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இப்போது நாங்கள் கேட்பது எல்லாம், எங்கள் கட்சியும் நாஞம் விரும்புவது எல்லாம் ஏற்கனவே சபாநாயகர் கொடுத்த தீர்ப்பை நாங்கள் உதாரணமாகக் காட்டுவதற்குக்கூட உரிமை இல்லையா ? அவ்வாறு கூறுவது எங்களுடைய உரிமையைப் பாதிக்கிறது என்று கூற விரும்புகிறேன். " it exists " என்று கூறுகிருர்கள். " has held " என்று குறிப்பிடுகிருர்கள். இரண்டு பகுதியும் தெளிவாக்கப்பட வேண்டும்.

இன்று இந்தச் சபையினுடைய புரோசீடிங்ஸைப் பார்ப்பதற்குக்கூட பிரதிகூலமான நிலை இருக்கிறது. முன்பு, இன்றைய புரோசீடிங்ஸ் அடுத்த நாள் லைப்ரரியில் வைக்கப்பட்டு பார்த்துக்கொள்ள உரிமை இருந்தது. அந்த உரிமையைக்கூட எடுத்து விட்டார்கள். உதவி சபாநாயகர் அவர்கள் திருத்தப்பட்ட பிறகு வைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தந்த நாள் நடவடிக்கைகளையெல்லாம் உடனுக்குடன் பார்வைக்கு வைக்கப்படுமானால் "என்ன சொன்னார்கள்? என்ன சொன்னோம்?" என்று பார்ப்பதற்கு வசதியாக இருக்கும். இப்போது ஞாபகத்தில் உள்ளதை வைத்துப் பேச வேண்டியதாக இருக்கிறது. டேப் ரெக்கார்டிங் ஏற்பாடு வைத்துவிட்டால் விவாதத்திற்கே இடம் இல்லாமல் இருக்கும். யார் என்னென்ன பேசினார்கள், என்ன சொன்னார்கள் என்று டேப்பைப் போட்டுப் பார்க்க முடியும். அது ஆதாரமாக இருக்கும்.

சபாநாயகர் அவர்கள் 192-வது விதியின்படி "ஸுவோ மோட்டோ" என்னும் நிலையில் சொல்லியிருக்கிறார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் அடுத்த நாளைக்குள் வருத்தம் தெரிவிக்காவிட்டால் என்னவோ நடந்துவிடும் என்னும்படியாகச் சொல்லியிருக்கிறார்கள். இது உரிமைக்கு மட்டுமல்ல, ஜனநாயகத்திற்கே உலை வைக்கும்படியான நிலை ஆகும். அதிலே சில தவறுகள் இருந்தாலும்கூட அதைத் திருத்திக்கொள்ள ஆதரவு கொடுக்கக்கூடிய வகையில் பெருந்தன்மையாகப் போக உரிமை இருக்கிறது. அதைக் கொடுத்தவுடன் அதனுடனே பத்திரிகையையும் சேர்த்துக் கொடுக்காதது தவறு என்று சொன்னார்கள். சபாநாயகர் அவர்கள் கொடுத்த தீர்ப்பைக் கூறியிருந்தும் தீர்ப்பே கொடுக்கவில்லை என்றுச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே கூறியிருப்பது "பிரைமா ஃபாஸி கேஸ்" உண்டு என்பது தான். "It exists" என்று சொல்லியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : திரும்பத் திரும்ப அதையே வலியுறுத்தினாலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அவர்களுக்குள்ள உணர்ச்சி காரணமாக, எதை உணர வேண்டுமென்று விரும்புகிறேனோ அதை அவர்கள் உணரவில்லை என்பதற்காக வருத்தமுறுகிறேன். சட்டமன்றத் தலைவர் அவர்கள் கொடுக்கின்ற முந்திய தீர்ப்புக்களை மேற்கோளாகக் காட்டுவது நியாயமானது, தேவையானது, அவ்விதம் காட்டுவதில் எந்த விதமான முறைக் குறைவும் இல்லை. ஆனால் இந்த இடத்தில் அதை மேற்கோளாகக் காட்டியபோது அதிலே சட்ட மன்றத் தலைவர் அவர்களுடைய கருத்து—"நான் கொடுத்த தீர்ப்பு நவசக்தியின் பேரில் கொடுத்தது, அதிலே வந்த வாசகத்தின் பேரிலே கொடுக்கப்பட்டது, அந்த வாசகம் அல்லாத வேறு ஒரு வாசகத்தைக் காட்டி 'இந்த வாசகத்தைப் போன்ற ஒரு வாசகம் நவசக்தியில் வந்ததற்கு நீங்கள் தீர்ப்பளித்தீர்கள்'. என்று மேற்கோள் காட்டியிருப்பதால் அது முறைகேடான மேற்கோள்" என்று கூறியிருக்கிறார். மேற்கோள் காட்டுவதே தவறு என்று கூறவில்லை. அப்படிப் பார்த்தால் அவரே தினம் தினம் பல சட்ட மன்றத் தலைவர்களுடைய தீர்ப்புக்களை மேற்கோளாகக் காட்டி வருகிறார். ஆகவே, மேற்கோள் காட்டுவதிலே தவறு இல்லை.

திரு. பி. ஜி. கருத்திருமன் : இது நுண்ணிய விஷயம், நீதியில் ரொம்பவும் நுணுக்கமான விஷயம். மனத்தில் ஒவ்வொன்றை வைத்துப் பேசிக்கொள்ளவேண்டாம் என்று சொல்லிக்கொள்கிறேன். சபாநாயகர் அவர்கள், "அலெஜ்டு" என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார்கள். குற்றச்சாட்டு சாட்டவில்லை என்பதுதான் எங்களுடைய வாதம். மேற்கோள் தான் காட்டினார். 'He has never alleged. He has just quoted.'

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : எளிய முறையில் இந்தப் பிரச்சினையை நாம் முடித்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். கனம் மார்டின் அவர்கள் "நான் முந்திய மேற்கோளாகத் தான் காட்டியிருக்கிறேன், குறிப்பிட்டிருப்பதிலே தவறுகள் இருக்குமானால் வருத்தப்படுகிறேன்" என்று சொல்லிவிட்டால் பிரச்சினை முடிந்துவிட்டது.

திரு. பி. ஜி. கருத்திருமன் : அந்த ஒரு வார்த்தைக்கு எவ்வளவு மதிப்பு என்று பார்க்க வேண்டும் "தவறு" அல்லது "மன்னிப்பு" என்று சாதாரணமாகக் கேட்டுவிடலாம். ஆனால் தவறு இல்லை, குற்றம் இல்லை, நியாயம், நீதி என்று சொல்லும்படியான நிலையில் அவர் சொன்னது "மேற்கோள்தான்" என்று சொல்லுகிறேன். அதை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் ஏற்றுக்கொள்ளலாம், இல்லையென்றால் உங்களுடைய தீர்ப்பை எப்படி வேண்டுமானாலும் வழங்கிக்கொள்ளலாம்.

Mr. SPEAKER ; The hon. the Leader of the Opposition has stated that the hon. Member, Thiru Martin, has merely quoted some precedent. The precedent refers ordinarily to a prior incident and this has arisen out of one and the same incident. The question arises, how can there be a precedent. Even if he is entitled to quote a precedent, no hon. Member is entitled to misrepresent the proceedings of this House. There is a rule that mere misrepresentation of the proceedings of the House will itself constitute a breach of privilege of this House. And apart from that, he should be good enough to read actually the notice as written in English by the hon. Member who is also a learned Member. It would be observed that the Speaker has been drawn in, in the most unnecessary manner. If the breach of privilege consisted of a passage, he could have just quoted the passage. Instead of that, he goes on saying that since the Speaker has held in the case of 'NAVASAKTHI' that there is a breach of privilege, he should also hold in the case of 'MURASOLI' that there is a breach of privilege. The implication is obvious. Even if it is not an allegation, it amounts to misrepresentation of the proceedings.

Thiru P. G. KARUTHIRUMAN rose.

Mr. SPEAKER ; Before I finally say something, you want an opportunity ?

If the Speaker is brought into argument every now and then the proceedings cannot go on in a smooth manner. Again and again it is said in May's Parliamentary Practice that there can be no debate on the conduct of the Speaker (page 396) no reflections can be cast on the conduct of the Speaker (page 454) and the Speaker's action cannot be criticised (page 247). The Speaker has been brought into these proceedings in an unnecessary and undesirable manner. If it had stopped with the first portion, the breach of privilege against the hon. Member would not have arisen. My ruling on the other occassion, was quite right. I do not go back, the proceedings are there. I held that a certain passage did constitute a *prima facie* case of breach of privilege. But that does not permit an hon. Member to quote an entirely different passage and say that because I held a passage in the 'Navasakthi' to constitute a breach of privilege, the passage in the 'Murasoli' also should be held to be so. The passage quoted is entirely different. I never said, I did not hold, that that passage constituted a *prima facie* case of breach of privilege. It is an entirely different thing. The word 'ponravargal' makes all the difference. My hon. Friend knows the implications of the English language as well as the Tamil language. He has used the words 'the same passage',

'the above passage'; he has used the words twice. He has said that the Speaker has in respect of the same passage held that it constituted a breach of privilege, which I did not. But it is open to the hon. Member now to say or to the Leader of the Opposition to say; I did not observe the word 'ponravargal', I did not understand the significance. This House endowed as it is with enormous strength and power will always be magnanimous. If the hon. Member says that the proceedings took place on the 11th, that he gave notice of the privilege issue against the newspaper the next day and therefore he did not carefully observe, there is nothing wrong in it. If he would acknowledge before the Members of this House "the word 'ponravargal' escaped my attention, accidentally or I made this allegation with regard to this passage, due to hurry and want of time", there would be nothing wrong in it. I fully realise that sometimes one is pressed for time and one has to work against a deadline and one cannot observe the details of every word. I agree. But he must have the common courtesy to acknowledge: "What I said and what I intended to say are different; I did not understand the significance of the word 'ponravargal', I did not understand the import of that particular word. Therefore, I did not mean anything wrong." It is enough if the hon. Member says that. It gave me no pleasure even to read the passage in the 'Navasakthi' that some Members of the Congress party depend upon the Congress for their livelihood. I had to read it because the rule says so. It gave me no pleasure and it will give me no pleasure to send any matter to the Committee of Privileges. If only the slightest indication is given that the word escaped his notice, I think that the House will show magnanimity.

DR. H. V. HANDE rose.

MR. SPEAKER: It is not a 'free for all'. If I allow the hon. Member to talk, I will have to allow the other Members also to talk.

DR. H. V. HANDE: On a point of order, Sir.

MR. SPEAKER: Please, I request the hon. Member Dr. Hande . . .

DR. H. V. HANDE resumed his seat.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, என்னைப் பொறுத்தமட்டில் சபை மிகவும் கண்ணியமான முறையில், நல்லமுறையில், உயர்ந்த முறையில் நடக்க வேண்டும் என்பதுதான். அதற்கு என் பூரண ஒத்துழைப்பையும் கொடுக்கும் நிலையில் இருந்து கொண்டிருக்கிறேன். ஆனால் நான் மீண்டும் மீண்டும் சொல்வது, இதிலுள்ள பிரச்னை என்னவென்றால், சபாநாயகர் அவர்களை இழுத்துக்கொண்டு வந்து விட்டு விட்டீர்களே என்று நீங்கள் வருத்தப்படுவது எனக்கு வருத்தமாக இருக்கிறது. உங்களை இழுத்து இங்கே வைக்கவேண்டுமென்று கிஞ்சித்தும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லாததை சொன்னதாக எழுதியிருக்கிறார்களே, அப்படி நான் சொல்லவேயில்லை.

THIRU P. G. KARUTHIRUMAN: I am sorry I cannot do that. We have to withdraw from this House.

The Members of the Congress Legislature Party then staged a walk-out.

MR. SPEAKER: Now, with regard to my ruling on the breach of privilege against the hon. Member Mr. Martin, it is quite evident that he has misrepresented the proceedings of this House and in making that misrepresentation he has also made certain allegations against the Speaker as to what happend on the 11th July, which are not true. It was open to the hon. Mmeber to say that he did not observe the word 'ponravargal' and finish that matter. The hon. Leader of the Opposition and the Member still contended that it was the same passage. 'Same' according to the dictionary means 'identical', 'unchanged' 'unvarying'. It is quite evident that in saying that this passage is the same, he was altogether incorrect and therefore I hold that a *prima facie* cas e has been made out and I refer this matter of privilege against the hon. Memeber Mr. Martin under Rule 192 to the Committee of Privileges.

As regards the motion of privilege against the 'Murasoli', the hon. Member Mr. Martin has alleged that the same passage has occurred. It is quite evident by reading merely the world 'ponravargal' that the passage is different. The only ground on which this privilege matter is raised is that it is the same passage. When it is not the same passage, there is no case of breach of privilege. I hold that there is no case of breach of privilege against the 'Murasoli'.

3. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மேட்டூரில் உள்ள மதருஸ் அலுமினியத் தொழிற்சாலையில் தொழிலாளர்கள் வேலைநீக்கமும் உண்ணாநோன்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. அருள்கூர்ந்து ஒத்திவைப்புத் தீர்மானங்களை வாசித்து மட்டும் விட்டுவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன். உறுப்பினர் திரு. சுரேந்திரன் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க முடியாது என்று ஏற்கனவே தெரிவித்திருந்தும், அவர்கள் தீர்மானத்தை அவையில் வாசிப்பதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அதை வாசிப்பதற்கு அவருக்கு நான் அனுமதி அளிக்கிறேன்.

***திரு. எம். சுரேந்திரன் :** தலைவர் அவர்களே, மேட்டூரில் உள்ள மதருஸ் அலுமினியத் தொழிற்சாலையில் வேலை செய்து வரும் தொழிலாளர்கள் சங்கம் ஏற்படுத்திக்கொண்ட காரணத்தால் தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாளர்களைப் பழி வாங்க முற்பட்டது. இதைத் தொடர்ந்து வேலை நிறுத்தமும் சமரச முயற்சிகளும் பல தடவைகள் நடந்தன. இவையெல்லாம் வெற்றி பெறவில்லை. பழிவாங்கும் நோக்கத்துடன் நிறுத்தப்பட்ட 78 தொழிலாளர்கள் இன்னும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் தொழிற்சாலைக்கு வெளியே துன்பங்களை அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் அலுமினியம் தொழிலாளர் சங்கத்தின் உப தலைவர் திரு. துரையப்பனும், நிர்வாக உறுப்பினர் திரு. மாணிக்கமும் தொழிற்சாலைக்கு முன்னால் 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 10-ம் தேதி காலை முதல் உண்ணாவிரதம் ஆரம்பித்திருக்கிறார்கள்.

மேட்டூர்ப் பகுதி, தொழிலாளர் பிரதேசமாக இருப்பதாலும், உண்ணாவிரதத்தின்மூலம் தொழிலாளர்களின் உணர்வுகள் தட்டி எழுப்பப்படுமாதலாலும், இது பொது ஜன முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக உள்ளது.

அதனால் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கும் தொழில் அமைதி நிலவுவதற்கும் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டுமெனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்ணாநோன்பு, வேலை நிறுத்தம் ஆகிய இரண்டு காரணங்களுக்காகப் பேரவையின் விவாதங்களைத் தள்ளி வைக்கத் தேவையில்லை என்று பல தீர்ப்புகளைத் துணைத் தலைவர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க எனது இசைவைக் கொடுக்கவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) கோவை பொறியியற் கல்லூரியில் "ராகிங்" (Ragging) காரணமாக மாணவர் தற்கொலை.

*DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I have given notice that this House stands adjourned to discuss a matter of urgent public importance namely the suicide by Sri V. Govindaraju, a first-year B.E. student in Coimbatore on 11th July 1967. He is alleged to have found himself unable to withstand the ragging by the senior students and hence was found hanging in his hostel room. Sir, I request you to allow this House to discuss this tragedy, though I do believe that ragging in small doses has its own advantage namely creatingstronger men who can face public life. But now it has gone beyond all control and we are answerable to the parents. Even if the Hon. the Chief Minister or the Leader of the House can give us some assurance, I am prepared to withdraw this adjournment motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அழகர்சாமி அவர்களையும், அவர்களுடைய தீர்மானத்தைப் படித்துவிடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, கீழ்க்காணும் அவசர முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தின்மீது சபையில் விவாதிப்பதற்குச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கும்படி கேட்டு ஒரு அறிக்கையை கொடுத்திருக்கிறேன்.

"கல்லூரிகள் திறக்கப்படும் இச்சமயத்தில் புதிய மாணவர்களைத் துன்புறுத்தி வரவேற்பு அளிக்கும் வகையிலான "ராகிங்" என்னும் இந்த முறைக்கு ஆளாகி, கோவை என்ஜினீயரிங் கல்லூரி ஒன்றின் முதலாண்டு மாணவர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிய வருகிறது. இது போன்ற சம்பவங்கள் இனியும் நிகழாவண்ணம் தடுக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிக்க."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கோவைக் கல்லூரியில் நடைபெற்ற இந்தத் துன்பகரமான நிகழ்ச்சி காலை செய்தித் தாளில் வந்தது. அதிலே கோவைக் கல்லூரி ஒன்றில் என்று இருக்கிறதே தவிர, எந்தக் கல்லூரி என்று தெளிவாக இல்லை. செய்தி வந்தவுடனேயே தொழில் நுட்பக் கல்வி இயக்குநரை அழைத்து இதுபற்றிக் கேட்டேன். அவரும் எந்தக் கல்லூரி என்று தெரியவில்லை, அதுபற்றி விசாரிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதோடு கல்லூரிகளில் "ராகிங்" கூடாது என்று சுற்றறிக்கை விடப்பட்டு சென்னை பொறியியல் கல்லூரியில் அது கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு ஏற்கெனவேயும் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தினால் தற்கொலை நிகழ்ச்சி ஏற்பட்டது என்ற முழு விவரங்களும் அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை. எந்தக் கல்லூரி என்றும் தெரியவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்து, "ராகிங்" காரணமாக இருந்தால், இதற்குக் காரணமான மாணவர்கள் யார் என்று கண்டு அறியும்படி தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு ஆணை பிறப்பித்துள்ளேன். அவரும் அதற்கான

முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். அது மட்டுமல்ல, "ராகிங்" முறைகளில் ஈடுபடுகிற மாணவர்கள் யாராக இருந்தாலும் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்ற சுற்றறிக்கையை எல்லாக் கல்லூரிகளுக்கும், குறிப்பாக இந்தக் கல்லூரிக்கும், தொழில் நுட்பக் கல்வி இயக்குநரை அனுப்பி வைக்கும்படி சொல்லியிருக்கிறேன். சட்ட-ஒழுங்கு முறைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, இந்த ஒற்றி வைப்புத் தீர்மானத்தை விவாதிப்பதால் தகவல்கள் பெற வாய்ப்பு ஏற்படாது. இது ஒற்றி வைப்புத் தீர்மானத்தின்கீழ் வரவில்லையென்றாலும், இதைப்பற்றி உடனடியாக கவனிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அது பற்றிய அறிவிப்பு பின்னால் அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாணவர்களுடைய நடவடிக்கைகளைக் குறித்து, உண்ணாநோன்போ அல்லது வேறு தவறான செயல்கள், அல்லது செய்கிற நல்ல காரியங்கள் அல்லது தீமையான காரியங்கள்பற்றி விவாதிக்க இந்தப் பேரவையின் விவாதத்தை ஒத்தி வைக்கத் தேவையில்லை என்பதாகப் பல தீர்ப்புக்கள் இருக்கிற காரணத்தினால், இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு எனது இசைவைத் தர நான் மறுக்கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

பார்க் டவுன் தொகுதியில் சட்டமும், ஒழுங்கும் பாதுகாக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது 41-வது விதியின்படி உடனடி முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வருவார்கள்.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, I gave this Call Attention Notice in the month of March and now it has come for reply.

I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, namely, the deteriorated law and order situation in the Park Town Constituency and the necessity to prevent the constant harassment and damage to the property of the D.M.K. and Swatantra workers in that area.

THE HON. THIRU C. N. ANNADURAI : Mr. Speaker, Sir, as the hon. Member has stated, these arrests and incidents took place in February and March and though this Call Attention Notice was not discussed previously, certain short notice questions were put on the same subject and I have replied to them. It is true that there was harassment of D.M.K. and Swatantra Party workers during the period of elections. But fortunately now normalcy has been restored not due to the fact that those people who were involved in the harassment have realised their defects but due to entirely different circumstances like the change of Government.

As far as the February and March incidents are concerned, I have made several enquiries from the police official quarters, whether any complaints have been received and registered during that period. What I have received after my enquiry is this. No specific complaints have been received by the Police from any quarters charging any person with having subjected workers either of the D.M.K. or Swatantra Party to harassment or with having caused damages to the properties of these parties' workers. Further, no specific report has been received either from the Officers of the Uniform Branch or from the Intelligence section regarding the above subject.

[Thiru C. N. Annadurai] [1967 ஜூலை 13

Complete normalcy prevails in the Madras City and especially in the Park Town area since the elections. But I know that properties have been damaged, especially the car in which Dr. Hande was going on the election day and the previous days. They ought to have complained to the Police at that time. I would request Dr. Hande to give me specific information as to the name of the police station where complaints were given and who was sent to the police station to give the complaint because it is stated that no complaint has been received. I have stated what is the version that is given to me though I am fully aware of the harassment that was done. But now I would request Dr. Hande since there is normalcy, not to pursue the matter but inform me privately and individually the name of the police station where these complaints were given and who was the police officer who did not register or receive the complaints. I do not think that pursuing the matter further will be of any benefit.

DR. H. V. HANDE: Sir, with the permission of the House I want to raise one point. I think on 7th July 1967 in Thana Street, one Wicor Bakery was stoned and completely damaged. A complaint has been registered with the local police station. I do not know the exact police station. Since this kind of incident has taken place even on the 7th July, I request the Hon. Chief Minister to look into this matter.

THE HON. THIRU C. N. ANNADURAI: Sir, if the hon. Member can give a specific instance of this kind to me, I will make enquiries.

முற்பகல். 11-00 **மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மற்றொரு கவன ஈர்ப்புத் தீர்மானம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கோமதி சங்கர தீட்சிதர் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் தன்னுடைய இடத்தில் இல்லாததால், அந்தத் தீர்மானம் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

5. 1967–68-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள்-அச்சுத் துறை.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள்-அச்சுத் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,27,09,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அரசாங்க அச்சகத்தில் நடந்துவரும் ஒழுங்கீனங்களைத் தடுக்கும் முறையில் உடனடியாக ஓர் விசாரணைக் குழு அமைப்பதைப்பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXXIV—எழுதுபொருள்-அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 2,27,09,900–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

1967 ஜூலை 13]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1967–68-ம் ஆண்டில் இந்தத் துறை ஆற்றியுள்ள பணிகளைக் குறித்த ஆய்வுரை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விழைகிறேன். எனினும், பொதுவான சில கொள்கைக் கூறுகளையும் இந்த ஆண்டிலே எய்திய சில சாதனைகளையும் சுருக்கமாக இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அரசின் பணிகள் பல்கிப் பெருகியுள்ளதன் விளைவாகவும், இம்மாநிலத்திலே தமிழ் ஆட்சிமொழியாக நிலவி வருவதாலும் அரசு அச்சகப் பணிகள் மிக விரிவடைந்துள்ளன. இவ்வாறு பெருகி வளர்ந்துள்ள பொறுப்புக்களைச் சமாளிப்பதற்காக அச்சக அமைப்பினை விரிவுபடுத்துவதும், வேண்டிய அச்சகப் பொறிகளை அமைப்பதும் இன்றியமையாததாயிற்று. அரசு அச்சகத்திலே சற்றேறக்குறைய 4,000 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். எனவே, இரண்டு முறை வேலை (Shift) போட்டு வேலை செய்தபோதிலும், பேரளவு நிர்வாகத் திறனை உறுதிப்படுத்துவது கடினமாய் உள்ளது. அரசு அச்சகங்களைப் 'பெருக்க வேண்டும்; அதே நேரத்தில் அவற்றைப் பரவலாக அமைக்க வேண்டும் என்ற இரண்டு நோக்கங்களையும் எய்தும் வகையில் தக்க இடங்களில் வட்டார அச்சகங்களைத் தொடங்க வேண்டும் என்பதை அரசு கொள்கையளவில் ஒப்புக் கொண்டது. இத்திட்டத்தின்படி முறைப்படுத்தப்பட்ட படிவங்கள் போன்று அதிகம் அச்சடிக்க வேண்டிய வேலைகளுக்கு ஈடுகொடுப்பதற்காகத் தன்னிறைவு உள்ள திறமைவாய்ந்த அமைப்பாகச் செயல்படுவதற்காவும், அக்கம் பக்கத்திலுள்ள மாவட்டங்களின் அச்சுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் வட்டார அச்சகங்களை வளர்க்கக் கருதியுள்ளது. இத்தகைய வட்டார அச்சகம் முதன் முதலாகத் திருச்சிராப்பள்ளியில் 1965 மார்ச் 20-ல் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் சேலத்திலே 1966 மார்ச் 19-லும், விருத்தாசலத்திலே 1966 ஆகஸ்டு 17-லும் வட்டார அச்சகங்கள் நிறுவப்பட்டன. புதுக்கோட்டையிலும், சென்னை மத்தியச் சிறைச்சாலையிலும், உயர்நீதி மன்றக் கட்டடங்களிலும் உள்ள கிளை அச்சகங்களில் வேலையளவு தொடர்ந்து உயர்ந்துகொண்டே வந்துள்ளது.

அச்சகங்களைப் பரவலாக ஏற்படுத்திவிட்டால்மட்டும் அச்சகத்தின் திறன் வளர்ந்துவிடும் என்றோ, இதில் நடைபெறும் பணி பெருகிவிடும் என்றோ கூறிவிட முடியாது. தேய்ந்துபோன பழைய அச்சகப் பொறிகளுக்குப் பதிலாக, நவீன அச்சகப் பொறிகளை அமைத்தாக வேண்டும். வேண்டிய பல கருவிகளை வாங்கியாக வேண்டும். 1966–67-ம் ஆண்டில் ரூ. 11 லட்சம் மதிப்புள்ள பொறிகள் விலைக்கு வாங்கப்பட்டு அரசுத் தலைமை அச்சகத்திலும் கிளை அச்சகங்களிலும் நிறுவப்பட்டன.

1967 பிப்ரவரித் திங்களில் நடந்த பொதுத் தேர்தல் குறித்து பெருத்த அச்சு வேலைகளை உரிய காலத்தில் அரசு அச்சகம் வெற்றிகரமாகச் செய்து கொடுத்தது குறிப்பிடத்தக்க மற்றொரு கூறாகும்.

பாட புத்தகங்களை அரசே வெளியிடுவது என்ற கொள்கை காரணமாக அரசு அச்சகத்தில் வேலைப்பளு மிகவும் அதிகரித்துவிட்டது. எனவே, பாட புத்தகங்களை அரசு அச்சிடுவதற்கென்று தனிப்பட்ட கிளை அச்சகம் ஒன்று மவுண்ட் சாலையில் நிறுவப்பட்டுள்ளது. அரசு அச்சகத்தில் 1963–64-ம் ஆண்டு அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 57·75 லட்சமாக இருக்க, 1965–66-ம் ஆண்டில் அச்சிடப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை 73·27 லட்சமாக உயர்ந்தது.

அரசு அச்சகத் தொழிலாளர்களுக்கு வேலை நிலைமைகள் வாய்ப்பாக அமைய வேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. அச்சகத் தொழிலாளர்கள் முன்னரே அனுபவித்து வரும் சில வசதிகளுடன்கூட, இந்த ஆண்டிலே புதிய சில வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. நச்சுக் காற்றினால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர் ஒவ்வொருவருககும் கால் லிட்டர் பாலும், பல விட்டமின் அடங்கிய மாத்திரைகளும் கொடுகக

படுகின்றன. பன்ரொட்டியும் தேநீரும் இலவசமாக வழங்குவது திருச்சிராப்பள்ளி, சேலம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் உள்ள வட்டார அச்சகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. தமிழக அரசு அச்சுத் தொழிலாளர் நல நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. தகுதியான தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு ஈமக்கடன் செலவிற்காக ரூ. 50 வரையில் கருணைக் கொடை வழங்கவும், எழுதுபொருள்–அச்சுத் துறை நெறியாளர் அதிகாரம் பெற்றுள்ளார். உலோகத்தை உருக்கும் பிரிவுகளிலும், தொடர்பான ஏனையப் பிரிவுகளிலும் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் காப்பு முகமூடிகளும் கெட்டித் தோல் காலணிகளும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அரசு அச்சகத் தொழிலாளர்களுக்குத் தமிழ்நாடு குடும்ப ஓய்வூதிய விதிகளின் நலன்களை 1960 ஜூலை 1-ந் தேதி முதற்கொண்டு விரிவுபடுத்தியது குறிப்பிடத்தக்க ஒன்ருகும்.

அரசு அச்சுத்துறையின் எழுதுபொருள் பிரிவு பல்வேறு அச்சுத்துறையின் தேவைகளையும், பல்கலைக் கழகம்போன்ற ஓரளவு அரசுச் சார்புள்ள சில நிறுவனங்களின் தேவைகளையும் செவ்வனே நிறைவேற்றி வருகிறது. இப் பிரிவிலிருந்து 1963–64-ல் ரூ. 91·47 லட்சம் மதிப்புள்ள எழுதுபொருள்கள் வழங்கப்பட்டிருக்க, 1965–66-ல் ரூ. 109·53 லட்சம் மதிப்புள்ள எழுதுபொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

எழுதுபொருள்–அச்சுத்துறையின் வேலை நிர்வாக நிறுவன அன்றுடப் பணியுடன் நீக்கமறப் பின்னிப் பிணைந்துள்ளது. அச்சுத் தொழிலாளர்களின் உளமார்ந்த கூட்டுறவுடன் இந்தத் துறை அனைவருக்கும் மன நிறைவு அளிக்கும் வகையில் திறமையுடன் பணியாற்றும் என்பதில் எனக்கு ஐயப்பாடு எதுவும் இல்லை. இம் மானியக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென இம் மன்றத்தை வேண்டிக் கொள்ளுகிறேன்.

***திரு எ. பாலசுப்ரமணியன் :** தலைவர் அவர்களே, எனது பெயரில் உள்ள வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து நான் பேசும்போது, துர்ப்பாக்கிய வசமாக கசப்பான சில நிலைகளை, கடமை உணர்ச்சியால் தூண்டப்பட்டுத் தான் சொல்லுகிறேன் என்பதை இந்த ஆட்சியில் இருப்பவர்களுக்குச் சொல்லத் தேவையில்லை. டாக்டராக இருக்கும் அமைச்சரவர்கள், இந்தப் பொல்லாத நோய்க்குச் சரியான மருந்து கண்டு நிலைமையைத் திருத்துவார்கள் என்ற நம்பிக்கையில் சொல்லுகிறேன். ஒழுங்கீனங்கள், முறைகேடுகள், குற்றங் குறைகள் ஏராளமாக நடக்கும் இடமாக கவர்ன்மெண்ட் பிரஸ் இருக்கிறது. அந்த நிர்வாகம் இருக்கிறது. தொழிலாளர்களுக்கு விரோத மனோபாவம் கொண்டு செயல்படும் டைரக்டரும் அவரைச் சேர்ந்தவர்களும் நடத்தும் தர்பாரைக் காண்பது எங்கும் அரிதாகும். விவரங்களுக்குப் பின்னுல் வருகிறேன்.

(திரு. பெ. மலைச்சாமி தலைமை.)

பிராந்திய அச்சுக்கூடங்களும், கிளைகளும் ஏற்படுத்தப்பட்டதன் நோக்கத்திற்கு அவை பயன்படுகின்றனவா என்ருல், இல்லை. அங்கே உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு அவை ஆரம்பிக்கப்பட்டன. இன்றைக்கு அவை, சென்னையிலிருந்து வேண்டாதவர்களை ட்ரான்ஸ்பர் செய்து, விரோத மனப்பான்மையுடன் பழி வாங்கும் பணிக்குத்தான் பெரும்பாலும் அவை உபயோகிக்கப்படுகின்றன. திருச்சியில் வைத்ததின் நோக்கம் என்ன, புதுக்கோட்டையில் இருக்கும்போது ? விருத்தாசலத்தில் ஒரு கிளை துவக்கப்பட்டதன் காரணம் என்ன ? இதெல்லாம் பழைய கதை சென்று போன அமைச்சர்களைக் கேட்க வேண்டியவைகள். அங்கேயிருக்கும் நிலைகளைப் பார்த்தால், விவரங்களுக்குப் போனுல், ஒழுங்கீனங்கள், கேடுகள், தவறுகள், விதிமுறைகளுக்கு உட்படாமல், நடைமுறைகள் இருப்பது தெரியவரும். நான் சொல்லும் விஷயங்களை ஆதாரப் பூர்வமாகத்தான், தஸ்தாவேஜுகளோடுதான் சொல்லுகிறேன். பொதுப்படையாகப் பேசிவிட்டுப் போக விரும்பவில்லை. ட்ரான்ஸ்பர் சம்பந்தமாகச் சொல்லும்போது, என்னிடம் ஒரே தேதியில்,

ஒரே நம்பரில் உத்தரவு போடப்பட்டிருக்கிறது. 1967-ம் ஆண்டு மே மாதம் 18-ம் தேதியில் பி. ஆர். 51930/61 என்ற ஆர்டரில் ட்ரான்ஸ்பர் போட்டிருக்கிருர்கள். யாருக்கு "கெளுட் பி கம்ப்ளீட்" என்று சொல்லப்பட்டதோ, அவருடைய பெயர் பட்டியலில் இருக்கிறது. அவர்களுக்கே ட்ரான்ஸ்பர் போடப்பட்டிருக்கிறது. ஒரே தேதி, ஒரே நம்பர். யார் ஒருவர் ஆறு மாதத்திற்கு முன் ட்ரான்ஸ்பர் ஆகி சென்னையில் வேலை பார்க்கிருரோ, அவருக்கு "கெளுட் பி கம்ப்ளீட்" என்று உத்தரவு கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி ஒரு சர்க்கார் அலுவலகத்தில் நடக்குமா ? இதுவும் ஒரு சர்க்கார் துறைதானு என்கிற சந்தேகம் எழுகிறது. எந்த உத்தரவும் இல்லாமல் 40 பேர்களுக்கு மாற்றலாகியிருக்கிறது. "ரிலீவர்ஸ்" இல்லாமல் வேலை பார்க்கிருர்கள். அடுத்து நேரத்தை வீணுக்காமல் சில விவரங்களை மட்டும் குறிப்பிடுகிறேன், வேலை அளிப்பதுபற்றி. "அப்பாயிண்ட்மெண்டுகள்" எவ்வளவு தவருகவும், அலட்சியமாகவும் செய்யப்படுகிறது என்பதற்கு நான் பெயர்களைச் சொல்ல விரும்பவில்லை, அதிகாரிகள் பெயர்களையும், சம்பந்தப்பட்ட ஊழியர்களின் பெயர்களையும் கூறி அவர்களைச் சங்கடங்களுக்கு ஆளாக்க விரும்பவில்லை, ஏற்கெனவே கீழிருந்து "புரொமோஷன்" ஆகிய ஒருவரை வேண்டுமென்று "ரிவர்ட்" செய்துவிட்டு வெள்ளைச்சீட்டின், மூலம் வெளியார் ஒருவரை, 1967-ம் ஆண்டு மே மாதம் 4-ம் தேதியில், வேருெருவரை நியமனம் செய்திருக்கிருர்கள், நரேஷ்குமார் என்று பெயர்.

அடுத்து கேஷுவல் லீவ். 12 நாட்கள் எடுக்கலாம் என்று சட்டம். 23½ நாட்கள் லீவ் எடுத்தவர்கள் இருக்கிருர்கள். 4 மாதத்திலே 23½ நாட்கள் எடுத்தவர்கள். இன்னும் பாக்கி மாதங்களில் 50 நாட்கள்—100 நாட்கள் எடுப்பார்கள், போலிருக்கிறது. 19½ நாட்கள் எடுத்தவர்கள் இருக்கிருர்கள். "ஆப்ஷனல் லீவ்" மூன்று நாட்கள் எடுக்கலாம். ஆனுல் 5 நாட்கள் எடுத்திருக்கிருர்கள். இந்த விவரங்களை "ரிகார்டுகளை சீஸ்" பண்ணினுல் தெரியும். "அப்ஸெண்ட்" போட்டவர்களை "பிரெசண்ட்" போட்டு மேலும் "ஓவர் டைம்" வேலை செய்திருக்கிருர்கள் என்று சம்பளம் கொடுத்திருக்கிருர்கள். 40 நாட்கள் காங்கிரஸ் கட்சிக்குத் தேர்தல் வேலைகள் செய்தவர்கள் முழுச் சம்பளம் பெற்றிருக்கிருர்கள். இவற்றிற்கு ஆதாரங்கள் உண்டு. சலுகை பெற்ற ஒரு சிறு கூட்டம், மேலே இருக்கக்கூடிய உயர்தர அதிகாரியின் சலுகையின்கீழ், அச்சகத்தில் வேலை செய்யாமல் சுற்றிச் சுற்றிக்கொண்டு இருக்கிருர்கள். இதைப் பார்த்த டெபுடி-டைரக்டர் ஒரு சர்க்குலர் போட்டார். அந்த சர்க்குலரில்,

"It has been observed that a lot of employee are going out and wasting their time outside. It is highly irregular. Therefore, Overseers and Gate sergeants are strictly instructed to see that they do not go outside during working hours"

என்று வேலை நேரத்திலே போகக்கூடாதென்று இருக்கிறது. ஆனுல் இதன் பிறகுதான் அதிகம் போகிருர்கள். காரணம் என்னவென்ருல் மேலே உள்ளவர்களின் சலுகையைப் பெற்றிருப்பதால்தான். செக்ரடேரியட் காரியங்களை முடித்துக்கொள்ளும் தொடர்பாகப் பல்வேறு ஒழுங்கீனங்கள் நடக்கின்றன. இவர்களின் ஒரே வேலை டோக்கன் போட்டுவிட்டுப் போய்விடுவது தான்.

அடுத்து ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். "ட்ரெய்னிங் ஸ்கூல்" அதாவது தொழில் பயிற்சி அகம் என்று பெயர். அது மத்திய அரசின் உதவியோடு நடப்பதாகப் பெயர். அதில் தேர்வு பெற்றவர்களுக்கு நற்சான்றிதழ் அளிக்கப்படுகிறது. அங்கு மே மாதம் 26-ஆம் தேதிக்கு மூன்று நாட்களுக்கு முன்னுல் ரூம்கள் திறக்கப்பட்டது. இங்கு பயிற்சி நடக்கவில்லை. நடந்ததாகச் சொல்லி சர்ட்டிபிகேட் வழங்குவதற்கு முதலமைச்சரை ஏற்பாடு செய்து அவரைக் கொண்டு போய் உட்கார வைத்து, அவர் இருந்து வழங்கினுர் என்று திரை மறைவில் அக்கிரமம் நடந்திருக்கிறது. எந்தத் தேதியிலிருந்து பள்ளிக்கூடம் நடந்திருக்கிறது என்று பார்க்க முடியாது. முதலமைச்சரைக் கொண்டு சர்ட்டி

பிகேட் கொடுக்கச் செய்வதால் இப்பொழுது பள்ளிக்கூடம் நடந்ததாக ரிகார்டு. 23-ஆம் தேதி திறந்து விட்டு முதலமைச்சர் யார் தெரியுமா என்று கேட்டு இதற்கு சார்ட்டிபிகேட். இந்த ஏற்பாடும் இங்கே நடந்திருக்கிறது.

நடக்கக்கூடிய இதுபோன்ற ஒழுக்கக்கேடுகள் ஒரு பக்கம் இருக்க ஏராள மாக "வேஸ்டேஜ்"கள் ஆகின்றன. பல இயந்திரங்கள் சும்மா கிடக்கின்றன. இவற்றைப் பற்றி விசாரித்தால் போதும்.

1. German Hydelburg '167'—80 ரீம்கள் ஒரு நாளைக்கு அச்சிடக் கூடியது. பல வருஷங்களாகச் சும்மா கிடக்கிறது.

2. German Polygraph—ஒன்றரை வருஷங்களாகச் சும்மா கிடக்கிறது.

3. German Victoria Front—புதிதாக வாங்கி சும்மா கிடக்கிறது.

4. Six German Polygraph machines—துருப்பிடித்து மவுண்ட் ரோடில் இருக்கிறது.

5. Lino, Mono, Cutting machines—சும்மா வைக்கப்பட்டிருக் கிறது.

6. Form-folding machine (German Polygraph) மிண்டிலிருந்து மவுண்ட் ரோடிற்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறது. இதனால் 6 பேர் செய்யும் வேலை 32 பேர்களால் செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான ரூபாய் வீணாகிறது.

7. Hand-feeding German Polygraph folding machine–ஐந்து மாதமாகச் சும்மா வைக்கப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் வைத்துக்கொண்டு வெளியே ஆர்டர் கொடுப்பது. இதையெல்லாம் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மத்திய சிறையிலே அச்சகம் இருக்கிறது. அதிலிருந்து பிளேட் தயார் செய்து திருச்சிக்கு அனுப்பி, அங்கிருந்து ஈச்சம்பாய் கட்டித் திருப்பி சென்னைக் குக் கொண்டுவரப்பட்டு, அதற்குப் பிற்பாடு ஜில்லாக்களுக்கு அனுப்பப்படு கிறது. இதனால் "டூப்ளிகேட் ஒர்க்" ஆகிறது. சிறையிலே வேலை குறைந் துள்ளது. முன்பு 2 லட்சம் $2\frac{1}{4}$ லட்சம் என்றிருந்தது இப்போது $1\frac{1}{4}$ லட்சத் தில் நிற்கிறது.

பலவிதமான தவறுகளுக்கு, ஒழுங்கீனங்களுக்குச் சில உதாரணங்கள்:— பில்கள் (Bills) நூற்றுக்கணக்கான ரீம்கள் அச்சடிக்கப்பட்டுக் குப்பையிலே போடப்பட்டிருக்கிறது பைண்டிங் டிபார்ட்மெண்டிலே. பிரிண்டிங் ஆர்டர் 20 பவுண்ட் என்றால் அதை 16 பவுண்டில் அடித்து 20 பவுண்ட் என்று எழுதுவதாகக் குற்றச்சாட்டிருக்கிறது. ரோடரி ரோலரில் அடித்து மெஷி னில் அடித்ததாகக் கணக்கு எழுதுவதாகக் குற்றச்சாட்டுள்ளது. கழிவுக் காகிதங்களை ஒரே கம்பெனிக்கு மூன்று ஆண்டுகளுக்கு அதிக விலை தருவ தாகக் கூறிக் கொடுப்பது. ஆனால், 100 டன்னுக்குப் பதிலாக ஏராளமாக, 200, 250 டன் கொடுப்பது. அடுத்தது "காப்பர் ஒயர்". பல கெஜங்கள் நீளமுள்ள செப்புக் கம்பிகள் சொந்த உபயோகத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகப் புகார் இருக்கிறது. அடுத்தபடியாக "டெக்ஸ்ட் புக்" ஆர்டரைக் காட்டிலும் அதிகமாகத் தயார் செய்து பல ரூபங்களில் வெளியேற்றுவதாகப் புகார் இருக்கிறது. இதையெல்லாம் பரிசீலித்து தீர்க்கமாக, உடனடியாக விசாரணைகள் செய்யாவிட்டால் இவற்றை நாம் சரிக்கட்ட முடியாது. இன்னும் எத்தனையோ ஒழுக்கக் கேடுகள் இருக் கின்றன. இவற்றையெல்லாம் சொல்லி நேரத்தை எடுத்துக்கொண்டு மற்றவர்கள் நேரத்தைக் குறைக்க விரும்பவில்லை. இன்னும் ஓரிரு விஷ யங்களைமட்டும் இந்தச் சபைக்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதற்கு முன்பிருந்த டெபுடி டைரக்டர் தடாகநாதன், இப்பொழுது டெபுடி டைரக்

டராக இருக்கும் ஜெயபாண்டியன் ஆகியவர்களை இது சம்பந்தமாக விவரங்களைக் கேட்டால் உண்மைகளை உண்மைகளாகச் சொல்வதாகத் தகவல்கள் இருக்கின்றன. இந்த முறைகளைத் தீவிரமாக ஆராயாவிட்டால், பொதுத் துறையைத் தாக்குவதற்கு, சுதந்திராக் கட்சியினர் தாக்குவதற்கு ஊக்கம் அளிக்கும். பொதுத் துறையில் இதைவிடக்கேவலமான நிலைமை நம் ராஜ்யத்தில் இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. இன்னும் ஏராளமாகத் தகவல்கள் இருக்கின்றன. இதையெல்லாம் முதலமைச்சர வர்களிடத்தில் சொல்லிவிட முயற்சித்தேன். ஆனால் சொல்ல முடியாமல் போய்விட்டது. அவர்களைப் பார்க்க முடியவில்லை என்று இல்லை. சொல்ல முடியாமல் போய்விட்டது. இவ்வாறு இருப்பதால் சர்க்காருக்குப் பெரிய நஷ்டம். ஆளுங் கட்சிக்குப் பெரிய கெட்ட பெயர். பொதுத் துறை வளர வேண்டுமென்பதற்குப் பெரிய ஆபத்து.

ப்ரிண்டிங் அண்டு ஸ்டேஷனரி என்று இரண்டும் சேர்ந்திருக்கிறது. "ஸ்டேஷனரி" என்பது அங்கே இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அதைப்பற்றிப் பல நிபுணர்களுடைய கருத்து இருக்கிறது. 90 லட்ச ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாய் வரை செலவுக் கணக்கு வருகிறது. எழுபது லட்ச ரூபாய் பேப்பருக்குச் செலவாகிறது. பேப்பரை பிரெஸ்ஸோடு சேர்த்து விடலாம். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். பாக்கி பென்சில், காலிக்கோ, மை முதலியவைகளை அந்தந்த டிபார்ட்மெண்டில் இருக்கக் கூடியவர்களே வாங்கிக் கொள்ளலாம். எல்லாவற்றையும், "மினியேச்சர் செக்ரெடேரியட்" போல் அங்கே வைத்திருக்க வேண்டியதில்லை. செக்ரெ டேரியட்டில் இருக்கக்கூடிய சிலர் உத்தியோக உயர்வு பெறுவதற்காக ஏற்பட்டிருப்பதாக அச்சகத்தில் இருப்பவர்கள் கருதுகிறார்கள். அங்கே பல காலம் வேலை பார்த்துப் பயிற்சி பெற்றிருக்கக்கூடியவர்களுக்கு ப்ரொ மோஷனுக்கு இடம் இல்லை. கொல்லைப்புற வாசலைத் திறந்து வைத்திருப் பதுபோல், செக்ரெடேரியட்டில் இருப்பவர்களுக்குச் சாதகமான நிலையில் இப்படி வைத்திருக்கிறார்கள். இது சிக்கனத்திற்கு நல்லதல்ல. ஆகவே, எந்த எந்த டிபார்ட்மெண்டுக்கு எவ்வளவு தேவையோ அதை அவரவர் களே வாங்கிக் கொள்ளட்டும். இப்பொழுது அந்த நிலை இல்லாமல், ஒவ்வொன்றுக்கும் ஸ்டேஷனரி ஆபீசையே கேட்டுக் கேட்டு, வாங்க வேண்டிய நிலையில் ஏராளமான விரயம் இருக்கிறது. ஸ்டோரேஜில் அநியாயமான நஷ்டம் ஏற்படுகிறது. பல இயந்திரங்கள், பல டைப் ரைட்டர்கள் கெட்டுப்போகக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படி ஏராள மான வேஸ்டேஜ் இருக்கிறது. இதைப் போக்க உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்.

இதனுடைய நிர்வாகம் நன்றாக இல்லை என்பதற்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். 1965–66-ம் ஆண்டுக்கான அட்மினிஸ்ட்ரேஷன் ரிப்போர்ட் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலேயே வந்திருக்கவேண்டும். அது இன்னும் வரவில்லை. அதையும் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.

ஸேல்ஸ் ஆப்சர் பதவி இரண்டு வருஷங்களாகக் காலியாக இருக்கிறது. இன்னும் ஒருவரும் நியமிக்கப்படவில்லை.

இவற்றையெல்லாம் சாங்கோபாங்கமாக விசாரிக்கவேண்டும். அப்படி விசாரணை செய்யும்போது, இன்றுள்ள தலைமை அதிகாரியை நீக்கிவிட்டுத் தான் விசாரிக்க வேண்டும். எந்த ஊழியரும் பழி வாங்கப்படமாட்டார் என்ற உறுதி அளித்து விசாரித்தால், ஆதாரங்களோடு மிக நல்ல உண்மை யான பல விவரங்கள் கிடைக்கும். இதைத் திருத்தியமைப்பதற்கும் வழி பிறக்கும். ஏற்கனவே இருந்த நிலையை அப்படியே விட்டுவிட்டால் நமக்குக் கெட்ட பெயர் ஏற்படும். அந்தக் கெட்ட பெயர் புதிய ஆட்சிக்கு ஏற்படக்கூடாது. அதைத் தடுக்கவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு இதைத் தெரிவிக்கின்றேன். எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் மிகவும் நம்பிக்கைக்கு உகந்தவர்களிடமிருந்து கிடைத்த தகவல்களாகும். குறிப் பாக, இந்த அரசுக்கு மிகவும் நம்பிக்கை வாய்ந்த ஊழியர்களிடமிருந்து வந்திருக்கக்கூடிய தகவல்கள். அவற்றைக் கௌரவமாகக் கவனிக்க

வேண்டும். அலட்சியமாகக் கருதிவிடக்கூடாது. மேலதிகாரிகள் சொல்லுவதை வைத்துக்கொண்டு முடிவு செய்துவிடக்கூடாது. ஊழியர்களையும் நேரடியாகக் கலந்து விசாரிக்க வேண்டும். விசாரணைக் குழு ஏற்படுத்தி, விசாரணை நடக்கும் நேரத்தில், மேல் அதிகாரியை அந்தப் பொறுப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும். அவர் உத்தியோகத்திலேயே இருக்கக்கூடாது என்று நான் சொல்லவில்லை; வேறு எங்காவது அவர் வேலை பார்க்கட்டும். அதே இடத்தில் அவர் இருந்தால், விசாரணை முறையாக நடக்காமல் தடுக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடக்கூடும். மிரட்டக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடக் கூடும். ஆகவே, அத்தகைய வாய்ப்பு அளிக்காமல் விசாரிக்க வேண்டும்.

இரண்டு பேர் எக்ஸ்டென்ஷன் கேட்க, ஒரு ஓர்க்ஸ் மானேஜருக்கு எக்ஸ்டென்ஷன் கிடைத்திருக்கிறது. ஒருவருக்குக் கொடுக்காமல் மற்றவருக்குக் கொடுக்கும்போது, வயிற்றெரிச்சல், தகராறு எல்லாம் ஏற்படுகிறது. எக்ஸ்டென்ஷன் கொடுக்கும் ப்ரின்ஸிபிளையே நான் "அப்போஸ்" பண்ணுகிறவன். யாருக்கும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். ஒருவருக்கு எக்ஸ்டென்ஷன் கொடுப்பதென்றால், அத்தகைய திறமையானவர் வேறு யாருமே இல்லையா ? அப்படி என்ன அத்தியாவசியம் இருக்க முடியும். எக்ஸ்டென்ஷன் கொடுக்கப்பட்டவர்கள் எல்லோருமே திறமையானவர்கள் என்றும் சொல்லிவிடுவதற்கில்லை. ஒரு ஓர்க்ஸ் மானேஜர் போனால், அந்த வேலையை இன்னொருவர் பார்க்கலாம். எக்ஸ்டென்ஷன் யாருக்கும் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். உண்மையிலேயே ஒழுங்கானவர்களுக்கு எக்ஸ்டென்ஷன் கிடைக்கவில்லை. மற்றவர்களுக்குக் கிடைத்திருக்கிறது என்று தொழிலாளர் மத்தியில் அபிப்பிராயம் நிலவுகிறது என்பதையும் கணக்கில் கொள்ளவேண்டும். நான் தொழிற்சங்கவாதி தொழிற்சங்கத்திலே நிர்வாகப் பொறுப்பிலே இருக்கிறவன், தொழிற்சங்கங்களை நடத்துகிறவன் என்ற முறையில், மிகவும் பொறுப்புணர்ச்சியோடு, மிகவும் வேதனையோடு இந்த விவரங்களை இங்கே சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதிலே வேறு ஒரு நோக்கமும் எனக்கு இல்லை. நான் கோரக் கூடிய விசாரணைக் குழுவைக் கட்டாயம் அமைக்கவேண்டும் என்றுள்ள என்னுடைய வெட்டுப் பிரேரணையை வலியுறுத்தி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

***திரு. எம். ஆர். கண்ணன் :** கனம் தலைவர் அவர்களே, இந்த எழுது பொருள்-அச்சுத் துறை குறித்த மானியக் கோரிக்கையை ஆதரித்து, அதன்மீது என்னுடைய சில கருத்துக்களை இங்கே கூற விழைகின்றேன்.

எனக்குமுன் பேசிய கனம் உறுப்பினர் அவர்களுடைய குற்றச்சாட்டுக்களை நான் முழு மனதுடன் ஏற்றுக்கொள்கிறேன். அவர் சொன்னது அவ்வளவும் உண்மை என்பது எனக்கும் தெரியும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆகவே, அந்த நிர்வாகத்தின்மீது நல்ல முறையில் அமைச்சர் அவர்களுடைய கருத்து செல்லவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல; பல ஆண்டுகாலமாகவே இருந்து வருகின்றன. இப்பொழுதுதான் எங்களுக்குத் தெரிய வருகின்றனவே தவிர, அவை ஏற்கெனவே பல ஆண்டுக் காலமாக இருந்து வந்திருக்கின்றன, இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு அவை ஏற்பட்டவை அல்ல. இதற்கு முன்பே இருக்கக்கூடிய குற்றச்சாட்டுகள் தான். ஆனால், அவை தொடர்ந்து இப்பொழுது இருக்கின்றன என்ற கருத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, இவையெல்லாம் நீக்கப்படவேண்டும்.

கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பொதுத் துறை என்றாலே மக்களுக்கு ஒரு அருவருப்பு ஏற்படக்கூடிய நிலையைப் பொதுத் துறையில், சர்க்கார்த் துறையில் இருக்கக்கூடிய சில நிறுவனங்களில் நாம் பார்க்கிறோம். எடுத்துக்காட்டாக, மாதவரம் பால் பண்ணையைச் சொல்லலாம். இப்படி எத்தனையோ எடுத்துக்காட்டுகள் சொல்லலாம். இப்படி

யெல்லாம் இருப்பதால்தான், சுதந்திராக் கட்சிக்காரர்கள், பொதுத் துறையைத் தாக்கிப் பேசக்கூடிய நிலை ஏற்படுகிறது. சர்க்கார் உடைமை என்றால், அது மக்களுடைய உடைமை என்ற நோக்கு எல்லோருக்கும் ஏற்படவேண்டும். நாம் எவ்வளவுதான் அதிகாரிகளிடம் பன்னிப் பன்னி, மிகத் தெளிவாக, விளக்கமாக எடுத்துச் சொன்னாலும், முதல் அமைச்சர் அவர்கள் எவ்வளவுதான் வேண்டுகோள் விடுத்தாலுங்கூட, இன்னும் அதிகார வர்க்கத்தினரில் பலர் நல்ல முறையில் அவர்களுடைய நிலையை ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

கவர்ன்மெண்ட் பிரஸ் ஒர்க்கர்ஸ் க்வார்ட்டஸைப் பார்த்தால், அவை நல்ல முறையில் மெயின்டனன்ஸ் செய்யப்படாமலிருக்கின்றன. ஆனால், அதையடுத்துள்ள போர்ட் ட்ரஸ்ட் க்வார்ட்டர்ஸ் நல்ல முறையில் பாரமரிக்கப்படுகிறது. இப்படி ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் நான் சொல்ல முடியும். உத்தியோகஸ்தர்களில் நல்ல முறையில் வேலை செய்யவேண்டும் என்பதை உணர்ந்து வேலை செய்கிறவர்களும் இருக்கிறார்கள். ஆனால், சர்க்கார் வேலையில் வைத்துக் கொள்ளுவதிலேகூட பாரபட்சம் காட்டுவதாக நான் நினைக்கவில்லையென்றாலும், சிலர் உத்தியோகம் புருஷ லட்சணம் என்ற நிலையில் வேலை செய்வதாகத் தங்களைத் தாங்கள் கருதிக்கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு ஏதோ வசதிகள் இருப்பதுபோலவும், பொழுது போக்குக்காக வேலைக்கு வருவதுபோலவும் சில உத்தியோகஸ்தர்கள் நினைக்கிறார்கள். அவர்களைப்பற்றிப் பிற உத்தியோகஸ்தர்கள்கூட அப்படியே சொல்லுகிறார்கள். அவருக்கு என்ன குறைவு, மதிப்புக்காக உத்தியோகத்திற்கு வந்திருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். யார் யாருக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டும் என்று ஒரு சட்டதிட்டத்தை வகுக்காவிட்டாலுங்கூட, நல்ல முறையில் இன்வெஸ்டிகேட் செய்து, யாருக்கு வேலை கொடுத்தால் நல்ல முறையில் சர்க்காரோடு ஒத்துழைப்பார்கள் என்ற நிலையை ஏற்படுத்தினாலுங்கூட, ஆட்சிக்கும் மக்களுக்கும் நல்லதாக அமையும் என்றுகூட நான் நினைக்கிறேன்.

அச்சகங்களையும், கல்லூரிகளையும் வைக்கும்போது, சில பேர்களுக்கு வேண்டிய அளவில் அந்தந்த இடங்களில் ஏற்படுத்துவது என்ற முறை இருந்திருக்கிறது. விருத்தாசலம், மற்ற மற்ற இடங்களில், அந்தந்த எம்.எல்.ஏ.க்களின் இன்ஃப்ளுவன்ஸைக்கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அது அவசியம் தேவைதானா என்றுகூட அரசு கவனிக்க வேண்டியிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், அங்கே பல கல்லூரிகள் வருகின்றன. சென்னையிலிருந்து திண்டிவனம், விழுப்புரம் வரையில் சென்றால், வழியில் ஒரு கல்லூரிகூடக் கிடையாது. விருத்தாசலம் போன்ற சில இடங்களில் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் அதிக மக்கள் கிடையாது. சில இடங்களில் கல்லூரி கிடையாது. ஆனால், மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். இப்படியெல்லாம் இதற்கு முன்பிருந்த ஆட்சி, தனிப்பட்டவர்களுடைய இன்ஃப்ளுவன்ஸை வைத்து, யார் யாருக்கு எந்த எந்தத் தொகுதிக்கு வேண்டுமோ அப்படிச் சில விஷயங்களை ஏற்படுத்தி, அதனால், மொத்தமாகத் தமிழக மாநிலத்திற்கு ஒரு தவறான நிலையை ஏற்படுத்திவிட்டார்கள். இப்பொழுது வந்துள்ள ஆட்சி, அப்படி ஏற்படுத்தாது என்பதை நாமெல்லோரும் நிச்சயமாக உணருகிறோம். எங்கெங்கு எது அவசியமோ அதை உத்தேசித்துச் செய்ய வேண்டும். அந்த நிலை நிச்சயமாக ஏற்படும். விருத்தாசலம், திருச்சி, சேலம் ஆகிய இடங்களில் உள்ள அச்சகங்களில் இருப்பவர்கள் இங்கிருந்து பழி வாங்கப்பட்டவர்கள். அங்கே அவர்கள் அறுபது ரூபாய்தான் சம்பளம் வாங்குகிறார்கள். சென்னையிலுள்ள அச்சகத்தில் இரண்டு ஷிப்டுகள் பார்த்தால் அவர்களுக்கு அதிகமாகச் சம்பளம் கிடைக்கும். மாதம் 150 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரையிலும் கூட சென்னையில் இருந்தால் வாங்க முடியும். வெளியிலே வேலை பார்க்கும்போது மாதம்

அறுபது ரூபாய்தான் வாங்குகிறார்கள். அவர்களுடைய பெற்றோர்கள் சென்னையில் இருக்கும் நிலையில், அவர்கள் மிக மிக வேதனைக்குள்ளாகிறார்கள். ஒவ்வொரு நாளும் என்னிடம் வரும் மனுக்களைப் பார்த்தால், அவை வேதனை தரக்கூடியனவாக இருக்கும். அவர்களையெல்லாம் உடனடியாகத் திரும்ப சென்னைக்கு அழைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகளிடம் கேட்டிருக்கிறேன். நமது அமைச்சர் அவர்களுடைய கொள்கைகூட அதுதான் என்று நினைக்கிறேன். வெளியூர்களில் இருப்பவர்களை உள்ளூருக்கு அழைத்துக்கொண்டு, அந்தந்த வட்டாரத்தில் உள்ளவர்களை அங்கங்கு வேலைக்கு அமர்த்திக்கொண்டால் நல்ல முறையில் இருக்கும். அதே எண்ணம்தான் இந்த ஆட்சிக்கும் உள்ளது என்று நான் கருதுகிறேன். இத்தகைய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

ட்ரான்ஸ்பர் விஷயங்களில் பார்த்தால், வேண்டியவர்களுக்கு ட்ரான்ஸ்பர் அளிக்கப்படுவதும், வேண்டாதவர்களுக்குக், கொஞ்சம் நியாயமான முறையில் கேட்டாலும், மறுக்கப்படுவதுமான நிலைதான் முன்பு இருந்த ஆட்சியில் இருந்தது. இந்த ஆட்சி, ட்ரான்ஸ்பர் விஷயத்திலும் ப்ரமோஷன் விஷயத்திலும் நியாயமாக இருக்க வேண்டும். எக்ஸ்டென்ஷன் என்றால், எல்லோருக்கும் கொடுக்க வேண்டும். சில பேருக்குப் பென்ஷனைப் பாதிக்கக்கூடிய நிலை இருக்கும். ஸ்பெஷல் கேஸ் ஆகக் கவனித்து, அவருக்கு முழுப் பென்ஷன் கிடைக்கும் அளவிற்குச் செய்யலாம். அது மனிதாபிமான உணர்வோடு கவனிக்கப்படவேண்டும். ஒருவருக்கு ஒன்று செய்தால் அதை எல்லோருக்கும் கொடுக்கவேண்டும். அப்பாயிண்ட்மெண்ட் செய்யும்போது க்வாலிபிகேஷன் என்ன என்ன என்று நிர்ணயித்து அப்பாயின்ட்மெண்ட் செய்துகொள்ளவேண்டும். நடுவில் சிலருக்கு ப்ரமோஷன் மறுக்கப்பட்டால், ஏதோ சில வேண்டியவர்களுக்கு அதிகப்படியான அறிவு இருப்பது போலவும், வேண்டாதவர்ளுக்கு அறிவு இல்லாததுபோலவும் கருத இடமளிக்கிறது. நிச்சயமாக இந்த சர்க்கார் அத்தகைய பழைய நிலைகளை ஒழிக்கவேண்டும். வேலைக்கு ஆட்களை நியமிக்கும்போது, தகுதிகளை வரையறுத்துக் கொண்டு, நியமித்துவிட்டு, ப்ரமோஷன் கொடுப்பதில் "அக்கார்டிங்டு ஸீனியாரிடி" தான் முக்கியமாகக் கருதப்படவேண்டும். நடுவில் சிலரை விட்டுவிடுவது என்றால், அது வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டுவதாக ஆகுமே தவிர, நியாயம் வழங்குவதாக இருக்காது. இந்தச் நிலை பல இடங்களில் இருக்கிறது. பொதுவாக, போலீஸ் நிர்வாகத்தைப் பார்த்தால், ஒரு கான்ஸ்டேபிள், ஹெட்கான்ஸ்டேபிளாக வரக்கூட ஸீனியாரிட்டி முறை அனுசரிக்கப்படாமல் இருக்கிறது. 15, 20 வருஷம் கான்ஸ்டேபிளாக வேலை செய்த ஒருவருக்கு ப்ரமோஷன் கொடுக்காமல் ஒரு சிலருக்கு ப்ரமோஷன் கொடுக்கும்போது, சிலருக்கு அதிகப்படியான அறிவும் திறமையும் திடீரென்று வந்துவிட்டதுபோல் தோன்றுகிறது. இந்தப் பழைய நிலைமைகளெல்லாம் இந்த ஆட்சியில் ஒழிக்கப்படவேண்டும். இருபது வருஷம் லாயக்காக இருந்தவர்கள், திடீரென்று லாயக்கில்லாமல் போய்விட முடியுமா? இந்த நிலை மாறவேண்டும். சர்க்காருடைய பஸ் - ட்ரான்ஸ்போர்ட், ப்ரெஸ் போன்ற நிறுவனங்களிலெல்லாம் இத்தகைய நியாயமான முறைகளைக் கைக்கொள்ளுவதன் மூலம், அவை நல்ல முறையில் செயல்பட்டு, மக்களுக்குப் பயன்பட்டு, அதன்மூலம் மக்களுடைய வரிப் பளுவும் ஓரளவுக்குக் குறைய வாய்ப்பு ஏற்படும். அந்த வாய்ப்பு ஏற்படப் பொதுத்துறை நல்ல முறையில் விளங்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன். குறிப்பாக இன்னொன்றையும் என்னுடைய தனி எண்ணமாகத்
ரூ.ப. தெரிவித்துக் கொள்ளுகிறேன். இத்தகையப் பொது நிறுவனங்கள்
11-30 எல்லாம் நம்முடைய தொழிற் சங்கத் தலைவர்களை ஆலோசனையாளர்களாகவோ, அங்கிருந்து பணியாற்றக்கூடியவர்களாகவோ ஏற்றுக் கொள்ளவேண்டும். தொழிலாளரை இந்த அரசு எந்தவகையிலும் இம்சிக்காது. இந்த ஆட்சி தொழிலாளர் ஆட்சி, அப்படியிருந்தும்

கூட, ஒரு சில தொழிற்சாலைகளில் ஸ்டிரைக் ஏற்படுகிறது. தொழிலாளர்கள் பழி வாங்கப்படுகின்றனர். இவை எல்லாம் வேறு சில தொழிற் சங்கத் தலைவர்களின் வேண்டாத பிரச்சினையால் ஏற்படுகின்றன. தொழிற்சங்கத் தலைவர்களையே நிர்வா[illegible] தான் தொழில் நல்ல முறையில் நடத்த முடியும். அப்படி [illegible] சில எக்ஸ்பர்ட்டுகள் நடந்து கொள்ளுகிறார்கள். பொதுத் துறையில், மாதவரம் பால்பண்ணை இப்பொழுது நஷ்டத்தில் நடந்து வருகிறது. அதை அப்படி விட்டுவைக்கக்கூடாது. அதைத் தடுக்க அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு அதை நடத்த வேண்டும். அதேபோல் வெட்டர்னரி துறையிலும் நல்ல டாக்டர்களைப் போடவேண்டும். சில அதிகாரிகள் அறிக்கை விடுகிறார்களே தவிர, அதை நடை முறைக்குக் கொண்டு வருவதில்லை, ஆகவே, அரசு அனுபவபூர்வமான நிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கூறி, என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய சபைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைமீது சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். முதல் முதலாக அமைச்சர் அவர்களை நான் உங்கள் மூலமாகப் பணிவுடன் கேட்பதெல்லாம் ஒரே ஒரு வேண்டுகோள்தான். இப்போது இருக்கிற எழுதுபொருள் அச்சுத்துறை டைரக்டர் அவர்களை மாற்றியமைக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த அவையிலே யாராவது ஒருவர் முன்னுக்கு வந்து, இந்த இலாகா நல்லபடியாகச் செயலாற்றுகிறது என்று சொல்லும் வாய்ப்பே இந்த அவைக்குக் கிடைக்காது என்பது என் கருத்து. இப்போதுள்ள டைரக்டர் அவர்கள் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முகமே எனக்குத் தெரியாது. ஊழலுக்கு ஒரு இலாகா—ஊழல்கள் நிறைந்த இலாகா என்று போட்டிக்கு வந்து நின்றால், இந்த இலாகாவுக்குத்தான் "ஃபர்ஸ்ட் ப்ரைஸ்"— முதல் பிரைஸ் கிடைக்கும். அவ்வளவு ஊழல்கள் இங்கே நிறைந்திருக்கின்றன. இன்று. ஆளும் கட்சியாக இருப்பவர்கள் முன்பு எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்துகொண்டு, இந்தக் குற்றச் சாட்டுகளை ஏராளமாக இந்த அவையிலே சாட்டியிருக்கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் ஓரளவுக்குக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். எந்த வகையிலே இதைச் செய்வது என்று எண்ணுகிறார்கள்போல் இருக்கிறது. இந்த இலாகா இந்த அமைச்சர் அவர்களின் கையால்தான் சீரடைய வேண்டும். ஊழல் என்றால் சொல்ல முடியாத ஊழல். ஒரு தொழிலாளியாவது சிரித்துக்கொண்டு வந்து பேசியதில்லை. என்னிடத்தில் ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒரு ஃபைல் இருக்கிறது. அதிலே பார்த்தால் இந்த இலாகா ஃபைல்தான் பெரியதாக இருக்கிறது. ஊழல் என்றால் இவ்வளவு அவ்வளவு அல்ல. பல ஊழல்கள் இருக்கின்றன. இந்த அவையை மதித்து நான் அவற்றை சொல்ல மாட்டேன்.

அந்த இலாகாவிலே ஒரு தொழிற்சங்கமும் இருக்கிறது. இப்போதிருக்கிற டைரக்டர் அவர்கள் அந்தத் தொழிற்சங்கத்தை மதிப்பதே இல்லை. ஏதோ ஒரு அலட்சியமாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உலகத்திலே எந்த இலாகாவை எடுத்துக் கொண்டாலும்—ஒரு கம்பெனியை எடுத்துக் கொண்டாலும் தொழிற் சங்கத் தலைவர் என்னென்ன கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்— என்னென்ன குறைகளைச் சொல்லுகிறார்கள்— அவற்றை எவ்வாறு ஆராய்ந்து பரிகாரம் தேடுவது என்ற நிலைதான் இருக்கிறது. ஆனால் இந்த டைரக்டர் அவர்கள் தொழிற்சங்கத் தலைவர் எடுத்துச் சொல்லுகிற காரியங்களுக்குப் பரிகாரம் தேடுவதில்லை.

அடுத்தபடியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஜூன் மாதம் 18-ம் தேதி 4 மணிக்கு ஒரு டிரான்ஸ்பார்மர் . . . .

'A Transformer in the Power House of the Government Press went out of order and no proper action has so far been taken to repair the same and put in order .

இந்தத் தகவல் எனக்குக் கிடைத்து நான்கைந்து நாட்கள் ஆகி விட்டன. இதுவரை சரிப்படுத்தப்படவில்லை.

'Because of this breakdown, restrictions for the use of lights fans ; etc., have been imposed, without adequate lighting the Press workers are not able to perform their duties properly.'

அங்கே சரியான விளக்கு வசதியில்லாத காரணத்தால், அங்கே இருக்கிற தொழிலாளிகள் வேலை செய்ய முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். இந்த இலாகா டைரக்டரை—தலைவரை வைத்துக் கொண்டு, நாம் எதாவது ஒரு கமிட்டியை உருவாக்க முயற்சி எடுத்துக் கொண்டால் அது வெற்றிகரமாக முடியாது. அந்த லாகா தலைவரே கமிட்டிக்கு நேர்விரோதமாக வேலை செய்யக்கூடிய லைமை உருவாகலாம். இவரை இன்னொரு இலாகாவுக்கு மாற்றிவிட்டு, ஒரு சிறு கமிட்டியை—நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இதைப்பற்றி விளக்கமாகச் சொன்னார்கள், நண்பர் எம். ஆர். கண்ணன் அவர்களும் கூறினார்கள். பல எம்.எல்.ஏ.க்களுக்கும் இந்தப் புகார்கள் எல்லாம் வந்திருக்கின்றன—ஏற்படுத்தவேண்டும். அந்தக் கமிட்டி அதை நியாயமான முறையில் விசாரிக்க வேண்டும்.

இந்த இலாகாவிலிருந்து விருத்தாசலத்திற்குப் பலர் டிரான்ஸ்ஃபர் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலும் பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. இது ஒரு பெரிய நோய்—சாதாரண நோயல்ல—இதற்கு ஆபரேஷன் சிகிச்சையை அமைச்சர் அவர்கள் செய்தால் நல்லது என்று கருதுகிறேன்.

'On the formation of Regional Presses at Tiruchirappalli, Virudachalam and Salem, men from all categories were transferred without any notice in advance.'

திடீரென்று நோட்டீஸே கொடுக்காமல் ஒருவரை டிரான்ஸ்ஃபர் செய்தால், அவர் என்ன பெரிய அளவுக்குச் சம்பளம் வாங்கக் கூடியவரா ? ரூ 100—150, என்று சம்பளத்தை வாங்கிக் குடும்பத்தை நடத்துபவர்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தை இங்கேயே விட்டுவிட்டு வெளியூர் போகவேண்டும். அங்கே வீடும் கிடைப்பதில்லை. நோட்டீஸ் கொடுக்காமலே வேலை நிறுத்தம், இந்த டுவென்டியெத் செஞ்சுரியிலே கூட நடக்கிறது . , . . . , .

'With a view to affording relief to the pressure of work in the Government Press, Madras, the Director of Stationery and Printing, Madras, had suggested to the Government of Madras, for opening Regional Presses at Tiruchy, Salem and Vridhachalam—vide G.O. Ms. No. 3216 P.W. dated 11th December 1964 and the Government have issued orders accepting the suggestion of the Director without going into the details whether the scheme would not cause extra expenditure, inconvenience.... '

இது 1964-ம் ஆண்டிலே 11—12—1964-ல் கொடுக்கப்பட்ட உத்தரவு. அது மாத்திரமல்ல.

'to the workers to leave Madras City and go to Tiruchy, Salem and Vridhachalam, dislocate the printing work already being done at the Government Press, Madras, etc.'

'There are many grievances in the Mechanical Department under the control of the Electrical and Mechanical Engineer in the Government Press, Madras. Promotions are being made without applying the strict rule of seniority allotment of work is made on favouritism, transfers are being made on prejudice, etc. Creation of the two posts of Electrical Foreman and Mechanical Foreman for the Text Book Work, at the Government Branch Press, Mount Road, Madras, keeping only the Mechanical Foreman, Sri B. R. Kesavalu at this Branch Press retaining the Electrical Foreman, Sri G. A. Chennakesavalu at the Central Press, Madras, was spoken to be irregular practice in the administration . . . .'

இப்படி ஊழல்கள் நிறைந்திருக்கிற இலாக்காவாக இருப்பதால், நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னபடி—அவரும் நானும் மற்ற வகைகளில் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் இந்த ஒரு விஷயத்தில் முழுக்க முழுக்க—100 பர்செண்ட்—இருவரும் ஒத்திருக்கிறோம். ஒரு கமிட்டியை போட்டு, அதுவும் இம்மீடியெட்டாகப் போட்டு யாருக்கும் பயப்படாமல் இருப்பவர்களை இந்தக் கமிட்டியில் போட்டு, ஃபர்ஸ்ட் ஸ்டெப்பாக இப்போதிருக்கிற டைரெக்டர் அவர்களை அருள் கூர்ந்து விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன்.

*DR. HABIBULLA BAIG: Mr. Chairman, Sir, I rise to support the Demands asked for by the Hon. Minister for Harijan Welfare with regard to Stationery and Printing. Sir, while supporting the Demands, I have to say that the Government Press is the best and the biggest printing Press in the East and we have to appreciate that. But so far as the administration of this biggest printing press of the Government, employing 4,000 employees is concerned, it is not proper. I request the Hon. Minister in charge of Printing and Stationery to tone up the administration. As my hon. friend, Dr. Hande, has pointed out there is a lot of mal-administration and corruption rampant there. I am also told that the persons who are working there are taking tokens and then going out. Some of the employees of the Government Press are also doing some business or petty jobs outside and this must be enquired into and the Government should find out how many of those are doing this sort of work. Similarly, most of the persons working in the night shift are also taking their tokens and are sleeping in their houses. Unless this state of affairs is changed, I am afraid the Government Press will not properly work. Now, there are about, 4,000 workers working in two shifts. Apart from them, extra men are employed for doing extra work and for that work extra wages are paid. Instead of employing extra men, they can employ some more men by having a third shift. Now, by paying extra wages, they are incurring more expenditure but the work turned out is not proper. Apart from that, Sir, I am told that the waste paper is given to the private firm the Gemini Waste Paper Company. The Company people come there and take the waste paper. Under the guise of taking one ton, they take away three tons. They are taking away only the waste

paper that is useful. They are not at all taking the other waste paper and this waste paper has accumulated too much, nearly 350 tons. This sort of thing should be completely stopped. I request the Hon. Minister to see that this sort of corruption, mis-management and malpractice is stopped. Thank you, Sir.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது எழுது பொருள் அச்சக மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு உறுப்பினர்கள் மிகுந்த அக்கறை காட்டி இருப்பதற்கு எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த அச்சகத்தில் பல ஒழுங்கீனங்களும், பல குறைபாடுகளும் நடைபெற்றுக்கொண்டு வருவதாக நான் பொறுப்பேற்ற காலத்தில் இருந்து எனக்குப் பலவேறு தோழர்கள் மூலமாகவும், அங்கே பணிபுரிபவர்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது. ஆனால், அவைகளை எல்லாம் ஏதோ பல மாச்சரியங்களின் காரணமாக சொல்லப்படுகிற கருத்து என்று எண்ணி இருந்தேன். ஆனால் மேலும் மேலும் தொடர்ந்து இப்பேர்ப்பட்ட குற்றச்சாட்டுகள் வருவதை அறிந்து நானே ஒரு முறை திடீர் என்று சென்று அந்த அச்சகத்தைப் பார்வையிட்டேன். ஆனால் அன்றைக்கு நான் இப்பேர்பட்ட குறைகளைக் காண முடியவில்லை. தொழிற்சங்கங்களின் மூலமாகவே பல குறைகளை எல்லாம் எனக்கு எழுதி தந்து இருக்கிறார்கள். அப்படித் தரப்பட்ட குறைகளை நான் விசாரித்து, ஆராய்ந்து பார்த்ததில் அவைகள் ருசுப்படுத்த முடியாத குறைகளாகத்தான் இருக்கின்றன. மேலும் அந்த தொழிற்சங்கங்கள் மூலமாக எனக்குத் தரப்பட்டு இருப்பதெல்லாம் அந்த அச்சகத்தில் அதிகப்படியாகத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்பதும் அதேபோல் மாற்றம் செய்வதில், அவர்கள் அறியாமலே மாற்றம் செய்கிறார்கள் என்பதும்தான். அவைகளைக் குறித்து நான் அதிகாரிகளிடம் கலந்து பேசியபோது, ஏற்கனவே அதிகமான தொழிலாளர்கள் பணியாற்றுவதை உத்தேசித்து அவர்களிலே சிலரைக் குறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 100-க்கு 7½ சதவீதம் தொழிலாளர்களைக் குறைக்க வேண்டும் என்ற நியதிக்கொப்ப இன்று சிலரைக் குறைத்திருப்பதாக தகவல் தரப்பட்டது.

சென்னை அச்சகத்தில் இருந்து, வட்டார அச்சகங்களுக்கு மாற்றும்போது அந்தத் தொழிலாளர்களை அணுகி கேட்கவில்லை என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் கனம் பாலசுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இது ஏற்கனவே எங்களுக்கு முன்னால் இருந்த அரசு செய்துவந்த காரியம். எனக்குத் தரப்பட்ட தகவல்களின்படி—மாற்றம் செய்யும்போது தனித்தனியாக யார் யார் வெளியூர் செல்ல விரும்புகிறார்கள் என்ற பட்டியல் தயார் செய்தபோது யாருமே முன் வராத காரணத்தால் புதிதாகத் துவக்கப்படுகிற வட்டார அச்சகங்களில் உடனடியாக வேலையைத் துவக்க நிபுணத்துவம் வாய்ந்தவர் போக வேண்டி இருந்த காரணத்தினால் ஒவ்வொரு செக்ஷனில் இருந்தும் சிலர் மாற்றம் செய்யப்பட்டதாகத்தான், எங்களுக்கு முன்னால் இருந்த அரசு காரணம் காட்டியதாகச் சொல்லப்படுகிறது. அதனால் இன்றைக்கு அவ்வாறு மாற்றம் செய்யப்பட்டவர்கள் இங்கே வர விரும்புகிறார்கள். காரணம் வட்டார அச்சகங்களில், போதுமான ஊதியம் இல்லை, அவர்களுக்கு அதிகப்படியான ஊதியம் அதாவது ஓவர்டைம் அலவன்ஸ் கிடைக்கவில்லை. இரண்டு குடும்பங்கள் நடத்த ஊதியம் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் மீண்டும் இங்கேயே இருக்கிற மத்திய அச்சகத்துக்குத் திரும்ப மாற்றிக் கொள்ளவேண்டும் என்றெல்லாம் கேட்கப்பட்டது. நான் பொறுப்பேற்ற பிறகு வட்டார அச்சகத்தில் உள்ளவர்களை கொஞ்சம் கொஞ்சமாக நூற்றுக்கு இருபது இருபது பேராக சென்னை அச்சகத்துக்கு மாற்றிக் கொண்டு வரவேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளேன்.

(மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை)

அதன்படி பலபேர் அங்கே வருகிறார்கள். அதே நேரத்தில் அவர்களுடைய இடத்தில் எந்தெந்த தொழில்களை யார் யார் செய்து வந்தார்களோ அவர்கள் செய்த வேலைகளுக்கு வேறு தொழிலாளர்களை நியமித்து வைத்து விட்டு அனுப்ப வேண்டும் என்ற காரணத்தாலேயே ஆரம்ப காலத்தில் இருபது இருபது பேராக வரவேண்டுமென்று உத்திரவு போடப்பட்டது. இங்கே இருப்பவர்கள் சிலர் அங்கே போக விரும்பினால் போகலாம். விருப்பம் இருந்தால் செல்லலாம் என்ற உத்திரவின் அடிப்படையில் ஐந்தாறு பேர்கள் வட்டார அச்சகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று என்னால் கூற முடியும். அவர்கள் விருப்பத்திற்கு மாறாக மாற்றம் இருக்க கூடாது என்று ஏற்கனவே நான் உத்திரவு பிறப்பித்ததையொட்டி இன்றைக்கு எந்தப் புதிய தொழிலாளரையும் மாற்றவில்லை. வட்டார அச்சகங்களுக்குப் புதிய தொழிலாளர்களை நியமிக்கின்ற வகையில் டைரக்டர், டெபுடி டைரக்டர், ஒர்க்ஸ் மேனேஜர், டெபுடி ஒர்க்ஸ் மேனேஜர் ஆகிய நான்கு பேர்களைக் கொண்ட ஒரு குழுவை உண்டாக்கி இருக்கிறார்கள். அந்தக் குழு யார் யாரை அங்கு தேர்ந்து எடுக்கிறதோ அவர்களுக்கு வேலை, கொடுத்து விட்டு அங்கே இருக்கிற தொழிலாளர்களை ஆண்டுக்கு இருபது சதவீதமாக இங்கே கொண்டு வருவதென்ற ஏற்பாடு நடைபெற்று வருகிறது. விருபபத்திற்கு மாறாக இனியும் எந்தத தொழிலாளரும் மத்திய அச்சகத்தில் இருந்து எங்கும் அனுப்பப்பட மாட்டார்கள் என்று உறுதி அளிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு பாலசுப்பிரமணியம் அவர்கள் திரு. ஜெயபாண்டியன் என்பவர் திடீர் என்று வெளியாரை ஐந்து மாதத்திற்கு அப்பாயிண்ட் செய்ததாக சொன்னார்கள். ஆனால் திருமதி ஜயலெட்சுமி என்பவர் லீவ் வேகன்சியில் தற்காலிகமாக அமர்த்தி இருப்பதாகவும் அது நிரந்தரமானது அல்லவென்றும் விளக்கம் தரப்பட்டிருக்கிறது. (திரு. எ. பாலசுப்பிரமணியம் குறுக்கீடு.)

இருந்தாலும் அது சரியான, உண்மையான தகவல் அல்லவென்று மாண்புமிகு உறுப்பினர் இன்னமும் கருதினால் நான் அதிகாரிகள் மூலம் விசாரணை செய்து உண்மையான தகவல்களை பிறகு தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். பரவலாக இந்த அச்சகத்தைக் குறித்து பல குற்றச்சாட்டுகளை கொண்டு வந்ததை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்னால், தவறு என்று அல்ல. மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆர். கண்ணன் பல குறைபாடுகளைக் கூறினார்கள். அவற்றுக்கு இதற்கு முன்னால் இருந்த அரசு பொறுப்பு எனினும் நான் பொறுப்பேற்ற பிறகு அந்தக் குறைகளை நீக்குவதற்கு கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால், இதுபோன்ற தொழிற்சங்கங்கள் நிர்வாகத் துறையையும், அங்கு இருக்கும் டைரக்டர்களையும் பற்றிக் குறைபாடுகளைச் சொல்லும்போது அவர்கள் இன்னின்ன குற்றங்களை, இன்னின்ன காலத்தில், இந்தத் தேதியில், இந்த நேரத்தில் செய்தார்கள் என்று சொல்லியிருந்தால் நான் அது குறித்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்க முடியும். ஆனால் இங்கே சுதந்திரா பத்திரிக்கையிலும் ஸ்வராஜ்யா பத்திரிக்கையிலும், நாத்திகம் பத்திரிக்கையிலும் இந்தந்த தேதியில் வந்திருக்கின்றன, குறைபாடுகள் நடந்திருப்பதாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கும் அந்தச் செய்திகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்ட் பிரஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் கூட கேட்டிருக்கிறது. இப்படிப் பத்திரிக்கையில் வரும் செய்திகளைக் கொண்டு ஒரு அதிகாரியின் மீது நடவடிக்கை எடுப்பது சரியல்ல என்ற எண்ணத்தின் பேரில் இந்தக் குற்றச்சாட்டுகளின் மேல் சரியான நடவடிக்கையை நான எடுக்க முடியாமல் இருக்கிறேன்.

இன்னொன்றும் இருக்கிறது, அங்கே வேலை செய்கிறவர்கள் டோக்கன் பெற்றுக்கொண்டு வேலை செய்யாமல் வெளியே போய் விடுகிறார்கள் என்றும், தேர்தல் சமயத்தில் கூட 40 நாட்களுக்கு சம்பளத்தை பெற்றுக்கொண்டு வெளியே போய் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள் என்றும் சொல்லப்பட்டது. நான் திடீர் என்று இரண்டு நாட்கள் முன்னால் கூட மவுண்ட் ரோடில் உள்ள அச்சகத்திற்கு விஜயம் செய்தேன். ஆனால் டோக்கன் பெற்று வெளியே சென்றவர்கள் யாரையும் அங்கே கண்டுபிடிக்க முடியவில்லை. ஆயினும் பல குறைகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மெஷின்கள் எல்லாம் வேலையில்லாமல் அப்படியே போடப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். 6 மாதங்களுக்கு முன்னால் வேண்டுமானால் இப்பேர்பட்ட நிலைமை இருந்து இருக்கலாம். இப்போது கூடுமான வரையில் அடிக்கடி மத்திய சர்க்காருக்கு எழுதி போதுமான அன்னிய செலவாணியைப் பெற்று ஸ்பேர் பார்ட்டுகளை எல்லாம வாங்கி ரிபேராக உள்ள மிஷின்களை சரிசெய்து எல்லா மெஷின்களும் வேலை செய்யும் படியாக அரசு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த இடத்தில் பல ஊழல்கள் இருப்பதாகவும், அவற்றை நல்லமுறையில் விசாரிக்க வேண்டும் என்றும் இங்கே கேட்டிருக்கிறார்கள். நான் அவற்றை விசாரணை செய்வதற்கு ஒரு போதும் பின் தங்க மாட்டேன். விசாரணை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஒத்துக் கொள்கிறேன். அப்படி விசாரணை செய்வதற்கு கனம் உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதைப்போல ஒரு கமிட்டியைப் போடுகிறேன். விசாரணையில் ஊழல்களுக்குத் தகுந்த ஆதாரங்கள் கிடைத்தால் அந்த ஆதாரங்களை வைத்துக்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் மீது யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ள இந்த அரசு தயங்காது என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், அங்குள்ள தொழிலாளர் மக்களுக்கு காமராஜ் நகரில் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ள வீடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அவை ஒழுங்காகப் பராமரிக்கப்படவில்லை, சுத்தமாக வைக்கப்படவில்லை என்பதாக திரு. எம். ஆர். கண்ணன் அவர்கள் சொன்னார்கள். தொழிலாளர் மக்களுக்கு இந்த அரசு எல்லா வசதிகளையும் செய்து கொடுக்கும். அந்த அடிப்படையில் தான் அவர்களுக்கு கால் உறைகள், பால், வைடமின் மாத்திரைகள் எல்லாம் தரப்படுகின்றன. மேலும் 1960-இல் இருந்து அவர்களுக்கு ஓய்வுகால ஊதியம் தரப்படவேண்டுமென்று கோரிக்கையை வைத்து வந்தார்கள். இந்த அரசு அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தரவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் அவர்களுக்கு ஓய்வுகால ஊதியம் தரப்பட வேண்டும் என்பதாக உத்தரவு போட்டிருக்கிறது. இப்போதுதான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும் 1960 ஜூலை மாதம் 1-ம் தேதியில் இருந்தே இந்த ஓய்வுகால ஊதியத்தைத் தர இந்த அரசு உத்தரவு போட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். என்றைக்கும் திராவிட முன்னேற்ற கழக அரசு தொழிலாளர் மக்களின் நலனில் அக்கறை காட்டும்.

கடைசியாக நான் முன்பு தெரிவித்ததைப்போல இந்த ஸ்தாபனத்தில் உள்ள ஊழல்களை விசாரித்துக் களைவதற்கு நான் ஒரு கமிட்டியை அமைக்கத் தயாராய் இருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: கனம் சபாநாயகர் அவர்களே, இங்குள்ள ஊழல்களைப் பற்றி விசாரிக்க ஒரு குழுவை அமைக்கிறேன் என்று அமைச்சர் அவர்கள் உறுதி கொடுத்தார்கள். இப்போது இருக்கிற டைரக்டரே அங்கு இருந்தால் அந்தக்குழு

சரியான முறையில் பணியாற்ற முடியாது. ஆகவே கொஞ்ச நாட்களுக்காவது அந்தத் தலைவரை வேறு இடத்திற்கு மாற்றி, அங்கு இருக்கக் கூடிய புகார்களை சரியான முறையில் இந்தக் குழு விசாரணை நடத்துவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்தக் குழு சரியான முறையில் செயல்படுவதற்கு எந்த முறைப்படி செய்ய வேண்டுமோ அந்த முறைப்படி செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து விசாரணைக் கமிட்டி அமைப்பதாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த விசாரணை காலத்தில் குறிப்பிட்ட அதிகாரியே அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை பற்றியும் சரியான முறையில் சீர்தூக்கி கவனிப்பார் என்ற நம்பிக்கை ஏற்படக்கூடிய முறையில் பேசியிருக்கிறார்கள். அதை உத்தேசித்து எவ்வளவோ கசப்பு இருந்தபோதிலும் கூட தோழமைக் கட்சியின் ஆட்சியில் களங்கத்தை களைந்தெறிவார்கள் என்பதால் நான் என் வெட்டுத் தீர்மானத்தை வற்புறுத்தவில்லை.

நண்பகல் 12 0(

வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி :—

" கோரிக்கை எண் XXXIV—எழுது பொருள் அச்சுத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,27,09,900-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது .

(இ) கோரிக்கை எண் XXII—கதர்

(உ) கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலிவன

(எ) கோரிக்கை எண் XXIX—பொதுப்பணிகள் உதவி மானியங்கள்

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:—

" கோரிக்கை எண் XXII—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு. ஏ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கைத்தறியுடன் கதர் இலாகாவை இணைக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் XXII—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 20,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் " என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,61,20,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரால் அபிவிருத்தி திட்டத்திற்கென்று கொடுக்கப்படும் மானியத் தொகையை சரியானபடி மிகவும் பின்தங்கிய பகுதிகளுக்குப் பயன் படுத்தாததைப்பற்றி விவாதிக்க—

" கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6,61,20,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு சரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களுக்கு கட்டிடம் கட்டுவது சம்பந்தமாக விவாதிக்க—

"கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 6,61,20,700-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்," என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கவர்னர் அவர்கள் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

"கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள் உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் 2,77,96,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

திரு சரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு ரோடுகள் போட ஒதுக்கப்பட்ட பணம் போதாது என்பது பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள் உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 2,77,96,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, குடிதண்ணீர் வசதிக்காகவும், பாதாள சாக்கடை வசதிக்காகவும் போதுமான பணம் ஒதுக்க வேண்டிய அவசியத்தை பற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் XXIX—பொதுப்பணிகள் உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 2,77,96,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும், விவாதத்திற்குப் பேரவை முன்னால் வைக்கப்படுகின்றன. முதலில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரை ஆற்றுவார்கள்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு சட்டசபை பேரவைத் தலைவர் அவர்களே கோரிக்கை எண்கள் XXIII—XXIX ஆகிய இவ்விரண்டு கோரிக்கைகளைப் பற்றிய விவரமான குறிப்பு ஒன்று சட்டப் பேரவையில் வைக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் சமுதாய வளர்ச்சித் திட்ட கோரிக்கையைச் சார்ந்த நிதி இணைப்பு வெளியீடு ஒன்றும் வைக்கப்பட்டிருக்கிறது.

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்" என்னும்

திருக்குறளின் வழி நின்று குடி தழீஇக் கோலோச்சிய முடியுடை மூவேந்தர் காலம் தொட்டே கிராமக் குடியாட்சி முறை கண்டவர்கள் நாம். குடவோலை முறைப்படித் தேர்வு பெற்றக் கொள்கைச் சான்றோர்கள், கிராமத் தன்னாட்சி நடத்தி முன்னேற்றம் கண்டனர் என்பதைத் தென்னக வரலாறு தெளிவாகத் தெரிவிக்கின்றது. உத்திரமேரூர் சாசனங்களும், கல்வெட்டுக்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. காலச் சக்கரத்தின் வேகச் சுழற்சியில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார சமூக மாறுபாடுகளின் விளைவாக மாற்றங்கள் பல நிகழ்ந்து ஊராட்சிகளின் புகழ் மங்கத்தலைப்பட்டது.

(திரு பெ. மலைச்சாமி தலைமை)

விடுதலை பெற்ற நாட்டின் வேகமான வளர்ச்சிக்குக் கிராம முன்னேற்றமே அடிப்படை என்பதை அறிந்த அண்ணல் காந்தியார் அதனை மிகவும் வலியுறுத்தினார்கள். ஆன்றோர் பலரும் அதனை

வரவேற்றனர். ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும் பேராட்சியின் கேந்திர மையங்கள் என்பதை உணரத் தலைப்பட்டதால் அவற்றை அமைக்கவும் அமைத்தவற்றை விரிவாக்கவுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமுதாய வளர்ச்சிக்குச் சாதகமாகத் தமிழகத்தில் இன்று 12,881 ஊராட்சி மன்றங்களும் 438 பேரூராட்சி மன்றங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும், 14 நகர் குழு மன்றங்களும், 88 நகராட்சிகளும், சென்னை மாநகராட்சி மன்றமும் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன.

நாட்டாட்சிக்கு நல்ல அடித்தளங்களாக விளங்கும் இவற்றில் காணப்படும் குறைபாடுகளை அகற்றி, சீராக்கிச் செப்பனிட வேண்டுமென்பதுதான் இந்த அரசின் விருப்பமே தவிர இவற்றை அழித்து விட வேண்டும் அல்லது மாற்றி விடவேண்டும் என்பதல்ல என்பதை இம் மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த மானியத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,61,20,700 மானியம் கோரியிருப்பினும், மொத்தமாக, சமுதாய வளர்ச்சிக்காக, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 52 கோடியே 70 லட்சம் செலவாகுமென்று இந்த ஆண்டு கணக்கிடப்பட்டிருக்கிறது. இது தமிழ் நாட்டின், இந்த ஆண்டிற்கான மொத்த நிதித் தொகையில் 24 சதவீதம் ஆகும். இதன் விவரங்கள் நிதி இணைப்பு வெளியீட்டில் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதில் மிகவும் முக்கியமான பிரிவு ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 21,23,00,000 ஆகும். ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செலவிடப்படும் தொகையில் இது 40 5 சத வீதம் ஆகும்.

இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் கீழ்ப் பணி புரியும் அரசாங்க ஊழியர்களின் ஊதியம் ரூ. 4,20,00,000 ஆகும். அதாவது மொத்தச் செலவில் இது 8 சத விகிதமாகும். அரசாங்க மானியத்தைத் தவிர, ஊராட்சிகளில் வரிகளின் மூலம் வசூல் செய்வதையும் சேர்த்தால், மொத்தச் செலவு ரூ. 55,79,00,000 ஆகும். ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதியிலிருந்து, அவர்களது சிற்சில ஊழியர்களுக்காகக் கொடுக்கப்படும் மொத்த ஊதியம் ரூபாய் 1 கோடியே 50 ஆயிரம். இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு பார்க்குமளவில் ஊழியர்களுக்காகச் செலவு செய்யப்படுவது மொத்தச் செலவில் 10 சத விகிதம் ஆகும்.

இவ்வரசின் கீழுள்ள எல்லா ஊராட்சிகளும் தலத் தீர்வை மேல் வரியில் (Local cess Surcharge) தங்கள் வருவாயை பெருக்கிக் கொண்டுள்ளன. தலத் தீர்வை மேல்வரிக்கு அரசினர் கொடுக்கும் இணை மானியம் சென்ற ஆறு ஆண்டுகளில் ரூபாய் 85·24 இலட்சத்திலிருந்து நடப்பு ஆண்டில் ரூ. 200 இலட்சமாக அதிகரித்துள்ளது. இவற்றால் நாம் அறிவதெல்லாம் ஊராட்சி ஒன்றியங்கள் இந்த 6 ஆண்டுகளில் ரூ. 115 இலட்சத்துக்குக் குறையாமல் வரிகளின் மூலம் நிதி திரட்டியிருக்கின்றன என்பதுதான். அம்மாதிரியே தமிழக உள்ளாட்சி மன்றங்கள், கேளிக்கை வரியின் மீது மேல்வரியும், காட்சி வரியின் மீது மேல்வரியும் விதித்துத் தன்னுடைய வருமானத்தைக் கிட்டத்தட்ட நான்கு மடங்காகப் பெருக்கிக் கொண்டன.

ஊருக்குத் தேவையான ஒளியமைத்தல், நல்ல வழியமைத்தல், பள்ளியமைத்தல், பாலம் அமைத்தல், பாசன வசதி அளித்தல், மருத்துவ உதவி அளித்தல், மனமகிழ் மன்றம் அமைத்தல், குடி தண்ணீர் வசதி அளித்தல், வானொலி நிலையம் அமைத்தல், விதையளித்தல், நல்ல உரம் அளித்தல், உழவர்க்குத் தேவையான உதவியளித்தல், போன்ற பணிகளை உள்ளடக்கி உள்ளவைதான் ஊராட்சி ஒன்றியங்களாகும்.

[திரு. மா. முத்துசாமி] [1967 ஜூலை 13

தமிழ்நாடு முழுவதும் ஆரம்பக் கல்வியை சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கொண்டு வந்தது ஒரு மாபெரும் சாதனையாகும். சென்ற ஆண்டு தமிழ் நாட்டில் 22,401 தொடக்கப் பள்ளிகளும் 4,991 உயர் தொடக்கப் பள்ளிகளும் இருந்தன. பள்ளிகட்கென 10,900 புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1,09,616 ஆசிரியர்கள், 35½ இலட்சம் சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்தனர். இவ்வெண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகமாகுமென்பதில் ஐயமில்லை. இவ்வாண்டில் கிராமப் பணிகள் திட்டத்திற்கென 273·32 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1966 டிசம்பர் 31-ந் தேதி முடிய 2,512 மேல் நிலை நீர்த் தொட்டிகள், 47,200 குடி நீர்க் கிணறுகள், 22,000 மைல்களுக்கும் மேற்பட்ட இணைப்புச் சாலைகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. பாதைப் பராமரிப்புக்கென ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் "சாலைகள் மானியம்" தனியாகத் தரப்படுகிறது. ஊராட்சி சிறுபாசனத் திட்டங்களைப் பொறுத்த வரை இம் மாநிலத்தில் சுமார் 29,000 சிறு பாசன ஆதாரங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 23,275 ஆதாரங்களைப் பேணி வரும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதற்காகத் "தல பாசன மானியம்" என்ற தலைப்பின் கீழ் இவ் வாண்டு ரூ. 50,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் பணிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான பணிகள் ஊராட்சி ஒன்றியங்களுடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட்டன. வேளாண்மைத் திட்டத்திற்காக அரசாங்க மானியம் கொடுப்பதற்கு அந்தந்தப் பகுதிகளுக்குரிய நிலைமைகளுக்கேற்பத் திட்டங்கள், "இன்றியமையாதவை", "விருப்பத் திட்டங்கள்" என இரு வகையாக பிரிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, "குறிப்பிட்ட பகுதிகளுக்கான வேலைகள்" என்பதன்கீழும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்ற மீனள வளர்ச்சிக்காகத் தமிழ் நாட்டில் உள்ள ஒன்றியங்கள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதற்கான விளக்கத்தைச் சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட குறிப்பின் மூன்றுவது இணைப்பில் காணலாம். இதனால் மீனளத் திட்டங்கள் நன்கு செயல்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் "கிராம மனித உழைப்புத் திட்டம் 72 வட்டாரங்களில் செயல் படுத்தப்படுகிறது. வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேளாண்மை இல்லாத காலங்களில், இத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் இலட்சம் ரூபாய் வரை செலவு செய்யலாமென சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் சிறுவர் நிதி உதவியுடன் (UNICEF) சத்துணவு திட்டம் 9 வட்டாரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. இவற்றின் கீழ்ப் பள்ளித் தோட்டங்கள், சமுதாயத் தோட்டங்கள், கோழி வளர்ப்புப் பண்ணைகள், மீன் வளர்ப்பு ஏரிகள் ஆகியவற்றை ஏற்படுத்திப் பேணி வருவதற்காக ஊராட்சிகளுக்கு நிதி உதவியும் வழங்கப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கும் பொருள்கள், தாய்மார்களுக்கும், இளம் சிறுர்களுக்கும் கொடுக்கப்படுகின்றன.

மலைவாழ்மக்களின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு உதவியுடன் தனித் திட்டம் ஒன்று கொல்லிமலை வட்டாரத்திலும் ஏர்க்காடு வட்டாரத்திலும் நடைபெற்று வருகிறது. இதை இவ்வாண்டு தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்று வட்டாரத்திலும் செயல்படுத்தி விரிவு படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

சட்டப் பேரவையின் தனிக், கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், 88 நகராட்சிகளுக்கு 1964-65-ஆம் ஆண்டு ஏறக்குறைய வருமானம் 11,50,00,000 ரூபாய் வீட்டு வரியாக

1967 ஜூலை 13] [திரு. மா. முத்துசாமி]

எல்லா நகராட்சிகளிலிருந்தும் 4 கோடி ரூபாய் வசூலித்திருக்கிறார்கள். கேளிக்கை வரியிலிருந்து அவர்களுக்கு வந்த வருமானம் 2 கோடியாகும். இதர வருமானம் 105 இலட்சம் ரூபாய். சுகாதார வசதிக்காக வசூலிக்கப்பட்டது 60 இலட்சம் ரூபாய். நாளங்காடி, லாரி, பேருந்து நிலையம் ஆகியவைகளிலிருந்து 150 இலட்சம். தண்ணீர் வரியாக 40 இலட்சம் ரூபாய். இவை எல்லாம் சேர்ந்து ஏறக்குறைய 9,55,00,000 ரூபாய் ஆகும். இது அல்லாமல் அரசாங்கத்திடமிருந்து மானியமாகவும், கடனாகவும் இந்த ஆண்டில் 195 இலட்சம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள்.

இந்த வருமானத்திலிருந்து எல்லா நகராட்சிகளும் சேர்ந்து 270 இலட்சம் ரூபாய் முதலீடு செய்திருக்கின்றன. ஆண்டு நடைமுறைச் செலவிற்கு 845 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மொத்தமாக 11,15,00,000 ரூபாய் செலவழித்திருக்கிறார்கள்.

பொதுவாக நோக்குமிடத்து உள்ளாட்சி மன்றங்கள் அனைத்தும் ஓரளவு தம் பணிகளைத் திறம்படச் செய்துள்ளன என்றே கூறலாம்.

எனினும் இவைகள் ஆற்றியுள்ள பணிகளைவிட ஆற்ற வேண்டிய பணிகள் பலப்பல. இவற்றையெல்லாம் நிறைவேற்றப் பெரும் நிதி தேவைப்படுகிறது. இதற்கெனக் கிடைத்து வந்த மத்திய உதவி நாளுக்குநாள் குறைந்து வருவதும், நான்காவது திட்டத்தில் வெட்டுச் செய்திருப்பதும் நமக்குக் கவலையளிப்பதாக இருக்கிறது. இவற்றின் இன்றியமையாமையை எடுத்துரைத்து, வாதாடி, வேண்டிய நிதியைப பெற இம் மாமன்றம் ஒருமனதாக முயல வேண்டும் என்பதைப் பணிவுடன் கவனப்படுத்த விரும்புகிறேன்.

மாநில அரசினையும், மத்திய அரசினையும் நம்பிக் கொண்டிருப்பதோடு நில்லாமல் தமக்குத் தேவையான நிதியைப் பெருக்க இவ்வமைப்புகள் மேலும் முயல வேண்டும் என்பதையும், வரிகளை முறையாக விதித்து அவற்றைத் தவறாது வசூலிக்க வேண்டும் என்பதையும் இந்த அரசு அவர்களுக்கு அடிக்கடி வற்புறுத்தி வருகின்றது. இம் முயற்சிக்குப் பொதுமக்கள் பெரிதும் துணை நிற்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து நான் எடுத்துரைக்க விரும்புவது கதர் கிராமக் கைத்தொழில் பற்றியது.

கதர்-கிராமக் கைத்தொழில்களுக்கு இந்த அரசு எந்தவகையிலும் எதிரியல்ல என்பதை இந்த நேரத்தில் இம் மாமன்றத்தின் கவனத்திற்கு வைக்கின்றேன். மாறாக, இத் துறையில் ஏற்படும் வீண் விரயங்களைப் போக்கி, இலாபகரமானதாக்கி, இது எல்லா மக்களுக்கும் பொதுவானது என்னும் நிலையை உருவாக்க வேண்டுமென்பதே இந்த அரசின் எண்ணமாகும்.

கதரும் கிராமத் தொழில்களும் அரசின் தனித் தனிதுறைகளால் நிருவகிக்கப்பட்டு வந்ததை ஒருங்கிணைத்து செவ்வையான முறையில் நடத்துவதற்குக் கதர் கிராமக் கைத்தொழில் ஆயம் தோற்றுவிக்கப்பட்டது. கதர் வளர்ச்சியும் கைத்தொழில் வளர்ச்சியும் இந் நிறுவனத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. இதற்கான நிதி வசதியில் பெரும் பகுதி பம்பாயிலுள்ள அகில இந்தியக் கதர் கிராமத் தொழில் நிறுவனத்திடமிருந்து மானியமாகவும் கடனாகவும் கிடைக்கிறது. மேற்கொண்டு தேவைப்படும் செலவினங்களைத் தமிழக அரசு உதவி வருகின்றது.

கதர்.

இத் திட்டத்தினால் சுமார் 109,862 நூற்பாளர்களும் நெசவாளர்களும் பயனடைகின்றனர். 1966-67-ல் அவர்கட்கு 106·99 இலட்ச ரூபாய் ஊதியமாக வழங்கப் பெற்றது. 1966 நவம்பர்

வரை 505 ஆறு கதிர் இராட்டைகள் மாற்றிக் கொடுக்சப் பெற்ரன. மேலும் 835 டெக்ஸ்டூல் இராட்டைகளும் தரப் பெற்றன. பழைய இராட்டையில் தினசரி ரூ. 1·60 ஊதியம் பெறுபவர் டெக்ஸ்டூல் இராட்டை மூலம் ரூ. 2·40 வரை ஊதியம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 1966–67, 1967–68 ஆண்டுகளில் முறையே வரவு-செலவுப் புள்ளி விவரங்கள் வருமாறு :

	1966–67. (இலட்சம்.)	1967–68 (இலட்சம்.)
	ரூ.	ரூ.
வரவு : கதர் கிராமத் தொழில் நிறுவனத்தின் மூலம் (மான்யம்).	71·29	66·59
இலாகாவின் மூலம் (விற்பனைப்பொருள்கள்).	243·41	269·99
	314·70	336·58
காதி கமிஷன் கடனுதவி	66·40	60·78
செலவு	324·44	357·67

1967–68-ல் கதர் உற்பத்தியின் மதிப்பு ரூ. 211 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொகையில் பட்டாடை உற்பத்தியின் மதிப்பாக உள்ள ரூ. 49 இலட்சமும் சேரும். தமிழக அரசு 1966–67-ல் 12 இலட்சம் மான்யமும் ரூ. 9 லட்சம் கடனுமாகக் கொடுத்துதவியுள்ளது. 1967–68-ல் 12 இலட்சம் மான்யமும் 16 இலட்சம் கடனுமாகக் கொடுத்து உதவுகிறது.

தமிழகத்தில் 161 விற்பனை நிலையங்களும், இராமனுதபுரம் மாவட்டத்தில் கமுதி என்னுமிடத்தில் ஒரு பயிற்சி நிலையமும், திருப்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் இரண்டு சாய அச்சுத் துறை நிலையங்களும் இயங்கி வருகின்றன. சென்ற ஆண்டில் ரூ. 203 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கிராமத் தொழில்கள்.

கூட்டுறவுச் சங்கங்கள், கதர்-கிராமத் தொழில் நிறுவனம் ஆகியவற்றின் நேரடிக் கண்காணிப்பில் கிராமத் தொழில்கள் செயல்பட்டு வருகின்றன.

1966–67-ஆம் ஆண்டு வரவு-செலவு விபரமும், 1967–68-ஆம் ஆண்டு எதிர்ப்பார்க்கப்படும் புள்ளி விவரங்களும் பின் வருமாறு :—

	1966–67 (இலட்சம்.)	1967–68 (இலட்சம்.)
வரவு—கதர்-கிராமத் தொழில் நிறுவனத்தின் மூலம் (மான்யம்).	26·68	28·44
இலாகாவின் மூலம் (விற்பனைப் பொருள்கள் மூலம்).	29·53	37·09
	56·21	65·53
செலவு	70·59	80·37
கடன் நிலை—கதர்-கிராமத் தொழில் நிறுவனத்திடமிருந்து பெறும் தொகை.	228·41	152·85

இத்துறைக்கு 1966–67-ல் தமிழக அரசு ரூ. 14 இலட்சம் மான்யமாகத் தந்துள்ளனர். 1967–68-ல் ரூ 15 இலட்சம் ஒதுக்கப் பெற்றுள்ளது.

சென்ற ஆண்டு 2,57,368 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதன் மூலம் அவர்கள் பெற்ற ஊதியம் ரூ. 269·57 இலட்சம். இவர்கள் உற்பத்தி செய்த பொருள்களின் மதிப்பு ரூ. 753 இலட்சமாகும்.

சென்ற ஆண்டிலிருந்தே கருமான் தொழிலும் தச்சுத் தொழிலும் கதர் கிராமத் தொழில் ஆயத்துடன் இணைக்கப் பெற்றுலும் இத் தொழில்களின் இன்றியமையாமையை நோக்கி விரைவில் உதவியளிக்கத் காதி குழுவினரைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

(1) இத் தொழிலாளர்கள் தமக்குத் தேவையான மூலப் பொருள்களை வாங்குவதற்குரிய கடன் வசதி, அவற்றை உருவாக்குவதற்குரிய தொழில் வசதி, உருவான பொருள்களை விற்பதற்குரிய வியாபார வசதி ஆகியவை செய்யப் பெற ஒருங்கிணைந்த ஒரு கூட்டுறவு முறையில் அவர்கள் தொழில்படுதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். இக் கூட்டுறவு நிறுவனம் அந்த வட்டாரத்தின் தண்ணீர் இறைக்கும் மின்பொறி உட்பட விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.

(2) தற்போது மாநில ஆயம் பனை நார் சேகரிப்புத் தொழிலில் ஈடுபட்டுச் சென்ற ஆண்டில் 37 இலட்சம் ரூபாய்க்குப் பனை நார் ஏற்றுமதி செய்துள்ளது. என்றாலும் பிற நாடுகளில் நம்முடைய கச்சாப் பொருளைப் பயன்படுத்திச் செய்யப்படும் துடைப்பான்களை (Brush) வரவழைத்து அவை செய்யப் பெற்றுள்ள வகையை ஆய்ந்து நாமே துடைப்பான்களைத் தயாரித்தால் நலமாக இருக்கும். இதற்கான செயல் முறைகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

(3) ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் பெறுமானமுள்ள எண்ணெயும் பிண்ணாக்கும் சென்னை மாநிலம் உற்பத்தி செய்கிறது. செக்கின் மூலம் ஆட்டப்படும் கடலைப் பிண்ணாக்கில் ஓரளவு எண்ணெய் தங்கி விடுவதால், அதனைப் பிரித்தெடுக்கும் கருவி (Solvent extraction plant) தென்னார்க்காடு மாவட்டம் போன்ற ஒரு மாவட்டத்தில் இருக்குமேயானால், தொழிலாளர்கள் இன்னும் அதிகமாகப் பயன் பெறக்கூடும். இங்ஙனம் பிரிக்கப்பட்டப் பிண்ணாக்கைக் கலவை உரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அனைத்திந்திய கிராமத் தொழிலபிவிருத்திக்கு நான்காவது திட்டத்தில் கேட்டிருந்த ரூ. 104 கோடியில் ரூ. 40 கோடி தான் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். கிராமங்களில் தொழில்கள் வளர வேண்டுமானால், இத் தொகை போதுமானதாக இராது என்பதை மத்திய அரசுக்கு வலியுறுத்த இம் மாமன்றம் ஒருமனதாக முன்வர வேண்டும் என வேண்டுகிறேன்.

காதி கிராமத் தொழில் ஆயத்தின் வைப்புத் தொகைக்கு மாநில அரசு, மின் கழகத்திற்கு வழங்குவது போல வட்டி தரக்கூடுமானால், மானியத் தொகையில் குறைந்தது 5 இலட்சம் குறைக்க வழியுண்டு.

இதுவரை கூறியவற்றிலிருந்து இவ்வமைப்புகளின் பொறுப்பு எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதை அறியலாம்.

எனவேதான் இந்த உள்ளாட்சி மன்றங்களில் ஏற்படும் வீண் விரயங்களைத் தடுக்கவும், வேண்டாத பதவிகளை மாற்றியமைக்கவும், வேண்டியவைகளை உருவாக்கவும் இந்த அரசு விரும்புகிறது. இதற்கு இம் மாமன்றத்தின் ஒத்துழைப்பை வேண்டுகிறது.

இம் மன்றங்கள் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அமைப்புகள் என்ற அந்த அளவோடு நின்று, காய்தல் உவத்தல் அகற்றி, கட்சி மாச்சரியங்களை மறந்து, அனைவரும் ஒரு குடும்பத்தைச்

சார்ந்தவர்கள் என்னும் உணர்வோடு செயலாற்றுமானால் சிறப்பான பணியாற்ற முடியும். இம் முறையில் செயலாற்ற வேண்டுமென வேண்டுகிறேன்—செயலாற்றுமென நம்புகிறேன்.

இத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரும், அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையில் நற்றூதுவர்களாக நின்று, தமக்குக் கிடைத்துள்ள இப்பொறுப்பு பொது மக்களுக்குச் சேவை செய்வதற்குக் கிடைத்துள்ள அரியதொரு வாய்ப்பு என்னும் தியாக உணர்வோடு அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என வேண்டுகிறேன்.

சமுதாய வளர்ச்சித் துறை மேலும் நன்கு செயல்பட்டு பொலிவும் வலிவுமுடையதாயும், ஒப்பிலாததாயும், உலகத்திற்கொரு புதுமையானதுமான சமுதாயம் அமைக்கத் தக்க ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இவற்றை எடுத்து விளக்க இடமளித்த மாண்புமிகு பேரவைத் தலைவ வர்களுக்கு என் நன்றி. வணக்கம்.

மாண்புமிகு மூற்றுத் தலைவர் (திரு. பெ. மலைச்சாமி) **:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவை முன் விவாதத்திற்கு இருக்கின்றன.

***திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்:** மதிப்பு மிக்க தலைவர் அவர்களே, இந்த அவை முன் கொண்டுவரப்பட்டிருக்கும் சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற தலைப்பில் உள்ள மானியத்தை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சமுதாய வளர்ச்சித் திட்டம் தான் கிராமங்களுக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. இந்தத் திட்டத்திலிருந்துதான் கிராமங்களுக்கு எந்த நல்லதைச் செய்ய வேண்டுமானாலும் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்குப் போதுமான நிதி வசதி கிடையாது. அதனால் சமுதாய வளர்ச்சித் திட்டம் நல்ல முறையில் இயங்க முடியாமல் இருக்கிறது. நம் அரசு மத்திய அரசின் அதிகாரங்கள் எல்லாம் பரவலாக இருக்க வேண்டுமென்று கருதுகிறது. அத்துடன் இல்லாமல் மத்திய அரசாங்கத்தினிடமிருந்து இன்னும் நிதிகள் அதிகமாகக் கிடைத்தால் தான் நம் மாநிலம் சரியாக இயங்கும் என்று நினைக்கக்கூடிய அரசு நம் அரசு. அதே சமயத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் எப்படி யிருக்கிறது என்பதை நாம் நன்கு ஊன்றிப் பார்க்க வேண்டும். சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அதிகாரங்கள் பரவலாக இருக்க வேண்டும். இப்போதுள்ள அதிகாரங்கள் எல்லாம் அதிகாரிகள் கைகளில்தான் இருக்கின்றன. அதிகாரத்தைப் பரவலாகக் கொடுக்க இந்த அரசு கட்டாயம் முன் வரும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அத்துடன் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைய மானியங்களை அளித்து நிறைய கிராண்ட் கொடுத்து கிராமங்கள் நல்ல முறையில் இயங்கும்படிச் செய்ய வேண்டும். பட்டணங்களை எடுத்துக் கொண்டால் நிறைய வசதிகள் இருக்கிறது. அந்த வசதிகள் எப்போது கிராமங்களுக்கு வரும் என்று கிராம மக்கள் ஏங்கும் நிலை இருக்கிறது. ஆகவே அதிகப்படியான பண உதவியை அளித்து சமுதாய வளர்ச்சித் திட்டத்தை நன்கு செயல்படுத்தவில்லை என்றால் கிராமங்கள் இப்படியே தான் மோசமான நிலையில் இருக்கும். சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே கொடுத்துக் கொண்டு வந்த கிரண்ட்கள் எல்லாம் அதிகப்பட்டுக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் படித்ததிலிருந்தும், இங்கு கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்பிலிருந்தும் தெரிகிறது. ஆனால் அங்கு கொடுக்கக்கூடிய கிரண்ட்கள் எல்லாம் குறைந்து கொண்டு வருகிறது. அது ஏன் என்று தெரியவில்லை. நான் ஒரு பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருக்கிறேன். என் பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுத்திருக்கிற புள்ளி விவரப்படி, அதை இங்கு படிக்கிறேன். இவ்வளவு கிரண்ட் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதைப் படித்துப் பார்த்தால் வருடா வருடம் பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்பட்டு

வருகிற கிரண்ட் எப்படி குறைகிறது என்பது தெரியவில்லை. அதை அமைச்சரவர்கள் கவனித்து பதிலுரைக்கும்போது அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இணைப்புச் சாலைகளுக்காக 1965–66-ல் ரூ. 44,142 அங்கு பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 1967–68-க்கு ரூ. 9,000 மட்டுமே வழங்கப்பட்டிருக்கிறது. ஏன் இப்படிக் குறைந்திருக்கிறது? கிராம குடி தண்ணீர் திட்டத்திற்காக 1965–66-ல் ரூ. 20,721 கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 1967–68-க்கு 10,000 ரூபாய் மட்டுமே கொடுத்திருக்கிறார்கள். இதை வைத்து கிராமக் குடி தண்ணீர் திட்டத்தை எப்படி நன்கு நடத்த முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு குடி தண்ணீர் திட்டத்திற்காக 10,000 ரூபாய் கொடுத்தால் எப்படி அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். பள்ளிக்கூட மான்யமாக 1965–66-ல் ரூ. 20,107 கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டு 1967–68-க்கு ரூ. 6,600 மட்டுமே கொடுத்திருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியன் ஒரு பள்ளிக்கூடத்தைக் கூட இந்த 6,600 ரூபாயில் கட்டி முடிக்க முடியாது. ஆகவே இதைக் கொண்டு எப்படி பள்ளிக்கூட கட்டடங்களை நன்கு கட்டி முடிக்க முடியும்? விவசாயத்திற்காக 1965–66-ல் ரூ. 55,761–92 கொடுத்திருக்கிறார்கள். ஆனால் 1967–68-ல் ரூ. 10,200 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிராமத்திலுள்ள விவசாயத்தை இதைக் கொண்டு எப்படிப் பெருக்க முடியும்? ஆகவே கொடுக்கக்கூடிய கிரண்ட்ஸ் குறைந்து கொண்டே வருகிறது. இப்படிக் குறைந்து கொண்டு போனால் கிராமங்களின் கதி என்னவது என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். கால் நடைப் பராமரிப்புக்கு 1966–67-ல் ரூ. 6,300 கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 1967–68-க்கு ரூ. 2,600 தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு எப்படி கால்நடைகளைப் பராமரிக்க முடியும்? அதுபோலவே எல்லா கிரண்ட்களும் குறைந்து கொண்டு வருகிறது. இப்படிச் சொல்லிக் கொண்டு போனால் போகலாம். ஆனால் எனக்கிருக்கிற நேரத்தில் என் பாயின்ட்ஸை சொல்ல வேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : முன்னால் நாம் இடைக்கால நிதி நிலை அறிக்கையைக் கொடுத்த போது 31—7—1967-ம் தேதியோடு **பிற் பகல்**
முடிவடையும் காலத்திற்குள்ள கணக்குகளை வைத்துக் கொண்டு பேசிக் **12-30**
கொண்டிருக்கிறார்கள். ஆண்டு முழுவதற்கும் உள்ள தொகையை இனிமேல்தான் கொடுக்க இருக்கிறோம் என்பதை உறுப்பினர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : அப்படியானால் நான் குறிப்பிட்டது மாதிரி 1965–66-ல் கொடுத்த மானியத்தைவிட 1966–67-ல் கொடுத்த மானியம் குறைந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம்? எப்படிக் குறைந்தது என்று அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். இப்படியே குறைந்து கொண்டே வருகிறது என்று தான் நினைக்கிறேன். கிராண்ட்டைக் கூட்டிக் கொடுப்பதாக இருந்தால்—இடைக்கால பட்ஜெட்டிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது, இனிமேல் கூட்டிக் கொடுக்கப் போகிறோம் என்றால்—கொடுக்கட்டும், அப்படிக் கூட்டிக் கொடுத்தால் கிராமங்களில் நல்ல வேலைகளைச் செய்ய முடியும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்பிகிறேன்.

இந்த பஞ்சாயத்து யூனியனைப் பற்றி, அதிலே உள்ள அதிகாரிகளையெல்லாம் எடுப்பது, அதிகாரிகளை எப்படி ஏற்படுத்துவது என்பதிலே குழப்படியாக எங்கும் இருக்கிறது. இதற்கு என்னுடைய கருத்து என்னவென்றால், பஞ்சாயத்து யூனியன் கருத்தரங்கு ஒன்றை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி, பஞ்சாயத்து யூனியனில் அனுபவம் உள்ளவர்களைக் கூட்டி, சட்ட மன்ற உறுப்பினர்களில் பஞ்சாயத்து யூனியன் சேர்மென்களாக இருக்கிறவர்களின் கருத்துக்களையும் கேட்டு, எப்படிச் செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தால் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களிலே இப்போது பஞ்சாயத்துத் தலைவர்கள் பணப் பொறுப்பு வைத்துக் கொண்டு வேலை செய்கிறார்கள். அதிலே பல குறைபாடுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, பஞ்சாயத்திலே இருக்கிற பணப் பொறுப்பு பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இல்லாமல் பஞ்சாயத்து யூனியனிலே வேலை செய்கிற கிராம சேவக்குகளைப் பஞ்சாயத்துக்கு எக்ஸிக்யூடிவ் ஆஃபீஸர்களாகப் போட்டு, நான்கு பஞ்சாயத்துக்களுக்குச் சேர்த்து ஒரு கிராம சேவக்கை எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீஸராகப் போட்டு, பணப் பொறுப்புக்களை அவர்களே ஏற்கக் கூடிய நிலையில் செய்தால் நன்றாக இருக்கும். இப்போது கிராம சேவக்குகள் எந்த வேலையும் பார்ப்பது கிடையாது. அவர்களுக்குப் பொறுப்பான வேலை ஏதாவது இருக்கிறதா என்றால், இல்லை. இந்த மாதிரி வேலையைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அடிக்கடி பஞ்சாயத்துத் தலைவர்கள் கையாடினார்கள், தப்புச் செய்தார்கள் என்ற நிலைமை இல்லாமல் இருக்கும். பஞ்சாயத்துத் தலைவர்கள் தங்களுடைய வேலையை நல்ல முறையில் செய்யக்கூடிய நிலைமை இருக்கும். பஞ்சாயத்து யூனியனிலே எப்படித் தீர்மானம் போட்டு வேலை நடக்கிறதோ, அதே மாதிரி பஞ்சாயத்துக்களிலே தீர்மானம் போட்டு வேலை நடக்கும்படி கிராம சேவக்குகளை எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீஸர்களாகப் போட்டு, அவர்களே வரவு–செலவு செய்யும்படி செய்தால் நன்றாக இருக்கும் என்று கூறிக் கொள்ளுகிறேன். பஞ்சாயத்து வரி வசூலை அவர்களே செய்யும்படி ஆர்டர் போட்டுவிட்டால் நன்றாக இருக்கும். இப்போது பஞ்சாயத்து வரி வசூலை ஹெட்மென்கள் செய்கிறார்கள். அவர்கள் அந்த வேலையைச் சரிவரச் செய்வதே இல்லை. எங்கு பார்த்தாலும் பாக்கியாக இருக்கிறது. ரெவின்யூ வரி வசூலை கவனிக்கிறார்களே தவிர பஞ்சாயத்து வரி வசூலை அவர்கள் சரியாகக் கவனிப்பதில்லை. ஆகவே, பஞ்சாயத்து வரி வசூல் தேங்கிக் கிடக்கிறது. பஞ்சாயத்தில் கிராம சேவக்குகளை விட்டு வசூல் செய்யும்படி ஆர்டர் போட்டு விட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

சோஷல் வொர்க்கர்ஸ் என்று போடப்பட்டிருக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்துக்கு இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எந்த வேலையும் பார்ப்பதில்லை. தினமும் தூங்கி எழுந்து கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் அரசாங்கத்திலே ஆட்களைப் சரி செய்யப் போட்டிருந்தார்கள். அவர்களை யெல்லாம் எடுத்துவிடலாம். அவர்களை ரிட்டையர் செய்து பென்ஷன் கொடுத்து அனுப்பி விடலாம் — அந்த மாதிரி ஆட்கள்தான் இருக்கிறார்கள். இவர்களை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனிலே இருக்கிற எக்ஸ்டென்ஷன் ஆஃபீஸர்கள் பூராவும் தேவையில்லை. இப்போது ஐந்து ஆஃபீஸர்கள் இருக்கிறார்கள். இரண்டு ஆஃபீஸர்கள் இருந்தால் போதும் — மூன்று பேர்களை எடுத்து விடலாம். இரண்டு பேர்களை மட்டும் வைத்துக் கொண்டு வேலை செய்யலாம்.

பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் இருக்கிறார். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் எப்படி இருக்கிறார் என்றால், ஒரு சில இடங்களில் அவர் பாதி சேர்மன் மாதிரி இருக்கிறார். பஞ்சாயத்து யூனியனில் ஏதாவது தகராறு என்றால், அவர் ஒரு கட்சியைப் பிடித்துக்கொள்வார். அவர் ஒரு கட்சியை நடத்துகிற மாதிரி இருக்கிறார். ஏன் இந்த மாதிரி இருக்கிறது என்றால், அதிகாரிகள் கையில் அதிகாரத்தைக் கொடுத்திருப்பதால்தான். பழைய ஜில்லா போர்டில் அப்படி இல்லை. காந்தி கண்ட கிராம ராஜ்யம் என்று சொன்னார்கள் — அதிகாரத்தை மக்களுக்குப் பிரித்துக் கொடுத்து மக்கள் கையில் அதிகாரம் இருக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் சேர்மனுடைய செக்ரட்டரி மாதிரி இருக்க வேண்டுமே தவிர, இவர்களுக்கு ஜாஸ்தி அதிகாரம் இருக்கக் கூடாது. அவர்களுடைய வேலை வரவு – செலவு செய்வது, ஆஃபீஸ் மெயின்டெயின் செய்வது ஆகிய அதோடு சரி என்று இருக்கும்படி செய்தால் அது மிகவும் நன்றாக இருக்கும் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

மாவட்ட அபிவிருத்தி கவுன்ஸிலுக்கு இப்போது கலெக்டர் சேர்மனாக இருக்கிறார். அது ஜனநாயகத்திற்கு முரண்பாடானது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கக் கூடாது. ஜனநாயகத்தில் ஜனநாயகப் பிரதிநிதிகள் தான் தலைவராக இருக்க வேண்டும். இதை இந்த அரசு ஜன பிரதிநிதிகளை மாற்றுவதற்கு யோசனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில தலைவர் ஒருவர் இருக்கிறார். அவர் இப்போது நியமனத்தில் இருக்கிறார். அதையும் எலெக்ஷன் முறையில் கொண்டுவந்தால் ஜனநாயகத்திற்குப் பொருத்தமாக இருக்கும். இந்த அரசு அதையும் உடனடியாக கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஸ் போகும் ரோடுகள் பஞ்சாயத்து யூனியனுக்கு இருக்கின்றன. அவைகளை ஒன்றுமே அபிவிருத்தி செய்ய முடியவில்லை. அந்த ரோடுகளிலே பஸ்ஸிலே போகிறவர்களெல்லாம் திட்டிக்கொண்டு போகக் கூடிய நிலைமை இருக்கிறது. அவைகளைச் சரி செய்யப் பணம் கிடையாது. பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள பஸ் போகும் ரோடுகளை சர்க்காரே எடுத்துக் கொண்டால்தான் அந்த ரோடுகள் அபிவிருத்தி அடைந்து கிராமங்கள் முன்னேற முடியுமே தவிர, பஞ்சாயத்து யூனியன்களிடம் விட்டால் ஒன்றும் பிரயோஜனம் இல்லை. அதையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு பாசனத்திற்கு 50 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறு பாசனம்தான் உணவுப் பற்றாக்குறையை நீக்க மிகவும் அவசியமாக இருக்கிறது. இந்த மாநிலம் பூராவுக்கும் 50 லட்சம் ரூபாயை வைத்துக் கொண்டு எப்படிச் சிறு பாசன வசதிகளைச் செப்பனிட முடியும்? இதற்கான தொகையைக் கூட்டி கிராமங்களில் உள்ள விவசாயத்தை நல்ல நிலைப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜீப் காரைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியனில் ஒரு ஜீப் இருக்கிறது. எப்போது கேட்டாலும் அது இருப்பதில்லை. அதை 10 நாட்கள் பஞ்சாயத்து யூனியனில் உபயோகப்படுத்த முடியாது. அதிகாரிகள் எடுத்துப் போய்விடுகிறார்கள். இதற்கு அதிகாரிகள் எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்ளலாம், பஞ்சாயத்து யூனியனில் எத்தனை நாட்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஆர்டர் போடவேண்டும். இல்லையென்றால், அதை எடுத்துவிடுவது நல்லது. சேர்மன் ஃபோன் பண்ணிக் கேட்டாலும், அதிகாரி எடுத்துக்கொண்டு போயிருக்கிறார். நான்கு நாட்கள் ஆயிற்று, 10 நாட்கள் ஆயிற்று என்று சொல்லுகிறார்கள். கமிஷனர் கேட்டாலும் எடுத்துக் கொண்டு போய்த் திரும்ப வருவதில்லை. அதை எடுத்துக்கொண்டு போய் மோசப்படுத்தி 3,000 ரூபாய், 4,000 ரூபாய் அளவுக்கு ரிப்பேர் செய்யும் நிலையில் வருகிறது. இந்த மாதிரி இருப்பதால் ஒரு கடுமையான ஆர்டர் போட்டு பஞ்சாயத்து யூனியனில் எத்தனை நாட்கள் இருக்க வேண்டும், அதிகாரிகளிடம் எத்தனை நாட்கள் இருக்க வேண்டும் என்று ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால் அதை எடுத்துவிடுவதே நல்லது என்று கூறிக்கொள்ளுகிறேன்.

இப்போது நான் சொன்ன கருத்துக்களுக்கு அமைச்சர் அவர்கள் பதில் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறிக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ம. பொ. சிவஞானம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள கதர், கிராமக் குடிசைத் தொழில் மானியத்தை முழுமனதோடு ஆதரிக்கிற முறையில் சில கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் திருக்குறளிலே துவங்கித் தன்னுடைய சொற்பொழிவை நடத்தியதற்கு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அவர்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கதர்க் கொள்கையை மிக அழுத்தம் திருத்தமாக வலியுறுத்திக் கூறினுர்கள். "கதர்–கிராமக் கைத் தொழில்களுக்கு இந்த அரசு எந்த வகையிலும் எதிரியல்ல என்பதை இந்த நேரத்தில் இம் மாமன்றத்தின் கவனத்திற்கு வைக்கிறேன். மாருக, இத் துறையில் ஏற்படும் வீண் விரயங்களைப் போக்கி, இலாபகர மானதாக்கி, இது எல்லா மக்களுக்கும் பொதுவானது என்னும் நிலையை உருவாக்க வேண்டுமென்பதே இந்த அரசின் எண்ணமாகும்" என்று அவர்கள் கொள்கைப் பிரகடனம் செய்திருக்கிருர்கள். இதை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். காங்கிரஸ் நண்பர்கள் இந்த நேரத்தில் இருந்து கேட்டிருந்தால் எனக்கு மகிழ்ச்சியாக இருந்திருக்கும்; துரதிருஷ்டவசமாக இருக்க முடியவில்லை. கதர் அபிமானி என்ற முறையில் இந்த அறிவிப்பை நான் வரவேற்கிறேன். காங்கிரஸ் வட்டத்திலிருந்து வெளியேறிய என்போன்ற பலர் கதர் வட்டத்திலிருந்து வெளியேருமல் இருக்கிருேம் என்ருல்—நான் நம்புகிறேன், அரசியலில் வேறுபட்டு மாறியிருந்தாலும் கூட—கதர் என்பது கட்சியின் சின்னமல்ல என்பதே இதற்குக் காரணம். என் போன்ற கதரில் நம்பிக்கை யுடையவர்களுக் காகத் தனது கொள்கையைத் தெளிவு படுத்திய திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவையைப் பாராட்டுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பலர் கதர் அணிபவர்களாக இருக்கிருர்கள்—குறிப்பாக, தி.மு.க.வின் திறமை மிக்க கொரடா அவர்கள் கதர் கட்டுகிருர்கள். பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள் ஒரு சமயம் கதர் அணிந்து மேடையிலே தோன்றியபோது, நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அவர்களுடைய "காகிதப்பூ" நாடகத்திலே, அவர்கள் கதர் அணிந்த கதாநாயகனுக நடித்தது நன்ருக இருந்தது. இன்னும் திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்கள் பலர் கதர் அணிந்து இருப்பதையும் பார்த்திருக்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த ஆண்டில் கதர் போர்டுக்கு கடன் கொடுத்த கணக்கைப் பார்த்தால், ஏற்கனவே ரூ. 9 லட்சமாக இருந்தது இப்பொழுது ரூ. 16 லட்சமாக இருக்கிறது. இன்றைக்கு அமைச்சர் அவர்களும் கொள்கைப் பிரகடனம் நல்ல முறையிலே கொடுத்திருப்பதும் கதர் வளர்ச்சிக்கு உதவியாக இருக்கிறது. ஏற்கனவேயே காங்கிரஸ் ஆட்சி இந்தத் துறையில் தவறு செய்திருக்கிறது. கதர் போர்டிலே, ஒன்று அதிகாரிகள் இருந்தார்கள்; அல்லது காங்கிரஸ் காரர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். காங்கிரஸுக்கு வெளியே உள்ள கதர் அபிமானிகள் அந்த போர்டில் இடம் பெருத நிலை நீண்ட நெடுநாளாகவே இருந்து வந்திருக்கிறது. மாண்புமிகு தேபர் கூட இப்பொழுதுதான் சொல்கிருர்கள். கதர் கட்சிச் சின்னம் இல்லை என்று. ஆனுல், நடைமுறையில்—20 ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில்—அது கட்சியின் சின்னமாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. இப்பொழுது அந்த போர்டில் உள்ளவர்கள், திறமை வாய்ந்தவர்கள்; நல்லவர்கள். ஆனுல், மேற்கொண்டு நியமிக்கப்படும்போது, கதர் அபிமானிகளையும், அதில் நியமிக்க வேண்டும். கட்சிச் சார்பிலுள்ளவர்கள் மட்டும் என்று இருக்கக் கூடாது.

போக்குவரத்துத் துறைப் பணியாளர்களுக்கு, கதர் கொடுப்பதை நிறுத்திய வகையில் ரூ. 2 லட்சம் சிக்கனம் என்றும், அதற்காகக் கதரை வாங்குவதில்லை என்றும் பத்திரிகையில் பார்த்தேன். கதர் கொடுப்பது அந்தத் துறையில் நின்று விட்டால், கதர் துணித் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆனுல் ஒன்று, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், ஏற்கனவே நடந்தது போல, தொடர்ந்து கதர் வாங்கிக் கொண்டுவர இசைந்து இருந்தால், நான் மனநிறைவு பெற்றிருப்பேன். ஆனுல், கதர் வாங்கியதை நிறுத்தியது குற்றம் என்று சொல்ல நான் விரும்பவில்லை. காரணம், காந்தியடிகளே கூட கருதியது என்னவென்ருல், யார் மீதும் திணிக்கப்படும் பொருள் அல்ல கதர் என்பதுதான். ஆனுல், இன்றைக்கு போக்குவரத்துத் தொழிலாளர் கதர்தான் வேண்டும் என்று

வற்புறுத்துவார்களேயானுல், பொதுப்பணித் துறை அமைச்சர் அதை அவர்களுக்கு மறுக்க மாட்டார்கள் என்றே நினைக்கிறேன். முதல் அமைச்சர் கூட யு. என். தேபரிடம், "விரும்புவோர்களுக்கு வழங்கத் தயாராக இருக்கிருேம்; மறுக்க மாட்டோம்" என்று குறிப்பிட்டார்களாம். சிக்கனம் செய்ய வேண்டும் என்று செய்திருக்கிருர்கள். ரூ. 2 லட்சம் சிக்கனம் என்கிருர்கள். சிக்கனத்தில் பெயர் பெற்ற பொதுப் பணித்துறை அமைச்சர், சிக்கனம் என்ற கோணத்தில் இருந்து மட்டும் அதைப் பார்க்கிருர்கள். அதே நேரத்திலே, சிக்கனம் செய்வது எல்லாத் துறையிலும் முடியாது என்பதையும் கவனிக்க வேண்டும். இருந்தாலும், இந்த ஆண்டில், அரசு மக்கள் விரும்பும் பட்ஜட்டைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக, பல துறைகளில் பழியை ஏற்றுக் கொண்டும் சிக்கனம் செய்ய வேண்டிய நிலையில் இருந்திருக்கிருர்கள். அதைக் குறைகூற விரும்பவில்லை. ஆனுல், அதே நேரத்தில், அரசின் முடிவால் பாதிக்கப்படுவோருக்கு நிவாரணமும் தேவை. குறிப்பாக அரசாங்கத்திற்கு சப்ளை செய்துகொண்டிருந்தது வெள்ளைக்கோயில் சர்க்கிளில் உற்பத்தி செய்யப்படும் கதர்தான். இப்பொழுது அது நிறுத்தப்பட்டால், சுமார் 2,000 பேர்கள் வேலை இழப்பார்கள் என்கிற தகவல் கிடைத்திருக்கிறது. அது உண்மையா என்பது எனக்குத் தெரியாது. அது உண்மையாக இருந்தால், உள்ளாட்சித் துறை அமைச்சரும், பொதுப்பணித் துறை அமைச்சரும், முதல் அமைச்சரும் அதைப் பற்றி யோசித்து, இந்த 2,000 பேர்களுக்கும் வேலை போகாத நிலைக்கு மாறுதல் ஏதாவது செய்ய வேண்டும். போக்குவரத்துத் தொழிலாளர்களுக்குக் கதருக்குப் பதிலாக கைத்தறித் துணி கொடுப்பதாகத் தீர்மானித்தால், வெள்ளக் கோயில் பகுதியிலிருந்து வாங்குவதாக இருந்தால், அவர்களே சப்ளை செய்ய முடியும் என்ற தகவலும் கிடைத்திருக்கிறது. ஆகவே, அந்த முறையிலும், உள்ளாட்சித் துறை அமைச்சரும், பொதுப்பணித் துறை அமைச்சரும், கலந்து பேசி, இந்த நிவாரணத்தை அவர்களுக்கு அளிக்க வழி காணவேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள் எடுத்துக் காட்டியது போல, கைத்தறித் துணிகளை வாங்குகிற நேரத்தில், இது வரையில் கதர் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் பஸ் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்காக, கைத்தறித் துணிகளை வழங்கிடுகிற அளவுக்குத் தயாராக இருந்தால், கைத்தறித் துணிகளை அவர்களிடம் வாங்குவதற்கு எந்த விதமான தடையும் இல்லை.

திரு. ம. பொ. சிவஞானம் : அமைச்சரவர்கள் ஆதரவான கருத்தைத் தெரிவித்ததற்காக மகிழ்ச்சி. எனக்குக் கிடைத்த தகவல் வரை அந்தக் கிராம தொழிலாளர்கள் கைத்தறி ஆடை வழங்கத் தயாராக இருக்கிருர்கள் என்று தான் கேள்விப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கதர் வேறு, கைத்தறி வேறு என்று நாம் நினைக்க முடியாது. கதரிலிருந்து வளர்ந்ததுதான் கைத்தறி. ஆலை நூல்களைக் கொண்டு கையால் நெய்யப் படுவது கைத்தறித் துணி; ஆலை நூலும் இல்லாமல், கையால் நூற்ற நூலைக்கொண்டு, கையாலே நெய்வது கதர். ஆரம்பத்தில், மானத்திற்கு உடை உடுத்த மக்கள் ஆரம்பித்த நாளில் கதர்தான் உடுத்தார்கள். பின்னுல் ஆலைகள் தோன்றின. ஆலை நூலைக் கொண்டு கைத்தறித் துணிகளை நெய்ய ஆரம்பித்தார்கள். அந்நிய ஆட்சி, கையால் நூற்கும் திறனை அடியோடு அழித்து விட்டது; அந்நியர்கள் திட்டமிட்டு சதி செய்ததால், தொழில் அழிந்தது, மறைந்து வந்த காலத்தில் கையால் நூற்ற நூலைக் கொண்டு கைத்தறியால் நெய்த துணி தோற்றுவிக்கப்பட்டது. அதன் பெயர்தான் கதர். கைத்தறிக்கும், இதற்கும் போட்டி யிருப்பதாக நான் நினைக்கவில்லை. உண்மையிலேயே இப்பொழுது கதர் அபிமானிகள் கதராடை கூட, உடன்பாடு இல்லாத இயந்திரமயமாக்கிக் கொண்டு வருகிருர்கள். சர்க்காவையே இன்றைக்கு கூடுமான வரையில் பெரிய இயந்திரத்திற்கு சமமாக வளர்த்துக் கொண்டு வருவதைப் பார்த்தால், கைத்தறிக்கும், கதருக்கும் போட்டியே இருக்க

வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். காந்தியடிகள் இருந்தால், கதர்த் தொழில் யந்திரமயமாவதை ஏற்பாரோ என்னவோ! இந்த நிலையில் அரசாங்கத்தின் கதர்க் கொள்கையை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

காங்கிரஸ் கட்சிகூட ஒரு தவறு செய்திருக்கிறது. இதனை காந்தியத்தை அறிந்தவன் என்ற நிலையில் சொல்லுகிறேன். காந்தியடிகள், ஆலைத் துணி ஆக்கிரமிப்பைத் தடுக்க, அந்த இடத்தைப் பூரணமாகப் பிடிக்க வேண்டும் என்று கதரைத் தோற்றுவித்தார்கள். ஆனால், 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் அது நிறைவேறவில்லை. கைத்தறித் தொழிலைக் காக்க கரை போட்ட வேட்டியையும், வண்ணச் சேலையையும் உற்பத்தி செய்வதனைக் கூடத் தறிக்கே விட்டுவிடவேண்டும் என்ற கொள்கையை, இந்த ராச்சியத்திலே முதல் அமைச்சராக இருந்த மதிப்பிற்குரிய ராஜாஜி வற்புறுத்தினார். அவர் காலத்தில் சட்ட மன்றத்திலே அந்தக் கோரிக்கைத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியும் கூட, டெல்லியில் அப்பொழுது இருந்த நிதி அமைச்சர் திரு. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல், ரிபேட் மூலம் கைத்தறியைப் பிழைக்க வைக்க முன் வந்தார்கள். • ஆலையில் உற்பத்தியாகும் துணிகளைத் தடுக்க மனமின்றி, காந்தியடிகளின் கொள்கை கைவிடப்பட்டது. கனரக இயந்திரங்கள் ராட்சச இயந்திரங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு, சுதேசிக் கொள்கை செயல் படுத்தப்படவில்லை. பிரகாசம் முதல் அமைச்சராக இருந்தபோது, கதரை வளர்க்க வேண்டும் என்று அவர் விரும்பினார். அன்றைக்கு தமிழக ஆலைகளுக்குக் கதிர்கள் ஒதுக்கப்பட்ட போது, "அது கதர் அபிவிருத்திக்குத் தடையான முயற்சி; அதை வாங்க மறுக்கிறேன்" என்று அவர் சொன்னார். அந்தக் கருத்திற்கு இசையாமல், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் அவரது ஆட்சியைக் கவிழ்த்தார்கள். காந்தியடிகளின் கொள்கை அடிப்படையில் செயல்பட்டிருந்தால், ராட்சச இயந்திரங்கள் இல்லாமல், சுத்த சுதேசி வளர்ச்சி யடைந்து, இன்றைக்கு நாடு முழுதும் கதர் அணிந்திருக்கும் நிலை காணக் கிடைக்கவில்லை. இன்றைக்கு என் போன்றவர்கள் கதர் அணிவது ஒரு சடங்காக ஆகிவிட்டது.

இந்தக் கதர் மானியத்தை ஆதரித்து, வரவேற்று, பொதுப்பணித் துறை அமைச்சர் சொன்ன கருத்து நிறைவேற்றப்படும் என்று நம்பி சில பல குறைபாடுகள் இருந்தாலும் வெள்ளக்கோவில் கிராமவாசிகளை உற்சாகப்படுத்தி, கதர் தேக்கத்தைப் போக்கி, கூடுமான வரையில் அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில் செயல்படவேண்டும் என்று அரசினரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எந்தத் துறையிலும் நஷ்டத்தை ஈடுசெய்ய "சப்ஸிடி", உதவி கொடுத்தே இயக்கிக்கொண்டிருப்பது, அதுவும் வாணிகமாகிவிட்ட தொழிலை அப்படிச் செய்வது சரி இல்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். நஷ்டமில்லாமல், தன்னைத்தான் சரிக்கட்டி, சுயதேவையைப் பூர்த்தி செய்யும் அளவிற்கு இருக்க வேண்டும். கதர் உற்பத்தித் துறையிலும் "சப்ஸிடி"யை நம்பியிருக்கக்கூடாது என்று கூறி இந்த மானியத்தை ஆதரிக்கிறேன்.

***திரு. வி. எஸ். கோவிந்தராசன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை வரவேற்று, ஆதரித்து, பாராட்டுகின்ற வகையில் என்னுடைய கருத்தினையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சென்னை மாநகராட்சிக்குத் தேவையான பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை வைத்து அதற்காகக் கோரப்பட்டிருக்கிற இந்த மானியக் கோரிக்கையை முற்றிலும், சென்னை மாநகர மக்களின் சார்பிலே வரவேற்றுப் பாராட்டுகிறேன். சென்னையில் ஏற்பட்டிருக்கிற ஜன நெருக்கடியையொட்டி ஆங்காங்கு விடுதிகள் அமைக்கவும், விபத்துக்கள் ஏற்படாமல் தடுத்து நிறுத்த ஆங்காங்கு சுரங்கப் பாதைகளை அமைக்கவும், குறுகலான பாலங்களை அகலப்படுத்தவும், அதே போல் மாநகராட்சி

மூன்றும், நான்காம் பிரிவுப் பணியாளர்களுக்கு குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்கும், பிராட்வேயில் உள்ள வெளியூர் பஸ் நிலையத்திற்கு மேம்பாடுகள் செய்வதற்கும், கேசவப் பிள்ளை பூங்காவில் மொத்த விற்பனை அங்காடி அமைப்பதற்கும், நகரத்திலே நீர் வழங்குவதற்கும், கழிவு நீரை அகற்றுவதற்கும், இப்படிப் பல நல்ல திட்டங்கள் இந்த மானியக் கோரிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கோரிக்கை பற்றி குறிப்பு ஒன்று தரப்பட்டிருப்பதில், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், மாநகராட்சியின் செலவுப் பொறுப்புக்களைக் குறைப்பதற்காக அரசு மாநகராட்சியின் மேற்பார்வையிலுள்ள மலைச்சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, வடக்குப் பெருஞ்சாலை, புதிய ஆவடி சாலை, சென்னை—எண்ணூர் சாலை ஆகிய இவைகளை மேற்கொண்டது என்று குறிப்பிட்டிருப்பது இன்றைய தமிழக அரசின் பெருந்தன்மையைக் காட்டுமே தவிர உண்மையானது அல்ல. உள்ளபடியே வேறு எந்த நோக்கத்திற்காக அது எடுத்துக்கொள்ளப்பட்டது என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கொண்டுவரப்பட்டது இந்த திட்டம், கடந்த கால காங்கிரஸ் ஆட்சியில் எந்தெந்த வகையிலே மாநகராட்சி பொறுப்புக்களை பறித்துக்கொள்ள முடியுமோ அந்தந்த வகையிலே பறித்துக் கொள்ளவும், அதிகாரங்களைக் குறைப்பதற்கும், மாநகராட்சியைக் கலைப்பதற்கும் உரிமை வேண்டுமென்ற சட்டத்தையும் கடந்த கால அரசு கேட்டது. அங்கே மாநகராட்சி மன்றத்திலே நிர்வாக பொறுப்பில் வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மாசு ஏற்பட வேண்டுமென்று செய்த தவறான பல்வேறு முறைகளில் இதுவும் ஒன்றாகும். மாநகராட்சி மன்றம் நெடுங்காலமாக நகரத்திலே உள்ள நெடுஞ்சாலை பராமரிப்பு செலவிற்கு இந்த நகரத்திலே விடப்படும் மோட்டார் வாகன வரியின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் பெறும் தொகையில் ஒரு கணிசமான அளவிற்குத் தர வேண்டுமென்று மாநகராட்சி கேட்டது. அதைத் தட்டிக் கழித்து அதே நேரத்தில் நீண்ட பெரும் சாலைகளைத் தன்னுடைய பொறுப்பிலே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்றுச் சொல்லி, மாநகராட்சி மன்றம் சரியாக நிர்வகிக்கவில்லை என்று மக்களுக்குக் காட்டும் வகையில் அந்த முறை கொண்டுவரப்பட்டது என்று பணிவன்போடு இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மாத்திரம் அல்ல. கடந்த கால காங்கிரஸ் கட்சி அரசு மாநகராட்சியின் மீது தொடுத்த கணைகளிலே முக்கியமானது, இந்த மாநகராட்சி மன்றம் எந்த சட்டதிட்டங்களின் அடிப்படையில் இயங்கி வருகிறதோ அதுவே முக்கியமாகும். வெள்ளை அறிக்கை என்ற பெயரிலே ஒரு அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு சட்டமாக்கப்பட்டது. உண்மையிலேயே அந்த அறிக்கை வெள்ளை அறிக்கை அல்ல. கொள்ளை அறிக்கை. அந்த அறிக்கைக்கு அரசு காட்டிய காரணம் "Decentralisation of powers" அதிகாரங்களை பரவலாக்குவது என்பது ஆகும். ஏற்கனவே உள்ள முறையில் ஏழு நிலை குழுக்கள் இயங்கிவந்தன. ஒவ்வொரு குழுவும் 7 பேர் கொண்டதாகும். முன்பு 49 பேர்களிடம் பரவலாக இருந்த அதிகாரம் இத் திட்டத்தின் மூலம் 3 பேர்களிடம் குவிந்தது. மேயர், ஆணையாளர், மத்தியக் குழுத் தலைவர் ஆக இந்த மூன்று பேர்களிடம் 49 பேர்கள் கையிலே இருந்த அதிகாரத்தைக் குவித்தது. அதற்குப் பெயர் வெள்ளை அறிக்கைத் திட்டம். இந்தத் திட்டத்தில் சில குழுக்களும் உண்டு. ஒன்று வேலை கொடுக்கும் குழு, இன்னொன்று ஒப்பந்தக் குழு. ஒப்பந்தக் குழுவிற்கு மேயர் தலைவராக இருக்க வேண்டும். இதன்படி குறிப்பிட்ட ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு, அந்த ஒப்பந்தம் மாநகராட்சி மன்றத்திற்கு வந்து பெரும்பான்மையான உறுப்பினர்களால் அது சரியான ஒப்பந்தம் அல்ல என்று மறுக்கப்பட்டால் அப்பொழுது மேயரின் அந்தஸ்து மரியாதை அவல நிலைக்கு ஆளாக்கப்படுகிறது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்காமல் அப்போதிருந்த ஆட்சியினால் நடப்பது நடக்கட்டும் என்று இத் திட்டம் புகுத்தப்பட்டது.

அது மாத்திரம் அல்ல. இந்தத் திட்டத்தில் வட்டக்குழு, மத்தியக் குழு என்று இரண்டு இருக்கின்றன. வட்டக்குழுவிற்குச் சில அதிகாரங்களும், பொறுப்புகளும் இருக்கின்றன. அதேபோன்று மத்தியக் குழுவிற்கும் சில அதிகாரங்களும், பொறுப்புகளும் இருக்கின்றன.

ஏற்கனவே, மாநகராட்சி மன்றத்தில், மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க வந்தால் அவைகளைக் கேட்பதற்கு ஒரு குறிப்பிட்ட இடத்திலே அதிகாரிகளை கண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடிந்தது. ஆனால் இப்போது மத்தியக் குழுவிலேயுள்ள அதிகாரிகளைக் கேட்டால் அது வட்டக்குழுவின் பொறுப்பு என்று தட்டிக் கழிக்கிறார்கள். வட்டக்குழுவிலே போய்க் கேட்டால் அது மத்தியக் குழுவின் பொறுப்பு என்று அவர்கள் சொல்லவும் இப்படி அதிகாரிகள் கூட தட்டிக் கழிப்பதற்குத் தக்க துணையாக அமைகிறது இந்த வெள்ளை அறிக்கை திட்டம் என்றும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

அது மாத்திரம் இல்லை. மூன்று பேர்கள் சென்னை நகரத்திலேயுள்ள நிர்வாகப் பணிகள், ஆணை ஒப்பந்தம் முடிவு செய்பவர்களாக ஆக்கி வைத்திருந்தால் அதற்குப் பின்னால் எப்படிப்பட்ட ஊழல்கள் நடைபெற அது உதவிகரமாக இருக்கும் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இதுபோன்ற முறைகளையெல்லாம் பார்த்து, அந்த வெள்ளையறிக்கைத் திட்டத்தை மாற்றி உடனடியாக மீண்டும் பழைய முறையை மாநகராட்சி மன்றத்தில் அமுலாக்குவதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று வைத்திருக்கிறார்கள். வேலை கொடுக்கிற வாய்ப்பு, மற்றக் காரியங்கள் ஆணையரிடத்தில் இருந்தது. இப்போது செகண்டரி கிரேடு டீச்சர்கள் வேலைக்கு வரவேண்டுமென்றால் சர்வீஸ் கமிஷன் தேர்வு எழுதி, தேர்வில் வெற்றி பெற்றால்தான் வேலை என்று இருக்கிறது. அந்த ஆசிரியர்கள் ஆசிரியர் பயிற்சி பெற்று தேர்வு அடைந்து வருகிறார்கள். ஆனால். அதையே அவமானப்படுத்துவதுபோல் இது இருக்கிறது. பல்வேறு தொழில்களுக்குப் பயிற்சி இருப்பதுபோல் ஆசிரியர் தொழிலுக்கும் ஒரு பயிற்சி இருக்கிறது. அதற்கென்று இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெற்றவர்கள் ஆசிரியர் வேலைக்கு வர மீண்டும் தேர்வு எழுதி அதில் தவறி விட்டார்கள் என்று வைத்துக்கொண்டால், அப்படிப்பட்ட நிலை வந்தால், இரண்டு ஆண்டு காலம் பயிற்சி பெற்றார்களே அதற்கு என்ன அர்த்தம். எனவே சர்வீஸ் கமிஷன் பரீட்சை வைக்கும் நிலைமாறி செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு சர்வீஸ் கமிஷன் தேவையில்லை என்று அதை எடுத்துவிட வேண்டும். எனவே அமைச்சரவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

வார்டுகள் திருத்தியமைப்பது பற்றி அண்மையில் அமைச்சரவர்கள்
பி. ப. 1-00 குறிப்பிட்டார்கள். 100 வார்டுகளை 120 வார்டுகளாக மாற்றப் போவதாகக் கூறினார்கள். இதை ஆணையர் கவனிப்பதாகச் சொன்னார்கள். இதில் ஒரு திருத்தத்தைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சென்னையிலே உள்ள சட்ட மன்ற உறுப்பினர்களையும், மேயர், மற்றவர்களையும் கொண்ட ஒரு குழுவாக அமைத்து, மற்ற நிலவரங்களையும் கலந்து ஆலோசித்து முடிவு செய்தால் இன்னும் கொஞ்சம் சிறப்பாக இருக்கும் என்பதை அவர்களுக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று மாநகராட்சி, மன்றத்தைப்பற்றி இங்கே நாம் பேசுகிறோம். மக்களுக்குக் குடி தண்ணீர் வழங்குவது, கழிவு நீரை அகற்றுவது போன்ற எல்லா வசதிகளையும் பெருக்குவதாக கூறுகிறோம். என்னுடைய தொகுதியில் உள்ள தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள் பெயரால் அமைந்துள்ள காலனியும் சர்மா நகர் என்ற தொழிலாளர் காலனியும் இருக்கின்றன. அதேபோன்று அயன்புரம் சதர்ன் ரயில்வே தொழிலாளர் காலனியிலும் உள்ளது. திரு.வி.க. காலனிக்கு நீர் வழங்கப்படவில்லை. இவ்வாறு நீர் வழங்கப்படாததற்குக் காரணம் மாநகராட்சி இந்தப் பொறுப்பை ஏற்கவில்லை என்று கூறப்படுகிறது. எனவே அவர்களுக்குக் குடி நீர் வழங்கும் காரியத்தை மாநகராட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற உத்தரவை நமது மாநில அரசு இடவேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். சதர்ன் ரயில்வே தொழிலாளர்கள் வாழும் அயன்புரம் பகுதியில் உள்ள அந்தத் தொழிலாளர்கள் ஓட்டுப் போடு

கிறார்கள். அவர்கள் ஓட்டுப்போட்டு தங்களுக்கென ஒரு மாநகராட்சி உறுப்பினரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சட்டமன்றத்திற்கு ஒரு உறுப்பினரை அனுப்புகிறார்கள். டெல்லி நாடாளுமன்றத்திற்கும் உறுப்பினரை அனுப்புகிறார்கள். இந்த மூன்று மன்றங்களுக்கும் உறுப்பினர்களை அனுப்பத்தான் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அவர்கள் இருக்கும் வீடுகள் வெள்ளைக்காரன் காலத்தில் கட்டப்பட்டது. சுகாதாரக் கேடு நிறைந்தது. கக்கூஸ்கள் மிகவும் மோசமாக உள்ளன. ஜெயிலிலே இருப்பதை விட மோசமாக, ஜெயிலிலே உள்ள "சிங்கிள் ரூம்" (shell) களைவிட மோசமாக அந்தக் காலனியில் இருக்கும் வீடுகள் உள்ளன. இடிந்துபோய் பாழடைந்து இருக்கின்றன. நம்முடைய அரசு ரயில்வே அதிகாரிகளுக்கு அறிவித்து, மாநில ஆட்சியே பொறுப்பேற்று, அந்தப் பொறுப்பை மாநகராட்சியிடம் நிர்வகிப்பதற்கு ஒப்படைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். நாட்டின் முதுகெலும்பு போன்ற அந்தத் தொழிலாள மக்கள் படுகிற அவதி கொஞ்சநஞ்சமல்ல. அந்த அவதிகளைப் போக்கி தொழிலாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்த நம்முடைய அரசு மாநகராட்சியிடம் அந்தப் பணியை ஒப்படைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இன்னொன்று, மற்ற இடங்களில் டி.டி.சி. மாவட்ட அபிவிருத்திக் குழு என்று இருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரையில் அம்மாதிரி இல்லை. மாவட்ட அபிவிருத்திக்குழு என்று இல்லாவிட்டாலும், நகர அபிவிருத்திக் குழு என்ற அளவிலே வைத்துச் சென்னையிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், கலெக்டர், கமிஷனர் இவர்களை வைத்து, நகரத்தின் நிலைமைகளைப் பரிசீலித்து, மேலும் பல திட்டங்களை உருவாக்கி நகர முன்னேற்றத்திற்குப் பாடுபட அப்படி ஒரு கமிட்டியை, டி.டி.சி. என்று இருப்பதை சி.டி.சி. என்று ஒரு கமிட்டியை உருவாக்குவதற்கு நமது அரசு முன் வரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாநகராட்சியைக் கலைக்கின்ற அதிகாரத்தைப் பழைய மாநில அரசு கொண்டு வந்தது. அது எந்த அளவிற்குத் தவறு என்பதை முன் கூட்டியே விளக்கியிருக்கிறேன். அந்த அதிகாரத்தை ரத்து செய்ய வேண்டுமென்றும் நம்முடைய அமைச்சரவர்களிடம் என்னுடைய தாழ்மையான இந்த வேண்டுகோளைச் சமர்ப்பித்துக்கொள்ளுகிறேன்.

அரசு நூலகங்கள் நகரசபைக் கட்டிடங்களில் இருக்கிறது. அதன் நிர்வாகம் அரசுக்கு இருக்கிறது. என்னுடைய சொந்த 50-வது வட்டத்திலே ஒரு நூலகம் இருக்கிறது. அந்த நூலகத்தின் இடத்தை நகரசபை நல்ல வேலி அமைத்து இடையில் பூங்காவும் வைத்து சிறப்பாக இருந்தது. இப்பொழுது அங்கு பழுது பார்ப்பது பற்றிக் கேட்டால் மாநகராட்சி கவனிக்கட்டும் என்று அரசும், அரசு அதைக் கவனிக்கட்டும் என்று மாநகராட்சியும் இருக்கிறது. இவை இரண்டும் கவனிக்காமல் அவை சீரழிந்து வெறும் கட்டிடம் மாத்திரம் இருக்கிறது. எனவே இந்த இரண்டுங்கெட்டான் தன்மையை நீக்கி நூலகத்தைச் சீராக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

***திரு. சி. கிருஷ்ணமூர்த்தி** : மாமன்றத் தலைவரவர்களே! இந்த **சமுதாய** வளர்ச்சி மானியத்தை ஆதரித்து என்னுடைய ஒருசில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள முன் வந்திருக்கிறேன். இன்று கிராமங்களுடைய முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கின்ற கிராமப் பஞ்சாயத்தும், நகரப்பஞ்சாயத்தும் கிராமத்தினுடைய இரு கண்களிலே ஒன்று என்று கருதப்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டு கண்களில் ஒன்று கூட்டுறவும், மற்றொன்று பஞ்சாயத்து என்ற முறையில் கிராமத்தின் முன்னேற்றத்திலே அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பஞ்சாயத்துக்கள் சில ஆண்டுகளாக, அரசியல் காரணமாக, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மிக மோசமான அளவில் கருதப்படுகிறது. அதையொட்டி புதிய சர்க்கார், புதிய அரசாங்கம் தீவிரமான நல்ல மாறுதல்களை ஏற்படுத்துவதற்கான. முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் நேரத்தில் அதை வரவேற்று ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஆரம்பக் கல்விக்கென்று டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆபீசரைப் போன்று யூனியன் லெவலில் தனியாகக் கல்வி அதிகாரியை நியமித்து, அவரிடம் ஆரம்பக் கல்விப் பொறுப்பை ஒப்படைத்தால், அந்த ஆரம்பக் கல்வி அரசியல்நோக்கம் அன்னியில், அரசியல்வாதிகளுடைய கையில் அகப்படாமல் நிர்வாகத் துறையில் நல்லமுறையில் பணி புரியும் என்ற எண்ணத்தோடு இந்தக் கருத்தைச் சொல்லுகிறேன்.

பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் இருக்கின்ற கூட்டுறவையும் அதிலிருந்து எடுத்து, சமுதாய நலத்திட்டம், விவசாயத் திட்டம், இந்த இரண்டு துறைகளில் அதிகமான கவனத்தைப் பஞ்சாயத்துக் கூட்டு மன்றம் கவனிப்பதற்கான முறையில் இந்த இரண்டு இலாகாவையும் அந்தப் பஞ்சாயத்து கூட்டு மன்றத்திலிருந்து விலக்கி, அதற்காக இருக்கின்ற தனி நிர்வாகத்திலே சேர்த்துவிடலாம் என்ற எண்ணத்தை நான் சொல்லுகிறேன்.

அடுத்து, நகரப் பஞ்சாயத்துக்களுக்கும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் மானியம் கொடுப்பதில் பாரபட்சம் இருக்கிறது. நகரப் பஞ்சாயத்து என்றால், அதிகமாக வருவாய் வருகின்ற நகரப் பஞ்சாயத்துக்களைக் குறிக்கவில்லை. ஐம்பதாயிரம், அறுபதாயிரம் ரூபாய் வருமானம் வருகின்ற நகரப் பஞ்சாயத்தைத்தான் குறிப்பிடுகிறேன். அத்தகைய நகரப் பஞ்சாயத்துக்குக் கிராமப் பஞ்சாயத்துக்குக் கிடைக்கக்கூடிய வசதிகள் கிடைக்கவில்லை. மானியங்கள் கிடைக்கவில்லை. ஆகையால், நகரப் பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில், 70,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் வருகிற நகரப் பஞ்சாயத்துக்களுக்கு மானியங்கள் தருவதற்கான முறையில் சட்டங்களைத் திருத்தியமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து வரிகளை இப்பொழுதுள்ள சர்க்கார் திடீரென்று போட்டுவிட்டது என்று நான் கருதவில்லை. இதற்கு முன்பிருந்த சர்க்கார் ஆண்டுக்கு ஒருமுறை வசூலிக்கவேண்டும் என்ற திட்டத்தின்படி தான் இப்பொழுது அங்கே உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. பழைய வழக்கம் போல், ஆண்டுக்கு இருமுறை வசூலிப்பதுதான் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வசதியாக இருக்கும். குறுவையில் பாதி, சம்பாவில் பாதி என்ற முறை இருக்கவேண்டும். ஆகையால் பழையபடி ஆண்டுக்கு இருமுறை வசூலிக்கவேண்டும் என்ற திட்டத்தை அமலாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், சமுதாய நலத்திட்டத்திலேயே ஒப்படைக்கப்பட்டு, அது கிராமப் புறங்களில் மிகவும் கேவலமான அளவிலே நடந்துக்கொண்டிருப்பதற்குக் காரணம், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக இயங்குகின்ற அதிகாரிகள், மாதமொன்றுக்கு இத்தனை பேர்களைக் குடும்பக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தே தீர வேண்டும் என்ற ஒரு எண்ணிக்கையை நிர்ணயித்திருப்பதுதான். அதன்படி, கல்யாணம் ஆகாதவர்களையும், சாமியார்களையும் கூடக் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு இலக்காக ஆக்கிவிடுகிறார்கள். குடும்பக் கட்டுப்பாட்டில் கொடுக்கப்படுகிற பணத்தை நடுத்தரகர்களிடம் (ப்ரோக்கர்கள்) இடம் கொடுப்பதை நிறுத்தி, மொத்தமாகக் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளுகிறவர்களுக்குக் குறைந்தது நூறு ரூபாய் என்ற முறையில் அளித்து, செய்து கொள்பவர்களுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலம் இந்தக் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தைக் குறித்து, பொதுமக்களிடத்தில் இருக்கும் பீதியையும், பரவலான தப்பபிப்ராயத்தையும் நீக்குவதற்கான நல்லதொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்தில் இருக்கின்ற ரோடுகளைப்பற்றி எனக்கு முன் பேசிய உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். நான் சொல்வது என்னவென்றால், ஒரு கிராமத்தில் ஆற்றங்கரையோரத்தில் இருக்கும் ரோடுகள்தான் அந்த கிராமத்திற்கு ரோடு வசதியாக இருக்கிறது. ஆனால் அதைப் பராமரிப்பது பொதுமராமத்து இலாக்காவா

அல்லது அங்கேயிருக்கின்ற பஞ்சாயத்துக் கூட்டுமன்றமா என்று தகராறு ஏற்படுகிற காரணத்தால் அந்த ரோடை இரண்டு பேர்களுமே செப்பனிட முடியாத அளவிற்கு இருக்கிறது. அத்தகைய ரோடுகளையெல்லாம் பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்திலேயே ஒப்படைக்க வேண்டும், அல்லது பஞ்சாயத்துக் கூட்டுமன்றத்திலிருந்து ரோடு இலாக்காப் பொறுப்பிலே இருக்கிறவர்கள் எடுத்துக்கொண்டு, கிராமத்திற்கு ரோடு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

கிராம நலத் திட்டத்தின் பேரால் பல கிராமங்களில் பல ஆண்டுகளாக லட்சக்கணக்கான ரூபாய்கள் பழைய அரசாங்கத்தில் சாங்ஷன் செய்யப்பட்ட பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதியில் வடுகக்குடி கிராமத்தில் 1962-வது ஆண்டில் நாலரை லட்சம் ரூபாயில் பாலம் கட்டுவதற்கான முயற்சிகளில் எல்லாவிதமான சாங்ஷன் செய்யப்பட்டும், கடைசியாக ஏதோ ஒரு அரசியல் காரணத்தால் அந்தப் பாலம் நிறுத்தப்பட்டு நாளைவரை அது கட்டப்படவில்லை. அத்தகைய பழைய காரியங்களையெல்லாம் எடுத்துப் பார்த்து, அரசியல் நோக்கு பழைய ஆட்சி காலத்தில் இருந்த காரணத்தால், செய்யப்பட்டதை நன்றாக விசாரித்து, அவைகளுக்கு உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று, இந்த மன்றத் தலைவர் அவர்கள் மூலமாக, அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இப்போது கதர் மானியத்தின்மீது என்னுடைய கருத்து என்னவென்பதைச் சொல்ல விரும்புகிறேன். நானும் ஒரு காலத்தில் 1942 ஆகஸ்டு போராட்டம் வரைக்கும் காங்கிரஸில் இருந்தேன். 1947 வரைக்கும் நான் சட்டை, வேட்டி, பனியன், துண்டு போன்ற எல்லாமே கதராகத்தான் உடுத்தி வந்தேன். அதற்குப் பிறகு நானே அதைத் தூக்கியெறிந்துவிட்டேன். இப்போது கதரைப் பார்க்கிறபோது, வெறுக்கிற அளவுக்கு ஒரு எண்ணம் வளர்ந்துவிட்டது. எந்த நோக்கத்திற்காக நாம் கதர் போட்டிருந்தோமோ அது முழுக்க முழுக்கப் பலன் அளிக்கவில்லை. கதரைப்பற்றி மகாத்மா காந்திஜி அவர்கள் என்ன சொல்லியுள்ளார்கள் என்பதைச் சற்றுக் கவனிக்க வேண்டும். "நாம் வெள்ளைக்கார ஆதிக்கத்தை ஒழிப்பதற்காக, வெளி நாடுகளிலிருந்து பிரம்மாண்டமான ஆலைகளிலிருந்து உற்பத்தியாகி வரக்கூடிய துணியைத் தடுப்பதற்காக வேண்டி, அவரவர்களே நூல் நூற்று அவரவர்களே துணியை நெய்துகொள்ள வேண்டுமென்று" காரணம் கூறினார்கள். ஆனால் இன்றைக்கு ஒருவரும் நூல் நூற்பது இல்லை— துணியும் நெய்வது இல்லை. ஆகவே, கதருக்காகச் செலவழிக்கின்ற பணம், அனுவசியமாக நடுத்தெருவில் தூக்கிப் போடுகின்ற மாதிரி வீணாகிக் கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள், "நாங்கள் கதருக்கு எதிரியில்லை" என்று ஒருவேளை காங்கிரசாருக்குப் பயந்துகொண்டு சொல்லுகிறார்களோ என்னவோ, தயவு தாட்சண்யம் இல்லாமல் அதைத் தூக்கியெறிந்துவிடுங்கள், இல்லாவிட்டால் கைத்தறி நெசவோடு சேர்த்துவிடுங்கள். கதர் இருக்கவேண்டிய அவசியமே இல்லை.

அடுத்து சமுதாய வளர்ச்சித் திட்டம். இந்த வளர்ச்சித் திட்டம் எந்த அளவுக்கு எந்த லட்சணத்தில் இருக்கின்றது என்று பார்க்கப்போனால் இன்றையதினம் எங்கு பார்த்தாலும், எதை எடுத்தாலும் ஊழல் மயமாக இருக்கிறது. கிணறு வெட்டுவதற்குப் பணம் தருகிறார்கள். அதற்கு இடையிலே எத்தனையோ தரகர்கள். பஞ்சாயத்து யூனியனிலே, பஞ்சாயத்து போர்டிலே ஏற்படக்கூடிய ஊழல்கள் கொஞ்சநஞ்சமல்ல. ரோடு போடுவதாக இருக்கும், கிணறு வெட்டுவதாக இருக்கும், எந்த அளவுக்கு வெட்டப்பட்டது, எவ்வளவு அடி ஆழம் வெட்டப்பட்டது, எவ்வளவு அடி இன்னும் வெட்டப்பட வேண்டும், என்பதாகப் பலவித ஊழல்கள் நிறைந்த அளவிலே இருக்கின்றன. ரோடு போட்டதாக இருக்கும்—ஆனால் உண்மை

யில் அந்த இடத்தில் ரோடே போடப்பட்டிருக்காது. கிணறு வெட்டியதாகக் கணக்கு இருக்கும்—கிணறு வெட்டப்பட்டிருக்காது—இப்படி ஏராளமான ஊழல்கள் வளர்ந்திருக்கின்றன.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். நடந்த 1967 பொதுத் தேர்தலிலேகூட பஞ்சாயத்து யூனியன் பணத்தை—எப்படி ரோடு போட்டதாக—கிணறு வெட்டியதாக—பல வேலைகள் செய்ததாக—தேர்தலிலே செலவு செய்யப்பட்டிருக்கிற ஒரு பஞ்சாயத்து யூனியனை நாம் காணலாம். நமது மதிப்பிற்குரிய நண்பர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களை எதிர்த்த காங்கிரஸ்காரர் நண்பர் ரகுபதி அவர்கள் பரங்கிமலை பஞ்சாயத்து யூனியன் தலைவர். அவர் பஞ்சாயத்து யூனியனின், ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் உள்ள பணத்தைத் தேர்தலில் செலவழித்ததாக ஒரு புகார் இருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 10, 12 எம்.எல்.ஏ.க்கள் சேர்ந்து ஒரு புகார் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. அமைச்சர் அவர்கள் கவனித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். "நான் உத்தரவு போட்டாகிவிட்டது. அது முறையாக வரும்." என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். உத்தரவு போட்டதற்குப் பிறகு எந்தமாதிரி வேலை நடக்கிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும். அதிகாரிகள் இதை இன்று மறுக்கக்கூடிய தன்மையிலே பங்கெடுத்துக் கொண்டு வேலை செய்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

நாம் பஞ்சாயத்துக்குச் சென்று கணக்கைப் பார்த்துவிட்டால் மட்டும் போதாது. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் சென்று பார்க்க வேண்டும். ரோடு போட்டதாக எழுதியிருந்தால், எங்கே போட்டிருக்கிறார்கள். எத்தனை பர்லாங் போடப்பட்டிருக்கிறது என்று பார்க்கவேண்டும். கிணறு வெட்டியிருப்பதாக கணக்கு இருந்தால், எந்தக் கிணறு, எவ்வளவு ஆழம் வெட்டப்பட்டிருக்கிறது, ஏன் இத்தனை அடி இன்னும் வெட்டப்படவில்லை என்பனவற்றையெல்லாம் நேராகச் சென்று பார்த்து பரிசீலிக்க வேண்டும். அடுத்தது கணக்குகளையும் பரிசீலித்தாகவேண்டும். பஞ்சாயத்து யூனியன் ரெகார்டில் எழுதப்பட்டுள்ள வேலைகள் நடைபெறவில்லையென்று சொன்னால் அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படி நேரடிப் பார்வையில்தான் இந்த ஊழலைப் போக்க முடியுமேதவிர, அதிகாரிகளை மட்டும் நம்பியிருப்பதன் மூலமாக அதற்குப் போதுமான அவகாசத்தையும் கொடுத்தவர்களாக ஆகிவிடுவோம். ரோடு போடாத இடத்தில் ரோடு போட்டதாகவும், கிணறு வெட்டாத இடத்தில் கிணறு வெட்டியிருப்பதாகவும் ரெகார்டில் இருக்கும். இவைகளுக்கெல்லாம் கொஞ்சம் அவகாசம் கொடுத்தால், அவசர அவசரமாக ரோடு போட்டு, கிணற்றையும் வெட்டி, ரெகார்டில் இருப்பதற்கு ஏற்றவாறு செய்துவிட்டு, ரெகார்டு பண்ணி காண்பித்துவிடுவார்கள். உடனே அமைச்சர் அவர்களும், "ஆமாம், ஆமாம் இதையெல்லாம் முடித்து இருக்கிறார்கள்" என்றுதான் சொல்வார். ஆகவேதான், இதுபோன்ற ஊழல்கள் பரங்கிமலைத் தொகுதியிலே மாத்திரமல்ல; பல தொகுதிகளிலும் இதுபோன்ற ஊழல்கள் நடந்திருக்கின்றன. இதுபோன்ற புகார்கள் வருமானால் லஞ்ச ஊழல், மோசடி வழக்கு, பணத்தைக் கையாடல், அவைகளை உடனடியாக விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும். "வயிற்றுக்கு இல்லாமல் ஐந்து, பத்து, திருடிவிட்டேன்" என்று சொன்னால், அதற்கு மூன்றுமாதம், ஆறுமாதம், ஒரு வருஷம் தண்டனை கொடுக்கிறார்களே, இம்மாதிரி ஊழல் செய்கிறவர்களுக்கு குறைந்தது பத்து வருஷ தண்டனையாவது கொடுக்கப்பட வேண்டும். அதிகாரிகளாக இருப்பவர்கள் பற்றற்றவர்களாகவும், தீவிர கவனம் செலுத்துபவர்களாகவும் இருக்கவேண்டும். அதுமாத்திரமல்ல, இன்றையதினம் நமக்குத் தெரியும், பல கிராமங்களில் ரோடு போடவேண்டுமென்று சொல்கிறார்கள். வேறு எந்த வேலை செய்யவில்லையென்று சொன்னாலும், ரோடு, குடிதண்ணீர், வைத்தியவசதி வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் பஞ்சாயத்துக்களிலே இவை உருப்படியாக நடைபெறுவதில்லை. குறிப்பாக ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டோடு சேர்ந்திருக்கிற பகுதிகளில் மோசமான நிலைமை நீடித்து

வருகிறது. திருத்தணி வட்டாரத்தில் மட்டும் அதற்கு ஸ்பெஷலாக பணத்தை ஒதுக்கி செலவு செய்திருக்கிறார்கள். குடிதண்ணீர், ரோடு வசதி போன்றவைகள் மற்ற கிராமங்களில் சரியான முறையில் செய்து கொடுக்கப்படவில்லை என்பதை இங்கே பலமுறை சுட்டிக்காட்டிச் சொல்லப்பட்டு வந்திருக்கிறது. வெட்டுத் தீர்மானத்திலும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கிராமங்களை நாம் உடனடியாகக் கவனிக்க வேண்டும். ரோடுகளைப் போடுவதற்காக பணவசதிகளை ஒதுக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன் ரோடு பூராவையுமே ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் எடுத்துக் கொண்டு, "மெட்டல் ரோட்" ஆக போடவேண்டும். அப்போதுதான் பஸ்கள் போவதற்கான வசதிகள் செய்வதற்கு வழி ஏற்படும். மத்திய சர்க்காரிலிருந்து உதவி அபிவிருத்தித் திட்டத்திற்காக பல கோடிக்கணக்கான ரூபாய் கொடுக்கிறார்கள். அதை நாம் வாங்குவதா, இல்லையா என்பதைச்சொல்லமுடியாது.

அடுத்தப்படியாக பின்தங்கிய பிரதேசங்களுக்கு—பின்தங்கிய வட்டாரங்களுக்கு எந்த அளவு உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்ற கண்ணோட்டத்தின் அடிப்படையில் நாம் செயலாற்ற வேண்டும். ஆந்திராவிலிருந்து தமிழ்நாட்டோடு சேர்ந்திருக்கக்கூடிய பிரதேசங்களுக்கு நல்ல ரோடு வசதியும், குடிதண்ணீர் வசதியும் அவசியம் செய்து கொடுத்து உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, சட்டத்திலே பஞ்சாயத்து யூனியன் ஆக்ட்டாக இருந்தாலும் சரி—பஞ்சாயத்து போர்டு ஆக்டாக இருந்தாலும் சரி, அதில் பலவற்றை மாற்ற வேண்டியிருக்கிறது. பஞ்சாயத்து போர்டில் ஏதோ ஊழல் இருக்கிறது, பணத்தைக் கையாண்டார்கள் என்று வழக்கு இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருகிறபோது, அவர்களுக்கு கூட்டங்களில் கலந்துகொள்ள உரிமை இருக்கிறதே தவிர, தீர்மானங்களின்மேல் ஓட்டளிக்கும் உரிமை இருக்கக் கூடாது. அவர்கள் முனிசிபல் கோர்ட்டுக்குப் போவார்கள்—ஹைகோர்ட்டில் ரிட் போடுவார்கள். அரசாங்கம் இதையெல்லாம் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். அந்த அளவுக்கு ஓட்டளிக்கக்கூடிய உரிமை இருக்கக் கூடாது. கோர்ட்டில் வேண்டுமானால் அதுபற்றிய விசாரணை நடத்தப்பட்டு, அவர்பேரில் தவறு இல்லை என்கிற அளவுக்கு தீர்ப்புக்கொடுக்கப்பட்டபின், அந்த அதிகாரத்தைக் கொடுக்கலாம். அதுவரையில் கூட்டத்தில் கலந்து கொள்ள உரிமை கொடுக்கலாமேதவிர ஓட்டளிக்க உரிமை கொடுக்கக் கூடாது. அது மட்டும் அல்ல, இன்னும் பல குறைகள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் களையக் கூடிய தன்மையில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து**: கனம் தலைவரவர்களே, இந்த மானியத்தின் பேரில் எனது சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். பொதுவாக கதர் என்பதைப்பற்றி பலர் பலவிதமாக அறிவித்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் கதரை நான் பொருளாதார கண்ணோட்டத்துடன்தான் பார்க்கிறேனே தவிர, காந்தியடிகள் சுதந்திரப் போராட்ட காலத்தில் ஆரம்பித்தார்கள் என்கிற கண்ணோட்டத்தோடு பார்ப்பதில்லை. இன்றைக்கு நம் நாட்டில் மிகக் குறைந்த வருவாய் உடைய மக்கள் கிராமப்புறங்களில் அதிகமாகக் கதர் தொழிலையே நம்பியிருக்கிறார்கள். வேறு வேலையே இல்லாத நிலைமையில், இதன் மூலமாவது கொஞ்சம் வருமானம் கிடைக்கிறது என்ற எண்ணத்தில் நூல் நூற்று வருகிறார்கள். கோயம்பத்தூர் மாவட்ட கிராமங்களில் பார்த்தால் தெரியும். இந்தத் தொழில் ஒன்றையே நம்பி ஜீவனம் நடத்தக்கூடியவர்கள் பல லட்சக் கணக்கில் இருக்கிறார்கள். ஆகவே இந்தத் தொழிலுக்கு நல்ல ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தர வேண்டுமென்ற எண்ணத்தை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பல இடங்களில் இன்றைக்கு கதர் போட்டுக்கொண்டால் ஏளனமாகப் பேசுகிற மக்களைக்கூடப் பார்க்கிறோம். நான் பல ஆண்டுகளாக கதர் போட்டுக்கொண்டு தான் வருகிறேன். இனியும் போட்டுக்கொண்டுதான் இருப்பேன். நான் காங்கிரசுக்கு எதிராகவே இருந்து வருபவன். கதர் போட்டுக்கொள்கிறவர்களை

[illegible]

1967 ஜூலை 13] [திரு. எ. ஆர். மாரிமுத்து]

பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கும் முறையை ஏற்படுத்தியாகவேண்டும். இன்று இருக்கக்கூடிய முறை மிகவும் மோசமானதாகும். எத்தனை கொலைகள், எத்தனை சண்டைகள், இன்னும் அந்தச் சண்டைகளின் விளைவாக பேச்சு வார்த்தைகள்கூட ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, இன்றுள்ள முறையை மாற்றி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

புதிதாக அமைக்கப்பட்ட நகரசபைகளுக்கு தேர்தல் நடக்காமல் இருக்கிறது. ஸ்பெஷல் ஆபீசர்கள் எக்கச்சக்கமாக டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். சிங்காநல்லூர், பட்டுக்கோட்டை போன்ற பகுதிகளைப் பற்றி எனக்குத் தெரியும். ஆகவே, உடனடியாக அந்தத் தேர்தலை நடத்தி போடப்பட்டுள்ள வரிகளைப் பற்றி புனர் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செப்பனிடப்பட்ட ஏரிகளைப் பஞ்சாயத்து யூனியன்களிடம் ஒப்படைப்பது பற்றிச் சொன்னார்கள். அவற்றை அந்த அந்தப் பஞ்சாயத்துகளிடமே விடவேண்டுமே தவிர யூனியன்களிடம் விடக்கூடாது. அவர்களால் சரியான முறையில் கண்காணிக்கவும் முடியாது.

எனது தொகுதியில் பாப்பாநாடு-சோழகன்கரை ரோடில் ஒரு பாலம் செப்பனிடப்படவேண்டும். இது பத்து கிராமங்களின் ரோடு இணைப்பைப் பெற்றுள்ளது. நெல் கொண்டுபோகும் வசதி இதனால் பாதிக்கப்படுகிறது. எஸ்டிமேட் எல்லாம் போட்டு வந்திருக்கிறது. வெள்ளத்தினால் சேதம் அடைந்தது. இதையும் கட்ட முயற்சிக்கவேண்டும். கிராமப்புறங்களிலே ரோடு வசதிகள் சரியாக இல்லை. ரோடுகளை அமைப்பதற்குப் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நிதிவசதிகள் போதுமானதாக இல்லை. ரோடு வசதிகளைச் செய்வதற்கு அவர்கள் இப்பொழுது கொடுக்கப்படுகிற நிதி வசதியைக்கொண்டு ரோடுகளை சரியான முறையில் டெவலப் பண்ண முடியவில்லை. பஞ்சாயத்துப் பகுதிகளோ நிறைய வாய்க்கால்கள் இருக்கக் கூடிய பகுதிகளாக இருக்கின்றன. ஆகவே, ரோடு வசதிகளை அதிகப் படுத்தவேண்டுமென்றால் நிறைய கல்வெர்ட்ஸ், பாலங்கள் எல்லாம் கட்டப் பட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதுவும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்கப் படுகிற நிதி வசதிகளை வைத்துக்கொண்டு ரோடு வேலைகளில் பாதிதான் செய்ய முடியும். ஆகவே நிறைய நிதி வசதிகள் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் தானியங்களை, நெல் போன்ற தானியங்களையும், விவசாயத்திற்கு வேண்டிய உரங்களையும் கூடுமான வரையில் சுலபமாகக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தவரையிலாவது தனியாகக் கவனஞ் செலுத்தி, பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிகமான நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பி.ப. 1–30

மாண்புமிகு தலைவர் (திரு. சி. மலைச்சாமி): இத்துடன் பேரவை கலைந்து மீண்டும் மாலை நான்கு மணிக்குக் கூடும். வணக்கம்.

(பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.)

பி.ப. 1–30

பேரவை மீண்டும் மாலை 4-மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தலைமையில் கூடியது.

6. அறிவிப்பு.

அண்ணாமலை பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்காக (Annamalai University Senate) இருவருடைய பெயர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளன. முறைப்படி நியமனம் செய்யப்

[பேரவைத் தலைவர்] [1967 ஜுலை 13

பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது இரண்டு என்பதால், அல்ஹாஜ் ம.மு. பீர்முஹம்மது, திரு. என். ராஜாங்கம் ஆகிய இரு வேட்பாளர்களும் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.

5. 1967-68-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

*** திரு. ஏ. அ. சுப்பராஜா :** சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நகராட்சி சம்பந்தமாக நகராட்சித்தலைவர் என்ற முறையில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

டவுன் பிளானிங் ஸ்கீம் என்பது ஒரு பெரிய தலைவலி. அந்த ஸ்கீம் ஒரு நல்ல திட்டந்தான். இனிமேல் வளரக்கூடிய இடத்தில் அந்த ஸ்கீமைப் போட்டுவிட்டால் பிற்காலத்தில் புதிதாகக் கட்டக்கூடியவர்களுக்கு நல்ல விதத்தில் சட்டதிட்டத்தைப் போட்டு புகுத்திக் கொள்ளலாம். பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு டவுன் பிளானிங் ஸ்கீம் ஏரியா என்று ஃபிக்ஸ் செய்தார்கள். பரம்பரையாக ஏழைகள் வீடு கட்டி இருக்கக் கூடிய இடங்கள் அந்த ஸ்கீமுக்குள் வந்து விடுகிறது. அவனுக்குப் பாட்டனார் காலத்தில் சம்பாதித்த சொத்து இருக்கும். 1 செண்ட், 2 செண்ட் என்று அவர்கள் பிரித்துக் கொள்ளுகிறார்கள். இந்த ஸ்கீம்படி வீடு கட்ட வேண்டுமென்றால் குறைந்த அளவு இத்தனை சதுர அடி இருக்க வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. அந்த அளவுக்கு நிலம் இல்லையென்றால் அவ்வாறு குறைந்த அளவு நிலம் வைத்திருக்கக்கூடிய, பரம்பரையாக வைத்திருக்கக்கூடிய ஏழைகள் அந்த நிலத்தினைப் பக்கத்தில் இருக்கக்கூடிய பணக்கார்ர்களுக்கு விற்றுவிட வேண்டிய நிலை இருக்கிறது. இது சோஷலிசக் கொள்கைக்கே இடையூறாக இருக்கிறது. ஏழைகள் ரொம்பக்கஷ்டப்படுகிறார்கள்.

ஒரு இடத்தை இந்த ஸ்கீமில் எடுத்துக் கொள்வது என்பதைப் பற்றி முதலில் Town-Planning Scheme area என்று "நோடிபை" பண்ணிவிடுகிறார்கள். அது கவர்ன்மெண்ட் சாங்ஷன் ஆகி வருவதற்குள் 10 வருஷங்கள் ஆகிவிடுகிறது. அந்தப் பகுதியில் "அன்-ஆதரைஸ்டு கன்ஸ்ட்ரக்ஷன்" நடந்தால், அதை நிறுத்தப் போனால் சட்டப்படியாக இடிக்க முடியாது. அது டவுன் பிளானிங் ஏரியாதான். ஆயினும் கோர்ட்டுக்குப் போக இடம் உண்டு. இடிக்க முடியாது. இதற்காக இப்படிப் பலதரப்பட்ட சட்டங்களைப் போட்டும் திறமையாகச் செயல்பட முடியாமல் போய்விட்டது. இதைப் பற்றி மந்திரியவர்களிடம் என்னைப் போன்ற நகர சபைத் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து எடுத்துக் கூறினோம். அவர்களும் சில திட்டங்களைக் கூறினார்கள். பரம்பரையாக உள்ள இடத்தையெல்லாம் "பில்ட் அப் ஏரியா" என்று ஒதுக்கிவிட்டு மீதி ஏரியாவை இந்த ஸ்கீமின் கீழ் எடுத்துச் செய்யலாம் என்று நல்ல முறையில் அவர்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். ரோட்டின் மேல் எல்லாம் வீடு கட்டுவதைச் சகிக்கக்கூடாது. அப்படி வீடுகள் கட்டுவதை எல்லாம் நடவடிக்கை எடுக்காமல் விட்டு விட்டு, ஏழைகள் தங்களுக்கு இருக்கின்ற குறைந்த அளவு நிலத்தில் வீடு கட்டும் போது "அரை அடி குறைகிறது" என்று சொல்லி லைசென்ஸைக் கான்ஸல் பண்ணுவது சரியல்ல. இந்த "மாதிரி கான்டினுவஸ் அஃபென்ஸ்" என்று தினமும் கோர்ட்டுக்கு போக இருக்கிற காரணத்தால் முனிசிபல் தலைவர்களுக்கெல்லாம் இரண்டு பெண்டாட்டிக்காரன் கதையாகத்தான் இருக்கிறது. இந்த நிலைமை பெரிய தலைவலியாக இருக்கிறது. சட்டம் இருந்தால்கூட ஏழைகளுக்கு புரியவில்லை. நகரசபைத் தலைவர்கள் சொன்னால் செய்து விடலாம் என்ற நம்பிக்கை; அந்த அளவுக்கு இருக்கிறார்கள். இதையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் திருத்த வேண்டும். இந்த ஸ்கீம் ஏரியாக்களாக வீடுகள் இருக்கிற இடத்தை விட்டு விட்டு, வீடுகள் இல்லாத இடங்களை எடுத்துக் கொண்டு (Scheme) விதி முறைகளை "ஸ்ட்ரிக்ட்" ஆகச் செய்யவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

1967 ஜுலை 13] [திரு. ஏ. அ. சுப்பராஜா]

பில்டிங் ரூல்ஸ் படி நாலு அடி முன்னால் இருக்கவேண்டும், 10 அடி பின்னால் இருக்கவேண்டும் என்று இருக்கிறது. அதைத் தப்பு என்று சொல்லவில்லை ; நடைமுறைக்குச் சாத்தியமாக இல்லை. இந்த Scheme ஏரியாக்களில் குடிசைகள் போடக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் டவுன் பிளானிங் ஸ்கீம் ஏரியாக்களில் அதற்கும் எக்ஸெம்ஷன் கொடுக்கிறார்கள். "பெரிய பணக்காரர்களுக்கு எக்ஸெம்ஷன் கொடுக்கிறார்கள்; நாங்கள் கட்டக்கூடாதா ?" என்று ஏழைகள் கேட்கிறார்கள். இதையெல்லாம் பற்றிப் பரிசீலித்து நல்ல முறையில் மாற்ற எல்லா நகரசபைத் தலைவர்களையும் அழைத்துப் பேசி நல்ல முறைகளைக் காண வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்சேஷன் பற்றி ஒரு வார்த்தை. டாக்சேஷன் கமிட்டிக்கு ஃபுல் பவர் இருக்கிறது ; இருக்கவேண்டியதுதான். ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை குவின்குவினியல் விசாரணையும் நடக்கிறது. இந்த மாதிரி டாக்சேஷன் போடும்போது பெரிய தொழிற்சாலைகளைப் பொருத்தவரை அரசாங்கமே தனியாக இவ்வளவு டாக்ஸ்கட்ட வேண்டுமென்று கூறி வசூலிப்பது நல்லது. பத்து பதினைந்து லட்சம் லாபம் கிடைக்கும் இடத்தில், பெருமளவு இன்கம்டாக்ஸ் எல்லாம் கட்டும்போது இதைக் கொடுப்பதிலே அவர்களுக்கு ஒன்றும் கஷ்டம் இருக்காது. நகரசபை அவர்களுக்கு டாக்ஸ் போட்டால் கூட அவர்கள் அதை இன்கம்டாக்சில் கழித்துக் கொள்ளக் கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதே போன்று "ப்ளேஸ் ஆஃப் பிசினஸ்"-க்கும் நல்ல விதத்தில் வரிகளைப் போட்டு வசூலிக்கலாம். இண்டஸ்ட்ரிஸ் நஷ்டத்தில் ஓடினால் அவ்வாறு வரிகளை அவர்கள் மேல் திணிக்க வேண்டிய அவசியமில்லை. லாபத்தில் ஓடக்கூடியவற்றைப் பொருத்தவரை இன்கம் டாக்ஸ் வசூலிப்பதை பலவிதத்தில் போகக்கூடிய பணம் அந்தந்த நகர சபைக்கும் வந்தால் உதவியாக இருக்கும் என்ற காரணத்தால் இது பற்றியும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சானிடரி ஆபிசர்களைப் பொருத்தவரை அவர்கள் "குவாலிபைடு பர்ஸன்ஸ்" ஆக இருக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ரோட்ஸ் கிராண்ட் அதிகமாகத் தரவேண்டும். முனிசிபல் ரோடுகளில் முக்கியமானவற்றை—சந்துகளை எடுக்க வேண்டியதில்லை—மற்றுமுள்ள முக்கிய சாலைகளை முனிசிபாலிடியிலிருந்து தீர்மானித்த உடனே ஸ்டேட் ஹைவேஸில் சேர்த்து நல்ல விதத்தில் ரோடுகளைப் போடுவதற்கு வழி செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயம் பரவலாக இருந்து வருகிறது.

தேர்தலைப் பொருத்தவரை சேர்மன் தேர்தல்—என்னைப் பொருத்தமட்டில் சொல்லவில்லை ; தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை—பொதுவாக ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற முறையில் அமையவேண்டும். கவுன்சிலர்களைத் தூக்கிப் போவது, பஞ்சாயத்து மெம்பர்களைத் தூக்கிப் போவது என்ற நிலைமை இருக்கக்கூடாது. அவ்வாறு தூக்கிச் செல்லப்பட்ட கவுன்சிலரின் மனைவி "பெட்டிஷன்" போடுகிறார். இதனால் போலீசாருக்கு வேலை, செலவு, அரசாங்கத்திற்குச் செலவு. இதையெல்லாம் உத்தேசித்துப் பார்க்கும்போது அமெரிக்கன் பிரசிடெண்ட் போல் நகரசபைத் தலைவர்களையும் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களையும் டைரக்ட் எலக்ஷன் மூலம் தேர்ந்தெடுப்பது நல்லது என்று தோன்றுகிறது. மீதி இருக்கிற கவுன்சிலர்கள் ஒரு "செக்"-பிருன்ஷியல் சம்பந்தமானவைகள் எல்லாம் அவர்கள் பார்த்துத்தான் போக வேண்டும் என்று இருக்கவேண்டும்.

விவசாயிகள் எந்த நேரத்தில் வேலைக்குப் போகிறார்களோ அந்த நேரத்தில்தான் பி.டி.ஓ.க்கள் இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிறார்கள். விவசாயிகள் காலையில் 5 மணிக்கு விவசாயத்திற்குப் போனால் சாயங்காலம் 7 மணிக்குத்தான் திரும்புவார்கள். இவர்கள் இன்ஸ்பெக்ஷன் போவது மத்தியானம் 2 மணிக்கு. இதனால் வீண் பெட்ரோல் செலவுதான். சமூக ஊழியர்கள் என்று சொல்லி தியாகிகள் பிள்ளைகளைப் போட்டுத் தண்டச் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. திரு. கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள்கூடச் சொன்னார்கள். இப்போது மந்திரிகளுக்கே ஜபர்தஸ்து இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்தவுடன் மந்திரிகள் பின்னால் போலீஸ்காரர்கள் வருவதில்லை. ஆனால் இந்த பி.டி.ஓ.-க்கள் பின்னால்

தான் பெரிய ஜபர்தஸ்தாக இருக்கிறது. அப்பேர்ப்பட்ட நிலை இன்று இருந்து கொண்டிருக்கிறது. ஜீப்பை கொடுக்கப்படாமல் இருந்தாலும் பரவாயில்லை. இரவில் கிராமங்களில் அதிகாரிகள் தங்கவேண்டும். அவர்கள் கிராம மக்களோடு தொடர்பு கொள்ளவேண்டும். அப்போதுதான் பஞ்சாயத்தின் உள்நோக்கம் நிறைவேறும். இந்த Bone Collection Officers சமூக ஊழியர்கள் எல்லாவற்றையும் எடுத்துவிட்டு அந்தப் பணத்தைக் கொண்டு நன்கு பஞ்சாயத்துக்களை நடத்தமுடியும். எங்களைப் போன்ற சேர்மன்கள், சட்டசபை உறுப்பினராக உள்ளவர்கள்—தப்புத் தவறு செய்பவர்களைப் பற்றிச் சொல்லவில்லை—இவர்கள் சொல்வது சரியாக இருக்கிறது என்றால் அதைப் பரிசீலனை செய்துபார்த்து ஆவன செய்ய வேண்டும். அமைச்சர்களுக்கு எவ்வளவோ வேலைகள் உள்ளன. அவர்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும், ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று பார்ப்பது என்பது கஷ்டம். ஆகவே, எங்களைப் போன்றவர்கள் நல்லதைச் சொன்னால் அதைப் பரிசீலித்து எங்களுக்கு ஆறுதல்கூறி மக்களையும் திருப்திப்படச் செய்யவேண்டும். கடைசியாக அமைச்சர் அவர்களிடம் ஒன்று தெரிவித்துக் கொள்கிறேன். டவுன் ப்ளானிங் ஸ்கீம்ஸ் பில்டிங் ரூல்ஸ் பற்றி தலைவர்களையெல்லாம் அழைத்து அவர்கள் அபிப்பிராயங்களைக் கேட்டு, அவர்களின் அனுபவத்தைக் கேட்டறிந்து அவர்கள் கஷ்டங்களை அறிந்து நல்லதொரு முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சியில் எக்ஸெம்ஷன் கொடுத்திருக்கிறார்கள் முன்னால். ரோடில் கட்டியிருப்பது பற்றி சொல்லவில்லை. வீடுகளில் அரை அடி, ஒரு அடி போன்றவற்றிற்கு எக்ஸெம்ஷன் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு பொதுவாக இதை வரவேற்று முடித்துக்கொள்கிறேன்.

***திரு. பி. என். பரமசிவ கவுண்டர் :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கதர் திட்டத்திற்கு கோரப்படும் மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் எதிர்கட்சியிலும் நாட்டிலும் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கதர் திட்டத்தை ஒழுங்காக நடத்தப் போகிறார்களா, ஒழுங்காக நடத்தப் போவதில்லை, ஆகவே அதனால் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இழக்கப் போகிறார்கள், ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலை இழந்து தவிக்கப் போகிறார்கள் என்று பொய்ப் பிரசாரம் கிளப்பிவிட்டிருந்தார்கள். நான் கதர் போர்ட் உப தலைவன் என்ற முறையில் தேபர் அவர்களை வரவேற்கச் சென்றபோது திரு. தேபர் அவர்கள் தமிழக முதல் அமைச்சர் அவர்கள் இதை பொலிட்டிக்கல் ஃபாட் என்று சொல்லிவிட்டார்கள், ஆகவே இவர்கள் இதை ஒழுங்காக நடத்தப் போவதில்லை, அப்படி நடத்தவில்லை என்றால் ஆயிரக்கணக்கானவர்கள் தவிக்க நேரிடும் என்று பேசிக் கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் நான் சொன்னேன், எங்கள் மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள் "பொலிட்டிகல் ஃபாட்" அரசியல் கிறுக்கு என்று சொல்லவில்லை, காங்கிரஸ் கட்சியினர் தங்கள் சொந்தமான சின்னமாக அதை உபயோகப்படுத்திக் கொண்டார்கள் என்றுதான் சொன்னார்கள், அசெம்பளியில்கூட சொல்லியிருக்கிறார்கள், ஆகவே அதைப்பற்றி யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. நீங்கள் எங்கள் முதல் அமைச்சர் அவர்களைச் சந்தித்து பேசினால் இந்தத் திட்டம் அல்ல எந்த திட்டமானாலும் அது ஏழை மக்களுக்கு நன்மை பயக்கும் என்று தெரிந்தால் கண்டிப்பாக அவர்கள் அதற்கு ஆவன செய்வார்கள், ஆகவே எந்த கசப்பு உணர்ச்சியும் இல்லாமல் நல்ல மனதுடன் சென்று எங்கள் முதல் அமைச்சர் அவர்களை சந்தித்துப் பேசுங்கள் என்று சொன்னேன்.

அந்த முறையில் இந்தத் திட்டத்தைப் பற்றி நம் அரசாங்கம் எடுத்துள்ள கொள்கையை சொல்வதற்குள்ளாக இப்படி ஒரு கசப்பை ஏற்படுத்திவிட்டிருக்கும் நேரத்தில் நம் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை ஒழுங்கான முறையில் சீர்படுத்தி மக்களுக்கு நன்மை செய்யும் முறையில் செயல்படுத்தப் போகிறோம் என்று சொன்னதை வரவேற்கிறேன். அடுத்தப்படியாக, இதை அரசியல் கண்ணோட்டத்துடன் பார்க்காமல் மனிதாபிமான நோக்கோடு பார்த்து இதை

நல்லமுறையில் நம் அரசு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று நம் முக்கியமான பிரச்சினை உணவுப் பிரச்சினை. உணவுப் பிரச்சினை ஒழியவேண்டுமென்றால் உற்பத்தியாளர்களுக்கு, குடியானவர்களுக்கு குடித்தனம் கட்டுப்படியானதாக இருக்கவேண்டும். அதில் நாம் அக்கறை செலுத்தவேண்டும். அப்படி கட்டுபடியாக இருக்கவேண்டுமென்றால் இன்று விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள மக்கள் 72 சதவீதம் என்றிருக்காமல் அதை 50 சதவீதம் ஆக குறைக்கப்பட்டு மற்றுள்ளவர்களுக்கு வேறு வேலைவாய்ப்புகள் தர ஏற்பாடு செய்யவேண்டும். அப்படி அவர்களுக்கு வேறு வேலைவாய்ப்பு தரக்கூடிய ஒரே ஒரு தொழில் கதர், கிராமக் கைத்தொழிலாகத்தான் இருக்க முடியும். இன்று பயிர் தொழிலில் புது முறைகளை புகுத்த ஆசைப்படுகிறோம். அது கூட கூடிய சீக்கிரத்தில் நடைபெறப் போவதில்லை. இன்னும் வெகு காலத்திற்கு பயிர் தொழிலுக்கு உப தொழிலாக இந்த கதர் கிராமக் கைத்தொழில்கள்தான் இருக்க முடியும். இன்றுள்ள மற்றொரு முக்கிய பிரச்சினை, கதர் அதிகமாக நம்மிடம் தேங்கிக் கிடக்கிறது. வருடா வருடம் உள்ளதை விட இன்று 50 லட்சம் ரூபாய் மதிப்பிற்கு அதிகமான கதர் தேங்கி கிடக்கிறது. இன்றைய சூழ்நிலையில் கதர் மட்டுமல்ல, கைத்தறித் துணி, மில் துணி போன்றவை கூட அப்படித்தான் தேங்கிக் கிடக்கிறது. திரு. தேபர் அவர்களை சந்தித்தபோது மத்திய அரசாங்கம் நம் நூற்பாளர்கள் நூற்கும் நூலில் பாதியை எடுத்துக்கொண்டு அதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். கதர் தேங்கிவிட்டால் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை இழந்து தவிக்கக் கூடும், ஆகவே அதற்கு நீங்கள் ஒரு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். அவர்களும் செய்கிறேன் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அடுத்தபடியாக, கதருக்கும் கைத்தறிக்கும் ஏதோ முரண்பாடு இருப்பதாக பேசிக்கொள்கிறார்கள். அந்தமாதிரி எந்தவித முரண்பாடும் இல்லை, இரண்டிற்கும் ஒரு வித்தியாசமும் கிடையாது. காந்தி அடிகள் கூட சொல்லியிருக்கிறார்கள். "If the spinning wheel goes, the handloom is bound to follow suit. Khadi will cease to have any value in my eyes if it doesnot usefully employ the millions." என்று, லட்சக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுக்கும் வாய்ப்பு, இந்த கதருக்கு இல்லை என்றால் அந்த கதருக்கு நான் முக்கியத்துவம் கொடுக்க மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நம் தோழமைச் கட்சி உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள்கூட சொன்னார்கள். மகாத்மா காந்தி அடிகளை மேற்கோளாக எடுத்துக் காட்டினார். வெள்ளைக்காரன் காலத்தில் மில் துணி அதிகமாகிவிட்ட காரணத்தினால் அப்போது அப்படி காந்தியடிகள் சொன்னார்கள். அது இந்தக்காலத்திற்குப் பொருந்தாது என்று சொன்னார்கள். அப்படிப் பார்க்கப் போனால் அது அந்தக் காலத்திற்கு மட்டுமல்ல, இந்தக் காலத்திற்கும் பொருந்தும் என்று சொல்லிக் கொள்கிறேன். மகாத்மா சொல்லியிருக்கிறார்கள், என்று "What I object to is the craze for machinery, not machinery as such. The craze is for what they call labour-saving machinery. Men go on 'saving labour' till thousands are without work and thrown on the open streets to die of starvation. I want to save time and labour, not for a fraction of mankind but for all. I want the concentration of wealth, not in the hands of a few but in the hands of all. Today machinery merely helps a few to ride on the backs of millions. The impetus behind it all is not the philanthropy to save labour, but greed. It is against this constitution of things that I am fighting with all my might," இன்றைய தினம் கோவை மாவட்டத்தில் ஏதோ ஒரு சில மில்கள் மூடப்பட்டுவிட்டன. அதனால் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை இழந்து விட்டார்கள் என்பதற்காக அவர்கள் இன்று அரசை அணுகி எங்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற முறையில் அதற்காக ஒரு தனிக் கமிட்டி ஏற்படுத்தி அதற்கு ஒன்றரை கோடி ரூபாய் தேவை என்று சொல்கிறார்கள். அதில

ஒரு சில ஆயிரக்கணக்கானவர்களே வேலை இழந்திருக்கிறார்கள். ஆனால் கதர் திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து நடத்தப்படவில்லை என்றால் சில லட்சக்கணக்கான பேர்கள் வேலை இழந்து தவிக்கும் நிலை ஏற்படும். ஆகவே அரசாங்கம் பெரிய பெரிய தொழில்களுக்கு பாதுகாப்பு கொடுப்பது போல் கிராமக் கைத்தொழில்களுக்கும் நல்ல பாதுகாப்பு கொடுப்பதுடன் அவர்களை உற்சாகப்படுத்தி லட்சக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்கும் வகையில் இது செயல்படுகிறது என்பதை உணர்ந்து அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இந்த அரசு முக்கியத்துவம் கொடுத்து நடத்தும் என்று பரிபூர்ணமாக நம்புகிறேன்.

அடுத்தபடியாக பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்த வரையிலே, பஞ்சாயத்து யூனியன் ஒரு குறுகிய வட்டாரத்திலே எல்லா இலாகாக்களையும் ஒன்றுபடுத்தி அந்த இலாகாக்கள் செய்யவேண்டிய வேலைகளை அந்தக் குறுகிய வட்டாரத்துற்குள் குடியானவர்களுக்கு உபயோகமாக இருக்கவேண்டுமென்ற முறையில் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனமாகும். இன்று பஞ்சாயத்து யூனியனைப் பற்றிப் பல புகார்கள் வருகின்றன என்றால், மக்களுக்கு இன்றைக்கு பஞ்சாயத்து யூனியனை அணுகி இருக்கிற குறைபாடுகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு இருப்பதால் தான் அதிகக் குறைபாடுகள் கண்ணுக்குத் தெரிகின்றன. மற்ற இலாகாக்களை அணுக மக்களுக்குச் சந்தர்ப்பம் இல்லை. அவசிமும் இல்லை. பஞ்சாயத்து யூனியனுக்கு விவசாய வேலைகளுக்கு ஐந்து வருஷங்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது—வருஷத்துக்கு 40,000 ரூபாய். 40,000 ரூபாயில் மீன் வளர்ப்பு, அனிமல் ஹஸ்பண்டரி ஆகியவைகளுக்கு ஒதுக்கப்பட்டது போக 25,000 ரூபாய் விவசாயிக்குக் கிடைக்கிறது. அதிலே பார்க்கப்போனால் எந்த வித விரயமும் ஏற்படுவதில்லை என்று தெரியும். ஆனால் விவசாயத் துறையிலும், மற்றும் கால்நடைத் துறையிலும் இன்று பல ஸ்கீம்ஸ் போட்டுக்கொண்டு தனி இலாக்காக்களால் நடத்தப்படுவதில் லட்சக் கணக்கான ரூபாய் விரயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை எல்லோரும் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். இன்றுள்ள சூழ்நிலையில் அதிக உற்பத்தி கண்டு, தன்னிறைவு கண்டு, உணவுப் பிரச்னையை ஒழிக்கவேண்டுமென்ற ஆசை இருக்குமானால், எந்தவிதத் திட்டங்களானாலும் அவைகளைப் பஞ்சாயத்து யூனியன் மூலமாக நடத்தவேண்டுமென்று நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ளுகிறேன். ஏனென்றால் எந்த இடத்தில் ஆய்வு செய்யப்பட்ட குழு இருக்கிறதோ அந்த இடத்தில் தான் விரயம் தவிர்க்கப்படும், அந்த இடத்தில் தான் கண்காணிப்பு அதிகமாக இருக்க முடியும். கண்காணிப்பு இருக்குமிடத்தில் விரயம் இருக்க முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சுதந்திராக் கட்சி உறுப்பினர் கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் கிராம சேவக்குகளை எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீஸராக வைத்து நடத்தலாம் என்று சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன் ஆரம்பித்த காலத்தில் கிராம சேவக்குகள் பணி என்ன என்றால், கிராம மக்களுக்கு ஃப்ரெண்ட், ஃபிலாஸஃபர் அண்ட் கய்ட் என்ற முறையில் ஏழை மக்களுக்கு தோழனாகவும், நடத்திச் செல்லுபவனாகவும் இருந்து செயல்படவேண்டுமென்று பயிற்சி கொடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டார்களே யொழிய, வெறும் கிளார்க்குகளாக அதிகாரத்தைச் செலுத்துவதற்காக இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் சில கிராம சேவக்குகள் வேலை செய்யவில்லை, ஜபர்தஸ்தாக இருக்கிறார்கள், அது செய்கிறார்கள், இது செய்கிறார்கள் என்ற புகார்கள் வருமானால், அந்த கிராம சேவக்குகள் சரியாகச் செயல்படவில்லை என்று ஆகுமே தவிர, திட்டத்தில் ஒன்றும் தவறு சொல்ல முடியாது. கிராம சேவக்குகள் எக்ஸிக்யூட்டிவ் ஆஃபீஸராக இயங்கக் கூடாது. அவர்களுக்கு விதித்துள்ள பணிகளை நிறைவேற்றும் வகையில், மக்களுக்குச் சேவை செய்கிறவர்களாக இருந்துகொண்டு, இந்தக் கஷ்ட காலத்தில், அதிக உணவு உற்பத்தி செய்யவேண்டிய காலத்தில், சர்க்கார் திட்டங்களை மக்களுக்கு

எடுத்துச் சொல்லி, அவர்களை ஊக்குவித்து, நல்ல விதத்தில் வழி நடத்திச் செல்லுகிறவர்களாகத் தான் இருக்க முடியும். அப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நம்முடைய சர்க்காரைப் பொறுத்த வரையில், ஒரு சில தேவையற்ற ஸ்தானங்கள் பஞ்சாயத்து யூனியனில் இருக்கின்றன. உதாரணமாக சோஷல் வெல்ஃபேர் ஓர்கர்ஸ் என்று சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவித வேலையும் கிடையாது. இப்படி நீக்கப்படவேண்டியவைகளை, வேண்டாத ஸ்தானங்களை நீக்கி, நல்ல முறையில், உயிரோட்டமுள்ள ஸ்தாபனமாகச் செய்து நல்ல முறையில் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பை தந்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது மீதி இருக்கக் கூடிய நேரத்தை பங்கிடு செய்து பார்க்கும்போது உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் எட்டு நிமிடங்களே கிடைக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்றேன்.

***திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி மானியத்தின் பேரில் சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

1952-லிருந்து இது செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். கிட்டத்தட்ட 15 வருடங்கள் ஆகின்றன. 300 கோடி ரூபாய் வரையிலும் செலவு செய்யப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். ஆனால் வருந்தக் கூடியது, காந்தியடிகளின் குறிக்கோளின்படி இன்று ஒரு கிராமமாவது இருக்கிறதா—அதாவது மாடல் வில்லேஜாக இருக்கிறதா—என்று பார்த்தால், அப்படி இருக்கவில்லை. காரணம், ஏதோ நிர்வாகத்தில் இருக்கிற ஊழல்தான். இன்றுவரையில் நடத்தப்பட்ட நிர்வாகத்திலோ கொள்கையிலோ மாறுதல் தேவை என்பது புலப்படுகிறது. திட்டம் ரொம்ப அவசியம். கிராமங்கள் நன்மை அடையவேண்டியது அவசியம். கிராம மக்கள் கிராம ராஜ்யம் நடத்தவேண்டும் என்பது சரி. இன்று வரையில் செவ்வனே செயல்படும் முறையில் திட்டம் இல்லை.

இன்று பிளாக்கை எடுத்துக்கொண்டால் யார் பொறுப்பில் இருக்கிறது? "வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் பணிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்று அமைச்சர் அவர்களால் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ? யாரிடம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? பி.டி.ஓ.விடமா ? அக்ரிகல்ச்சர் டிபார்ட்மெண்ட்டிடமா ? என்று பார்த்தால், எங்கேயோ தேடிப்பார்க்கவேண்டிய நிலைமை இருக்கிறது. அதனால் எந்த உற்பத்திப் பெருக வேண்டுமானாலும், எந்தக் காரியங்களை முடிக்கவேண்டுமென்றாலும், யாரிடமாவது அந்தப் பொறுப்பைக் கொடுக்கவேண்டும். 300 கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஒரு கம்பெனி செயல்படுகிறது என்றால், அது லாபகரமாக வருவாய் உள்ள நிலையில் வராவிட்டால் அதற்கு ஒருவர் பதில் சொல்ல வேண்டிய நிலைமை தான் இருக்கும். அந்த நிலையில் ஒரு பிளாக் செயல்படவேண்டும்.

ஃபெர்டிலைஸரை எடுத்துக்கொள்ளுங்கள். நமக்குக் கிடைப்பது குறைவு. அதை போர்ட் ஆஃப் ரெவின்யூ தான் வினியோகம் செய்ய வேண்டும். அது பல நாட்கள் ஆகின்றன. போர்ட் ஆஃப் ரெவின்யூ வினியோகம் செய்த பிறகு கலெக்டரிடம் வருகிறது. கலெக்டர் கீழேயிருந்து ரிப்போர்ட் வாங்கி வினியோகத்தை நடத்தும்போது பருவம் தப்பி விடுகிறது. உரம் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. அதிகாரத்தை போர்ட் ஆஃப் ரெவின்யூவில் வைத்திருக்கிறார்கள். அடுத்த ஜில்லா கலெக்டரிடம் போகிறது. பல முனைகளில் தாமதம் ஏற்படுகிறது. அகையால் காலாகாலத்தில் போய்ச்சேர வழியில்லை. அதை மாநில விவசாய முதல்வரிடம் கொடுத்து அவர்கள் மூலம் விநியோகம் செய்ய வேண்டும்.

அதே மாதிரி கடனை எடுத்துக்கொண்டாலும் ரொம்ப நாட்கள் ஆகின்றன போய்ச்சேர. ஸீட்ஸ் கொடுக்கப்படுகின்றன. ஸீட்ஸை டெஸ்ட் செய்ய அதிகாரம் யாரிடம் இருக்கிறது என்று தெரியவில்லை. தப்பிதமான ஸீட்ஸ் கொடுத்துவிடுகிறார்கள். ஹைப்ரிட் சோளம் கொடுக்கப்பட்டது. அநேக இடங்களில் முளைக்காமல் போய்விட்டது. எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று அக்ரிகல்ச்சர் டிபார்ட்மெண்டைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். எங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று பிளாக்கிலும் சொல்லுகிறார்கள். ரெவின்யூ டிவிஷனல் ஆஃபீஸர் பிளாக்குகளை இன்ஸ்பெக்ஷன் செய்யவேண்டுமென்று இருக்கிறது. இன்று பார்த்தால் இன்ஸ்பெக்ஷனே கிடையாது. கலெக்டர் ரெவ்யூ கிடையாது.

ஸ்டாஃப் சம்பந்தப்பட்ட மட்டில் எனக்கு முன் பேசிய நண்பர்களெல்லாம் சொன்னார்கள். ஸ்டாஃப் பற்றிய விவரங்களை, எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கிராம சேவக்குகள் 10, கிராம நல ஊழியர்கள் 10, ஃபீல்ட்மென் 3, விவசாய மேஸ்திரி 4, அக்ரிகல்ச்சுரல் என்ஜினீயர் 2, ஸ்பின்னிங் இன்ஸ்ட்ரக்டர்ஸ் 10—இவர்கள் என்னதான் செய்கிறார்களோ தெரியாது—கிராம சேவிகா 2, முக்கிய சேவிகா 2, சமுதாய நல ஊழியர்கள் 2, கம்போஸ்ட் டெவலப்மெண்ட் இன்ஸ்பெக்டர் 1, வி.எஸ்.ஆர். 1, பீ. கீப்பர் 1, இன்னும் நிறையப் பேர்கள் இருக்கிறார்கள்—என்ஜினீயர் 1, ஓவர்சியர் 1, ஈ.ஓ. (பி). ஈ.ஓ. (ஏ), ஈ.ஓ. (இ), ஈ.ஓ. (ஏ. எச்.)—இப்படியெல்லாம் இருக்கின்றன. எல்லாவற்றையும் குறைக்கவேண்டும். அறிஞர் அண்ணா அவர்களே பல பேர்களைக் குறைக்கவேண்டுமென்று சொல்லுவதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

இம்ப்ளிமெண்ட்ஸ் கொடுக்கிறார்கள். லட்சக்கணக்காக ஆகியிருக்கும் என்று நினைக்கிறேன். ஸ்ப்ரேயர்ஸ், டஸ்ட்டர்ஸ் எல்லாம் கொடுக்கப்படுகின்றன. ஆனால் சர்வீஸ் கிடையாது. உடனடியாக ஒரு அதிகாரியை அனுப்பிப் பார்த்தால் ஒரு பஞ்சாயத்திலாவது ஸ்ப்ரேயர், டஸ்டர் செயல்படும் நிலையில் இல்லை என்பது தெரியும். காரணம், ஃபாலோ-அப் இல்லை, சர்வீஸ் இல்லை. இரண்டும் இருந்தால்தான் அக்ரிகல்ச்சுரல் இம்ப்ளிமெண்ட்ஸ் செயல்பட வழி ஏற்படும்.

ஃபர்டிலைஸரை பொறுத்த வரையில் டிஸ்ட்ரிக்ட் அக்ரிகல்ச்சுரல் ஆஃபீஸரிடம் ஒப்படைக்கும் முறை ஏற்பட்டுவிட்டால், நல்ல நிலைமையில் செயல்பட வழி ஏற்படும்.

ஜீப்பை வித்ட்ரா பண்ணவேண்டும். ஒரு பிளாக்கை எடுத்துக் கொண்டால் 10 மைல்கள் தான் இருக்கும். ஒவ்வொருவருக்கும் சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கலாம்.

சைக்கிள் அலவன்ஸ் கொடுத்து, அதை செயல்படுத்தக்கூடிய நிலைமையை ஏற்படுத்திவிட்டால் நலமாக இருக்கும். கிராமத்தில் போய்
பி.ப. 4-30 இரவு தங்க வேண்டும் என்ற ஒரு திட்டம் வேண்டும். கிராமத்தில் இருக்க வேண்டும என்ற திட்டம் இருக்கிறது. ஆனால் அவர்கள் பழயப்படி ஹெட் குவார்டர்ஸுக்கு போய்விடுகிறார்கள். சைக்கிள் அலவன்ஸ் கொடுத்து, சைக்கிளில் போகக்கூடிய நிலைமையை ஏற்படுத்திவிட்டால், இந்த மாதிரி தப்பிதம் வராது.

அது போக, டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒரு எம்.எல்.ஏ.-க்கு இரண்டு டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் ஜூரிஸ்டிக்ஷன் இருந்தால், அங்கு போய் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஏனென்றால் விதிப்படி ஒரு டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சிலில் தான் அங்கத்தினராக இருக்கலாம் என்று இருக்கிறது. ஆகையால் எம்.எல்.ஏ. இரண்டு டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டங்களிலும் கலந்து கொள்ளக்கூடிய நிலைமையில், இரண்டு கவுன்சில்களிலும் அவர் அங்கம் வகிப்பதற்கு விதி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் கூடும்பொழுது அது ஒரு பெரிய ராஜதர்பார் மாதிரி நடக்கிறது. அமைச்சர் அவர்கள் கூட எங்களுக்கு சரிசமமாக இருந்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், ஜில்லா அடிப்படையில் பார்த்தால், அவர்களுக்குத் தான் உயர்வான மேடை, நாங்கள் எல்லாம் நின்றுதான் பேசவேண்டும். பதில் சொல்லக்கூடியது கூட, அவர்கள் சொல்வது சும்மா '' டாக்டு ஓவர் '' என்ற மாதிரியில் தான் இருக்கிறது. டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் என்றால் அதை உண்மையான டெவலப்மெண்டு கவுன்சிலாக வைக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஆ. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மான்யக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைச் செ ல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது ஊராட்சி மன்றங்களுக்கு வழங்கப்படுகிற சலுகை, கிராம பஞ்சாயத்துகளுக்கு இதற்கு முன்னால் கொடுத்துவந்த சலுகைகள் கூட அநேகமாக பல சலுகைகள் முந்திய அரசால் குறைக்கப்பட்டுவிட்டன. இதனால் கிராமப் பஞ்சாயத்துகள் எந்த ஒரு வேலையையும் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருந்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக ரூ. 25-க்கு மேல் கிராமப் பஞ்சாயத்துகள் தன் இச்சையாக ஒரு வேலையையும் செய்ய முடியாது என்ற ஒரு சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையை மாற்றி அமைத்துத் தருமாறு நமது அமைச்சர் அவையை மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியனுக்கு கொடுக்கக்கூடிய நிதி மானியம் ஜனத்தொகை அடிப்படையில் இதுவரையில் கொடுக்கப்பட்டு வந்திருப்பதை நாம் பார்க்கிறோம். சில யூனியன்கள் நல்ல வளம் பெற்ற யூனியன்களாக இருக்கின்றன. சில இன்னும் பஞ்சப் பிரதேசமாகவும் பிற்போக்கான நிலையிலுள்ள யூனியன்களாகவும் இருக்கின்றன. இதையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, வளர்ச்சிக்குத்தக்கவாறு பணங்களை ஒதுக்கி அந்தந்த யூனியன்களுக்குத் தரப்படவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என்னுடைய தொகுதியில், கங்கைகொண்டான் தொகுதியில் மானூர், நீலிதநல்லூர் என்ற இரண்டு யூனியன்கள் ஆண்டு ஆண்டு காலமாக பஞ்சப் பிரதேசமாக இருக்கின்றன. அதைப் பஞ்சப் பிரதேசம் என்று கருதிக்கொண்டு வருகிறார்கள். எவ்வளவு பணம் ஒதுக்கினாலும் கூட அந்தப் பிரதேசத்தை ஒரு நல்ல வளமுள்ள பிரதேசமாக ஆக்க முடியாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. இதற்குத் தக்கவாறு பணங்கள் ஒதுக்கியும், வேண்டிய உதவியை செய்தும் அந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் நல்ல முறையில் பயன் அடையச் செய்யவேண்டும் என்று அமைச்சரவையை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 10,000 ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு மருத்துவ விடுதி கொடுப்பதாக நிதிநிலை அறிக்கையில் போடப்பட்டிருக்கிறது. இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். எங்களது பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டால், ஏறத்தாழ சுமார் 60 மைல்கள் விஸ்தீரணம் இருக்கிறது. அங்கே ஒரு மருத்துவ நிலையம் மட்டுமே இருக்கிறது. மிகவும் அகால வேளையில் மருத்துவத்துக்கு போகவேண்டுமானால், திருநெல்வேலிக்குப் போக முடியாத நிலையில் மிகவும் சங்கடமான நிலை ஏற்படுகிறது. ஆகவே, பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய இந்தத் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய நெல்லை மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே நெல்லை நகரசபை திராவிட முன்னேற்றக் கழகத்தின் கையில் இருந்த காரணத்தினாலோ என்னவோ பல காலமாக அங்கே மேம்பாலம் வேண்டும் என்று சர்க்காருக்கு பல அறிக்கைகள் மூலம் தெரியப்படுத்தியும் கூட, நாளது வரைக்கும் அதை யாரும் செயல்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளவில்லை. திருச்செந்தூர், செங்கோட்டை போகும் இரண்டு

ரயில்களும் வந்து விட்டால், அந்த இரண்டு டிரைன்கள் போகும் வரைக்கும் சுமார் 2 மணி நேரம் கேட்டை அடைத்துவிடுகிறார்கள். அங்கங்கே பல சைகிள்கள், கார்கள் நின்றுகொண்டு, திண்டாடக்கூடிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதை நமது சர்க்கார் உடனே நடவடிக்கை எடுத்து, ஒரு மேம்பாலத்தை அங்கே அமைத்துக்கொடுத்து, மக்களுடைய கஷ்டத்தை போக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ரூபாய் 25 வரையில் கிராமப் பஞ்சாயத்துகள் செலவழிக்கலாம் என்று இருக்கிறது. அதை மாற்றி ரூ. 250 வரையில் ஒரு கிராமப் பஞ்சாயத்து தன் இச்சையாக அவர்களே எஸ்டிமேட் தயாரித்து, அந்த வேலையை செய்துகொள்ளலாம் என்ற நிலையை ஏற்படுத்தித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திடீரென்று மழை காலத்தில் ஒரு இடத்தில் மண் வெட்டிப்போட்டு ஒரு உடைப்பை அடைக்கவேண்டுமென்றால், ரூ. 25 அளவில் ஒரு வேலையும் செய்ய முடியாது. இந்த சூழ்நிலையில் இந்த வரம்பு ரூ. 250 என்று உயர்த்தப்பட்டால், ஒரு உடைப்பு ஏற்பட்டால், சர்க்காரை எதிர்பார்க்காமலே பஞ்சாயத்தே தன் இச்சையாக உடைப்பை அடைக்க முடியும் என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தமட்டும் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி செலுத்திக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஏ. சி. நரசிம்மன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, எனக்கு முன்பு பேசிய திரு. சுப்பராஜா அவர்கள் நகரசபைத் தலைவர்களைப் பொறுத்தவரையில் டவுன் பிளானிங் மிகவும் தலைவேதனையான ஒரு பிரச்சினை என்று குறிப்பிட்டார்கள். அதையே நானும் வலியுறுத்துகிறேன். காரணம், நான் மட்டுமல்ல, நகர மன்றத்தலைவர்கள் அந்தந்தக் கூட்டங்களில் கூட ஒவ்வொரு நேரத்திலும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். டவுன் பிளானிங் ஸ்கீம் மிகவும் தலைவேதனையாக இருக்கிறது. அதிலும் சாதாரணமாக ஒரு ஏழை சிறிய இடத்தில் வீடு கட்டவேண்டுமென்றும், முன்னால் நான்கு அடிகளும், பின்னால் 10 அடிகளும் காலியாக விட வேண்டுமென்றும், மூன்றில் ஒரு பங்கு இடம் வெற்று மனையாக இருக்கவேண்டிய நிலையும் இருக்கிறது. அந்த நிலையில் அம்மாதிரி நிபந்தனையின் பேரில் வீடு கட்ட லைசென்ஸ் கொடுத்தால், அவர்கள் அந்த சிறிய இடத்தில் வீடு கட்ட முடியுமா என்பதை கொஞ்சம் எண்ணிப்பார்க்கவேண்டும். அந்த அளவில் டவுன் பிளானிங் ஸ்கீம் இருக்கிறது. அதே நேரத்தில் பில்டிங் ரூல்ஸிலிருந்து சில எக்ஸெம்ப்ஷன்ஸ் கொடுக்கலாம் என்ற உத்தரவு இருக்கிறது. அம்மாதிரி எக்ஸெம்ப்ஷன் கொடுக்கக்கூடிய அதிகாரத்தை நகரமன்ற ஆணையாளர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு முன்னால் அந்த அதிகாரம் **D.T.P.** அவர்களிடத்தில் இருந்தது. இப்பொழுது அதை நகர மன்ற ஆணையாளர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். அந்த அதிகாரம் நகர மன்றத்திற்கு இருக்கவேண்டுமே தவிர, ஆணையாளர்களிடத்தில் இருக்கக்கூடாது.

(மாண்புமிகு திரு. பெ. மலைச்சாமி தலைமை.)

ஆகவே, அப்படிப்பட்ட அதிகாரத்தை நகரமன்றங்களுக்குத் தான் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நகரமன்றங்கள் பிரதிபலன் தரத்தக்க கடன்கள் வாங்க வேண்டுமென்றால், பல சங்கடமான நிலைகள் இருக்கின்றன. காரணம், இம்மாதிரி முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்றால், முதலில் எஸ்டிமேட் தயார் செய்ய வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் வரைபடம் தயாரிக்கவேண்டியிருக்கிறது. வரைபடங்கள் டி.டி.பி.-க்குச் செல்ல வேண்டும். எஸ்டிமேட் சாங்ஷன் ஆகவேண்டுமென்றால சூப்பரின்டெண்டிங் என்ஜினியர் அல்லது சீப் என்ஜினியர் இவர்களிடம் போக வேண்டும். அவர்களிடம் சென்று வருவது என்றால், முடியாதகாரியம். கடன் வாங்குவது அந்த ஆண்டில் முடியாது. அடுத்த ஆண்டு ஆரம்பித்துவிடும். பஞ்சாயத்து யூனியன்களுக்கு கடன்கள் வழங்குவதற்கு மாவட்ட அளவிலே கலெக்டர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள்.

அதே போல் பிரதிபலன் தரத்தக்க முயற்சிக்காக நகரசபைகள் கடன் வாங்கவேண்டுமென்றால், ஜில்லா அளவிலேயே ஜில்லா அபிவிருத்தி மன்றம், அல்லது கலெக்டரிடத்தில் அதற்கான அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நகரமன்றங்களில் சுகாதார அதிகாரிகள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் நகரமன்ற ஆணையாளர்களுக்குக் கட்டுப்படாமல் டி.எச்.ஓ. அவர்களுக்குக் கட்டுப்பட்டுத் தான் இயங்கிக்கொண்டிருக்கிறார்கள். நகர மன்ற ஆணையாளர்களுக்கு அவர்கள் கட்டுப்பட்டு நடப்பதில்லை. ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்கலாம். ஆனால், அப்படி நடவடிக்கை எடுப்பதற்கு நகர மன்றத்திற்கோ அல்லது ஆணையாளர்களுக்கோ அதிகாரம் கிடையாது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் டி.பி.எச். அல்லது டி.எச்.ஓ. போன்றவர்கள் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் வேறு துறையின் கீழ் இருப்பவர்களாதலால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றால் சற்று தாமதம் ஆகிறது. அதை மாற்றி, முன்பெல்லாம் இருந்ததைப் போலவே, அவர்களை நகர மன்ற ஆணையாளர்களின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர மன்றத்திலே வரிகளை வசூலிக்க சங்கடங்கள் இருக்கின்றன. காரணம் டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து 15 நாட்களுக்குள் பணம் கட்ட வேண்டும். அல்லது அந்த அரை ஆண்டு வரியை 30 நாளில் கட்ட வேண்டும். டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து, 15 நாட்களுக்குள் வரிப் பணத்தைச் செலுத்தவில்லையென்றால், உடனே "டிஸ்ட்ரெயின்ட்" ஆர்டர் செய்ய வேண்டும். அப்படி டிஸ்ட்ரெயின்ட் ஆர்டர் செய்வதில் பல விதிமுறைகளை அனுசரித்து, நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. நோட்டீஸ் சர்வ் ஆவது கூடக் கிடையாது. அந்த நிலையில் அவர்கள் வரியை வசூலிப்பதற்குள்ளாக காலதாமதம் ஏற்படுகிறது. இரண்டு ஆண்டுகள் கழித்தும் கூட வரியைச் செலுத்தாமல் பலர் இருக்கிறார்கள். எனவே அதற்கு ஒரு வழி, யார் பணத்தை செலுத்தத் தவறினாலும், அதற்காக அபராதம் போடும் அதிகாரத்தை வழங்கவேண்டும். அப்படிச் செய்தால் அவர்கள் அந்தப் பணத்தை உடனடியாகச் செலுத்துவார்கள். பெரும் பணக்காரர்கள் சில சில நேரங்களில், நகர மன்றங்கள் தானே, உடனடியாகக் கட்டாவிட்டால் என்ன, என்று தாமதம் செய்து கட்டுகிறார்கள். அவர்களுக்கு அபராதம் விதிக்கும் அதிகாரம் இருந்தால், விரைவாக பணம் கட்டக் கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே அதற்குண்டான அதிகாரத்தை நகர மன்றங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நகர மன்றத்திலே பணியாற்றும் ஊழியர்கள் ஒரு முறை நியமனம் செய்யப்பட்டால் ஒரு கிளார்க்காகவோ, மற்றபடியோ நியமிக்கப்பட்டால், அவர் வெகு விரைவில் உத்யோக உயர்வு பெருவது என்பது கடினம். அவர்கள் ஒரு நகர மன்றத்தைச் சேர்ந்தவர்கள் என்றால், மற்ற நகர மன்றங்களுக்குச் சென்று வேறு உத்யோக உயர்வு பெறுவது, அங்கே அது காலியாக இருந்தாலும் அங்கே சென்று பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் நிலை இல்லை. ஒரு ஜி.ஓ. போட்டு, நகர மன்றங்களை ஒரு யூனிட் ஆக்க வேண்டும். ஒரே யூனிட்டில் இருப்பவர்களுக்கு முதல் கட்டமாக சலுகைகொடுக்க வேண்டும். நகர மன்றங்கள் மற்றவர்களை தேர்வு பெற்றவர்கள் என்கிற ஒரே காரணத்திற்காக எடுத்துக்கொண்டால் அது செல்லுபடியாகாது என்று செய்யவேண்டும். திறமையாக நல்ல முறையில் பணியாற்றுகிறவர்களுக்கு வேறு மன்றங்களில் நியமனம் செல்லாது என்று ஜி.ஓ. இருக்கிறது. நல்ல திறமை வாய்ந்தவர்களை ஊக்குவிக்க அது இடைஞ்சலாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. சுப்பராஜு அவர்கள் குறிப்பிட்டது போல, நகர மன்றத் தலைவரும், பஞ்சாயத்து யூனியன் தலைவரும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதை நானும் வலியுறுத்துகிறேன்.

நமது நகர மன்றங்களிலே பணியாற்றுகிறவர்களுக்கு, சைக்கிள் அலவன்ஸ், கார் அலவன்ஸ் என்று கொடுக்கிறோம், அவையெல்லாம் எப்பொழுதோ நிர்ணயிக்கப்பட்டவை. இப்போதும் அதே அளவில் இருக்கிறது. அது மிக மிக வருந்தத்தக்க நிலையில் இருக்கிறது. அவர்களுக்கு இப்பொழுது சைக்கிள், கார் அலவன்களை உயர்த்தி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிடி காம்பன்சேடரி அலவன்ஸ் ஜில்லா மட்டத்திலும், நகரங்கள், முனிசிபல் நகரங்கள் மட்டத்திலும், கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியில், ரூரல் எக்ஸ்டென்ஷன் ட்ரெயினிங் சென்டர் என்று ஒரு சென்டர் இருக்கிறது. ஏற்கெனவே இதிலே தேர்ச்சி பெற்றவர்கள் மீண்டும் ரிப்ரெஷர் கோர்ஸ் என்ற முறையில் வேலை செய்கிறார்களே ஒழிய, அந்த சென்டர் வேறொன்றையும் செய்யவில்லை. அந்த சென்டரிலே யாரையும் புதிதாக தயாரிக்கவில்லை. ஆகவே அந்த சென்டருக்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். நான் மட்டுமல்ல, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களேகூட அப்படிப்பட்ட கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அதை மூடிவிட்டு, அந்த இடத்தில் வேறு ஒரு கல்லூரியை அமைப்பதற்கோ அல்லது வேறு நல்ல காரியத்திற்கோ அதைப் பயன்படுத்தவேண்டும்.

அட் ஹாக் கமிட்டி போட்டார்கள். ஆசிரியர்களை மாற்ற என்று இந்தக் கமிட்டிகளைப் போட்டார்கள். என்னுடைய பகுதியில் கசத்தம்பாடி யூனியனிலே முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனால் இதுவரையில் அவை நிறைவேற்றப்படவில்லை. மாவட்ட கலெக்டரிடம் தெரிவித்தேன். D.R.O. அவர்களிடமும் தெரிவித்தேன். ஏன் நிறைவேற்றவில்லை என்பது எனக்கே புரியவில்லை. அந்த அட் ஹாக் கமிட்டி தீர்மானங்கள் உடனடியாக அமுல் நடத்தப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அது மட்டுமல்ல, சிக்கனம் சிக்கனம் என்று எல்லாத் துறையிலும் பேசுகிறோம். ஆனால் இன்றைக்கு எல்லா அலுவலகங்களும் 10-30 மணிக்கு துவங்கி வேலைசெய்கின்றன. நல்ல வெயில் வேளைகளில் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நம் நாட்டு வெட்ப தட்ப நிலைகளை அனுசரித்து, இந்த அலுவலகங்கள் காலை 9 மணிக்கு ஆரம்பித்து, மாலை 6 மணி வரை வேலை செய்யலாம். வாரத்தில் ஐந்து நாட்கள் மட்டும் வேலை செய்து விட்டு, சனிக்கிழமைகள் எல்லாம் விடுமுறையாக விட்டுவிடலாம். அது சிப்பந்திகளுக்கும் சௌகரியமாக இருக்கும். சிக்கனமும் இருக்கும். அதனால், கரண்ட் சார்ஜ்கூட குறையும்.

பஞ்சாயத்து யூனியன்கள் மேற்கொண்டு இனியும் மாநாடு விழாக்களில் ஈடுபடாத அளவுக்கு சிக்கனத்தை கையாளவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியனிலே சட்டசபை அங்கத்தினர்கள் கலந்து கொள்ளலாம் என்ற விதி இருக்கிறது. ஆனால், அவர்கள் ஓட்டு அளிக்கும் உரிமையுள்ளவர்கள் அல்ல என்று இருக்கிறது. இது முரண்பட்ட ஜனநாயகம் மாதிரித் தெரிகிறது. எனவே சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள உரிமை கொடுத்திருக்கும் போது, ஓட்டு அளிக்கும் உரிமையும் தரப்பட வேண்டும். அதற்காக சட்டத்தை திருத்தவது ரொம்ப ரொம்ப அவசியம். முனிசிபாலிடியைப் பொருத்தவரையில், நாமே போவதில்லை, கமிஷனரும் கூட்டத்திற்குக் கூப்பிடுவதும் இல்லை. போனால் நம்மை மதிப்பதும் இல்லை. பஞ்சாயத்து யூனியன் பொறுத்தவரையில் அவர்களுக்கு ஓட்டு அளிக்கும் உரிமை கொடுக்கப்படவேண்டும். அதற்காக சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும்.

அதோடு, பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டால், ரெவின்யூ டிபார்ட்மெண்ட் "சூபர்விஷனில்" பல காரியங்கள் நடத்துவதால், டெபுடி கலெக்டருக்கு அதிகமான அதிகாரம் இருக்கிறது. அதனால் காரியங்கள் செய்வது சிரமமாக இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன் என்று வைத்துக் கொண்டு, இன்னொரு பக்கத்தில் ரெவின்யூ டிபார்ட்மெண்டிடம் நிர்வாக அதிகாரத்தைக் கொடுத்தால் திறமையாக நடத்துவது முடியவில்லை. சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே அந்த முறையை மாற்றிவிட்டு, ஜில்லா லெவலிலே, ஒரு தனி அதிகாரியை நியமித்து, ஆடிட் செய்யச் செய்து, அதற்கான தனி முறையை ஏற்படுத்துவது ரொம்ப அவசியம். அந்த விதத்தில் பஞ்சாயத்து நிர்வாகத்தை திருத்தி அமைப்பது நலன் பயக்கக் கூடியதாக இருக்கும்.

அதே மாதிரி, பல டிபார்டுமெண்டுகளை எடுத்துக் கொண்டு சிக்கனம் பற்றிச் சொல்லுகிறோம். டைரக்டர் என்று ஏற்படுத்திவிட்டு, அவருக்குக் கீழே மூன்று டெபுடி டைரக்டர்கள் அமைப்பு இருக்கிறது. அது அவசியம் தானா என்று கனம் அமைச்சர் சிந்திக்க வேண்டும். அம்மாதிரி அவசியம் இல்லை. ஆகவே, மேலே டைரக்டர் ஒருவர் இருந்து, அவருக்குக் கீழே இரண்டு டெபுடி டைரக்டர்கள் போட்டால், அந்த அடிப்படையில் இலாகாக்களை பிரிவு செய்தால், திறம்பட வேலை செய்ய ஏதுவாக இருக்கும். அந்த வகையில் திருத்தி அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கதரை எடுத்துக் கொண்டால், பலர் அது புனிதமானது. சுதந்தரத்தின் சின்னம் என்றெல்லாம் கூறுகிறார்கள். அது பொருளாதாரத்திற்கு மிக அவசியம் என்றும் கூறுகிறார்கள். அந்தக் கருத்துக்களையெல்லாம் நான் ஒப்புக்கொள்ளவில்லை. கதரும் கைத்தறியும் உடனடியாக இணைக்கப்படவேண்டியது மிக மிக அவசியம். கதர் போர்டை எடுத்துக் கொண்டால், அதுவும் சரியாக இல்லை. ஒரே ஒரு விவரம் தெரியும். திருவாரூரில் வில்லேஜ் இண்டஸ்ட்ரீஸ் இருக்கிறது. அங்கே பல கடன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தக் கடனும் வசூலிக்கப்படுவதாகத் தெரியவில்லை. விவரங்கள் கொடுக்க முடியும்.

அம்பர் சர்க்கா வினியோகம் செய்கிறார்கள். அதில் ஊழல்கள் ரொம்ப ஜாஸ்தியாக இருக்கிறது. வேதாரண்யம் டெபோ, மாயவரம் டெபோ, திருவாரூர் டெபோ போன்ற இடங்களில் நிறைய இருக்கிறது. பணம் முறையாக வினியோகிக்கப்படுவது இல்லை. துர்வினியோகம் செய்யும் வகையில் கதர் போர்டு நிர்வாகம் இருக்கிறது. விரயம் ஆகிறதே தவிர பலன் பூராக் கிடைக்கவில்லை. கதர் புனிதம் என்று நான் சொல்லவில்லை. பொருளாதாரத்தை உயர்த்தும் என்றும் சொல்ல வரவில்லை. ஆனால், அதைக் கைத்தறியோடு இணைத்தால், சரியான விதத்தில் எல்லோரும் தொழிலாளர்கள் என்ற கண்ணோட்டத்தில் அவர்களுடைய பிரச்சினைகளை அணுகினால், கைத்தறித் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் இவர்களுக்கும் கொடுக்கப்படும். அந்த விதத்தில் அதை அணுகவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதுதான் சரியானதும் கூட. கதரின் தத்துவத்தைப் பற்றி பேச நேரம் இல்லை. அன்று பிரிட்டிஷ்காரர்கள் தொழில்களை ஆக்கிரமித்துக்கொண்டார்கள். எனவே சுதேச உணர்வுக்காக, சுதேச பொருள்களை எதிர்க்கும் இயக்கத்தின் பிரதிபிம்பமாகத்தான் கதரை உண்டாக்கினோம். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு அதை அணுகும் முறையிலே மாற்றம் வேண்டும். அவ்வாறு மாற்றம் வேண்டும்பொழுது கதருக்கும் கைத்தறிக்கும் வேறுபாடு செய்யாமல் கதரையும், கைத்தறியையும் ஒன்றுபடுத்தி ஒழுங்காக நடத்த நடவடிக்கைகளை எடுப்பதுதான் சரியாக இருக்கும். அதுதான் என்னுடைய கருத்து. அதை அமைச்சரவர்கள் சிந்திப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

தேர்தலைப் பொறுத்தவரையில் முன்பு கனம் அங்கத்தினர்கள் பேசியதுதான் என்னுடைய கருத்தும். பஞ்சாயத்து போர்டு தலைவராக, முனிசிபல் சேர்மனாக, பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக ஆக நேரடியாக மக்கள்தான் ஓட்டளிக்க வேண்டும். எனக்குத் தெரிந்த வரையில்

ஒரு பஞ்சாயத்து யூனியனில், சேர்மன் தேர்தலின் போது காரைக்காலில் அவர்களைக் கொண்டுபோய் வைத்துவிட்டு யாருக்கு எவ்வளவு பலம் என்று பலப்பரீட்சை பார்க்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. பஞ்சாயத்து போர்டு தேர்தலிலே பொருள் ஆதிக்கமும், அடியாட்கள் ஆதிக்கமும் தான் நடமாடுவதைப் பார்க்கிறோம். பணக்கார ஆதிக்கத்திற்கும் ஏழைகளுக்கும் நடக்கும் பலப்பரீட்சையை நாம் பார்க்கிறோம். இந்தப் பலப்பரீட்சை இல்லாமல் கிராம ஆட்சியில் ஜனநாயகம் செயல்பட வேண்டுமென்றால் பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்து யூனியன் தலைவர், முனிசிபல் சேர்மன் ஆகிய இவர்களை ஜனங்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலை ஏற்படுத்த வேண்டும். அந்த விதத்திலே அரசு சிந்திக்கும் என்று கருதுகிறேன்.

அதே போன்று "எஜுகேஷனைப்" பொறுத்தவரையில் பஞ்சாயத்து யூனியன் சரியாக நிர்வகிக்கவில்லை என்றால் அதற்குப் பொறுப்பு சேர்மன் என்று சொல்ல முடியாது. எஸ்.இ.ஓ. என்று இருக்கிறார். எஜுகேஷனுக்கும் அவருக்கும் ஸ்நானப்பிராப்திகூட கிடையாது. எஜுகேஷனைப் பற்றி எதுவும் தெரியாது. திடீரென்று சென்று டைம் டேபிளைப் பார்ப்பது உபாத்தியாயரைப் பார்த்து சில கேள்விகளை கேட்பது இதுதான் அவர் வேலை. எனவே கல்வி என்று சொல்லும்பொழுது தனியாக நிர்வகிக்கப்பட வேண்டும் பஞ்சாயத்திலும்கூட அந்த அமைப்பு தேவை. ஆசிரியர்கள் பிரதிநிதிகள், தொகுதி எம்.எல்.ஏ., சேர்மன் ஆகியோரைக் கொண்ட ஒரு நிரந்தரக் கமிட்டியை பஞ்சாயத்து யூனியனிலே ஏற்படுத்த வேண்டும். அந்தக்கமிட்டி மூலம் ஆசிரியர் தரப்பில், பெற்றோர்கள் தரப்பில், நிர்வாகத் தரப்பில் உள்ள குறைகளை உடனே நீக்க வேண்டும். எனவே உயிருள்ளதாக இயங்கக்கூடிய ஒரு கமிட்டியை அமைப்பது அவசியம். இவ்வாறு அமைப்பதனால் "டிரான்ஸ்ஃபர்" போன்ற மொத்தத்தையும் கண்காணிக்க வசதி ஏற்படுமாதலால் இந்த முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக "டுயல் டிபார்ட்மெண்ட் எஜுகேஷன்". மதிய உணவைப்பற்றி சேர்மன் கணக்குக் கேட்டால் அதற்கு ஹெட்மாஸ்டர், நீங்கள் என்ன கணக்கு கேட்பது, டெபுடி இன்ஸ்பெக்டர் கேட்டால் சொல்கிறேன் என்று கூறுவார். இவ்வாறு இருப்பது இரண்டு பேர்களுக்கும், அதிகாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ரொம்ப கஷ்டம். நிச்சயமாக இந்தக் கமிட்டியின் கீழ், பஞ்சாயத்து யூனியன் கீழ் டெபுடி-இன்ஸ்பெக்டர் செயல்பட வேண்டுமானால் அதற்கான முறை ஏற்படுத்த வேண்டும். பஞ்சாயத்து யூனியனுக்குக் கீழே டெபுடி-இன்ஸ்பெக்டர்கள் இருக்க வேண்டுமென்ற நிலை ஏற்பட வேண்டும்.

பஞ்சாயத்து நிர்வாகத்திலிருந்து கணக்குப்பிள்ளையைத் தயவு செய்து ரிலீவ் பண்ணவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். வரி வசூலைப் பட்டாமணியக்காரர் வேண்டுமானால் செய்யட்டும். ஜபர்தஸ்திலே கணக்குப்பிள்ளை அந்த வேலையைப் பார்க்க முடியாது. கிராமக் கணக்குகளை எழுதுவதற்கு ஐந்தாறு பஞ்சாயத்துக்களுக்கென்று ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசரை வேண்டுமானால் நியமித்துக்கொள்ளலாம். ப்ரெஸிடெனடின் உரிமையில் தலையிடவேண்டாம். அவர் செக் எழுதட்டும் பிரதம எக்ஸிக்யூடிவ் அதிகாரியாக அவரே இருக்கட்டும். ஆனால், சில பஞ்சாயத்துக்களுடைய கணக்குகளை எழுதும் பொறுப்பை ஒரு முழுநேர க்ளூப்க்ளார்க்குக்கு விட்டுவிடலாம். குறிப்பிட்ட ஐந்து பஞ்சாயத்துக்களை நிர்ணயித்து, நிர்வாக வேலைகளை அவர் கவனிக்கலாம். கணக்கு எழுதுவதை அவர்தான் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த வேலையை கிராமக் கர்ணத்திடம் கொடுக்கக்கூடாது. அம்மாதிரி விதத்தில் செய்ய அமைச்சர் அவர்கள் யோசிக்கவேண்டும்.

சிறிய பஞ்சாயத்துக்களுக்கு நிதிவசதி போதாத நிலையில், பல அவசியமான காரியங்களை அங்கே செய்ய முடியவில்லை. ஆகவே, எலெக்டரிஸிடி ரேட்டில் ரூபாய்க்கு ஒரு பைசா வீதம் அதிகமாக்கி, வில்லேஜ் பஞ்சாயத்

துக்குக் கொஞ்சம் வருவாயை ஏற்படுத்த முடியுமா என்பதையும் யோசிக்க வேண்டும். இப்பொழுது வில்லேஜ் பஞ்சாயத்துக்கு வருமானம் குறைவாக இருப்பதால்; வேறு எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை. அதைப்பற்றியும் அரசாங்கம் யோசித்து, சரியான முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்திலிருந்து டைரக்டர் வரையிலும் நான் சொல்லக்கூடியதைக் கவனித்து, நிர்வாகச் சீர்திருத்தம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டால் சரியாகச் செயல்படும் என்று கருதுகிறேன். இவற்றைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டு, தலைவருக்கு நன்றி தெரிவித்து உரையை முடிக்கின்றேன் வணக்கம்.

*திரு. வி. எஸ். எஸ். மணி: சட்டமன்ற தலைவர் அவர்களே, சமுதாய நலத் திட்டத்தின் கீழும், கதர்த் திட்டத்தின்கீழும் கொண்டுவரப்பட்ட மானியக் கோரிக்கைகளை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

கதர்த் திட்டத்தைக் குறித்து முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அண்மையில் அகில இந்தியக் கதர்க் கழகத்தின் தலைவர் தேபரை சந்தித்தபோது, "கதருக்கு நாங்கள் விரோதி அல்ல" என்று சொன்னதாகத் தெரிய வருகிறது. அவர் சொன்னதன் நோக்கம்— கதர்த் தத்துவத்தை நன்கு உணர்ந்துதான் அவ்விதம் அவர் சொல்லியிருக்கக்கூடும். கதர்த் துணி என்பதும் கைத்தறியைச் சேர்ந்ததுதான். கதரும் கைத்தறியால் நெய்யக் கூடியதுதான். ஆனால், கதர் நூல் என்பது இராட்டையால் நூற்கப்படுவது. கைத்தறி நூல் என்பது ஆலையில் நூற்கப்படுவது. இதுதான் வித்தியாசம். கதரையும் கைத்தறியையும் இணைக்கவேண்டும் என்று சில நண்பர்கள் இங்கே கூறினார்கள். கதர்த் தத்துவம் எப்படி உண்டாயிற்று என்பதையெல்லாம், அதை ஆதரித்து வந்த கட்சிக்காரர்களே புறக்கணித்து விட்டார்கள். காந்தியடிகள் கதர்த் தத்துவத்தைக் கொண்டுவந்தபோது, அவர்களே இராட்டையில் நூல் நூற்று, அவர்களே நெய்து, அதை உடுத்த வேண்டும் என்பதுதான் கதர்த் தத்துவம். அதையெல்லாம் காற்றில் பறக்க விட்டுவிட்டார்கள் காங்கிரஸ் நண்பர்கள். அந்தக் காலத்தில் காங்கிரஸில் உறுப்பினராக வேண்டும் என்றால், காங்கிரஸ் உறுப்பினராவதற்குரிய சந்தாத் தொகையை பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாக, கதர் நூல் சிட்டத்தைத்தான் கொடுக்க வேண்டும் என்ற நிலை இருந்தது. அதெல்லாம் போய்விட்டது. கதர் என்பது ஒரு அரசியல் கட்சியின் சின்னமாக, முன்னால் இருந்த ஆளுங் கட்சியின் ஒரு சின்னமாக இருந்த காரணத்தால், அதற்கு அப்பொழுது ஒரு தனி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது. இன்று அறிஞர் அண்ணா அவர்கள் கதருக்குத் தனி மதிப்பு கொடுத்திருக்கிறார்கள். கதரை நாங்கள் ஆதரிக்கமாட்டோம் என்ற நிலை இல்லை. கதரும் கைத்தறிதான் என்ற நிலையில் கதரையும் ஆதரிக்க முன்வந்திருக்கிறோம். கதரையும் கைத்தறியையும் இணைக்க வேண்டும் என்று நான் சொல்லாவிட்டாலும் கூட, இயற்கையாகவே அவை இணைந்து கொண்டு வருகின்றன. ஏனென்றால், கதர் நூல் பெரும்பாலும் இராட்டையால் நூற்கப்பட்ட நூல் அல்ல என்று நான் உறுதியாகச் சொல்ல முடியும். கதர் நூலைப் போலவே ஆலையிலேயே நூல் தயாரிக்கிறார்கள். அந்த நூலை வாங்கித் தான் அவர்கள் "கதர்த் துணி" என்று தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இதை அமைச்சருக்கு நான் உறுதியாகச் சொல்லுகிறேன். இன்று வரக்கூடிய பெரும்பாலான கதர் நூல் எல்லாம் கையால் நூற்கப்பட்ட நூல் அல்ல, ஆலையில் நூற்கப்பட்ட நூல் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இதை நன்றாகப் பரிசீலனை செய்யவேண்டும்.

கதர் இலாக்காவில் இருக்கக்கூடிய ஒரு நெறியாளர் அவசியமா? செக்ரடரி என்று சொல்லக்கூடியவர் அவசியமா? என்றால், அவசியம் இல்லையென்றுதான் நான் சொல்லுவேன். இந்தப் பதவிகளுக்குக்கெல்லாம் பதிலாக ஒரு செக்ரடரி இருந்தால் போதும். ஜாயிண்ட் டைரக்டராக ஒருக்கால் நியமிக்காலம், கதர் இலாக்காவில் ரீஜினல் டெபுடி டைரக்டர

என்று ஒரு பதவி இருக்கிறது. அது தேவைப்படாத காருக்குப் பூட்டப்பட்ட ஐந்தாவது சக்கரம் போல—"ஃபிஃப்த் வீல் டு தி கோச்" என்று சொல்லுவார்களே அது போல— பதவியாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பதவி வேண்டியதில்லை. அந்தப் பதவிக்குள்ள பொறுப்பை மாவட்டக் கதர் அதிகாரியே பார்த்துக்கொள்ள முடியும்.

அடுத்து, சமுதாய வளர்ச்சியைப் பற்றி ஒருசில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். கிராம வாழ்க்கை அளவில் தேவைகளைப் பெரிதும் தொட்டு நிற்கின்ற ஒரு நிர்வாகம் என்பது பஞ்சாயத்து யூனியன் ஆகும். பஞ்சாயத்து யூனியனிலே இருக்கக்கூடிய பள்ளியாசிரியர்கள், அந்தக் கமிஷனருடையவும், பஞ்சாயத்து யூனியன் தலைவருடையவும் அடிமைகளாகத்தான் இருக்கிறார்கள். ஏனென்றால், கமிஷனர் இட்ட உத்தரவை ஏதாவது தப்பித் தவறி மீறினால், அந்த ஆசிரியரை உடனே மாற்றம் செய்கிறார்கள். அதற்காகவே நமது மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்கள் நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்து, அந்தக் குறையைத் தீர்ப்பதற்காக வென்று தனியாக ஸ்பெஷல் ஆபீசர் ஒருவரை நியமித்திருக்கிறார்கள். ஆசிரியர்கள் நன்றாக வாழவேண்டும் என்பதில் அமைச்சருடைய நல்லதொரு சிந்தனையையும் நல்லதொரு கருத்தையும் நான் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. காரணம், அந்தத் துறையில் இதுவரையிலும் கமிஷனருடைய ஆதிக்கம் இருந்துவந்தது. அதையெல்லாம் போக்குவதற்குத் தனியாக ஒரு ஸ்பெஷல் ஆபிசரை நியமித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

பஞ்சாயத்து யூனியனில் ஆட்குறைப்புச் செய்ய வேண்டும், சிக்கனச் சீரமைப்புச் செய்ய வேண்டும் என்றெல்லாம் அது சம்பந்தப்பட்ட பெரிய அதிகாரிகள் சொல்லுகிறார்கள். பஞ்சாயத்து யூனியனில் இருக்கக்கூடிய ஊழியர்கள் யாரும் திடீரென்று நியமிக்கப்பட்டவர்கள் அல்ல. மறைந்த மாவட்டக் கழகத்தில் இருந்து ஊழியம் செய்து பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள்தான் பெரும்பாலும் இந்தப் பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் போக்க வேண்டும் என்று சொல்லுபவர்கள், புதிதாக இந்தப் பஞ்சாயத்து யூனியன்களில் தஞ்சம் புகுந்தவர்

பிற பகல் 5-00 கள்தான். இப்படிப்பட்ட சில அதிகாரிகள், ஏற்கனவே இருந்தவர்களைப் போக்கிவிட்டு, தாங்கள் ஆதிக்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்று நினைக்கிறார்கள். இருந்த வெள்ளத்தைப் புகுந்த வெள்ளம் அடித்துக்கொண்டு போன கதையாகத்தான் இது இருக்கிறது. இதையெல்லாம் அமைச்சர் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியனுக்கு ஏராளமாகச் செலவு செய்யப்படுகிறது, கிராமப் பகுதிகளில் ஏராளமாகச் செலவு செய்யப்படுகிறது. ஏராளமான ஊழியர்கள் இருக்கிறார்கள் என்று பரவலாக ஒரு கருத்து இருக்கிறது. அது தவறான ஒரு கருத்தாகும். சென்னை மாநகராட்சியை எடுத்துப் பாருங்கள். அதனுடைய ஜனத்தொகை என்ன ? 25,00,000 என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த 25,00,000 ஜனத்தொகை உள்ள நகர மக்களுக்காக எவ்வளவு ஊழியர்கள் இருக்கிறார்கள். அதே நேரத்தில் கிராமமக்களுக்கு அதே 25,00,000 ஜனத்தொகையுள்ளவர்களுக்கு, பரப்பளவுக்கு எவ்வளவு ஊழியர்கள் இருக்கிறார்கள் என்பதை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். நகர மக்களுக்கு உள்ள அத்தனை ஊழியர்கள் கிராம மக்களுக்காக இல்லை. ஏதோ கிராமப் பகுதி மக்களுக்காக, பஞ்சாய்த்து யூனியன்களுக்கு ஏராளமாக உதவி செய்து இருக்கிறார்கள். ஏராளமான பணம் செலவழிக்கிறார்கள் என்ற ஆவலாதிகள் கூறப்பட்டன. பட்டணவசதிகளுக்காகப் பெரிய பெரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். குறிப்பாக, நான்கு டைரக்டர்கள் இருக்கிறார்கள். டைரக்டர் ஆப் ரூரல் டெவலப்மென்ட் என்று ஒருவர், அடுத்து இன்ஸ்பெக்டர் ஆப் முனிசிபாலிடீஸ் என்று ஒருவர். டைரக்டர் ஆப் விமன்ஸ் வெல்பேர் என்று ஒருவர், டைரக்டர் ஆப் காதி என்று ஒருவர். இப்படி நான்கு டைரக்டர்கள் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் கிராமங்களைப் பார்த்தால் வேடிக்கையாக இருக்கிறது போலும். ஏனென்றால், இவர்கள் பட்டணத்தில் வசிக்கிறார்கள். இந்த நான்கு பதவிகளையும் ஒன்றாக இணைத்து, செக்ரடரி, ஆர்.டி. எல். ஏ. என்பவரை ஒரு சீனியர்

ஐ.ஏ.எஸ். ஆபீசராகப் போட்டு, அவருக்குக்கீழே இதையெல்லாம் கொண்டு வந்து செயல்படுத்தினால் நல்ல முறையில் செயல்படும். அவருக்குக் கீழே ஒரு ஜாயின்ட் செக்ரடரி போடலாம். நான்கு டைரக்டர்களைப் போட்டிருப்பது சிக்கனச் சீரமைப்பு முறைக்குச் சரியானதல்ல, நல்லதல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராம வளர்ச்சி இலாகாவை பற்றிச் சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். அந்த அலுவலகத்தில் இருக்கக் கூடியவர்களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்கும்போது, தன்னிச்சையாக, மேல் அதிகாரியின் இஷ்டம் போல் உத்தியோக உயர்வு கொடுத்து, அவர்களுக்கு ஸீனியாரிடி வழங்கியிருக்கிறார்கள். உண்மையிலேயே யார் ஸீனியர் என்பதைப் பார்த்து உத்தியோக உயர்வுகள் கொடுக்கப்படவில்லை. இதையெல்லாம் நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்து, யார் உண்மையிலேயே ஸீனியராக இருந்தார், யார் பெரிய அதிகாரியினால் திடீரென்று உத்தியோக உயர்வு கொடுக்கப்பட்டார் என்பதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து, உண்மையிலேயே ஸீனியர்களாக இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். நான்கு டெபுடி டைரக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களில் உண்மையிலேயே அந்தத் துறையிலே இருக்கக் கூடியவர்களுக்கு முதல் இடம் கொடுத்து, மற்றவர்கள் அந்த இலாக்காவிலிருந்து போகும்படி செய்யவேண்டும். இதுதான் நியாயம் என்று சொல்லிக் கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடிக்கின்றேன், வணக்கம்.

திரு. எஸ். ஆறுமுகம் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிற சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தைக் குறித்து, அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மானியத்தை முழுமனதோடு ஆதரித்து, இந்த சர்க்கார்—நம்முடைய திராவிட முன்னேற்ற கழக சர்க்கார்—எடுக்கக்கூடிய நல்ல பல அம்சங்களை, அவர்களுடைய உரையில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். நாட்டு மக்களிடையே, குறிப்பாக இந்தத் துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கக் கூடிய அலுவலர்களிடத்திலே சோர்வு தட்டியுள்ள நிலை இருந்து வருகிறது. நம்முடைய தல நிர்வாக அமைச்சர் அவர்கள் தெளிவான அறிக்கையை இந்த மன்றத்தில் பதிலளிக்கும்போது தெரிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அந்தத் துறையில் இருப்பவர்களுக்கு ஒரு தெம்பூட்டக்கூடிய வகையில் அவருடைய உரை இருக்கும் என்று நான் கருதுகிறேன். அதை அவர்கள் தெரிவிக்க வேண்டும். இதிலே 11-வது பக்கத்தில், உள்துறை மன்றங்களில் ஏற்படும் வீண் விரயங்கள் தடுக்கப்படும், வேண்டாத பதவிகளை மாற்றியமைக்கவும், வேண்டியவைகளை உருவாக்கவும் இந்த அரசு விரும்புகிறது என்று கூறியிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் சொல்லுகிறபோது, உள்ளாட்சி மன்றத் துறைகளில் இருக்கக்கூடிய வேண்டாத பதவிகளையும் எடுத்துவிடுவதற்காக அரசினர் உத்தேசித்திருப்பதாக இருக்கும் முடிவு என்ன என்பதை அவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எந்த எந்த பதவிகளை எப்படி எப்படி மாற்றியமைக்கப்போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை. வேண்டாத பதவிகள் இந்தத் துறையில் இருப்பதை நாங்கள் ஒத்துக்கொள்ளுகிறோம். நானே ஒரு ஊராட்சி ஒன்றியப்புத் தலைவராக இருக்கும் காரணத்தால், அதிகாரிகளிடத்தில் தெளிவாக நாங்களே கூட கேட்கிறோம். ஈ. ஓ. (இண்டஸ்ட்ரீஸ்) இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்துக் கேட்பதுண்டு "ஒதுக்கப்படக் கூடியத் தொகை உங்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரம் உங்களுக்கு மனத் திருப்தியை அளிக்கிறதா ? நீங்கள் பட்டதாரிகளாக இந்தத் துறையிலே பல பேர்கள் இருக்கிறீர்கள். அங்கே உங்களுக்குப் போதுமான தொகை ஒதுக்கி வேலை செய்யக்கூடிய அளவுக்குப் பொறுப்பு கொடுக்கப்படவில்லை. ஆகவே, பொறுப்பு கொடுக்கப்படாமல் இருக்கின்ற காரணத்தால், நீங்கள் சும்மா இருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இதில் உங்களுடைய கருத்து என்ன ?" என்று கேட்கிறோம். அவர்களும் பதில் சொல்லுகிறார்கள். "எங்களுக்குத் தனியாக நிறைய மானியத்தை ஒதுக்கி கிராமப் புறங்களில் இந்த இந்தத் தொழில் திட்டங்களைச் செய்துதான் தீரவேண்டும் என்று சர்க்கார் வழி வகுக்குமானால் அதைச் செய்துதர நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அந்த

வகையில் அந்தத் துறையில் மானியத்தை ஒதுக்காமல், எங்களையெல்லாம் உத்தியோகங்களில் நியமித்துவிட்டு, நாங்கள் தற்காலிகமாகப் பணி செய்வதுபோல் போய் வந்துகொண்டிருக்கும் அளவில் எங்களை வைத்துக்கொண்டிருப்பதில் நாங்களும் நிம்மதியாக இருக்கவில்லை. ஆகவே, எங்களை இந்தத் துறையிலிருந்து எடுத்துவிட்டுத் தொழில் வளர்ச்சித் திட்டத்தோடு இணைத்துவிடுவதைக்கூட நாங்கள் வரவேற்கிறோம்'' என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதே போல் தான் நானும் சொல்லுகிறேன். இவர்களை எடுத்துவிடுவதில் எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால், அவர்களில் பலர் பட்டதாரிகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்க வேண்டிய நிலை நம்முடைய சர்க்காரைச் சார்ந்திருக்கிறது. அதையும் சிந்தித்துப் பார்த்து, அதை மெதுவாகத் தான் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களை எடுத்துவிடலாம். வி.எஸ்.ஆர். இருக்கிறார்கள். அவர்களையும் எடுத்துவிடலாம். கிராம சேவகிகள், முக்கிய சேவகிகள் இருக்கிறார்கள். அவர்களையும் எடுத்துவிடலாம். ஆனால், இப்படி வேண்டாத பதவிகளில் எக்ஸ்டென்ஷன் ஆபீசர்கள் என்று இருப்பவர்களை எடுப்பதை நானும் வரவேற்கிறேன். இந்த மன்றமும் நம்முடைய தமிழக சர்க்காருக்கு ஆதரவு அளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால், எடுத்துவிட்ட பிறகு, இப்பொழுது ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களுக்கு இருக்கும் அதிகாரம், அதன் பின்னால் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்குப் போதுமான அளவில் இருக்கிறதா, எந்த எந்தத் துறைகளில் இருப்பவர்கள் இந்தத் துறைகளில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள், இந்தத் துறை வேகமாகச் செயல்படாத அளவிற்கு எங்கே தடங்கல் இருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

இன்றையதினம் ஊராட்சி ஒன்றிப்பு மன்றத் துறையிலே உள்ள அதிகாரங்கள் அத்தனையும் வருவாய்த் துறையோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்தவரைக்கும் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால், வருவாய்த் துறை வேறு—தல நிர்வாகத் துறை வேறு என்று இரண்டாகப் பிரித்துவிட வேண்டும் என்பதுதான். அப்படிப் பிரித்தாலொழிய, நாம் தல நிர்வாகத் துறையில் முன்னேற்றத்தைக் காண முடியாது என்பதை வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். இன்றையதினம் வருவாய்த் துறையிலே கோட்டாட்சித் தலைமையின்கீழ் இருப்பவர்கள் தாசில்தார்கள்—ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள் ஊராட்சி ஒன்றிப்புத் துறையிலே அதிகாரம் செலுத்தக் கூடிய வகையிலே இருந்து வருகிறார்கள். நாட்டு மக்களிடத்திலே அதிகமாக தொடர்புகொண்டிருக்கக்கூடிய ஒரு ஸ்தாபனம் இருக்கிறது என்று சொன்னால், அது தல நிர்வாகத் துறை ஒன்றுதான் என்று தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். இன்றையதினம் இந்தத் துறையின்மீது அதிகமான மக்களுக்கும், அரசியலில் இருக்கக்கூடிய பொதுநலவாதிகளுக்கும் கண்ணிலே படுகிற காரணமே இதனுடைய வேலைகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக இருக்கிறது. மற்ற மற்றத் துறைகளில் எல்லாம் கோழி வளர்ப்பதற்கென்று ஒரு அதிகாரி—முட்டை சேகரிப்பதற்கென்று ஒரு அதிகாரி—அதனுடைய விலையை நிர்ணயிப்பதற்கென்று ஒரு அதிகாரி, கடலெண்ணெக்கு ஒரு அதிகாரி, வினியோகம் பார்ப்பதற்கென்று ஒரு அதிகாரி—இப்படி அதிகாரிகள் அதிகமாக இருக்கிறார்கள். பல அதிகாரிகள் அவர்களுக்கென்று கொடுக்கப்பட்டிருக்கக் கூடிய வேலை—பணி குறைவாக இருப்பதால், வாகன வசதியெல்லாம் செய்துகொண்டு, ஜாலியாகச் சுற்றிக்கொண்டிருக்கிறார்கள். எப்படியோ அவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றையதினம் கிராமப்புறத்திற்கு வருவதில்லை. எங்கோ இருக்கிறார்கள்? எப்படியோ அவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள்? அவர்கள் நாட்டுமக்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் மேல்மட்டமாக கண்ணில் படுவதில்லை. அவர்கள் எல்லாம் தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். தல நிர்வாகத் துறையினர்கள்தான் நேரடியாகக் கிராமங்களிலும், அந்தந்தப் பகுதி மக்களிடத்திலும் வேலை செய்து கொண்டு வருகிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பல்வேறு நிர்வாகத் துறைகளில் இருக்கக்கூடிய அதிகாரிகளிடத்திலே கிராம மக்கள் எந்தத் துறையிலுள்ளவர்கள் நல்ல படியாக பழகுகிறார்கள் என்றால், அது தல நிர்வாகத் துறையாகத் தான் இருக்க முடியும், வருவாய்த் துறையிலே போனால் அதிகாரிகள் நல்ல படியாக பழகு

கிறார்களா என்றால் இல்லை. எந்தத் துறையில் இருப்பவர்கள் மக்களிடத்தில் நாணயமாக—மரியாதையாக பழகுகிறார்கள் என்று பார்ப்போமானால், வருவாய்த் துறையிலே இருப்பவர்கள் மக்களை இழிவுபடுத்துகின்ற வகையில் பழகுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் போனாலே மிகவும் கேவலமாக நடத்துவதைப் பார்க்கின்றோம். கிராமப்புற விவசாயி, வருவாய்த் துறைக்குப் போய் ஒரு கருத்தை அறிந்து வரவோ, ஒரு பிரச்சினையைத் தீர்த்துவரவோ முடியாமல் இருக்கிறார். தல நிர்வாகத் துறை அப்படி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ரோட்டிலே போகக் கூடிய விஸ்தரிப்பு அதிகாரியையோ, ஆணையாளரையோ, மற்றவர்களையோ, ரோட்டிலேயே நிறுத்தி வைத்து கேள்வி கேட்கிறார்கள். அவர்களும் பதில் சொல்ல வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள்மீது இன்று ஒரு வீண் பழியைச் சுமத்திக்கொண்டிருப்பது பொருந்தாது என்பதைத தெரிவித்துக் கொள்கிறேன். இது ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டிய பிரச்சினை.

தேவையில்லாத பதவிகளை எடுத்துவிடுவதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் ஒரு முனிசிபாலிட்டிக்கு, மாநகராட்சி மன்றத்திற்கு அதன் எல்லைக்குட்பட்டிருக்கும் அதிகாரம் போல, ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களுக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். அந்த இயக்கத்திலே பணியாற்றக் கூடியவர்களிடத்திலே வேலைகளை வாங்கவேண்டும். ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்கள் சரியான முறையில் நடைபெறவில்லையென்று சொன்னால், அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் இந்தத் துறைமீது வீண்பழி சுமத்த வேண்டாமென்று சொல்வதுடன், தமிழக அரசு இதை ஏற்காது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் பஞ்சாயத்துக்களிலே ஒரு மாற்றம் தேவை. முன்னாலே நான்கைந்து பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கிளார்க்கைப் போட்டிருந்தார்கள். இப்போது அதை எடுத்துவிட்டார்கள். இப்பொழுது "பார்ட் டைம்" கிளார்க் போட்டு, பணி செய்யலாம் என்கிறார்கள். சாதாரணமாகப் படித்தவர்களுக்கு 10, 15 ரூபாய் கொடுத்து குமஸ்தாவாக வைத்துக்கொள்ளலாம் என்று கூறுகிறார்கள். இன்றையதினம் பஞ்சாயத்து யூனியன் தலைவராக இருப்பவர் பிற காரியங்களுக்கு 100 ரூபாய் எடுக்கலாம் என்று சர்க்கார் விதிமுறை கூறுகிறது. ஒரு வேலை செய்யலாம் என்று சொன்னால் 300 ரூபாய் "இம்ப்ரஸ்டு அட்வான்ஸ்" ஆக எடுக்கலாம் என்று விதிமுறை இருக்கிறது. அதைத் தளர்த்த வேண்டுமென்று சொல்லவில்லை. இப்போது நான்கு பஞ்சாயத்துக்களுக்கு ஒரு எக்ஸிக்யூடிவ் ஆபீசரை நிர்வாக அதிகாரியாக நியமித்து சில சீர்திருத்தம் செய்யலாம். அப்படி பணி செய்யலாம் என்ற நிலை வருமானால், பஞ்சாயத்துத் தலைவர்கள்மீது இருக்கக் கூடிய கெட்ட அபிப்பிராயமும் போய்விடும். பஞ்சாயத்து பணத்தையும் சிக்கனமாகப் பார்த்துக்கொள்வதற்கு வழி ஏற்படும். ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆணையாளருக்கு பணம் வழங்கும் அதிகாரம் ரூபாய் 2 ஆயிரம் என்று இருப்பதை 3 ஆயிரம், 5 ஆயிரம் என்ற அளவிலே வழங்கப்பட வேண்டும். குறைவாக வழங்கும் அதிகாரம் இருப்பதாலே தான், நாங்கள் லோன் வாங்குவதுகூட முடிவதில்லை.

அடுத்தாற்போல சுகாதாரத்தைப் பொறுத்தவரைக்கும் ஒன்றைத்தெரிவித்துக்கொள்கிறேன். கிராமங்களில் சுகாதார வசதி தேவை. ஒரு பஞ்சாயத்துத் தலைவர் ஒரு பகுதிக்குச் சுகாதார வசதி செய்துகொண்டு விட்டு, மற்றப் பகுதிகளைப் புறக்கணிப்பதும் உண்டு. இப்படிப்பட்ட குறைபாடுகள் தான் இருக்கின்றன. மற்றவர்கள் மாவட்டக் கலெக்டருக்கோ, மற்ற அதிகாரிகளுக்கோ விண்ணப்பம் செய்கிறார்கள். பொதுவாக எல்லாப் பகுதிகளுக்கும சுகாதாரவசதி செய்து தரப்படவேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் ஓரப்பட்சமாக நடந்துகொள்கிறார்கள் என்று சொன்னால், அமைச்சர் அந்த விண்ணப்பத்தை கலெக்டருக்கு அனுப்புகிறார். கலெக்டர் யூனியனுக்கு அனுப்புகிறார், நாங்கள் பஞ்சாயத்துக்கு அனுப்புகிறோம். அதன்மீது தேவைப்பட்டால் குறைகளை அகற்ற வேலை செய்கிறார்கள், இல்லையென்றால், செய்வதில்லை. அப்படி ஓரபட்சமாக ஒரு தலைவர் நடப்பாரானால், அந்தப்

பிரச்சினைக்குப் பரிகாரம் காணுவிட்டால்—யூனியன் மூலம் சுகாதார வசதியைச் செய்துகொடுத்துவிட்டு, எவ்வளவு செலவாகிறதோ, அந்தத் தொகையைப் பிடித்துக்கொள்ளக்கூடிய அளவிலே அதிகாரம் வழங்கப்படவேண்டும். அடுத்தபடியாக, கிராம வைத்திய ......

(மணியடிக்கப்பட்டது.)

*திரு. ந. சோமசுந்தரம் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள சமுதாய வளர்ச்சி மானியக் கோரிக்கையை நான் மனதார வரவேற்கிறேன். கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்புகள் என்று சொல்லப்பட்டதெல்லாம் போய், இன்றைக்குக் கிராமப் பஞ்சாயத்துக்கு இருக்கின்ற அதிகாரங்கள் குறைவாக இருக்கின்றன. இன்னும் அதிகமான அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை பலமாக இருந்தாலும், இன்றைக்கு இருக்கின்ற தேர்தல் முறையை மாற்றி, ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதற்காக மக்களே பஞ்சாயத்துத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற முறையும், பொது மக்களே பஞ்சாயத்துக் கூட்டுமன்றத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற முறையும் ஏற்பட்டால்தான், பல குழப்பங்களும், பல சச்சரவுகளும் மறையும். எங்கள் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பெரும்பண்ணை அதிபர்களுக்கெல்லாம், பஞ்சாயத்துத் தேர்தலிலிருந்து, கூட்டுமன்றத் தலைவர் தேர்தல் முறையிலே அவர்களுக்குப் பொழுதுபோக்காக இருந்து அதன்மூலம் பல கலவரங்கள் நடந்ததை எல்லோருமே பத்திரிகையில் படித்திருக்கலாம். அம்மாதிரித் தேர்தல்களிலே தலை வாங்கப்பட்டது, கையெல்லாம் வாங்கப்பட்டது என்ற நிலைமை தான் அங்கு இருந்து வருகிறது. பொதுமக்களே நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுக்கின்ற ஒரு நல்ல முறையைக் கொண்டுவர வேண்டும்.

அதே நேரத்திலே இன்றைக்கு இருக்கிற பஞ்சாயத்துச் சட்டத்தின்கீழ் 1961-ல் ஒரு உத்தரவை போட்டு நாட்டில உள்ள புறம்போக்கு குளங்கள் அனைத்தையும் அந்த அந்த பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைத்தார்கள். பஞ்சாயத்துக்களும் அந்தக் குளங்கள் தங்களிடம் வந்துவிட்டன என்று நினைத்து அவற்றை மீன் பிடி குத்தகைக்கு ஏலம் விடுகிற நேரத்தில் யார் யாரோ அரிவாளைத் தூக்கிக்கொண்டு வந்த நிலையையும் பார்த்தோம். அதனால் பஞ்சாயத்துக்களுக்கு நஷ்டம் தான் ஏற்பட்டது. காரணம் அந்தச் சட்டத்தில் சரியான வரையறை இல்லை. முதலிலே வந்த சட்டத்தில் ஒரு குளம் நீண்டநெடுநாளாக எந்த ஒருவருடைய அனுபவத்தில் இருந்தாலும்—அதன் வருவாயைக் கொண்டு கோவில் காரியத்திற்கோ அல்லது வேறு ஏதாவது பொதுக் காரியத்திற்கோ அவர் செலவு செய்து வந்தார் என்றால் அவர் மூலமாகவே அந்தக் குளத்தை அந்த பொதுக்காரியத்திற்கு விடலாம், அப்படி இல்லாவிட்டால் எந்தத் தனி மனிதனும் அதை அனுபவித்துக் கொண்டிருக்கவிடாது, அதை உடனடியாக அவரிடம் இருந்து எடுத்து பஞ்சாயத்துக்களிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று விதி இருந்தது. அந்த விதியை ரத்துசெய்துவிட்டு எந்த ஒரு குளத்தையாவது ஒருவர் தம் பொறுப்பில் 30 வருடம் அனுபவித்தால், அதை அவரே அனுபவித்துக்கொள்ளலாம் என்பதாக ஒரு திருத்தம் செய்துவிட்டார்கள். அதன் காரணமாக இன்றையதினம் பெரிய பெரிய பண்ணைகள் எல்லாம் ஐந்தாயிரம், பத்தாயிரம் என்பதாக பொதுக்குளங்களில் கிடைக்கும் வருடவருமானத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். ரெவின்யூ அதிகாரிகளும்கூட இந்த விதியை சமயத்திற்குத் தகுந்தவாறு பயன்படுத்திக்கொள்கிறார்கள். குறிப்பாக என்னுடைய நீடாமங்கலம் பஞ்சாயத்து யூனியனையே எடுத்துக்கொண்டால்—சித்தமல்லி பஞ்சாயத்தில் ஒரு குளத்தைப் பொறுத்தவரையில் பூண்டி வாண்டையார் அதை 30 வருடங்களாக அனுபவித்து வந்திருக்கிறார்கள், அதற்கான ஆதாரங்கள் சாட்சியங்கள் வாயமொழிதான். ஆகவே அந்தக் குளம் அவருக்கே சொந்தமானது என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அதே நேரம் புள்ளவராயன் குடிகாடு என்ற பகுதியில் உள்ள ஒரு குளத்தை ஹரிஜன மக்கள் பல ஆண்டுக் காலமாக அனுபவித்து வந்திருந்தும் கூட அதற்கான ஆதாரங்கள் இல்லை என்று சொல்லி அவற்றைப் பஞ்சாயத்து யூனியனிடம் வாங்கிக்கொடுத்துள்ளார்கள். இப்படி ஒரே யூனியனில்

இரண்டுவிதமான தீர்ப்புகள் இருக்கின்றன. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து எந்த ஒரு தனி மனிதன் எந்தக் குளத்தை எவ்வளவு ஆண்டுகாலமாக அனுபவித்து வந்திருந்தாலும் கூட—அவர் அதை தமது சொந்த நலத்திற்குப் பயன் படுத்திக்கொண்டு வருகிறார் என்றால் அதை வாங்கி பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்கக் கூடிய வகையில் சட்டத்தை சரியான முறையில் அமைக்க வேண்டும். இன்றையதினம் பஞ்சாயத்துகளிடம் களப்புறம்போக்கு, குளப்புறம்போக்கு, மேய்ச்சல்புறம்போக்கு என்று நிலங்கள் இருக்கின்றன. களம் களமாக இல்லை, குளம் குளமாக இல்லை, மேய்ச்சல்தரை மேய்ச்சல்தரையாக இல்லை. ஆகவே ஒன்று சாகுபடிக்கு ஏற்றதாக இருந்தால் அவற்றை சாகுபடி நிலமாக்கி, நிலம் அற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும். குடியிருக்க லாயக்கானதாக இருந்தால் குடியிருக்க வீடில்லாதவர்களுக்கு மனையாக வழங்கவேண்டும்.

அடுத்து இன்றைக்கு சென்னை மாநகராட்சியை எடுத்துக்கொண்டால் சில வருடங்களுக்கு ஒரு முறையாவது ஆதித் திராவிடர் மேயராக வர சட்டத்திலேயே வகை இருக்கிறது. ஆனால் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக்கொண்டால் அந்த வசதி இல்லை. ஒரு சில இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் அவர்கள் தலைவராக வரமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து யூனியன்களுக்கும் சரி பத்தாண்டுக்கு ஒரு முறையாவது சட்டபூர்வமாக ஆதித் திராவிட சமூகத்தில் இருந்து தலைவர் வருவதற்கு வகை செய்ய வேண்டும். நகராட்சிகளிலும் இத்தகைய நிலை ஏற்பட வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில்—ஆசிரியர்களை மாற்றம் செய்கிற பொறுப்பை கவனித்துக்கொள்ள போடப்பட்டுள்ள அட்ஹாக் கமிட்டியில் லோகல் எம்.எல்.ஏ. இடம் வகிக்கிறார். அதுபோல அப்பாயின்மெண்ட் கமிட்டிகள் என்று இருக்கின்றன. அதிலே இன்றைக்கு ஏற்படுகிற ரகளை—பஞ்சாயத்துத் தலைவர், பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு ஏற்படுகிற நிலை போலவே இருக்கிறது. இந்த நிலை போக சட்டமன்ற உறுப்பினர்களே இதிலும்—பஞ்சாயத்து கூட்டுமன்றத்தில் அப்பாயிண்ட்மெண்ட் கமிட்டியில் அங்கம் வகிக்க வழி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். தொகுதியைச் சுற்றிப் பார்க்க லோகல் எம்.எல்.ஏ.க்கு ஜீப் கொடுக்க வேண்டுமென்ற உத்தரவு இருந்தாலும் அதைக் கேட்கிறபோது அது சர்வீசுக்குப் போயிருக்கிறது என்கிற பதில்தான் ஆணையாளரிடம் இருக்கிறது. அப்படியின்றி குறிப்பிட்ட இரண்டு மூன்று நாள் சட்டமன்ற உறுப்பினருக்குக் கொடுக்க வேண்டும் என்றும், தொகுதியை ஆணையாளருடனேயே சுற்றிப் பார்த்து, எங்கே குடிதண்ணீர் வசதி தேவை, எங்கே பாலம் தேவை, ரோடு வசதி எங்கே இல்லை என்பன போன்ற குறைபாடுகளை அவ்வப்போது பார்த்து நீக்குவதற்கு வழியேற்படும் என்று தெரிவித்துக் கொண்டு, பேச சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். முருகையன் : மதிப்பிற்குரிய சட்டமன்ற தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் இங்கே கேட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களையும் சொல்ல விரும்புகிறேன்.

முன்பு ஆண்ட சர்க்கார் கிராமப் பகுதிகளுக்கு நல்லது செய்கிறேன் என்று சொல்லி, இதுபோன்ற பஞ்சாயத்து யூனியன்களை நிறுவி எந்த கிராமப்புறத்திலும் நல்ல முறையில் செயல்படாத நிலையில் விட்டுச் சென்றார்கள். அதற்காக ஒதுக்கக்கூடிய பணங்களில் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரிகளுக்கே செலவாகிவிடுகிற காரணத்தினால் கிராம மக்களுடைய குறைகள் எதுவும் நிறைவேறாத சூழ்நிலை ஏற்பட்டது. இந்த அரசு அதைப்போல் இல்லாமல் அதிகாரிகளைக் குறைத்து, பொதுக் காரியத்திற்கு அதிகமான பணம் செலவாகக்கூடிய சூழ்நிலையை நிச்சயமாக ஏற்படுத்தித் தருவார்கள் என்று நான் நம்புகிறேன். நிச்சயமாக இந்த அரசு பெருவாரியான கிராம மக்களுக்கு வேண்டிய எல்லா நன்மை

களையும், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகவும் நகராட்சி மூலமாகவும் பெரிய பெரிய நகரங்களுக்கு எல்லாம் செய்வதைக் குறைத்து கிராமங்களுக்குச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துகள், பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக ரோடுகள் போடப்பட்டன என்று சொன்னாலும் தேர்தலுக்கு முன்பும் தேர்தல் நேரத்திலும் கிராமம் கிராமமாகச் சென்ற போது பார்த்தோம். ஒரு யூனியனில் பத்து கிராமங்களுக்காவது நல்ல ரோடுகள் இல்லை என்பதை எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சொல்வேன். ஏராளமான பணத்தை வாரிச் செலவிட்டும், மக்கள் குறை நிவர்த்திக்கப்படாமல் இருப்பதை இந்த அரசாவது கண்டு, அந்தக் குறைகளை நீக்க முன் வரவேண்டும். அதே மாதிரி பஞ்சாயத்து யூனியன்கள் போட்ட ரோடுகள் இருக்கின்றன. அந்த ரோடுகளில் பஸ் போகின்ற வசதி இருந்தால் ரோடு நல்ல முறையில் இருக்கும். அதிகப்படியான தூரம் இருந்தால் ஹைவேசிடம் கொடுத்து விடுகிறார்கள். ஆகவே பஞ்சாயத்து யூனியன் ரோடுகள் நல்ல முறையில் நிர்வகிக்கப்பட்டு போக்குவரத்து வசதி செய்யப்பட வேண்டும்.

அதே நேரத்தில் ஆரம்பப் பள்ளிகளைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 300 ஜனத்தொகை கொண்ட கிராமங்களில் ஆரம்பப்பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. அதுபோல ஒரு பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்றால் கல்வி அதிகாரிக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு அது தடைசெய்யப்படுகிறது. ஒரு மைல் தூரத்திற்குள், $7\frac{1}{2}$ பர்லாங் தூரத்திற்குள் இன்னொரு பள்ளியிருக்கிறது என்று சொல்லி மறுத்து விடுகிறார்கள். சமீபத்திலே 6 பர்லாங்கு தூரத்திற்கு அப்பால் வைக்கலாம் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தும் கூட இந்த ஆண்டு பல சிரமங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. இங்கே வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் சொல்லலாம், அவர்களே ஆரம்பிக்கலாமே என்பதாக. இன்றைய தினம் ஒரு பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்றால் அதற்கு அருகில் எவ்வளவு தூரத்தில் பள்ளியிருக்கிறது என்பதை கல்வி அதிகாரி 7 பர்லாங் என்றால் ரெவின்யூ இலாக்காவினர் 1 மைல் என்கிறார்கள். இதுமாதிரி ஏற்படுகிற அபிப்பிராய பேதம்தான் தாமதப்படுத்துகிறது. ஆகவே தூரத்தைப் பற்றிக் கவலையில்லை. 300 ஜனத்தொகை இருந்தால் அங்கே ஒரு பள்ளி ஏற்படுத்தலாம் என்பதாக உத்தரவு போட்டு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டும் அல்ல. ஒரு பஞ்சாயத்து யூனியன் 70 பைசா செஸ் விதிக்கிறது. இன்னொன்று 30 பைசா விதிக்கிறது. இன்னொன்று 40 பைசா என்று விதிக்கிறது. எல்லா பஞ்சாயத்து யூனியன்களும் ஒரே மாதிரியாக 40 பைசா, அல்லது 50 பைசா என்று விதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் 75 பைசா போடுகிறவர்கள் அங்கே எல்லா வசதிகளையும் செய்கிறார்கள். 30 பைசா போடுகிற
பி.ப. இடத்தில் எந்த விதமான வேலைகளும் நடைபெற முடியாத சூழ்நிலை
5-3 இருந்து வருகிறது. இதிலே ஒரு பெரிய குறை இருக்கிறது. அரசியல் தலையிடுகிற நிலைமை எல்லாம் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களை ஏ. பி. சி. என்று மூன்று வகைளாகப் பிரித்திருந்தாலும்கூட, ஏ. வகை இவ்வளவு போடவேண்டும், பி. வகை இவ்வளவு போடவேண்டும், சி. வகை இவ்வளவு போடவேண்டும் என்ற அளவுக்குச் சர்க்காரே ஒரு நிர்ணயம் செய்து விட்டால் பாரபட்சம் இருக்கக்கூடிய நிலைமை இருக்காது. பஞ்சாயத்து யூனியன்களிலே வருவாய் மிக மிகக் குறைவாக இருக்கிறது. சில பஞ்சாயத்துக்களுக்கு யூனியனிலிருந்து பணம் கொடுக்க வேண்டுமென்றால் சில பேர்கள் அதற்கு தடை செய்கிறார்கள். பஞ்சாயத்துக்கு, பஞ்சாயத்து யூனியன் நிதியிலிருந்து இவ்வளவு பணம் கொடுக்கலாம் என்று விதி இருக்க வேண்டும். ஒரு சில பஞ்சாயத்துக்களுக்குக் குறைவாகக் கொடுக்கிறார்கள். ஒரு சில பஞ்சாயத்துக்களுக்கு அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஆகவே அப்படியில்லாமல் எல்லாப் பஞ்சாயத்துக்களையும் சமமாகப் பாவித்து எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் இருக்கிற மக்கள் சமமான வசதிகளுடன் வாழ்வதற்கேற்ற முறையில் பணம் கொடுக்கப்பட வேண்டும்.

கிராமங்களிலே குடிநீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஹரிஜன காலனியிலே ஒரு கிணற்றை வெட்டிவிட்டு அதிலே சரியானபடி தண்ணீர் கிடைக்கவில்லை. கிராமத்திலே கிணறு வெட்ட வேண்டுமென்று சொன்னால் முதலிலே ஹரிஜனக் காலனியில் ஒரு கிணறு வெட்டி விட்ட பிறகு தான் அந்த ஊரிலே கிணறுகள் குடிநீருக்காக வெட்ட வேண்டுமென்று சர்க்கார் உத்திரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி மின்சார விளக்குகளைப் பொறுத்தவரையிலேகூட ஊர்களிலே விளக்குகளைப் போட்டு விடுகிறார்கள். ஆனால் ஹரிஜனக் காலனிகளுக்கு விளக்குகள் போடுவது கிடையாது. இந்த வகையிலே எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுடைய குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டியது மிக மிக அவசியம்.

பஞ்சாயத்துக்களைப் பிரிக்கக்கூடிய விஷயத்தைப்பற்றி உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது சொன்னார்கள். ஒரு மைலுக்கு அப்பால் இருந்தால் 500 ஜனத்தொகைக்கு மேற்கொண்டு இருந்தால் அந்தப் பஞ்சாயத்துத் தனியாகப் பிரிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆயிரம் ஜனத்தொகை உள்ள கிராமங்கள், இரண்டு மூன்று மைல்களுக்கு அப்பால் உள்ள கிராமங்கள் எல்லாம் பஞ்சாயத்துக்களாக ஆக்கப்பட வேண்டுமென்று கேட்கப்பட்ட கோரிக்கைகள் எல்லாம் திருப்பியனுப்பப்பட்டிருக்கின்றன. பண வசதியும், ஜனத்தொகையும் போதுமான அளவுக்கு இருந்தால், சென்ற அரசு தள்ளி வைத்ததைப் போல் இல்லாமல் நம்முடைய அரசு உடனடியாகப் பிரித்துவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரெவின்யூ கிராமங்கள் இரண்டு மூன்று ஒரு பஞ்சாயத்திலே இருக்கின்றன. அவற்றையெல்லாம் தனித்தனியாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகர மன்றங்களைப் பொறுத்தவரையில் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இருபது ஆண்டுகளுக்கு முன்பாகப் பிரிக்கப்பட்ட வார்டுகள் தான் இன்றைக்கு வரையில் இருந்துகொண்டிருக்கின்றன. ஒரு வார்டிலே 3,000 பேர்கள் இருப்பார்கள், அடுத்த வார்டிலே ஆயிரம் பேர்கள் இருப்பார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு கேள்விகளுக்கு பதில் சொல்லுகிற பொழுது, பாரபட்சம் அகற்றப்படும், ஆணையாளர்கள் பார்த்துச் செய்வார்கள் என்று சொன்னார்கள். ஆணையாளர்கள் வார்டுகளைப் பிரித்தாலும்கூட இறுதியில் கவுன்சில்தான் முடிவு செய்ய வேண்டிய ஒன்றாக இருக்கிறது. நகர மன்றத் தலைவர்கள் அவர்களுக்குச் சாதகமாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்வார்கள், இல்லாவிட்டால் செய்ய மாட்டார்கள். அவர்கள் தங்களுடைய இஷ்டத்திற்கு ஏற்றபடி தான் மாற்றியமைப்பதற்கு முயற்சி செய்கிறார்கள். ஒரு நகர மன்றத் தலைவர் ஆயிரம் பேர்கள் இருக்கிறார்களா, 3,000 பேர்கள் இருக்கிறார்களா என்பதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவது கிடையாது. அவர்களுடைய நிர்வாகம்தான் அந்த அந்த ஊர்களிலே செயல்பட்டு வருகிறது. இந்த மாதிரி விஷயத்தில் ஆணையாளர்கள் தலைவர்கள் சொல்வதைத்தான் கேட்பார்கள், ஏதோ 6 மாதம் இருப்போம் என்று நினைத்துக்கொண்டு அவர்கள் நிரந்தரமாக அந்த ஊரிலே இல்லாத காரணத்தால் அவர்களும் சேர்மன் சொல்வதைக் கேட்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலையைமாற்றி அடுத்த தேர்தலுக்குள் நியாயமாக எல்லா நகர மன்றங்களுக்கும் சரியான வாக்காளர் ஜாபிதாக்களைத் தயாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திருவண்ணாமலை நகர மன்றத்தைப்பற்றி நான் இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த நகரத்திலே 3,000 வீடுகளுக்கு மேலாக டவுன் பிளானிங் ஸ்கீமின் பிரகாரம் புறம்போக்கில் கட்டப்பட்டு ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் 40 ஆண்டுகளாக இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே விளக்குகள் போட வேண்டுமென்றாலும், ரோடுகள் போடவேண்டுமென்றாலும் செய்வதற்கு

சட்டத்திலே இடமில்லை என்று காலதாமதம் செய்கிறார்கள். அவர்களுக்கு ஒன்று பட்டா செய்து கொடுக்கவேண்டும் அல்லது அதை ஜாரி செய்வதற்கு வசதி செய்து கொடுத்தால் அவர்கள் இப்படிப்பட்ட நன்மைகளைப் பெற முடியும். அவர்களிடம் வரி வாங்குகிறார்கள். சாதாரண மக்களிடமிருந்து என்ன வரியை வாங்குகிறார்களோ அதே வரியைத்தான் அவர்களிடமிருந்தும் வாங்குகிறார்கள். வரி வாங்குகிற விஷயத்திலே மட்டும் அவர்களுக்குத் தயவு காட்டவில்லை; சாதாரணமாக எல்லா வசதிகளையும் பெறக்கூடிய மக்கள் எவ்வளவு வரி கொடுக்கிறார்களோ அந்த வரியைத்தான் அவர்களும் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட பாரபட்ச நிலைமைகளையெல்லாம் கவனித்து மாற்றுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நகர மன்றங்களிலே வரி அப்பீல் கமிட்டி இருக்கிறதே அது நியாயமான அளவுக்குச் செயல்படக்கூடிய அளவில் சட்டம் இன்று இல்லை. நான் பத்து ஆண்டுகள் திருவண்ணாமலை நகர மன்றத்தில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். அந்த அனுபவத்திலிருந்து எனக்குத் தெரியும். அந்தத் தலைவருக்கு யார் வேண்டியவராக இருந்தாலும், அல்லது அந்தக் கமிட்டி உறுப்பினருக்கு யார் வேண்டியவராக இருந்தாலும் அவர்களுக்குச் சலுகைகள், வரி குறைப்பு செய்ய வேண்டுமென்றால் செய்கிறார்கள். பாரபட்சம் நடக்கிறது. கமிட்டிக்கு ஒரு வரம்பு ஏற்படுத்தி அது இந்த வகையிலேதான் செயல்பட வேண்டுமென்ற முறையில் உத்திரவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு இடத்திற்கு 50 ரூபாய் வரி விதிக்கிறார்கள், அடுத்த இடத்திற்கு 20 ரூபாய் வரி விதிக்கிறார்கள். மெஜாரிட்டியிலே வைத்து பாஸ் செய்கிறார்கள். ஆகவே இப்படியெல்லாம் இல்லாமல் எல்லா மக்களுக்கும் சமமான முறையிலே எல்லோருக்கும் சமமான வசதிகள் கிடைக்கக்கூடிய வகையில், எல்லா மக்களுக்கும் சமமான வரியைப் போட்டு மக்களுக்கு நல்ல முறையிலே பாரபட்சம் இல்லாமல் சமமாக வசதிகள் கிடைக்கும்படி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன்களில் மாதர் நல சங்கங்கள் இருக்கின்றன. அந்த சங்கங்களைப் பொறுத்த வரையில் வட ஆற்காடு மாவட்டத்திலே நடந்த சென்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்திலே அதற்காக எவ்வளவு செலவாகியது என்று கேட்டோம். அப்பொழுது அந்த மாவட்ட பெண்கள் நல அதிகாரி இருபது லட்சம் செலவாகியது என்று சொன்னார்கள். எங்களுக்கு எல்லாம் தூக்கிவாரிப்போட்டது. இருபது லட்ச ரூபாய் எப்படிச் செலவாகியது, என்ன விவரம் என்று கேட்டால் அவர்கள் பத்து நிமிடங்களாக எழுந்து நிற்கிறார்களே தவிர, செலவுக்கான விவரங்கள் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்டவைகளில் எல்லாம் பண விரயம் இல்லாமல் நல்ல முறையிலே செய்வதற்கு மாதர்களுடைய மேம்பாட்டிற்காக கவனம் செலுத்த வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. போஜன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி, கிராம நல நிர்வாகம் துறை மானியக் கோரிக்கையை வரவேற்பதோடு சில கருத்துக்களையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக இப்பொழுது பஞ்சாயத்துப் போர்டிலே உள்ள தலைவருக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. ஏற்கெனவே இதைக்குறித்து திரு. கருப்பையா அவர்கள் சொன்னார்கள். அதைப்போல் இருபத்தைந்து ரூபாய் மேற்பட்டு செலவு செய்ய தலைவருக்கு அதிகாரம் கிடையாது. ஒரு அவசரமான காரியத்திற்காகச் செலவு செய்யவேண்டுமென்றால்கூட அதற்காக ஊராட்சி ஒன்றியப்பின் உத்திரவிற்காக காத்திருக்கவேண்டிய நிலைமை தான் இருக்கிறது. ஆகவே அப்படியில்லாமல் அந்தத் தொகையை இன்னும் அதிகமாக்கி அவசர காரியத்திற்கு ஊராட்சிக்காகப் பயன்படக்கூடிய வகையில் அவர் செலவுசெய்ய பஞ்சாயத்துத் தலைவருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிப்புக்களிலே தேவையில்லாத இலாகாக்கள் அதிகமாக இருக்கின்றன. அந்த இலாகாக்களையெல்லாம் குறைத்து அதிலே உள்ள உத்தியோகஸ்தர்களை எல்லாம் மாற்றி வேறு ஏதாவது ஒரு வேலையில் அமர்த்துவதற்கு ஏற்பாடு செய்வதின் மூலம் கிடைக்கக்கூடிய மீதமாகும் தொகையை கிராம அபிவிருத்திக்குச் செலவு செய்யலாம் என்று கருதுகிறேன்.

ஊராட்சி ஒன்றிப்புக்களிலே, அதிகமாக கிராமங்களுக்குக் குடிநீர் வசதிகள், ரோடு வசதிகள், சுகாதார வசதிகள், வாகன வசதிகள், மருத்துவ மனைகள் இவை கிடையாது. கிராமங்களின் முன்னேற்றத்திற்கு போக்குவரத்து வசதிகள் அதிகமாக வேண்டும், அதற்கு ரோடு வசதிகள் வேண்டும், ஆகவே கிராமங்களுக்கு எல்லாம் ரோடுகள் போடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரியைப் பொறுத்தவரையில் ரோடுகள் மிகச் சரிவாக இருப்பதாலும், அதிக வெள்ளத்தினால் அடிக்கடி பாதிக்கப்படுவதாலும் தனிச் சலுகை அதற்குக் கொடுக்க கோருகிறேன். ஊராட்சி ஒன்றிப்பு ஒன்றுக்கு ரோடுக்காக தலைக்கு 40 பைசா வீதம் கொடுப்பதை மாற்றி அதிகமாக்கப் போவதாக மானியக் கோரிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மைல் தொலைவில் உள்ள விகிதத்திலே அந்த பணத்தைக் கொடுப்பதற்கு ஆலோசனை நடந்து வருவதாக நான் அறிகிறேன். அதை நான் வரவேற்கிறேன். காரணம் என்னவென்றால் ஜனத்தொகை என்று எடுத்துக் கொண்டு அதன்படி மானியம் கொடுத்தால், நீலகிரியைப் பொறுத்த வரையில் அவ்வளவு ஜனத்தொகை கிடையாது. ஆனால் அதிகமான தொலைவு உள்ள ரோடுகள் இருக்கின்றன. ஆகவே ஜனத்தொகையை அடிப்படையாக எடுத்துக்கொள்ளாமல், மைல் தொலைவை எடுத்துக் கொண்டு அதற்குத் தக்க அளவில் மானியம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு கிராமத்திற்கும் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி அளிக்கவேண்டும். அதனால் கிராமங்களில் ஏற்படும் அநேக விதமான வியாதிகளைத் தடுக்கலாம். நீலகிரியை எடுத்துக் கொண்டால் அநேக கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் வசதி இல்லை. குடி தண்ணீர் வசதி செய்வதற்காக அவ்வப்போது நீலகிரி மாவட்டத்தில் இருந்து மானியம் கோரி வரும் விண்ணப்பங்களை அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரத்தை எடுத்துக் கொண்டால், ஏற்கெனவே மருத்துவம், சுகாதாரம் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசும்போது அநேக அங்கத்தினர்கள் கூறியிருக்கிறார்கள், நானும் கூறியிருக்கிறேன்—கிராமங்களில் மருத்துவ மனைகள் அவ்வளவு அதிகமாக இல்லை. வைத்தியர்கள் இருந்தால் மருந்து இருப்பதில்லை; மருந்து இருந்தால் வைத்தியர்கள் இருப்பதில்லை என்ற நிலை இருந்து வருகிறது. ஊராட்சி ஒன்றிப்பின் கீழ் உள்ள மருத்துவ மனைகள், ஜில்லா வைத்திய அதிகாரியின் கீழ் உள்ளதாகத் தெரிகிறது. இதை மாற்றி அமைத்து அந்த மருத்துவ மனைகளுக்கு வேண்டிய வைத்தியர்களை நியமிக்கவோ, மருந்துகளை வாங்கவோ சகல அதிகாரங்களையும் ஊராட்சி மன்ற ஆணையருக்கோ அல்லது தலைவருக்கோ கொடுத்தால் அந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்திக்கலாம் என்பது என்னுடைய கருத்து.

கிராமங்களில் உள்ள குழந்தைகளுக்குத் தொண்டைக்கட்டு நோய், கக்குவான் நோய், வலிப்பு நோய் ஆகியவை வராமல் தடுப்பதற்கு தடுப்பு ஊசி, "ட்ரிபிள் ஆன்டிஜென்ட்" போடுவது பற்றி மானியக் கோரிக்கை பற்றிய விளக்க உரையில் கூறப்பட்டுள்ளது. இந்த ஊசியைப் போட்டுக் கொள்வதானால், மூன்று முறை, விட்டு விட்டுப் போட்டுக் கொள்ளவேண்டும். சில கிராமங்களில் வைத்தியர்கள் இல்லாததால் ஒரு முறை போட்டு விட்டு நிறுத்தி விடக்கூடிய நிலை இருக்கிறது. போட்டால் மூன்று முறை

போட்டுக் கொள்ளவேண்டும்; இல்லாவிட்டால் போடாமலே இருப்பது நல்லது. ஊராட்சி ஒன்றிப்புகளில் பெரிய ஆஸ்பத்திரி படுக்கை வசதிகளோடு அமைக்காவிட்டாலும் வைத்தியர்கள் உள்ள டிஸ்பென்சரிகளாவது ஏற்படுத்திஞர்கள் என்றுல் இந்த மாதிரி ஊசி போடுவதற்கு வசதியாக இருக்கும். இதற்குச் சர்க்கார் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சில கிராமங்களில் ரோடு வசதி இல்லாததால் வாகனங்கள் போவதில்லை. அந்தப் பகுதிகளுக்குப் பஸ் போக்குவரத்து இல்லை. அங்கே ஜீப் பஸ்களை விட்டால் நல்லது. தனிப்பட்டவர்கள் ஜீப் பஸ்களை விட முன்வர மாட்டார்கள். ஆகவே, ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களே ஜீப் பஸ்களை நடத்தும் உரிமையைப் பெற்று ஜீப் பஸ்கள் விடுவதற்கும் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்தால் கிராமவாசிகளுக்குச் சௌகரியம் இருக்கும்.

ஊராட்சி மன்ற ஒன்றிப்பின் கீழ் உள்ள ஆரம்பப் பள்ளிகளுக்கு அநேக இடங்களில் கட்டடங்கள் நல்ல முறையில் இல்லை. அவ்வப்போது பொது ஜனங்களிடமிருந்து நிதி திரட்டி, சர்க்காரிடமிருந்தும் மானியம் கொடுத்து நல்ல கட்டடங்களை, கட்டடம் இல்லாத பள்ளிகளுக்குக் கட்டிக் கொடுக்க, அமைச்சரவை முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவ மனைகள் ஒவ்வொரு ஜில்லா தலைநகரங்களில் மட்டுந்தான் இருக்கின்றன. கிராமப் பகுதிகளில் கிடையாது. இரண்டு மூன்று ஊராட்சி மன்றங்களின் மத்தியில் கால்நடைகளுக்கான ஒரு மருத்துவ மனையும், ஒவ்வொரு ஊராட்சி மன்றப் பகுதியிலும் ஒரு கால்நடை வைத்தியரும் போட்டு உதவி செய்யவேண்டியது அவசியம். அவ்வாறு செய்தால் கால்நடைகளுக்கு வரும் நோய்களை உடனடியாகத் தடுக்கலாம்.

கிராம மேய்ச்சல் நிலங்களுக்காக கிராம வாசிகள் புல் வளர்க்க வேண்டுமென்பதற்காக ஒரு செண்டுக்கு 20 பைசா, ஒரு எக்கருக்கு 200 ரூபாய் மானியம் கொடுப்பதாகத் தெரிய வருகிறது. இப்படி மானியம் கொடுத்தால் கூட அநேக கிராமங்களில் விவசாயிகளிடம் பூமி கிடையாது. ஆனால் இப்போது ஆங்காங்கு சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றின் பேரில் ஊராட்சி மன்றங்களுக்கு எந்த விதமான அதிகாரமும் கிடையாது. அந்த அதிகாரம் எல்லாம் ரெவின்யூ டிப்பார்ட்மெண்டில் இருக்கிறது. அந்த பூமியை ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைத்து, அவர்கள் கால்நடைகள் வைத்திருப்பவர்களுக்குத் தகுந்தபடி அந்த பூமியை அளித்து புல் வளர்க்கச் செய்து கால்நடைகளுக்கான தீனியை உற்பத்தி செய்யலாம். இவ்வாறு செய்தால் சர்க்கார் புறம்போக்கு நிலங்களை விவசாயிகள் ஆர்ஜிதம் செய்து கொள்ளக்கூடிய நிலையைக் கூடத் தடுக்கலாம். அல்லது ஊராட்சி மன்றமே அந்தப் பூமிகளில் புல்லை வளர்த்து அதைக் கால்நடை உள்ளவர்களுக்கு விற்பனை செய்வதன் மூலம் ஊராட்சி மன்றங்கள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்பது என்னுடைய கருத்து.

எத்தனையோ வரிகளிலிருந்து இன்று ஏழைகளுக்கு, சிறியவர்களுக்கு விலக்குக் கொடுத்திருக்கிறேம். ஆனல் வீட்டு வரிக்கு மட்டும் அம்மாதிரி விலக்குக் கொடுத்ததாக இல்லை. ஆகவே, ஊராட்சி மன்றங்களில் சிறிய வீட்டுக்காரர்களுக்கு வரி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த மாநிலமான கேரளாவில்....

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஊராட்சி மன்றங்களில் தற்போதுள்ள வீட்டுவரி முறை எவ்வளவு என்பதையும் அதை எவ்வளவாகக் குறைக்கலாம் என்று கருதுகிறுர்கள் என்றும் அங்கத்தினர் அவர்கள் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. போஜன்: நான் எல்லா வீடுகளுக்கும் வரி விலக்கு வேண்டுமென்று கேட்கவில்லை. ஏழைகளுடைய சிறு வீடுகளுக்கு, குடிசைகளுக்குத்தான் வரி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன். இப்போது அவர்கள் ஒரு ரூபாய், ஒன்றரை ரூபாய் அளவுக்குத்தான் கொடுத்

துக் கொண்டிருக்கிறுர்கள். அதிலிருந்து அவர்களுக்கு விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்டை மாநிலமான கேரளாவில் 60 ரூபாய் வாடகை உள்ள வீடுகளுக்கு வரி விலக்குக் கொடுத்திருப்பதாக அறிகிறேன். நம்முடைய மாநிலத்திலும் ஏழைகளுக்கு, அவர்களே கட்டி, குடியிருக்கின்ற சிறிய வீடுகளுக்கு வரி விதிப்பதை விலக்குமாறு கேட்டுக் கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஆர். நாகசுந்தரம்:** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மதுரை, கோவை போன்ற நகராட்சிகளில் புதை சாக்கடைத் திட்டம் நீண்ட நாட்களாக அமலில் இருக்கிறது. மத்தியிலும், மாநிலத்திலும், நகராட்சியிலும் காங்கிரஸ் ஆட்சி இருந்தும்கூட திருச்சி நகரத்தில் புதை சாக்கடைத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அன்புகூர்ந்து நம்முடைய அரசாவது வளர்ந்து வரக்கூடிய தொழில் நகரங்களை அடுத்துப் பெற்றிருக்கிற திருச்சி நகரத்தில் புதை சாக்கடைத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சியை அடுத்துள்ள ஹெவி பாயிலர் பிளாண்ட் இருக்கும் பகுதி, எஞ்சினியரிங் காலேஜ், தொழிற்பேட்டைகள், துப்பாக்கித் தொழிற்சாலை ஆகியவற்றையெல்லாம் இணைத்து திருச்சியை ஒரு மாநகராட்சியாக ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். பொன்மலைப்பட்டி பஞ்சாயத்தையும் பொன்மலை ரயில்வே காலனியையும் சேர்த்து தனி நகராட்சியாக அமைக்க வேண்டும்.

திருச்சி நகரில் உள்ள நெடுஞ்சாலைகளில் ஒரே ஒரு சாலை மிகவும் நெருக்கடி மிகுந்த சாலை. அந்தச் சாலையில் ஜங்ஷன் அருகே, ரயில்வே லெவல் கிராசிங் இருக்கிறது. அது பலவிதத்திலும் பொது மக்களுக்கு இடையூருக இருக்கிறது. அன்புகூர்ந்து அந்த ஒரு லெவல் கிராசிங்கை மாற்றி ஓவர் பிரிட்ஜ் கட்ட மத்திய சர்க்காருக்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதுள்ள நகராட்சிகளின் வார்டுகள் புளியங்காய் போலவும், கொடுக்காப்புளி போலவும் அமைந்திருக்கின்றன. அவை திருத்தியமைக்கப்படாத நிலையிலே உள்ளன. அவைகளையெல்லாம் மாற்றியமைத்து சதுரமாகவோ, நீண்ட சதுரமாகவோ அமைத்து எல்லைகளை நிர்ணயிக்கும் வகையில் வார்டுகளைப் பிரிக்க வேண்டும்.

சட்டமன்றத்தைப் போல், பாராளுமன்றத்தைப் போல், பெண்களுக்காகவும் ரிசர்வ் ஸ்தானங்களுக்கும் தனித்தனி தொகுதியாக ஏற்படுத்த வேண்டுமென்று நம் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேர்மன்களும், பெரும்பாலான அங்கத்தினர்களும் காங்கிரஸ்காரர்களாக இருந்த காரணத்திஞல் நகராட்சியில் பல இடங்களை லீஸுக்கு, குத்தகைக்கு பெற்று, குத்தகை நிலங்களை உள்வாடகைக்கு தரக்கூடாது என்ற விதியிருந்தும் அந்த இடங்களை எல்லாம் உள்குத்தகைக்கு விட்டு வாடகை சம்பாதிக்கிறுர்கள். அவர்களைப் பற்றிய ஒரு லிஸ்ட் எடுத்து அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் நகராட்சிகளில் பணி புரியக்கூடிய ஆசிரியர்களுக்கு இன்று பென்ஷன் இருக்கிறது. அதே சமயத்தில் ஆணையருக்கும், பொறியாளர்களுக்கும், நல அலுவலர்களுக்கும் 1—4—1962 முதல் பென்ஷன் இருக்கிறது. மற்ற சிப்பந்திகளுக்கு பென்ஷன் இல்லை. அவர்கள் தங்கள் முக்கால் பகுதி வாழ்க்கையை சாராகப் பிழிந்துவிட்டு இப்போது பென்ஷன் இல்லாமல் வாடுகிறுர்கள். ரெயில்வேயில், மத்திய அரசு சமீபத்தில் 1957-ம் ஆண்டுக்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்குகூட பென்ஷன் அளிக்கிறுர்கள். அரசாங்கத்தில் ஒரு பணியும் புரியாதவர்களுக்குக்கூட நம் அரசு முதியோர் பென்ஷன் என்ற பென்ஷனை ஊதியத்தைக் கொடுத்து

வருகிறது. ஆகவே, இந்த நகராட்சி சிப்பந்திகளுக்கும் 1962-க்கு முன்னால் பணிபுரிந்தவர்களுக்கும்கூட கிடைக்கும் விதத்தில் பென்ஷன் தரப்பட வேண்டும்.

பொன்மலை நகரப் பஞ்சாயத்தில், பொன்மலை ரெயில்வே காலனியைச் சார்ந்த ஒரு ரிசர்வாயர் இருக்கிறது. அந்த ரிசர்வாயருக்கு காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிறது. ஆனால் பொன்மலைப்பட்டியைச் சேர்ந்த ரிசர்வாயர் அதற்கு 25 கஜ தூரத்தில் இருக்கிறது. அது தண்ணீர் இல்லாமல் வரண்டு கிடக்கிறது. காரணம் கிணறுகள் பாறைகளாக இருக்கின்றன. ஆனால் இந்த ரிசர்வாயரிலிருந்து அதற்கு தண்ணீர் வேண்டும். இலவசமாகக்கூட அல்ல; மீட்டர் லிஸ்டத்தில் வேண்டுமென்று அந்த பஞ்சாயத்து கேட்டும்கூட, எந்தப் பகுதியில் இந்த ரிசர்வாயர் இருக்கிறதோ, எந்த பஞ்சாயத்தில் அதிகமான ரெயில்வே தொழிலாளர்கள் இருக்கிறார்களோ அந்த பஞ்சாயத்து ரிசர்வாயருக்கு தண்ணீர் வேண்டுமென்று கேட்டும் மத்திய அரசு தர மறுக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் நம்பியார் அவர்களும் அங்குள்ள பொன்மலை நகரப் பஞ்சாயத்து தலைவர் திரு. ராமானுஜம் அவர்களும் சென்று ரயில்வே அமைச்சர் அவர்களைப் பேட்டி கண்டிருக்கிறார்கள். நம் அரசும் அவர்களுக்கு தண்ணீர் கொடுக்க சிபாரிசு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சி நகராட்சியிலிருந்து சென்ட்ரல் ஜெயிலுக்கு தண்ணீர் போகிறது. போகும்வழியில் உள்ள உலகநாதபுரம், சுப்பிரமணியபுரம் பகுதிகள் பொன்மலைப்பட்டி பஞ்சாயத்தைச் சேர்ந்த பகுதிகள். அப்படிச் செல்லும்போது அந்தப் பகுதிகளுக்கும் 10 பொதுக்குழாய்கள் மூலம் தண்ணீர் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தனிப்பட்ட டி.வி.எஸ். ஸ்தாபனத்திற்கு தண்ணீர் தருகிறார்கள்.

திருச்சி டிஸ்ட்டிலரிஸ் என்ற ஒரு ஆல்கஹால் தொழிற்சாலை இருக்கிறது. அதிலுள்ள கழிவு தண்ணீர் அருகில் உள்ள உய்யக்கொண்டான் ஆற்றில் விடப்பட்டு தண்ணீர் கறுப்பாக இருக்கிறது. இரண்டு பக்கங்களிலுள்ள பயிரும் தீய்கிறது. ஆடுமாடுகள் அந்த தண்ணீரைக் குடிக்க முடிவதில்லை அதிலிருந்து பெரிய நாற்றம் வருகிறது. அந்த துர் நாற்றம் இரண்டு மூன்று மைல்கள் அளவிற்கு நகரத்திற்குப் பரவுகிறது. எல்லாப் பொது ஸ்தாபனங்களும் அதை அங்கிருந்து அப்புறப்படுத்தவேண்டுமென்று கேட்டு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றன. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்கள் இரண்டும் அதை எடுத்துவிடவேண்டுமென்று அனுமதி மறுத்து அனுப்பியிருந்தும் சென்ற ஆட்சியாளர்கள் எப்படியோ அனுமதி தந்திருக்கிறார்கள். ஆகவே அந்த கழிவுத் தண்ணீரை வேறு எங்கேயாவது விட்டு விட உத்தரவு பிறப்பித்து அந்த துர்நாற்றத்தைப் போக்கி அங்கு நல்ல சுகாதாரம் நிலவச் செய்யவேண்டும்.

நம் தலைநகர் பற்றி ஒருவார்த்தை. நம் கூவம் ஆற்றில் பழைய காலத்தில் பச்சையப்ப முதலியார் அவர்கள் தமது பரிவாரங்களோடு அங்கு வந்து குளித்ததாக சரித்திரம் கூறுகிறது. அப்பேர்ப்பட்ட கூவம் ஆறு இன்று நாற்றம் பிடித்த ஆறாக இருக்கிறது. பெரிய ஆஸ்பத்திரியில் இருந்தும் சென்ட்ரல் ஜெயிலிலிருந்தும் கழிவு நீர் அங்கு சேர்வதால் இந்த நாற்றம் ஏற்படுகிறது. மாநிலத்திலும் மாநகராட்சியிலும் நம் திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிற இந்த நேரத்தில் அந்தக் கழிவுநீரைத் தனிக் குழாய்கள் மூலம் சூயேஜ்-க்குக் கொண்டு போய் கூவம் ஆற்றை தூர் எடுத்து பழையபடி பொது மக்களுக்கு உபயோகப்படும் வகையில் கூவம் ஆற்றை செப்பனிட வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. மு. க. து. நடராசன் :** தலைவர் அவர்களே, ஸ்தல ஸ்தாபன மானியக் கோரிக்கையில் எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து எனக்குத் தெரிந்த இரண்டொரு கருத்துக்களைக் கூறவிழைகிறேன். ஊராட்சி மன்றத்திற்கும், ஊராட்சி ஒன்றிப்புக்களுக்கும், செய்யப்படவேண்டிய சில வேலைகள் இருக்கின்றன. குறிப்பாக

கிராமப்புறங்களில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுக்கவேண்டுமென்ற ஒருவிதி ஊராட்சிமன்றங்களுக்கு இருக்கிறது. அப்படியிருந்தும் மகிழம்பாடி என்ற கிராமத்தில் குடிதண்ணீர் வழங்க அரசு தடை விதித்திருக்கிறது. அதை மாற்றுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்தும் இன்றும் மாற்றப்படாமல் இருக்கிறது. அதேபோல் கக்கூஸ்கள் கட்டுவதற்கும், வடிகால்கள், சாக்கடைகள் கட்டுவதற்கும் நகராட்சிகளுக்கு அதிகாரம் இருந்தும் அந்த வடிகால்கள், கக்கூஸ்கள் இவை கட்டப்படவேண்டிய இடங்கள் அரசுக்கு சொந்தமாக இருக்கிற காரணத்தினால் அவைகளில் ஒரு சிலர் ஆக்கிரமிப்பு செய்யக்கூடிய வழிகள் இருப்பதால் அங்கு அந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு முடியாமல் இருக்கிறது. ஆனால் அதுபோல் ஊராட்சிமன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றிப்புகளுக்கும் சிறிய குளங்களையும், சிறிய ஏரிகளையும் தங்களிடத்தில் வைத்துக்கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த ஏரிகளில், குளங்களில் தண்ணீர் வருவதும் தண்ணீர் வழிந்தோடுவதும் ஆகிய இடங்கள் அரசுக்கு சொந்தமாக இருக்கிறன்றன: இப்படி அரசுக்கு சொந்தமாக இருக்கிற காரணத்தால் வடிகால்களை சுத்தம் செய்யவோ அல்லது வரத்துக்களை நல்லமுறையில் வரவழைத்து அந்தக் குளங்களில் அல்லது ஏரிகளில் விடுவதற்கான வாய்ப்பு இல்லாமல் தடுக்கப்படுகிறது. தாய்-சேய் நல விடுதிகள், வைத்திய நிலையங்கள் ஆகிய இரண்டும் ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களிடம் இருக்கின்றன. அப்படி இருந்தும்கூட தாய்-சேய் நல விடுதிகளில் வேலை செய்யும் மருத்துவ மாதர்கள், வைத்திய நிலையங்களில் வேலை செய்யும் மருத்துவ மாதர்கள் இவர்களது சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறது. அதையும் ஒருமுகப் படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருச்சிக்கு அருகில் திருவெறும்பூரில் மிக அழுத்த கொதிகலன் சாலை ஒன்று மத்திய அரசால் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலுள்ள குடியிருப்பு மனைகளுக்கு வரிகளை விதிக்க ஊராட்சிக்கு அதிகாரம் இல்லை என்று அந்த அதிகாரிகள் தடுக்கிறார்கள். அங்குள்ள அதிகாரிகளுக்கு தொழில் வரி விதிப்பதற்கு அங்குள்ள நிர்வாகஸ்தர்கள் தங்கள் அறிக்கையை கொடுக்க மறுக்கிறார்கள். இது பல ஆண்டுகளாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரிந்திருந்தும் அதற்கு இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் இருக்கிறது. ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களில் ஆரம்பப் பள்ளிகள் வைத்து நடத்தலாம் என்ற விதி இருக்கிறது. ஆனால் ஒரு சில பட்டிகளில், கிராமங்களில் இருபது குழந்தைகள் இருந்தால்தான் ஆசிரியரை வைத்து நடத்தமுடியும் என்ற ஒரு விதியிருப்பதால், ஆசிரியர்களை வைக்க முடிவதில்லை. அந்த கிராமங்களில் 15 குழந்தைகளுக்கு மேல் எந்தக் காரணத்தைக் கொண்டும் வருவதில்லை. ஏனெனில் அங்கு அவ்வளவு குழந்தைகள்தான் இருக்கிறார்கள். அந்தயிடங்களில் பள்ளிகள் வைத்து நடத்த தற்போதுள்ள விதிகளில் இடம் இல்லாத காரணத்தினால் அந்தப் பள்ளிகளை மூடும் நிலை இருந்து வருகிறது. அந்தக் கிராமங்களில் உள்ள குழந்தைகள் வெளியே சென்று படிக்கவேண்டுமென்றால் ஐந்து வயதுக் குழந்தைகள் ஒன்றரை இரண்டு மைல்கள் சென்று படிக்க வேண்டும். ஆகவே எவ்வளவு குழந்தைகள் இருந்தாலும் சரி அந்த இடங்களில் ஒரு ஆசிரியரை நியமித்து அந்தப் பள்ளிகளை நிரந்தரமாக இருக்கும் ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். ஊராட்சி ஒன்றிப்பு மன்றங்களில் இருக்கக்கூடிய அபிவிருத்தி அதிகாரிகளைப் பொறுத்தவரையில் எல்லோரும் அபிவிருத்தி அதிகாரிகள் தேவையில்லை என்று கூறினார்கள். என்னைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி அதிகாரிகளிடம் இருந்து வேலை வாங்குவது ஆணையரையும், அந்த மன்ற பெரும் தலைவரையும் பொறுத்ததாக இருக்கிறது. எங்கள் ஒன்றிப்பு மன்றத்தில் பல அதிகாரிகள் இவர்கள் எல்லாம் குறை கூறுவதுபோல் இருந்தும்கூட அவர்கள் நல்லமுறையில் இயங்கக்கூடிய ஒருநிலை எங்கள் ஒன்றிப்பு மன்றத்தில் இருக்கிறது. அவர்களை வேலை வாங்கும் முறையில், அவர்களை ஏற்றதொரு கருவியாகப் பயன்படுத்தி, நல்ல முறையிலே வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்தினால் அந்த ஏற்பாடுகளெல்லாம் நல்ல முறையில் நடக்கும். மாலை 6-00

அதே போல விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய நிலைக்கு ஊராட்சி மன்றங்கள் சிறு வாய்க்கால்களை வெட்டுவதற்கும், வாய்க்கால்

களைச் சுத்தம் செய்வதற்கும் ஏற்ற வகையில் விதிகளைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. சா. மெய்யப்பன் : தலைவர் அவர்களே, எனக்கு இன்றைய விவாதத்தில் கலந்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்கள் மிகவும் அழகாக வள்ளுவத்தில் ஆரம்பித்து, அதிலும் நம்முடைய இந்த மானியத்தைப் பொறுத்த வரையில் மத்திய சர்க்காரிடமிருந்து சிறிது மானியம் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொண்டு, அந்தக் குறைக்கப்பட்ட தொகையும் நமக்குக் கிடைக்கவேண்டும் என்பதில் நாம் முயலவேண்டும் என்பதையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன்.

ஆனால், இதே சமயத்திலே இப்போது வட்டார வளர்ச்சிக் கழகங்கள், அல்லது பஞ்சாயத்துக்கள், அல்லது முனிசிபாலிட்டிகள் என்று இருக்கின்றனவே இவைகள் எல்லாவற்றையும் வட்டார வளர்ச்சி ஏற்பட்ட முறையைப் பார்த்தால், அவைகளுக்கெல்லாம் பரவலாக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று ஆரம்பித்தாலும், பரவலாக அதிகாரங்கள் கொடுக்கப்படாமல், பிளாக் டெவலப்மெண்ட் ஆஃபீஸ் என்ற பெயரால் கமிஷனர் என்ற பெயரைச் சூட்டிவிட்டு, ஆணையாளர் என்ற பெயரைச் சூட்டிவிட்டு ஆணையாளருக்கு மேலாக அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடியவர்கள் ஆர்.டி.ஓ. அல்லது கலெக்டர் என்று அவர்கள் கையில் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிற காரணம் என்ன என்பது நாம் தெரிந்து கொள்ள முடியாதது அல்ல. காரணம், ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டில் இது ஒரு உட்கூறாக இருக்கவேண்டும் என்று நினைத்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆணையாளர்களை நேர்முகமாகக் கட்டுப்படுத்த வேண்டியவர்கள் ரூரல் டெவலப்மெண்ட் கமிஷனர் என்று சொல்லி விட்டால் பொறுத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக புன்செய் நிலங்கள் பஞ்சாயத்துக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. ஆக்கிரமிப்புகளை ஒதுக்கிக்கொடுத்து ஒப்படைக்கவில்லை. கர்ணம் வைத்திருக்கிற கணக்கை வைத்துப் பஞ்சாயத்துத் தலைவர்கள் பார்க்க வேண்டியிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது ஆர்ஜிதத்திற்கு அவர்களை அப்புறப்படுத்த வேண்டுமென்றால் ரெவின்யூ டிபார்ட்மெண்டிடம் சென்று தான் ஆகவேண்டியிருக்கிறது. அங்கு காலதாமதம் மிக அதிகமாக ஆகிறது. அதற்குள் பஞ்சாயத்தின் கால வரையறையே முடியக் கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரியான சூழ்நிலை ஏற்படாமல் இருக்க என்ன செய்யவேண்டுமென்பதையும் அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆர்ஜிதம் இல்லாத புன்செய் நிலங்கள் இருக்கின்றனவே, அவைகளையெல்லாம், புறம்போக்கு நிலங்கள் என்று இருப்பதை இப்போது அஸைன்மெண்ட் கொடுக்கிறோம் என்றால், அதை வாங்குவதற்கு நிறையப் பேர்கள் வருகிறார்கள். அவர்கள் விவசாயிகளா, விவசாயம் செய்ய நிலம் வேண்டுமென்று நினைக்கிறவர்களா என்று கூடக் காண முடியாமல் இருக்கிறோம். அப்படி யாராக இருந்தாலும் கட்டுப்பாடு வைத்து, உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று நினைத்து, அஸைன்மெண்ட் பெற்றவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு அதைப் போற்றி, வளர்த்து, அங்கு கிணறு வெட்டி, அதன் மூலமாக நல்ல உணவு உற்பத்தி செய்து தரவேண்டும், குறிப்பிட்ட அளவுக்கு உணவுப் பொருள்களை ஐந்து ஆண்டுகளுக்குத் தந்தால், அவர்களுக்கு அஸைன்மெண்ட் தரப்படும் என்று சொன்னால், சரியான விவசாயிகள், உண்மையான விவசாயிகள், நேர்மையான விவசாயிகள், ஒழுங்குடன் உழைக்கும் விவசாயிகள் முற்படுவார்கள். அவர்களுக்குக் கடனும் கொடுத்து உதவி செய்ய

லாம். அவர்கள் ஏதாவது துஷ்பிரயோகம் செய்தால், அந்த நிலத்தை எடுத்துக் கொள்ள நமக்குக் கைப்பிடி இருக்கும் என்பதை நான் அரசுக்கு என்னுடைய அபிப்பிராயமாகச் சொல்லிக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக மருத்துவ வசதிகள் செய்து கொடுக்க வேண்டிய இடங்களில் பஞ்சாயத்துக்களிலே ஒரு சரியான நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை. அதற்குக் கொடுத்திருக்கிற நிதியும், ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியும் போதாது என்று கருதுகிறேன். அதற்கு அமைச்சர் அவர்கள் தகுந்த வழி செய்து, மருத்துவ விடுதி என்று ஏற்படுத்தி விட்டுக் கட்டடம் இல்லாத இடங்களில் கட்டடம் கட்டியும், கட்டடம் இருந்தாலும் வைத்தியர்கள் வராமல் இருக்கக் கூடிய இடங்களில் வைத்தியர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வழி செய்தும், கட்டடமும் இருந்து வைத்தியரும் இருந்து மருந்து இல்லாத இடங்களில் மருந்துகளைக் கொடுக்கவும் வேண்டிய வசதி செய்துக்கொடுக்கவேண்டும். அதற்கு இந்த அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறனே.

அடுத்தபடியாக முனிஸிபாலிட்டி, அல்லது பஞ்சாயத்து சேர்மன்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று சில உறுப்பினர்கள் சொன்னார்கள். அப்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்பது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. இப்போது சட்ட சபையில் சபாநாயகரை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் தேர்ந்தெடுக்கிறோம். அதே போல, பார்லிமெண்ட்டில் சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பவர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தான். அரசியலமைப்புச் சட்டத்தில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கும் முறை தான் இருக்கிறது. அப்படி அரசியல் அமைப்புச் சட்டத்தில் பிரதிநிதிகள்தான் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்று இருக்கும் வரையில் இந்த முறைதான் கையாளப்பட வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்த பரிந்துரை ஏதேனும் செய்ய முடியுமா என்பதைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, முனிஸிபாலிட்டிகள் டவுன் பிளானிங் சட்டம் என்ற சட்டத்தை வைத்துக்கொண்டு, அதிலே ஏதாவது ஒரு கட்டடம் கட்ட வேண்டுமென்றால் அந்தக் கட்டிடத்திற்கு வீடு கட்டுகிறவர்கள் வேண்டிய பொருள்களைச் சேமித்தவுடன், நல்ல நாளாகப் பார்த்து கட்ட ஆரம்பிக்கிற நிலையில், கட்டடம் கட்டுவதைத் தடுக்கிறோம், இந்தச் சட்டத்திற்கு முரண்பட்டது என்று சொல்லுகிறார்கள். அப்போது ஒன்றும் செய்ய முடிவதில்லை. சென்னைக்கு வந்து டைரக்டர் ஆஃப் டவுன் ப்ளானிங்கைக் கேட்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்குள் வாங்கிய பொருள்கள் சேதமாகின்றன. காலதாமதம் இல்லாமல் அதற்கு வேண்டிய வழிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : கனம்தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற மானியக் கோரிக்கைகளை முழுதுமாக ஆதரித்து, குறிப்பாக கிராமக் கைத்தொழில் மானியத்தின் பேரில் என்னுடைய கருத்துக்களை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக இந்த கிராமக் கைத்தொழில் மானியத்தின் பேரில் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்க்கிற சந்தர்ப்பத்தில், இந்த கிராமக் கைத்தொழிலிலே இன்றைய தினம் மதுவிலக்குத் திட்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு, வேலை இழந்து, வாடிக்கொண்டிருக்கிற மக்கள் அவர்கள் வைத்திருக்கிற பனை வெல்லக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக நடைபெறுகிற தொழிலிலேதான் மிக அதிகமாக நிலைபெற்றிருக்கிறார்கள். குறிப்பாக இந்தப் பேரவையின் முன் வைக்கப்பட்ட ஒரு குறிப்பில் உள்ளபடி. . . மூலமாக ரூ. 460.07 லட்சத்திற்கு உற்பத்தியும், அதே போன்று ரூ. 480.61 லட்சத்திற்கு விற்பனையும் ஆகியிருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற மக்களுக்கு, குறிப்பாக கிராமக் கைத்தொழில் எந்த

அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கியிருக்கிறது என்பதையும், அதன் மூலமாக ஏறக்குறைய 2,10,450 பேர்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழகத்தை எடுத்துக்கொண்டால் 4 கோடி பனை மரங்களில் 4 லட்சம் பனை மரங்கள் இன்றைய நிலைக்கு ஏற்றமாக அமைக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்கினால் பாதிக்கப்பட்டு வேலை இழந்து லட்சக் கணக்கான மக்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கும்போது இந்தத் திட்டத்தை விரிவாக்கி, மது விலக்குத் திட்டத்தை அமல் படுத்த எந்த அளவுக்கு இந்த அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கருதுகிறதோ, அதே மாதிரி அதனால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்கும் நல்ல காரியத்தைச் செய்ய இந்தத் தொழிலை இன்னும் அதிக வேகமாகவும், ஈடுபட்டிருக்கிற மக்களுக்கு நல்ல பல நன்மைகளைச் செய்து கொடுக்கும் முறையிலும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த அடிப்படையில் பார்க்கும்போது தும்பு பனை மட்டையிலிருந்து தயார் செய்யப்படுகிறது. இன்றைய தினம் குடிசைத் தொழில் மூலமாக ஒரு கோடி ரூபாய் அன்னிய செலாவணி வந்திருக்கிறது என்று பார்க்கும்போது பெரிய தொழில்கள் மூலமாகத் தான் அன்னியச் செலாவணி பெற முடியும் என்பதல்ல, சாதாரணக் குடிசைகளில் இருந்துகொண்டு, அங்கு இருக்கிற குடும்பத்தார் செய்யக் கூடிய காரியங்கள் மூலமாகக் கூட நம் நாட்டுக்கு அன்னியச் செலாவணி கிடைக்க முடியும் என்று இந்தக் குடிசைத் தொழில் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. எனக்குக் கிடைத்திருக்கிற அறிக்கையின்படி டிசம்பர் 1966 வரை முடிந்த ஆண்டில் 1 கோடி ரூபாய்க்கு தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. அப்படி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிற தும்பு, சென்னை மாநில பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தினால் 40 லட்சம் ரூபாய் அளவுக்கும், வேறு தனியார் நிறுவனங்களால் 60 லட்சம் ரூபாய் அளவுக்கும், ஏறக்குறைய 1 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்றுமதியைப் பார்க்கும் நேரத்தில் நாம் எல்லாம் பூரிப்பு அடைகிறோம். இன்றையதினம் தும்பை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற பொழுது, எந்த அளவு அவர்கள் நம்மிடமிருந்து பெற்றுக்கொள்கிறார்கள் என்று நினைக்கும் பொழுது, மற்றொரு நிலையையும் மனதில் கொள்ள வேண்டும், நெசவாளர்களால் நெய்யப்பட்ட ப்ளீடிங் மெட்ராஸ் என்ற துணி அதி வேகமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. அதற்கு மாற்றுத் துணியை வெளி நாட்டிலுள்ளவர்கள் கண்டுபிடித்தவுடன், இன்றையதினம் நெசவாளர்களாக இருப்பவர்கள் மிகப் பெரிய அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப்போல இப்பொழுது தும்பு வெளிநாடுகளுக்கு கொள்முதல் செய்யப்பட்டாலும்கூட, திடீரென்று அவர்கள் அதை வேண்டாம் என்று சொல்லி விட்டால், அதை நம்பியிருக்கிற மரமேறித் தொழிலாளர்கள், இந்த நாட்டிற்காக தங்களைத் தாங்களே தியாகம் செய்துகொண்டவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு, நம்முடைய நாட்டிலேயே பிரஷ் உற்பத்தி, மற்றும் பல காரியங்களைச் செய்வதற்கான வழிவகைகளை செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களைப் பற்றி சொல்கிறபொழுது, கிராமங்களில் தச்சுப் பட்டறை, கருமாரப் பட்டறை போன்றவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இன்றையதினம் மின்சாரம் அதி வேகமாக முன்னேறிக்கொண்டிருக்கிறது. விவசாயி ஒரு பம்பு செட்டு கெட்டுவிட்டால் அல்லது மற்றைய சாதனங்கள் கெட்டு விட்டால், நகரத்திற்கு அதைத் தூக்கிக்கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதை விடுத்து அந்தந்தப் பஞ்சாயத்து யூனியனில், அங்கே இருக்கிற 10, 20 கிராமங்களுக்கு ஒரு சென்டர் அமைத்து, எப்படி பிளாக்ஸ்மித் சென்டர், கார்பென்டரி சென்டர் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ அதே போல எலெக்டிரிக் மோட்டார் ரிபேர் செய்வது, வைண்டிங், காயிலிங் செய்வது இவைகளுக்காக ஒரு பயிற்சிப் பள்ளி வைத்து, அங்கே இருக்கிறவர்களுக்கு அதிலே பயிற்சி அளித்தாவது அல்லது வேறு எந்த முறையிலாவது விவசாயிகளுக்கு தொல்லையில்லாத நிலையை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாகச் சொல்கிற நேரத்தில் என்னுடைய தொகுதிக்கு அருகாமையில் உள்ள பக்கிங்ஹாம் கனாலில் கிளிஞ்சல் பொறுக்கும் உரிமையை சர்க்கார் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை தனியார் துறைக்கு ரூ. 2 லட்சத்திற்கு ஏலம் விடுகிறார்கள். அதை நம்பி 10,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கிளிஞ்சல் பொருக்குகின்ற தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதை கூட்டுறவு நிறுவனமாகவோ அல்லது சர்க்கார் துறையிலேயாவது ஏற்று நடத்த ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, ஒரு சிறு தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றால் குறிப்பாக டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் பெர்மிஷன் கொடுக்க வேண்டும், டவுன் பிளானிங் ஆபீஸர் பெர்மிஷன் கொடுக்க வேண்டும், இப்படி மற்ற பல அதிகாரிகளுடைய அனுமதி பெற்ற பிறகுதான் சிறு தொழில் ஆரம்பிக்க முடியும். சாதாரணமாக கயிறு பின்னுதல் அல்லது கூடை முடைதல் போன்ற குடிசை தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றால் கூட, இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, சாதாரணமாக ஹெல்த் ஆபீசர் மூலமாகவாவது அதைச் செய்வதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. அதாவது என்குரோச்மென்ட் ரிமூவ் செய்யப்படும் பொழுது அல்லது அக்வையர் செய்யப்படுகிறபொழுது பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. இதற்கென்று மாவட்ட அளவிலோ அல்லது கோட்ட அளவிலோ ஒரு தனி அதிகாரியை நியமித்து பஞ்சாயத்துக்களுக்கு வேண்டிய நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும். பாதைகள் போடவேண்டுமென்றாலும் சரி, பள்ளிக்கூடம் கட்டவேண்டுமென்றாலும் சரி நில ஆர்ஜிதம் செய்வதற்கு அந்தத் துறைக்கு செல்வதனால் நீண்ட நாட்கள் ஆகின்றன. ஆகவே, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதிலே அதிக கவனம் செலுத்தி, இதற்கு ஒரு தனி அதிகாரியை நியமித்தால் உடனுக்குடன் இந்தக் காரியங்களைச் செய்வதற்கு வசதியாக இருக்கும். மேலும் ஒவ்வொரு யூனியனிலும் ஒரு ஏ. ஈ. இருந்தால் வசதியாக இருக்கும். ஏ. ஈ.யைப் போய் அழைப்பதற்குச் சென்றால், பஞ்சாயத்து யூனியன் ஜீப் இருந்தால் வருகிறேன் என்று சொல்லும் ஏ.ஈ.யும் இருக்கிறார், உடனுக்குடன் வருகிற ஏ.ஈ.யும் இருக்கிறார். இதனால் வேலைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. கிராமத்திலுள்ள மக்களுக்கு வேண்டிய வசதிகளை உடனுக்குடன் செய்துதரவேண்டுமென்ற நல்லெண்ணம் இருக்குமானால், இப்பேர்ப்பட்ட சில டெக்னிகல் ஆபீஸர்களை அங்கங்கே அமர்த்திக்கொடுத்தால் தான், அவர்கள் மூலமாக துரிதமாக வேலைகளைச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளமுடியும். ஆகவே, இந்தத் துறையில் ஆவன செய்து, மக்களுடைய தொல்லைகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பனைமரமேறும் தொழிலாளர்களை தயவு செய்து கவனித்துக்கொள்ளுங்கள், மறந்துவிடாதீர்கள். அவர்கள் நாட்டிற்காக தங்களைத் தாங்களே தியாகம் செய்துகொண்ட தொழிலாளர்கள், அப்படிப்பட்ட தியாகிகளுக்கு நன்மை செய்துகொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மான்யக் கோரிக்கைகளின் மீது சில விஷயங்கள் சொல்லுவதற்கு முன்வருகிறேன். சமுதாய நலத் திட்டம் என்பதற்குப் பதிலாக வேறு ஏதேனும் ஒரு பெயரை வைத்துக்கொள்வது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். ஸ்தலஸ்தாபனத் துறை என்று வைத்துக் கொள்வது பொருத்தமாக இருக்கும்.

நகரசபைத் தேர்தல் ஒத்திப் போடப்பட்டு வருகிறது. ஒத்திப் போடுவதை நீடித்துக்கொண்டே போகாமல், சீக்கிரம் நகரசபைத் தேர்தல்களையெல்லாம் நடத்தி முடிக்க வேண்டும். இது சம்பந்தமான மசோதாவை

உடனடியாக சட்டமாக்க வேண்டும். அதிக வார்டுகள் பிரித்தாக வேண்டும். வார்டுகள் பிரிக்கின்ற காலத்தில் ரிசர்வ் தொகுதிக்கு என்று தனியாக வார்டு பிரிப்பது உதவியாக இருக்க முடியும்.

டவுன் பிளானிங் சட்டம் திருத்தப்படவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. அதைத் திருத்தவில்லை என்று சொன்னால், குடிசை வாழ்வோர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். குடிசை வாழ்வோர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு, குடிசை வாழ்வோர்களுக்கு வசதி செய்து கொடுப்பதற்கு, டவுன் பிளானிங் சட்டத்தை அரசாங்கம் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்களை கலைப்பதாக பெரிய புரளியை ஏற்படுத்தி விட்டதால், இன்றைய தினம் பஞ்சாயத்து யூனியனின் வேலை செய்து கொண்டிருக்கிற பணியாளர்கள் அத்தனை பேர்களும் என்றைக்கு தங்களுடைய வேலை போய்விடுமோ என்று அச்சப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பல இடங்களில் அப்படி அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை, எல்லோருக்கும் வேலை உத்திரவாதம் என்று சொல்லியிருந்தாலும், இறுதியாக இந்தச் சபையில் திட்டவட்டமாக ஒருவரும் பயப்பட வேண்டிய அவசியம் கிடையாது; வேலைகளைத் திறமையாகச் செய்யுங்கள் என்று நம்பிக்கை ஊட்டக்கூடிய அளவிலே ஒரு அறிவிப்பைச் சொல்ல வேண்டும் என்று நான் இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்வதற்கு விரும்புகிறேன்.

கிராமப்புறங்களில் பெரிய அபிவிருத்திகள் ஏற்படுத்துவதன் மூலம் தான் ஒரு புதிய சமுதாயத்தை அமைக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். கிராமப்புறங்களில் அபிவிருத்தி வேலைகளைச் செய்து முடிக்க வேண்டுமென்று சொன்னால், பெரிய அளவுக்கு விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய ஏற்பாடுகளை செய்துகொடுத்தாக வேண்டும். விவசாயத்தை அபிவிருத்தி செய்யக் கூடிய ஒரு நிலையில் பஞ்சாயத்து போர்டுகளுக்கு சலுகைகள் அளிக்கப்பட வேண்டும். அம்மாதிரி இருக்கிற காலத்தில் கிராமங்களில் விவசாய அபிவிருத்திவேலைகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையிலே கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அதிகமானஅதிகாரம் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். வேலையில்லாமல் சில அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பது வாஸ்தவம் தான். அம்மாதிரி அதிகாரிகளுக்கு வேறு வேலை கொடுத்து, அவர்களை வேலை செய்யும்படிச் செய்ய வேண்டும். பஞ்சாயத்துக்களை ஆரம்பித்த பிறகு தான் விவசாயிகளுக்கும், அதிகாரிகளுக்கும் நேரடியான ஒரு தொடர்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் நல்ல ஆலோசனைகளை விவசாயிகளுக்குச் சொல்லக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. நல்ல ஆலோசனைகளைச் கிராம மக்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ சில பேர்கள் தவறு செய்யலாம். இருந்தாலும், விவசாயம் செய்வதைப் பற்றியும் உரமிடுவது பற்றியும் அல்லது இதர வேலைகள் எவ்வாறு செய்வது என்பது பற்றி யெல்லாம் நல்ல ஆலோசனைகளை விவசாயிகளுக்குச் சொல்லக்கூடிய ஒரு ஸ்தாபனமாக இன்றையதினம் பஞ்சாயத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதை நாம் மக்களுக்குச் சாதகமாக பயன்படுத்தக்கூடிய முறையில் ஏற்பாடுகள் செய்யவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்வதற்கு முன்வருகிறேன்.

நிர்வாக அதிகாரிகள், ஆணையாளர்கள் இவர்களெல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இன்றைய தினம் அவ்வாறு நிலைமை இல்லை. மக்களால் வோட்டு அளிக்கப்பட்டு, மக்களுடைய பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டு வரும் தலைவர்கள் என்றாலும், அவர்கள் ஆணையாளர்களுக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்கக் கூடிய நிலைமை இருக்கிறதே ஒழிய தலைவர்களுக்கு பூரணமாக அதிகாரம் இல்லை. எதற்கெடுத்தாலும் ரெவின்யூ அதிகாரிகளின் தயவை நாடவேண்டியிருக்கிறது. ரெவின்யூ அதிகாரிகளின் மேல் ஆதிக்கம் நீடிக்கும் வரையில், நிச்சயம் பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் இருக்கக் கூடிய எந்த வேலையும் துரிதமாக

நடைபெறாது. ரெவின்யூ அதிகாரிகள் தான் இதற்கெல்லாம் தடையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தத் தடையைப் போக்குவதற்கு, ரெவின்யூ அதிகாரிகளுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கு நமது அரசு முன்வரவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மற்ற உறுப்பினர்களும் சொல்லுகிறார்கள், தலைவர்களை மக்கள் நேரிடையாக தேர்ந்தெடுக்க வேண்டும் என்று. அதுதான் நியாயமாக இருக்கும். இன்றைக்கு மக்களே தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பதிலாக, மெம்பர்கள் தேர்ந்தெடுக்கும் முறையைக் கொடுத்திருக்கிறார்கள். கள்ளக் கடத்தலிலே வல்லவர்களாக இருக்கிறவர்கள் சிலர் தாங்கள் தலைவராக வருவதற்கும், சேர்மனாக வருவதற்கும், தன்னுடைய படை பலம், பண பலம் அதையெல்லாம் பயன் படுத்திக்கொண்டு, மெம்பர்களைக் கடத்தல் செய்யும் நிலை இருக்கிறது. இம்மாதிரியான கடத்தல் வழக்குகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றன. ஆகவே, அந்த தேர்தல் முறையை மாற்றி, கிராம பஞ்சாயத்துத் தலைவர்களை கிராம மக்களே தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும், பஞ்சாயத்து யூனியன் தலைவரை அந்த வட்டார மக்களே தேர்ந்தெடுக்கவும், அதே மாதிரி முனிசிபாலிடியானால், அந்த மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்கும் முறையையும், அதிகாரத்தையும் மக்களுக்கே வழங்க வேண்டும். அப்படிப்பட்ட அதிகாரம் இப்பொழுது இல்லாததால், சிலர் ஆள் கடத்தும் வேலைகளை தங்களுக்குச் சாதகமாகச் செய்து கொள்கிறார்கள். அடியாட்களை வைத்து கடத்தல் செய்கிறார்கள். ஆகவே அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

அடுத்து, குடிமராமத்து வேலைகளைச் செய்வதில், சிறு பாசன வேலைகளைச் செய்ய அதிகாரம் இருக்கிறது. குடிமராமத்து வேலைகளுக்கு ரூ. 1·50 மானியமாக கொடுக்கிறார்கள். ஒரு ரூபாய் ஏக்கருக்கு வரிபோடலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால், கிராமத்தில் உள்ள சில மிராஸ்தாரர்கள் சேர்ந்து கொண்டு அந்த வேலை அவசியம் இல்லை என்று சொல்லி விட்டால், வேலை நிறுத்தப்பட்டு விடும். இப்படிப்பட்ட நிலைகள் அதிகமாக தஞ்சை மாவட்டத்தில் ஏற்படுகிறது. நான்கு மிராசுதாரர்கள் சேர்ந்து கொண்டு, கிராமத்தில் மற்ற அவ்வளவு பேர்களும் வேலையை ஆதரித்தாலும், மராமத்து வேலையைச் செய்யப்படாது என்றால், ரெவின்யூ அதிகாரிகள் மராமத்து வேலையைச் செய்யக் கூடாது என்று தடுத்து விடுவார்கள். ஆகவே, பழைய முறையில் இருப்பதை மாற்றி ரூ. 2·50ஐ பஞ்சாயத்துக்கு மானியமாகக் கொடுத்து, இந்த ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கடைசியாக, ஸ்தலஸ்தாபன வேலைகளைப் பற்றிப் பேசும்போது, நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்துக்கள், முனிசிபாலிடிகள் இவையெல்லாம் நிர்வாகம் செய்துகொண்டு இருக்கின்றன. அவைகளுடைய வருவாயை எவ்வாறு ஏற்பாடு செய்வது அவற்றை எப்படிக் கண்காணிப்பது, பல்வேறு வேலைகளையும் செய்ய எந்த எந்த முறைகளைக் கையாள்வது என்பன போன்றவற்றைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டியை அமைத்து, இந்த முறைகளை பரிசீலித்து செயல்பட்டால், அது உதவியாக இருக்கும். அந்த முறையில் கமிட்டி பரிசீலனையை சட்டமன்றத்தின் முன்னால் வைத்து விவாதிப்பதும் கூட சரியாக இருக்கும் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

* **திருமதி சு. குப்பம்மாள்** : மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, இந்த மானியங்கள் மீது பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

பஞ்சாயத்தில் வரிகளை வசூலிக்க ஒரே நேரத்திலே வசூலிக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். டவுன் பஞ்சாயத்துக்களில் அந்த வகையில் வசூலிப்பது மிகுந்த சிரமமாக இருக்கிறது. ஆகையினால், அந்த வரிகளை ஆறு மாதத்திற்கு ஒரு தடவையோ அல்லது ஆண்டில் இரண்டு தடவையாகவோ வசூலிக்க வழிவகை செய்து கொடுக்க வேண்டும். அதே நேரத்தில், கிராம வரியை ஒரே நேரத்தில் வசூலிப்பது சாத்தியமாக இருக்கலாம். அங்கே தொகைகள் கொஞ்சமாக இருப்பதால் அதைச் செய்து

விடலாம். ஆனால் டவுன் பஞ்சாயத்துக்களில் நிலைமை வேறு. ஆகவே, அங்கேயெல்லாம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை என்ற அளவில் வசூலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்து யூனியனுக்கு ஜீப் கார்கள் கொடுத்திருக்கிறார்கள். அவை பஞ்சாயத்துக்கும், பஞ்சாயத்து யூனியனுக்கும் உபயோகப்பட வேண்டும். இரண்டு பேருக்கும் உபயோகப்படுத்தும் அளவில் அதை அமைக்க வேண்டும். பஞ்சாயத்து தலைவர்களும் கிராமத்தில் பல பகுதிகளுக்குப் போய் வேலைகள் செய்ய வேண்டியிருக்கிறது. கண்ட்ராக்டர்களை வேலை செய்யச்சொன்னால் அவர்களை தூண்டிக்கொண்டே இருந்தால்தான் அவர்களும் வேலை செய்வார்கள். ஆகவே, அதற்கு இந்த வண்டி அவசியமாக இருக்கிறது.

லேடி டாக்டர்கள் கிராமப் பகுதியில், வீடுகள் இல்லாத இடங்களில் வேலைக்குப் போகிறார்கள். இரவும் பகலும் எந்த நேரத்திலும் அவர்கள் வேறு இடங்களுக்குப் போகப் பயப்படுகிறார்கள். ஆகவே, அவர்கள் வேலை செய்யக்கூடிய இடத்திலேயே வீடு கட்டுக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பேரவையின் இப்போதைய தலைவர் அவர்களே, சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சி, பொதுப்பணிகள், உதவி மானியங்கள், கதர்-கிராமத் தொழில் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்குத் தான்முந் துறும்"

என்னும் திருக்குறளின் வழி நின்று குடி தழீஇக் கோலோச்சிய முடியுடை மூவேந்தர் காலம் தொட்டே கிராமக் குடியாட்சி முறை கண்டவர்கள் நாம். குடவோலை முறைப்படித் தேர்வு பெற்ற கொள்கைச் சான்றோர்கள்., கிராமத் தன்னாட்சி நடத்தி முன்னேற்றம் கண்டனர் என்பதைத் தென்னக வரலாறு தெளிவாகத் தெரிவிக்கின்றது. உத்திரமேரூர் சாசனங்களும், கல் வெட்டுக்களும் இதனை உறுதிப்படுத்துகின்றன. காலச் சக்கரத்தின் வேகச் சுழற்சியில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாறுபாடுகளின் விளைவாக மாற்றங்கள் பல நிகழ்ந்து ஊராட்சிகளின் புகழ் மங்கத் தலைப்பட்டது என்று ஆரம்பித்து மானியக் கோரிக்கைகளை கொடுத்துள்ள நம்முடைய முத்தான சுவாமி அவர்களைப் பாராட்டுகிறேன்.

ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மன்றங்களின் தலைவர் தேர்வு முறை இன்று அந்த அந்த மன்ற உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கும் முறையில் இருக்கின்றதால், தேர்தல் நேரத்தில் ஆள் தூக்கும் வேலையும், பணம் புகுந்து விளையாடும் காட்சிகளையும் பார்க்கிறோம். பணத்தை முன் வைத்து தலைமை இடங்களுக்கு வரும் வாய்ப்பு இருப்பதால், தகுதியற்றவர்களும், திறமையற்றவர்களும், நிர்வாக ஆற்றல் அற்றவர்களும் வருகிற காரணத்தால், நகராட்சி மன்றங்களிலும், ஊராட்சி மன்றங்களிலும், ஊழல்கள் மலிந்து இருப்பது மட்டுமல்லாமல், ஊராட்சி தலைவர்களாலும் மற்றவர்களாலும் கொலைகள் போன்ற குற்றங்களும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சருக்குத் தெரிவிக்கிறேன். இதனால் ஊராட்சி, நகராட்சி மன்றத் தலைவர்களை மக்களே நேரடிவாக்களிப்பு மூலம் தேர்ந்தெடுக்கும் நிலைமை இருந்தால் பணம் பலமாகக் கொண்டு, திறமையற்ற, தகுதியற்றவர்கள் தலைமைக்கு வரும் நிலை மாற்றப்பட்டு ஆற்றல் உள்ள, சேவா மனப்பான்மை உடைய பல ஊழியர்கள் ஊராட்சி, நகராட்சி மன்றத் தலைவர்களாக வருவதற்கான வாய்ப்பு உண்டு. அந்த வாய்ப்பை இந்த ஆட்சி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றங்களிலே புதிதாகக் கட்டப்படும் வீடுகளுக்கு மதிப்பீடு போடுவதற்காக குழுப் போடுகிறார்கள். ஒரு சின்னஞ்சிறு பஞ்சாயத்தின் உறுப்பினனாக இருந்திருக்கிறேன் என்ற அனுபவத்தின் பேரில், ஒரு உண்மையை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சில செல்

வந்தர்கள் ரூ. 25,000 அல்லது 30,000 செலவில் பங்களா போன்ற வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள். ஆனால், மதிப்பீடு போடும்போது, அதற்கு ரூ. 5,000 தான் செலவானது, அதற்கான வரி போடவேண்டும் என்று அந்தக் குழுவினரை நிர்ப்பந்தம் செய்கிறார்கள். மீண்டும் ஊராட்சி மன்றங்களுக்கு வரவேண்டும் என்பதால், அந்தப் பணக்காரர்களுக்குப் பயந்து, அவர்களுடைய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி, மனச்சாட்சிக்கு விரோதமாக, பரிபூரணமாக அவர் 30,000 ரூபாய் செலவழித்திருக்கிறார் என்று தெரிந்திருந்தும், 7,000 ரூபாய் தான் என்று சொல்லி, அதற்கான வரி நிர்ணயிக்கும் நிலைமைதான் பல ஊராட்சி மன்றங்களில் பார்க்கிறோம். அதனால் குறைந்த வரிப்பணம் வருகிறது என்பதல்ல; அதை அடிப்படையாக வைத்து அரசாங்கத்திடமிருந்து பெறக்கூடிய உதவித் தொகையும் அதிகமாகக் கிடைக்காத நிலைமைதான் உண்டாகின்றது. ஊருக்கு நல்ல பல காரியங்களைச் செய்ய முடியாமல் போகின்றன.

அதனால் ஊராட்சி மன்ற உறுப்பினர்களோ அதன் தலைவரோ புதிய கட்டிடங்களுக்கு மதிப்பீட்டு முறைகளை நிர்ணயிக்காமல் தனி ஆபீசரைப் போட்டு நிர்ணயித்தால் அது விருப்பு வெறுப்பற்ற முறையாக இருக்கும். அவ்வாறு விலை நிர்ணயிப்பதன் மூலம் வரி கூடுதலாகக் கிடைக்கும். மாலை 6-30 அரசாங்கத்தின் உதவிப் பணமும் கிராமங்களுக்குக் கூடுதலாகக் கிடைக்கும் என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தாய்-சேய் நல விடுதிகள் இன்றையத் தினம் பல கிராமங்களில் அல்ல, சில கிராமங்களில் சிறந்த முறையில் இயங்கிவருகின்றன. சமூக நல கேந்திரத்தின் மூலம் இத்தகைய விடுதிகளில் மருத்துவப் பெண்களின் துணைகொண்டு மக்கட்பேறு சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு கிராமத்திற்கும் தாய்-சேய் விடுதியை அதிகம் அமைப்பதன் மூலம் நம்முடைய கிராமத் தாய்மார்கள் மரணத்திற்கு இரையாகாமல் பாதுகாக்க முடியும் என்று உங்களிடத்தில் கூறிக்கொள்ளுகிறேன்.

நகராட்சி மன்றங்களை ஜனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் நிர்ணயிக்கிறீர்கள். பழைய அரசு அந்த முறைகளை நிர்ணயித்து வந்திருக்கிறது. அவ்வாறில்லாமல் வருவாயை அந்த வட்டாரத் தொழிலை அடிப்படையாக வைத்து, நகராட்சி மன்றங்களை நிர்ணயித்தால், முனிசிபாலிட்டி ஆகும்பொழுது வாழ்க்கைச் சுமையால் அதிகமாக அல்லலுக்காளாகியுள்ள ஏழை எளிய மக்கள் மேலும் வரிக் கொடுமைக்கு ஆளாகாமல் காக்கப்படுவார்கள். அதற்கு உதாரணம், மேலப்பாளையத்தில் பீடித் தொழில், நெசவுத் தொழில் செய்து வரும் மக்கள், ஏழை எளிய மக்கள் இப்பொழுது வரிக் கொடுமைக்கு இலக்காகி வருகிறார்கள். இது போன்ற முனிசிபல் ஏரியாக்களை மேஜர் பஞ்சாயத்தாக ஆக்கினால் அரசாங்க உதவியும் கிடைக்கும், வரித் தொல்லையிலிருந்து பாதுகாப்பும் கிடைக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். இன்னொரு விஷயம், கடையநல்லூரில் தனி மனிதரின் செல்வாக்கை அடிப்படையாக வைத்து, தன்னுடைய பதவிக் காலத்தில் இந்தச் சாதனையாவது நான் செய்திருக்கிறேன் என்று காட்டுவதற்காக அமைச்சராக இருந்தவர் செல்வாக்கால் கடையநல்லூர் முனிசிபாலிடியாக மாற்றப்பட்டிருக்கிறது. இப்பொழுது அங்குள்ள ஏழை எளிய மக்கள் என்னென்ன விளைவுகளுக்கும், தொல்லைகளுக்கும் இலக்காகியிருக்கிறார்கள் என்பதையும் பார்த்து, அதையும் மேஜர் பஞ்சாயத்தாக ஆக்க வேண்டும். மேலப்பாளையம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைத்து மூன்றுக்கும் ஒரே கமிஷனர், மூன்றுக்கும் ஒரே எஞ்ஜினியர் என்று செய்வதன் மூலம் நிர்வாகச் செலவு குறைக்கப்படும். அவ்வாறு நிர்வாகச் செலவு குறைக்கப்படுமானால் அதை அடிப்படையாக வைத்து மக்களுக்கு புதிய வசதிகளும் செய்து கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் இரண்டே இரண்டு நிமிஷங்கள் எனக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். மதிப்பிற்குரிய தலைவரவர்களே, உங்களின் மூலம் அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒரு முக்கிய விஷயத்தைக் கொண்டு வருகிறேன். இப்பொழுது மாநகராட்சி மன்றங்களின்

வார்டுப் பிரிவினையில் பல அலங்கோலத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். சில சமூக மக்கள் குவியலாக இருந்த பகுதிகளை வெவ்வேறு பகுதிகளாகப் பிரித்து நகராட்சி மன்றத்தில் அங்கம் வகிக்க ஏற்படாத முறையில் பிரிக்க பழைய அரசினரின் கையாட்களாக நிர்வாக அதிகாரிகள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு உதாரணமாக மேலப்பாளையம் நகராட்சி மன்றத்தைக் கூறலாம். வார்டுப் பிரிவினை அந்த அளவிற்கு அங்கு இருக்கிறது. அதைப் புனராலோசனை செய்து மக்களின் பிரதிநிதிகளை வார்டுப் பிரிவினைக் கமிட்டியில் ஏற்படுத்தி அதற்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்முடைய ஆட்சி மாறியபின் காட்சி மாறியிருக்கிறது. அந்தக் காட்சியில் மக்களெல்லாம் போற்றவும் புகழவும் காண்கிறோம். தமிழகத்திலேயுள்ள ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி இவைகளில் ஏற்பட்டிருக்கின்ற மகத்தான காட்சி. அந்த ஆட்சி மாறியதால் ஏற்பட்டுள்ள கவின்மிகு காட்சி. இந்த நாட்டிலே கதர்த் தொழிலே நசித்துவிடும் காங்கிரஸ் ஆட்சி மாறியதால் என்று கூறிவந்த காங்கிரஸாரின் தவறான பிரச்சாரத்திற்கு தாங்கள் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறீர்கள். "கதர்–கிராமக் கைத்தொழில்களுக்கு இந்த அரசு எந்த வகையிலும் எதிரியல்ல என்பதை இந்த நேரத்தில் இம் மாமன்றத்தின் கவனத்திற்கு வைக்கின்றேன். மாறாக, இத்துறையில் ஏற்படும் வீண் விரயங்களைப் போக்கி, இலாபகரமானதாக்கி, எல்லா மக்களுக்கும் பொதுவானது என்னும் நிலையை உருவாக்க வேண்டுமென்பதே இந்த அரசின் எண்ணமாகும்" என்று நீங்கள் கூறியிருக்கிறீர்களே, அது நம்முடைய தேசியத்தந்தை காந்தியடிகளுக்கு தென்னாட்டு காந்தியான அறிஞர் அண்ணாவின் தம்பியான தாங்கள் செலுத்தும் மகத்தான காணிக்கையாகும்! லட்சோபலட்சம் ஏழை எளிய பெண்கள், கதர் நூற்பதிலே ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுடைய வாழ்விற்கு ஊறு விளையுமோ என்று காங்கிரஸினுடைய வதந்தியால் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த நேரத்தில் இந்த அற்புதமான உரையின் மூலம் நீங்கள் பாதுகாப்பு அளித்திருக்கின்றீர்கள் என்பதை நினைக்கும்போது உங்களை எந்த மொழியால், எப்படிப் பாராட்டுவது என்று தெரியவில்லை. என்றாலும் ஏழை எளிய பெண்களின் மகத்தான பாராட்டைப் பெற்றுள்ளீர்கள். கதர்–கைத்தொழிலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிப்போம் என்று சொல்லி, கதர் கைத்தொழில் இலாகாவில் உள்ள சமூகநல விரோதப் பெருச்சாளிகளை நீக்கிவிட்டு இந்தத் துறையைப் புனிதமாக்குவோம் என்று கூறியிருக்கிறீர்களே, அதற்காக உங்களை என்னுடைய இதயபூர்வமாக பாராட்டுகிறேன். அமர்கிறேன்.

திரு. எம். கோபால் : பஞ்சாயத்து மானியம், கதர் மானியம் ஆகிய இவற்றின் மீது பேச வாய்ப்பளித்த அவைத்தலைவரவர்களே, ஒரு சில வார்த்தைகள் பேச முற்படுகிறேன். மகாத்மா காந்தியடிகள் பஞ்சாயத்து மூலமாகத்தான் மக்களை வாழ வைக்க முடியும், அதனால் கைத்தொழிலைப் பெருக்க முடியும் என கனவு கண்டார். அந்தக் கனவை முன்னால் இருந்த அரசு கொண்டு வந்துள்ளதே தவிர அது நல்ல முறையில் நடக்கிறதா என்று பார்த்தால் ஒரு சில கிராமங்களில் நடக்கிறது, பல கிராமங்களில் தவறிவிட்டது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றிப்பு, நகராட்சி, மாநகராட்சி என்று இப்படியெல்லாம் ஆங்காங்கு ஒரு சட்ட திட்டத்தை வகுத்து அதன்பின் ஒன்றன்பின் ஒன்றாக நடந்து வருகிறது. எனக்கு முன் பேசிய பல நண்பர்கள், சட்டசபை உறுப்பினர்கள், அவர்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். நான் ஒன்று சொல்லுகிறேன். இந்தப் பஞ்சாயத்து ஒன்றிப்புக்களுக்கு உள்ளபடியே சில அதிகாரங்கள் வேண்டும். இப்பொழுதுள்ள அதிகாரத்தால், இப்பொழுதுள்ள அதிகாரத்தின் மூலமாக கிராம மக்களுக்குப் போதுமான அளவுக்கு வசதிகள் செய்ய முடியவில்லை. சிறுசிறு கைததொழில்கள் செய்ய முடியவில்லை. திட்டம் சட்டத்திலே இருக்கிறதே தவிர நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றால் முடியவில்லை.

ஏனென்றால் அந்தப் பஞ்சாயத்துத் தலைவருக்கு அதிகாரம் கிடையாது. அதைப்போலவே ஒன்றிப்புத் தலைவருக்கும் உள்ளது. அதைப் போலவே நகராட்சித் தலைவருக்கும் உள்ளது. நான் ஒன்று சொல்லுகிறேன். சுமாராக 1910-ஆம் ஆண்டிலே சென்னை மாநகராட்சி வெள்ளையர் சட்டத்தின்கீழ் நல்ல முறையிலும், மாநகராட்சியை நடத்திச் செல்வதற்குப் பல சட்டதிட்டங்கள் கொண்டும் அதன் காரணமாக ஒழுங்கான முறையிலே அது அதற்கு கமிட்டிகளை அமைத்து நல்ல முறையிலே நடந்து கொண்டு வந்தது. ஆனால் நமக்கு முன்னால் ஆண்டு கொண்டிருந்த அரசு 1959-லே அந்தச் சட்டத்தை மாற்றி வெள்ளை அறிக்கை மூலமாக ஒரு திட்டம் கொண்டு வந்தது. அதன் காரணமாக 100 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால், அந்த 100 பேரில் 90 உறுப்பினர்களுக்கு அதிகாரம் கிடையாது. பத்து உறுப்பினர்கள் தான் அதிகாரம் பெற்றவர்கள். அதனால் அந்த 1919-ஆம் ஆண்டிலே கொண்டுவந்த சட்டத்தையும், இவர்கள் புதிதாகக் கொண்டு வந்த வெள்ளை அறிக்கையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் உள்ளபடியே மக்களுக்கு நன்மை இருக்கிறதா என்றால் கிடையாது. நான் ஒன்றை நினைவூட்ட ஆசைப்படுகிறேன். 100 வட்டங்களிலே 10 சர்க்கிள்களாகப் பிரித்து, ஒவ்வொரு சர்க்கிளுக்கும் 10 நகர மன்ற உறுப்பினர் என்று போட்டு ஒவ்வொரு சர்க்கிளுக்கும் 4 லட்சம் செலவு செய்யப்படுகிறது. ஆனால் இந்த 4-ஐப் 10-ஆல் பெருக்கினால் 40 ஆகிறது. இதைக் கொண்டு பல சேரிகளையும், கிராமங்களையும் அபிவிருத்தி செய்யலாம். சிறுசிறு தொழில்களை அபிவிருத்தி செய்யலாம். அதையெல்லாம் விட்டு ஏனோதானோ என்று ஆக்கிக்கொண்டு விட்டதனால் மக்களுக்கு நல்ல முறையிலே பயன்படவில்லை.

நான் இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நகராட்சிக்கும், பஞ்சாயத்துக்கும், ஒன்றிப்புக்கும் ஒரு சில திட்டங்கள் இருக்கின்றன. வட நாட்டில் உள்ள நகராட்சிக்கும், பஞ்சாயத்துக்கும், ஒன்றிப்புக்கும், மாநகராட்சிக்கும் வேறு பல சட்டங்கள் இருக்கின்றன. ஏக இந்தியா என்று சொல்லக்கூடிய இந்த நாட்டிலே இங்கு ஒரு சட்டம், அங்கு ஒரு சட்டம், இங்குள்ள மக்களுக்கு ஒரு நல்வாய்ப்பு; அங்குள்ள மக்களுக்கு ஒரு நல்வாய்ப்பு. இப்படியிருப்பதையெல்லாம் மாற்றி ஒரே சீராக்க வேண்டும்.

இந்தப் பஞ்சாயத்து அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் நல்ல அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று கடந்த அரசினர் செய்தார்கள். இப்பொழுது, இந்த மக்களாட்சி உள்ளபடியே ஒவ்வொரு பஞ்சாயத்தையும், ஒன்றிப்பையும் கண்கூடாக நேரில் சென்று பார்த்து, அங்குள்ள குறைகளைக் கண்டறிந்து, எப்படி எப்படிச் செய்தால், அந்தப் பகுதி மக்கள் நல்ல முறையில் வாழ முடியும், என்ன என்ன செய்தால் மக்களுடைய குறைகளைத் தீர்க்க முடியும், என்ன என்ன செய்தால் விவசாய உற்பத்தி பெருக முடியும் என்பதைக் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தால், விவசாய மக்களுக்குக் கருவிகள் காலா காலத்தில் கிடைக்கவும், அவர்கள் ஒழுங்காக வரி கொடுக்கவும் ஆன சூழ்நிலை ஏற்படக்கூடும். கிராமப் புறங்களில் நடப்பதற்குக் கூட பாதைகள் இல்லாமலிருக்கின்றன. இருபதாண்டுக் காலமாக இந்த நாட்டை ஒரு கட்சியினர் ஆண்டு கொண்டிருந்தாலும், பஞ்சாயத்துக் கிராமங்களில் இன்னும் பாதை கிடையாது, தண்ணீர் வசதி கிடையாது, விளக்கு வசதி கிடையாது என்ற நிலையெல்லாம் இருந்து கொண்டு வருவதை நாம் பார்க்கிறோம். ஆகவே, அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து, கூடுமானவரை ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று, அங்குள்ள மக்களுடைய நிலையைக் கண்கூடாகப் பார்த்து, இயன்ற அளவு அவர்களை முன்னேற்றப் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் குறிப்பிட்டபடி, விவசாய மக்களுக்கு உரம் கிடைக்கவில்லை, யூரியா கிடைக்கவில்லை, விதைகள் கிடைக்கவில்லை. ஆகவே, அந்தந்தப் பஞ்சாயத்து மூலமாக உரத்தையும், விவசாயத்திற்கான மற்ற உபகரணங்களையும் வாங்கிக் கொடுத்தால் கள்ள மார்க்கெட்டே இருக்காது, மக்களுக்கு அவை ஒழுங்காகக் கிடைக்கும், விவசாய உற்பத்தியும் பெருகும். விவசாயத்திற்கு வேண்டிய கருவிகளைச்

செய்வதற்குச் சிறு சிறு தொழில்களை கிராமப் புறங்களிலேயே அமைத்துக் கொடுத்தால், விவசாய மக்கள் சென்னையை நோக்கி வரவேண்டியிருக்காது, கஷ்டப்படவேண்டிய தேவை இல்லை. பத்து கிராமங்கள், இருபது கிராமங்களைச் சேர்த்து சிறு சிறு தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும். கொல்லர் தொழிற்சாலை, கருமார் தொழிற்சாலை போன்றவற்றைக் கிராமப் புறங்களில் ஏற்படுத்தி, அங்குள்ள பஞ்சாயத்து மூலமாக என்ன என்ன தேவைப்படுகிறதோ அதை அவ்வப்போது அங்கே கொடுப்பதற்கான முறையில் ஒரு திட்டம் வகுக்கவேண்டும்.

எனக்கு முன்னால் பேசிய ஒரு உறுப்பினர் அழகாகச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் கைத்தறிக்குரியவர்களாயிற்றே, கதரை அழித்து விடுவார்களோ என்னவோ என்று சில காங்கிரஸ்காரர்கள் உள்ளபடியே பயந்து கொண்டிருந்தார்கள். ஆனால், உள்ளபடியே காந்திஜியினுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி வரக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவை கதருக்கு முதலிடம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நான் உள்ளபடியே இந்த அமைச்சரவையைப் பாராட்டுகிறேன். ஆகவே, எந்தக் காங்கிரஸ்காரரும்—பழைய காங்கிரஸ்காரராக இருந்தாலும், புதிய காங்கிரஸ்காரராக இருந்தாலும்—பயப்படத் தேவையில்லை. கதர்த் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுடைய குறைகள் கட்டாயமாகத் தீர்க்கப்படும் என்ற முறையில் அமைச்சர் அவர்கள் கைத்தறியைப் போலவே கதருக்கும் ஆக்கம் தந்திருக்கிறார்கள். இத்தகைய நல்ல காரியத்தைச் செய்திருக்கும் அமைச்சர் அவர்களை மனதாரப் பாராட்டி, மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

***மாண்புமிகு திரு. மா. முத்துசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலிருந்து இதுவரையிலும் இந்த விவாதத்தில் கலந்துகொண்ட மன்ற உறுப்பினர்கள் பலரும், இந்தத் துறையை மேலும் வலிவும் பொலிவும் உடையதாக ஆக்குகின்ற வகையில் நல்ல பல கருத்துக்களைத் தந்ததற்காக நான் அவர்களுக்கு என்னுடைய இதயம் கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

பொதுவாக, காலையிலிருந்து இவ்விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அத்தனை பேரும், இந்த ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் நாட்டினுடைய பேராட்சி மன்றத்திற்கு அடிப்படைத் தளங்களாக, கேந்திர மையங்களாக விளங்குகின்றவை என்ற கருத்தை மனப்பூர்வமாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டத்தை, கிராம இராஜ்யத் திட்டத்தை நாட்டிலே பரவலாக உருவாக்கவேண்டும் என்ற பெருமுயற்சியை, பேரெண்ணத்தை வெளியிட்டவர்கள் உலக உத்தமர் காந்தியார் ஆவார். காந்தியார் அந்தத் திட்டத்தை வெளியிட்டாலும், அந்தத் திட்டத்தை நாட்டிலே நடைமுறைப்படுத்த வேண்டும் என்று பெரு விருப்பம் காட்டியவர், மறைந்துவிட்ட நம்முடைய மதிப்பிற்குரிய பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு ஆவார்கள். ஆகவே, கதர்த் திட்டத்தினுடைய மிகப் பெரும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காந்தியாரும், சமுதாய வளர்ச்சித் திட்டத்தினுடைய பொறுப்பை ஏற்றுக்கொண்ட நம்முடைய மதிப்பிற்குரிய ஜவஹர்லால் நேரு அவர்களும் கொண்டுவந்த இந்தத் திட்டத்தில் நமக்கெல்லாம் இருக்கும் அன்பைவிட, ஆர்வத்தைவிட, இதுவரையிலும் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த அருமை நண்பர்களுக்கு அதிகமாக இருக்கும். அவர்கள் நீண்ட காலமாக இந்த நாட்டை ஆண்டு அனுபவப்பட்டவர்கள். ஆகவே, அவர்களுடைய நல்ல ஆலோசனை இந்த நேரத்தில் நமக்குக் கிடைக்கும் என்று நான் மிகவும் எதிர்ப்பார்த்திருந்தேன். ஆனால், என்ன காரணத்தினாலோ அவர்கள் போனவர்கள் திரும்பி வரவே இல்லை. காந்தியாருக்கும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களுக்கும் இந்தத் திட்டத்தின்மீது இருந்த நம்பிக்கை இவர்களுக்கெல்லாம் இல்லையோ என்றுகூட எனக்கு ஐயப்பாடு ஏற்படுகிறது. என்றாலுங்கூட, நாம் மனம் மகிழத்தக்க வகையில், நீண்ட காலமாக அவர்களோடு இருந்தவரும்,

அவர்களுக்கெல்லாம் வழிகாட்டியவருமான நம்முடைய மதிப்பிற்குரிய ம.பொ.சி. அவர்கள் இங்கே இருந்து அருமையான கருத்துக்களை எடுத்துச் சொல்லி நமக்கு ஆதரவைக் காட்டியதற்காக நான் அவர்களுக்குப் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விவாதத்திலிருந்து நாம் தெரிந்துகொள்வதெல்லாம், ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்கள் சீரிய முறையில் செயல்பட வேண்டும், கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் மேலும் பரவலாக்கப்படவேண்டும், கொடுக்கப்பட்டிருக்கிற நிதி வசதிகளை மேலும் பெருக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் எல்லா உறுப்பினர்களுமே தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அரசினுடைய கருத்தும் அதுவேதான் என்று இந்த மாமன்றத்திற்கு நான் காலையில் கொடுத்த குறிப்பில் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இந்த மன்றங்கள் சீராகச் செயல்படுவதற்கான பல்வேறு யோசனைகளை இங்கே சொன்னார்கள். அப்படிச் சொல்லப்பட்டவைகளிலே, இந்தச் சட்ட திட்டங்களையெல்லாம் முறைப்படி திருத்தியமைத்து மேலும் வலிவுள்ளதாக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்த நகராட்சிச் சட்டத்தைப் பொறுத்தவரையில், நீண்ட காலத்திற்கு முன்னாலே உருவாக்கப்பட்ட சட்டம் என்பதை கனம் உறுப்பினர்கள் எல்லோரும் அறிவார்கள். 1920-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை வைத்துக்கொண்டு, ஏறக்குறைய 47, 48 ஆண்டுகளாக, நாம் நம்முடைய நகராட்சியை நடத்தி வந்திருக்கிறோம். அதில் அவ்வப்போது சில பல மாற்றங்கள் செய்யப்பட்டனவே தவிர, அது காலத்திற்கு ஏற்ற வகையிலே திருத்தியமைக்கப்படவில்லை. சென்ற அரசாங்கத்தின் கடைசி நேரங்களில் அப்படிப்பட்ட முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டு, அது பிறகு என்ன காரணத்தினாலோ விடுபட்டுப் போய்விட்டது. ஆகவே, நீண்ட காலமாக ஏற்பட்டிருக்கக்கூடிய மாற்றங்களுக்கு ஏற்றவகையில் சட்டம் மாற்றியமைக்கப்படாததால், இன்றைக்குப் பல்வேறு நகராட்சிகளில் எந்தக் காரியமும் திறம்படச் செய்ய முடியவில்லை என்ற குறைகளையும் குற்றங்களையும் எடுத்துச் சொல்லவேண்டிய நிலை இருக்கிறது. இந்த அரசு அந்தக் சட்டத்தை முறைப்படத் திருத்தி, இன்றைக்குள்ள நிலைமைக்கு ஏற்ற வகையில் செய்யவேண்டும் என்பதற்கான முயற்சியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் கவனப்படுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில், இந்தச் சட்டத்தை உருவாக்கி இந்த மாமன்றத்திற்குக் கொண்டு வருவதற்கு முன்னால், இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கக்கூடிய நகராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சிமன்ற ஆணையாளர்கள் ஆகியவர்களை அழைத்து வைத்து, அவர்களுடைய மேலான கருத்துக்களைக் கேட்டறிந்து, அவர்கள் சொல்லுகிற கருத்துக்களிலே ஏற்புடையதாக இருப்பனவற்றை ஏற்று நடத்துவதற்கு இந்த அரசாங்கம் நிச்சயமாக முயலும் என்ற உறுதியையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களும் நகராட்சி மன்றங்களும் அதிகமான அதிகாரத்தைக் கொண்டதாக விளங்கவேண்டும் என்ற கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலே நமக்குக் கருத்து வேறுபாடு எதுவும் எழுவதற்கு நியாயம் இல்லை. ஆனால், ஒன்றை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கடந்த காலத்தில் இந்த மன்றங்களுக்குப் பல அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு, நாளுக்கு நாள் அவைகள் குறைக்கப்பட்டு வந்திருக்கக்கூடிய நிலையையும் நாம் அறிவோம். உதாரணத்திற்கு ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மிகச் சாதாரண விஷயம் என்றாலும், அதற்குப் பின்னாலே தொக்கி இருக்கும் நிலை என்ன என்பதைக் கனம் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்களில் வேலை செய்து வருகின்ற ஆசிரியர்களை மாற்றும் பொறுப்பையும், ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பையும் ஊராட்சி ஒன்றியங்களின் பெருந்தலைவர்களும், ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களும் ஏற்று நடத்தி வந்தார்கள். அதற்குரிய உத்தரவுகளைப் பிறப்பித்தவர்களும் அன்றைக்கு இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்தவர்கள்தான்

ஆனால், நாளடைவில் சரியான முறையில் சீர்படவில்லை, அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்தன என்ற நிலை ஏற்பட்டு, அவர்களாலேயே தாங்கிக்கொள்ள முடியாத காரணத்தால், அங்கே ரெவினியூ டிவிஷனல் ஆபீசரைப் போட்டு, இந்த மாறுதல் நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும் என்ற நிலை வந்தது. நான் இது ஒரு நல்ல ஏற்பாடு என்று சொல்லுவதற்காக இதைக் குறிப்பிடவில்லை. அதிகாரங்கள் அங்கே ஓரளவு சரியான முறையில் பயன் படுத்தப்படவில்லை என்பதை அவர்களே பார்த்துப் புழுங்கிப்போய் தான், அரசாங்கப் பொறுப்பிலுள்ள ஒருவரை நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லா ஊராட்சி ஒன்றியத் தலைவர்களும், ஊராட்சி-நகராட்சி மன்றத்தின் தலைவர்களும் அப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி நான் சொல்லவில்லை. ஒரு சில இடங்களில் அவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய பதவியானது, பொதுமக்களுக்கு அருமையான முறையில் பணியாற்றக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதையே எடுத்துக்காட்டும். அந்த எண்ணத்திலிருந்து அவர்கள் பின் வாங்கவில்லை என நினைக்கிறேன், ஒரு சில இடங்களில் தங்கள் சொந்த விருப்பு வெறுப்பு உணர்ச்சிகளுக்குட்பட்டு கட்சிமாச்சரியங்களுக்குட்பட்டு காரியமாற்றுகின்ற நிலையில்தான், நிர்வாக உத்தரவுகளின் மூலமாக அவர்களுடைய அதிகாரங்களைக் குறைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இன்றைக்கு பெரும்பான்மையான அதிகாரங்களை அரசாங்கம் கையிலே வைத்துக்கொண்டு செயல்படும் தன்மை ஏற்பட்டிருக்கிறது. உள்ளாட்சி மன்றங்கள் கொள்கை வகுக்கும் மன்றங்கள் அல்ல. ஊராட்சி ஒன்றியம் முடிவு செய்கின்ற காரியங்களை அவை செயல்படுத்துகின்றன. இந்த மன்றங்களின் தலைமையை ஏற்றுக்கொள்கின்றவர்கள் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், ஊராட்சி-உள்ளாட்சி மன்றங்களில் கொள்கை மோதுதல் இல்லாமல், பொது மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சியுடன் பணியாற்றக் கூடியவர்களாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட நிலைமைக்குப் படிப்படியாக அதிகாரங்களைக் குறைத்துக்கொண்டு, ஆக்க பூர்வமான செயல்களில் ஈடுபட வேண்டுமென்ற எண்ணம் மக்களிலே பல பேருக்கு இன்னும் ஏற்படவில்லை. ஜனநாயக உணர்வுகளை நாம் சரியாக மதிக்காத காரணத்தால்தான், ஊராட்சி ஒன்றியங்கள் நல்ல முறையில் செயல்படவில்லையென்று பரவலான எண்ணத்தை ஏற்படுத்திவிட்டது.

அடுத்து, ஊராட்சி மன்றங்கள் ஏராளமான பணத்தைச் செலவு செய்தாலும்கூட, உருப்படியான காரியங்களைச் செய்யவில்லையென்று புகார் சொல்லப்பட்டிருக்கிறது. காலையிலே சுட்டிக்காட்டிய விவர அறிக்கையிலிருந்து, எந்த அளவுக்கு அவை செயல்பட்டு வருகின்றன என்றால், பொது மக்களிடத்திலே நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு காரியங்களைச் செய்கின்ற மன்றங்களாக விளங்குகின்றன. சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே ஒரு கிராமப்புற விவசாயி, கலெக்டர், தாசில்தார் அவர்களைப் பார்த்துத்தான் தன்னுடைய விவகாரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டிய நிலைமை இருந்தது. கலெக்டரைப் பார்ப்பது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை நாம் தெரிந்து வைத்திருக்கிறோம். ஆனால் இன்று, எந்த அதிகாரியிடத்தில் போனால், எந்தக் காரியம் நடைபெறும் என்பதை விவசாயி தெரிந்து வைத்திருக்கிறான். இந்த ஊராட்சி ஒன்றியம்—ஊராட்சி மன்றங்களின் நல்ல விளைவுதான் கிராமப்புற மக்களும் தங்கள் தேவைகளை அவ்வப்போது உணர்ந்து, அதைத் தேடிக்கொள்ளும் நிலையில் இருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்திக் காட்டியிருக்கிறோம். "300 பேர் இருக்கக் கூடிய ஊர்களில் எல்லாம் பள்ளிக்கூடம் அமைக்கப்படவில்லை—ஒரு மைல் தூரம் போனால்தான் பள்ளி இருக்கிறது" என்று சில உறுப்பினர்கள் சொன்னார்கள். இந்த உள்ளாட்சி அமைப்பு முறையினால், ஏறத்தாழ 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பள்ளிக் கட்டடங்களை நாம் அமைத்துக்கொள்ள இருக்கிறோம். 18 ஆயிரம் தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. 4 ஆயிரம் உயர்தர தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. இதல்லாமல் நகராட்சி

மன்றங்கள் நடத்துகின்ற பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. சமுதாய சீர்திருத்தம் என்பதில், மேலெழுந்தவாரியான அடிப்படையின் மையமாக விளங்குகின்ற ஆரம்பக் கல்வியை வளர்ப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். வருங்காலம் நிச்சயமாக வளமுடைய சமுதாயமாக வாழ்ந்து பெருமைப்படுத்த முடியும். கல்விக்காக நாம் பெருந்தொகையைச் செலவழித்து வருகின்றோம்.

அடுத்தபடியாக, குடி நீருக்காக கிணறுகள் வெட்டப்பட்டு, சுகாதார வசதிகள் நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றன. இப்படி செய்தும்கூட பொதுமக்களுக்கு ஒரு மனநிறைவு ஏற்படவில்லையென்று சொன்னால் ஆங்காங்கு ஏற்படுகின்ற சிலசில தவறுகள்தான் இதற்குக் காரணம் என்பதை மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கப் பணிபுரிபவர்கள், அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையிலே இருக்கின்ற நல்லெண்ணத் தூதுவர்கள் என்ற மனப் பக்குவத்தைப் பெற வேண்டும். அரசாங்கம் என்பது அவர்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கும், கட்சி மாச்சரியங்களுக்கும், ஆசாபாசங்களுக்கும் உட்பட்டது என்ற நிலை இருக்கக்கூடாது. நாம் நிறையச் செலவு செய்து பொதுமக்கள் நன்மையை அடைய வேண்டுமென்று விரும்புகிறோம். பணத்தையெல்லாம் செலவு செய்கின்ற உரிமை ஆணையாளரிடத்தில் இருக்கிறது. ஆண்டொன்றுக்கு 30 லட்சம் ரூபாயைச் செலவழிக்கின்ற உரிமை ஆணையாளரிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பொதுமக்களின் இடையிலேயும் அரசாங்கத்தின் இடையிலேயும் ஒரு நல்ல நிலைமையை உருவாக்குவதற்கு உறுப்பினர்களும் தலைவர்களும் பாடுபட வேண்டும். உறுப்பினர்களும், தலைவர்களும் சரியான பாதையில் சென்றால்தான் நல்ல வழி கிடைக்கும். உறுப்பினர்களும் தலைவர்களும் காய்தல்-உவத்தலின்றி, நடுநிலையிலிருந்து பணியாற்றும் உணர்வும் ஏற்பட்டிருக்குமானால் இதுபோன்ற ஊராட்சி ஒன்றியங்களின் பணி அலட்சியப்படுத்தப்படாமல் நல்ல முறையில் செயல்படுத்தப்படும். ஒரு சில இடங்களில் இந்த ஊராட்சி ஒன்றியங்கள் அரசியல் நோக்கத்திற்காக அதிகமாகப் பயன்பட்டன. அரசியல் பலிபீடமாக ஆக்கப்பட்டது. அதனுடைய வெட்டுக்காய்களாக ஒருசில அதிகாரிகள் ஆக்கப்பட்டனர்.

நேற்று பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உலகம் தோன்றிய நாளிலிருந்தே இந்த உள்ளாட்சி மன்றம் நமக்குக் கிடைத்திருக்கிறது என்றார். சோழர் காலத்திலிருந்துதான் நமக்கு இதைப்பற்றிய வரலாறு கிடைத்திருக்கிறது—அதற்கு முந்திய கால வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை—ஆனால், உலகம் தோன்றிய காலத்திலிருந்தே, இந்த ஊராட்சி மன்றங்கள்—ஊராட்சி ஒன்றியங்கள் இருந்திருக்க வேண்டும். அந்தப் பழைய அமைப்பு சோழர்களால் உருவாக்கப்பட்டு நல்ல முறையாக செயல்பட்டு வந்திருந்தன. இம்மாதிரியான நிலையான அமைப்பை மக்கள் மனமகிழ்வோடு ஏற்றுக்கொள்ளத்தக்க விதத்தில் நாம் உருவாக்க வேண்டும்.

தமிழகத்தில் படிப்படியாக வளர்ச்சித் திட்டங்கள் தீவிரமாக உருவாகிக் கொண்டு வருகின்றன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, மக்களுடைய குறைகளையெல்லாம் போக்க வேண்டுமென்ற பெரு விருப்பத்தினால்தான், நான் தமிழகத்தின் பெரும் பகுதியைச் சுற்றிப் பார்த்தேன். எவ்வளவோ காரியங்கள் செய்யப்பட்டிருந்தாலும் மக்களிடத்திலே ஏதோ மனநிறைவு இல்லை. அதிகாரிகள் எல்லாம் மக்களிடத்திலே ஏதோ நாலு வார்த்தை இனிமையாகப் பேசுகின்ற தன்மையில்லாத நிலைமை இருந்து வருகிறது. நல்ல காரியங்களைச் செய்து கொடுக்கின்ற தன்மை இல்லாமல் இருக்கிறது.

காலையிலே பேசும்போது நண்பர் கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் 'பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்பட்டு வந்த பணம் குறைந்துவிட்டது' என்றார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு ஆண்டு பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கப்படுகின்ற தொகை அதிகமாகிக் கொண்டுதான் வருகின்றது. ஆனால் மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு வருகிற தொகைதான் ஆண்டுக்கு ஆண்டு குறைந்துகொண்டே வருகிறது மத்திய அரசாங்கம் குறைவாகத் தொகை ஒதுக்கியும், மாநில அரசாங்கம்

கூடுதலாக ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. கடந்த 1965–66-ம் ஆண்டில் தமிழகத்தில் ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் அளிக்கப்பட்ட தொகை 230·57 லட்சம்; 1966–67-ல் 271 லட்சம்; 1967–68-க்கு 273·2 லட்சம் ரூபாய். இப்படியாக தொகை அதிக அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டில் கிராம வேலைத் திட்டத்தின்கீழ்—அக்ரிகல்சரல் கிராண்ட் ரூ. 141·59 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கது. இந்த ஆண்டு 150·40 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் லோகல் ரோட்ஸ் கிராண்ட், வில்லேஜ் ஹவுஸ் டாக்ஸ், மாட்சிங் கிராண்ட் என்ற அடிப்படையில் முதலில் 85 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது. தற்போது 90 லட்சமாக அது உயர்த்தப் பட்டிருக்கிறது. இப்படி நிதி கொடுக்கிற தன்மையிலேதான் தமிழக அரசு இருந்து வருகிறது. ஒரு சில இடங்களில் குறைகள் ஏற்பட்டிருக்கக்கூடும். ஒருசில இடங்களில் கொடுக்க வேண்டிய தொகை குறைந்து போனதாகத் தெரியும். இடைக் காலத்திற்கான நிதிநிலை அறிக்கை கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு இடத்திற்கும் இவ்வளவு என்று தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. ஒரு சில இடங்களில் அதிகாரிகள் அந்த உத்தரவையே ஆண்டு முழுவதற்கும் என்று கணக்கெடுத்துக்கொண்டு இருப்பார்கள் என்று கருதுகிறேன். சென்ற ஆண்டு கொடுத்த தொகையிலிருந்து ஒரு பைசா கூட குறையாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொரு குறிப்பைச் சுட்டிக்காட்டினார்கள், ஜீப் குறித்து. ஜீப் என்பது நம்முடைய உபயோகத்திற்கு நமக்கு அடிமையாக இருந்த நிலைமை மாறி அனைவரும் ஜீப்புக்கு அடிமையாகிவிட்ட நிலையைப் பார்க்கிறோம். ஜீப்பினால் ஏற்படுகிற பலன்களைவிட அதனால் ஏற்படக்கூடிய வெறுக்கத்தக்க விரோத சூழ்நிலை அதிகமாக இருக்கிறது. அங்குள்ள சேர்மன் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார், அங்குள்ள கமிஷனர் எடுத்துக்கொண்டு போய்விடுகிறார் என்றால் நம்மால் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் உபயோகிக்கிறார்களே, நம்மால் உபயோகிக்க முடியவில்லையே என்கிற மாச்சரியம் தான் அதிகமாக இருக்கிறது. அதுவும் ரெவின்யூ டிபார்ட்மெண்டு அதிகாரிகள்தான் அதிகம் உபயோகப்படுத்துகிறார்கள், பிறருக்குப் பயன்படுவதில்லை என்கிற குறை பரவலாக இருக்கிறது. நிச்சயமாக இந்தக் குறைகளைப் போக்க முடியும். மற்றவர்களுக்கும் பயன்படுமாறு செய்யவேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவை சரியான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றனவா என்று பார்த்துக்கொள்ளவும் முடியும். இல்லை என்றால் திருப்பி எடுத்துக்கொள்வதுபற்றியும் அப்போது யோசிக்கப்படும்.

அடுத்து, மாவட்ட வளர்ச்சி மன்றங்களைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதுபற்றி நேற்றையதினம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்
இரவு 7-00 எடுத்துக் கூறினார்கள். வெறும் நடைமுறை சம்பிரதாயமாக இல்லாமல் ஆக்க பூர்வமாக ஒரு நாள் அல்லது இரண்டு நாள் கூடி எல்லா அதிகாரிகளும் கலந்து கொண்டு ஒரு விரிவான திட்டத்தைத் தீட்ட வேண்டுமென்று கருத்தைத் தெரிவித்தார்கள். மேலும் அதுபற்றிய விளக்கத்தை விவரிக்கத் தேவையில்லை என்று கருதி விடுகிறேன்.

அடுத்து, ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிப்பு யூனியன் தலைவர்கள் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கிற முறையைப்பற்றிச் சொன்னார்கள். அது ஒரு கொள்கையைப் பற்றியது. தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. இன்றைக்கு ஆளும் கட்சியில் உள்ள நாங்கள் கடந்த காலத்தில் அந்தக் கருத்தையே வலியுறுத்தி வந்திருக்கிறோம். ஆகவே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றிப்புக்களை கலந்துபேசி, தொடர்பு உடைய மற்றவர்களைக் கலந்துகொண்டும் தேவையான மாற்றங்களைச் செய்ய நிச்சயமாக இந்த அரசு தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர சீரமைப்புத் திட்டம் போன்றவைகளை நகராட்சி மன்றத் தலைவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு இருக்கக்கூடிய சங்கடங்களை உணர்கிறேன். நாம் சில விதிமுறைகளை வைத்துக்கொண்டுதான் காரியங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. விதிகளே வேண்டாம் என்று சொல்ல முடியாது. அவசியமான இடங்களில் விதிவிலக்கு அளிப்பதைப்பற்றி யோசிக்கலாம்.

300 பேர்கள் இருக்கக்கூடிய இடங்களில் எல்லாம் ஒரு ஆரம்பப்பள்ளி ஏற்படுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். நாம் இன்றைக்கு நம்மிடம் இருக்கும் பொருளாதார நிலையை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் நடைமுறைக்கு ஏற்ற விதிமுறைகளைச் செய்கிறோம். காலத்திற்கேற்ப விதிமுறைகளை மாற்றி அமைக்கவேண்டுமே அல்லாது விதிமுறையே தவறு என்று வாதிடக் கூடாது.

ஆரம்பப்பள்ளிகளை ஏற்படுத்துவதில் உள்ள காலதாமதங்களை எடுத்துக் காட்டினார்கள். அப்படிப்பட்ட குறையை நீக்கவேண்டும் என்பதற்காகத் தான் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள ஒரு அதிகாரியை ஸ்தல ஸ்தாபனத் துறையில் போட்டிருக்கிறோம். அவர் பொதுமக்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலித்து ஆரம்பப்பள்ளிகளைத் தேவைப்படுகிற இடங்களில் காலதாமதமின்றித் துவக்க முயற்சியை மேற்கொள்வார்கள். ஆகவே இதுபற்றியுள்ள சிக்கல்கள் நீங்கிவிடும் என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மற்றும் கதர், கிராமத் தொழில்களைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டத்திற்கு இந்த அரசாங்கம் விரோதி அல்ல என்று சுட்டிக்காட்டியவுடனே, நமது மதிப்பிற்குரிய திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள், "என்ன அடியோடு காரியத்தைக் கெடுத்துவிட்டீர்களே, காங்கிரஸ்காரர்களைக் கண்டு பயந்துவிட்டீர்களா?" என்று கேட்டார்கள். காங்கிரஸ்காரர்களைக் கண்டு இந்த அரசு பயப்படவில்லை. நினைத்திருந்தால் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அன்றைக்கே ஓர் அறிக்கைவிட்டு, இந்தத் துறையை மூடிவிடுகிற காரியத்தைச் செய்திருப்போம். அப்படிச் செய்யாததற்குக் காரணம் காங்கிரஸ்காரர்களைக் கண்டு பயப்படவில்லை என்றாலும், இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள லட்சக்கணக்கான தொழிலாளர்களைக் கண்டு பயந்தாகவேண்டிய நிலை உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிறது. இன்றைக்கு லட்சத்து ஒன்பதாயிரம் பேர்கள் கதர்த் துறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த லட்சத்து ஒன்பதாயிரம் பேர்களுக்கு என்ன மாற்றுத் திட்டத்தை வைத்திருக்கிறோம் என்பதைச் சிந்தித்தாக வேண்டிய நிலை இருக்கிறது. திருப்பூரில் உள்ள ப்ளீச்சிங் பாக்டரியில்—அதை மூடவேண்டிய நிலை ஏற்பட்டவுடனே அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் அத்தனை பேரும் இங்கே வந்துவிட்டார்கள். உண்ணாவிரத நோட்டீஸ் எடுத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அதைப் பற்றி எங்களிடம் எடுத்துச் சொல்கிற நிலையைப் பார்க்கிறோம். பத்துப் பேர்கள், இருபது பேர்கள் வேலை பாதிக்கப்படுகிறபோதே அதைச் சகித்துக் கொள்ள முடியவில்லை. லட்சத்து ஒன்பதாயிரம் பேர்கள் இந்தத் துறையை மூடினோமானால் பாதிக்கப்படுவார்கள் என்கிறபோது அவர்களுக்கு மாற்றுத் திட்டம் என்ன என்பதை சிந்தித்தாகவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. ஆகவே காங்கிரஸ்காரர்களைக் கண்டு நிச்சயம் இந்த அரசு பயப்படவில்லை. அதில் வேலை செய்கிற தொழிலாளர்களைக் கண்டு பயப்படுகிறோம். செஞ்சிக்கோட்டையில் இருப்பவர்கள் அத்தனை பேரும் தேசிங்குராஜனாகிவிட முடியாது. அதுபோல கதர் போட்டுக்கொள்கிறவர்கள் அத்தனைபேரும் காங்கிரஸ்காரர்களாகிவிடமாட்டார்கள். மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த ஆயிரம் ஆயிரம் பாட்டாளி மக்களும் அந்தத் துறையில் பணியாற்றிவருகிறார்கள். ஆகவே, படிப்படியாக அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிறவர்களுக்கு மாற்றுத் திட்டத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வரையில் இந்தத் துறையில் இந்த அரசு கவனம் செலுத்தியாக வேண்டும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறைகளுக்கு இந்த மாநில அரசாங்கம் கொடுக்கிற தொகை மிகமிகக் குறைவு. கதர்த் திட்டத்திற்கு 12 லட்சம் ரூபாயும், கிராமக் கைத்தொழில்களுக்காக 15 லட்சமும்தான் இந்த அரசு கொடுக்கிறது. ஆனால் மத்தியக் குழுவிடம் இருந்து கதருக்காக 371 லட்சம் கொடுக்கப்பட்டுவருகிறது. கிராமக் கைத்தொழில்களுக்காக 187 லட்சம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே நமக்குக் கிடைக்கிற உதவித்தொகையை சீரான முறையில், இதன் அபிவிருத்திக்காக முறையாக நாம் செலவழிக்க வேண்டும். காதி குழுவின் தலைவர் திரு தேபர் அவர்கள் கூட சமீபத்தில் முதல் அமைச்சர் அவர்களை

சந்தித்தபோது குறிப்பிட்டார்கள்: சென்னை மாநிலம்தான் இந்தத் துறையில் நல்ல முறையில் வேலை செய்வதாகக் குறிப்பிட்டார்கள். 'நல்ல பல திட்டங்களை ஏற்படுத்துங்கள், இந்தத் துறைக்கு மேலும் எவ்வளவு நிதி வேண்டுமானாலும் ஒதுக்குகிறோம்' என்பதாகச் சொன்னார்கள். பனை நார் ஏற்றுமதித் திட்டம், பனை வெல்லம் பாய்ச்சுகிற திட்டம், ஆகியவை போன்ற பல உருப்படியான திட்டங்களை நல்ல முறையில் செயலாக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களும் நல்ல கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும். கதர் என்பதை நமக்கு முன்னே இருந்தவர்கள் கட்சிப் பிரச்சினையாக வைத்திராமல் ஒரு தேசியப் பிரச்சினையாக ஏற்படுத்தி இருந்திருக்க வேண்டும். அதைச் செய்ய அவர்கள் தவறிவிட்டார்கள். நாட்டு மக்கள் அத்தனைபேர்களும், எல்லாக் கட்சிகளும் இதில் அக்கறை கொண்டிருக்கச் செய்யத் தவறிவிட்டார்கள். முக்கியமாக அதற்கென்று ஒரு குழு இருக்கிறது. அதில் 14 பேர்கள் உறுப்பினர்கள். 4 பேர்கள் உத்தியோகத்துறையில் இருப்பவர்கள். பாக்கி பத்துப் பேர்களை காங்கிரஸ் கட்சியில் இருந்தே போட்டு வந்திருக்கிறார்கள். ஒன்றிரண்டு இடங்களில் மாற்றுக் கட்சியினரையும் போட்டிருப்பார்களேயானால் இன்றைக்கு அவர்களே இதன் சிறப்புகளை எல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டு அதற்காக வாதாட முன்வந்திருப்பார்கள். மற்ற கட்சிக்காரர்களிடமே காட்டாது மறைத்து வைத்திருந்ததன் விளைவாகத்தான் பல கோளாறுகள். இன்றைக்கு அனைவருமாகச் சேர்ந்து அதை லாபகரமாக்கிக் காட்ட வேண்டுமென்ற நிலை அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

அடுத்து, வார்டு பிரிவினைகளைப்பற்றிச் சொன்னார்கள். பல்வேறு ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக்காட்டி, மக்கள் தொகை அடிப்படையில் பிரிக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆணைகள் பிறப்பித்திருக்கிறது. மக்கள் தொகைக்கு ஏற்ப வார்டுகளைப் பிரித்து அனுப்புகிறார்கள். நாங்கள் அதை யூனியன் கவுன்சிலுக்குப் போய்வரட்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதோடு பொதுமக்களுடைய பார்வைக்கு அவை விடப்படவேண்டுமென்ற உத்தரவு இருக்கிறது. எந்த எந்தக் குறைகள், எந்த எந்த வார்டு எந்த எந்த முறையில் பிரிக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி எந்த சமூகத்தினரோ, எந்தக் கட்சியினரோ அல்லது தொடர்புடைய தனிப்பட்டவர்களோ எழுதி அனுப்பினால் அரசாங்கம் அவற்றைப் பரிசீலனை செய்து பார்த்து நியாயமான முடிவினை எடுக்கும். இன்றைக்குள்ள ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதுபற்றியும் சொன்னார்கள். ரெவின்யூ யூனிட் என்று வைத்திருப்பதன் காரணமாக உள்ள சங்கடங்களை எடுத்துச் சொல்லி 5 ஆயிரம் ஜனத்தொகை, பத்தாயிரம் வருமானம் என்ற அடிப்படையில் மாற்றுகிற நிலைமையை எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு அந்தச் சங்கடங்களை எல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்து அவைகளைச் சீராகச் செப்பனிடும் காரியங்களைச் செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆண்டுக்கொரு முறை வரி வசூலிக்கின்ற உத்திரவை பிறப்பித்ததாகச் சொன்னார்கள். அந்தச் சட்டம் கடந்த கால அரசாங்கத்தினுடைய செயலால் கொண்டுவரப்பட்டதாகும். இதை உடனடியாக நீக்க வேண்டுமென்றுதான் முயற்சித்தோம். ஆனால் இதிலே சட்டச் சிக்கல்கள் அதிகமாக இருப்பதினாலே அரசாங்கம் இதனைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. விரைவாக அரசாங்கம் இதைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் இவற்றிலே பணிபுரிகின்ற பணியாளர்களைப்பற்றிச் சொல்லப்பட்டது. மாநகராட்சி மன்றம், ஊராட்சி மன்றம் இவற்றிலே பணியாற்றுகின்ற பணியாளர்களைப்பற்றித் தனியாக இந்த அரசாங்கத்திற்கு ஆர்வம் இருக்கிறது என்பதை நான் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு நல்ல உயர்

வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்புகிறது. அவற்றை நல்ல முறையிலே சீர்படுத்தி செம்மைப்படுத்துவதற்கு அரசாங்கம் விரும்புகின்றபொழுது தேவையில்லாத பல துறைகள் அவற்றிலே இருப்பதாக அந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்கள் சொல்லுகிறார்கள். ஒரு பைசாவாக இருந்தாலும் அது பொதுமக்களிடமிருந்து வரியாகப் பெறப்படுகிறது, அதை நியாயமாகச் செலவிட வேண்டுமென்பதில் அனைவரும் அக்கறை செலுத்த வேண்டும். அப்படிப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள் செய்யப்படுகின்ற பொழுது அதனாலே பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு என்ன மாற்றுத் திட்டம் இருக்கிறது என்பதை அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. நீண்ட நெடுங்காலமாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அந்தப் பணியாளர்கள் ஓய்வூதியங்கள் போன்ற ஊதியங்கள் கிடைக்கவில்லை, அரசாங்க ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய வசதிகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. இந்தத் தன்மையை மாற்றுகின்ற முறையிலே அவர்களுக்கும் ஓய்வூதியங்கள் கொடுக்க வேண்டுமென்பதை கொள்கையளவிலே அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. அப்படிக் கொடுக்க வேண்டுமென்ற ஆசை, கருணை அரசாங்கத்திடம் இருந்தாலும் கையிலே காசு இல்லாத காரணத்தினாலே ஒன்றும் செய்ய முடியாத நிலைமை இப்பொழுது ஏற்பட்டுவிடுகிறது. பணியாற்றுகின்ற ஊழியர்கள் நாட்டினுடைய பெரும்பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறோம் என்ற உணர்ச்சியோடு இருக்க வேண்டும். பத்துப் பதினைந்து ஆண்டுகளாக ஊழியர்களாக இருந்தவர்கள் திடீரென்று நீக்கப்பட்டால் என்ன கஷ்டங்கள் படுவார்கள் என்பதை நான் அறிவேன். அவர்களையெல்லாம் தெருவிலே நிற்க வைத்துப் பார்க்க வேண்டுமென்று நானோ அல்லது நான் சார்ந்து இருக்கின்ற அரசாங்கமோ நினைக்காது.

ஒரு சில அதிகாரிகள் இன்னும் பழைமைப் பாசத்திலே இருக்கலாம். அவர்கள் அதை விட்டுவிடவேண்டும். நான் இப்படிச் சொல்வதினாலே அவர்கள் அந்தக் கட்சியிலிருந்தால் அதை விட்டுவிட்டு இந்தக் கட்சிக்கு வந்துவிட வேண்டுமென்று நான் சொல்வதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் கூட இனியாவது அவர்கள் கட்சிச் சார்பற்றவர்களாக நடுநிலைமையாகச் செயல்படுவதற்கான மனப்பக்குவத்தைப் பெறுதல் வேண்டும். அதிகாரிகள் எல்லாம் சரியில்லை என்று சுட்டிக்காட்டுவது நல்லதல்ல. பொதுவாக நம்முடைய மாநிலத்திலே உள்ள அதிகாரிகள் செயல்திறம் மிக்கவர்கள், மற்ற மாநிலத்தவர்கள் எல்லாம் நம் மாநிலத்து அதிகாரிகளை கடன் வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே நம் மாநிலத்து அதிகாரிகள் என்றாலே திறம்படச் செயலாற்றுபவர்கள் என்பது தெரியும். ஒரு சில அதிகாரிகள் முன்பு—இருந்தவர்களுடைய விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு, அவர்களுடைய கட்டாயத்திற்கு ஆட்பட்டு, அடிமைப்படவேண்டிய நிலைமையில் இருந்தாலும் அவர்கள் எல்லாம் சில காலங்களிலே நம்முடைய கருத்தை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவர்கள் இன்றைக்கும் அதே நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்லிவிடமுடியாது. இன்றைக்கு அவர்கள் உற்சாகத்தோடு பணியாற்றுகிறார்கள். மாமியார் வந்துவிட்டால் மனைவிக்குப் பொதுவாகவே கணவனிடத்தில் அச்சம் இருக்கும். மாமியார் வந்திருக்கின்ற நேரத்தில் கணவன் மனைவியை எப்படி அழைத்தாலும், வா, வா, என்று அழைத்தாலும் அவள் வரமாட்டாள், அச்சம் காரணமாக. மாமியார் போனபிறகு மீண்டும் மனைவி கணவனிடத்தில் பேசச் சென்றால், கணவன், 'முன்பு நான் கூப்பிட்டபோது நீ வரவில்லையே, ஆகவே இப்பொழுது என்னிடம் நீ பேசக்கூடாது' என்று சொன்னால் அந்தக் கணவனைப்பற்றி நாம் எப்படி நினைப்போமோ அதைப் போல்தான் கடந்த காங்கிரஸ் சர்க்கார் மாமியார் இருந்தபொழுது அதிகாரிகள் எல்லாம் நம்மிடத்திலே வரவேண்டுமென்று விரும்பியிருந்தாலும்கூட வருவதற்கு முடியாது, அவர்களுடைய விருப்பத்திற்குத் தடை விதிக்கப்பட்ட நிலைமை இருந்தது. ஆனால் இன்றைக்கு அவர்கள் அப்படியில்லை. ஆகவே அவர்களை இன்னமும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக்கூடாது. நாட்டின் பெரும் பகுதிப் பணிகளைச் செயல்படுத்துகின்ற பொறுப்பை அதிகாரிகள்தான் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பொறுப்பினை

மனப்பூர்வமாகச் செய்துகாட்டக்கூடிய முறையில் பணிகளை மேற்கொள்வார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்கு எந்தவிதமான குறையும் இல்லாத வகையில் மன உறுதியோடு அரசாங்கம் செயல்படும் என்பதையும் நான் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாகவே எல்லா உறுப்பினர்களும் அவரவர்கள் தொகுதிகளைப் பற்றிய கருத்துக்களைச் சுட்டிக்காட்டினாலும் நான் அவற்றிற்கு விளக்கங்கள் சொல்லாதுபோனாலும் அவற்றை எண்ணிப்பார்க்கவில்லையென்றோ அல்லது அவற்றைப் புறக்கணித்து விட்டேன் என்றோ யாரும் கருதத் தேவையில்லை. அவர்கள் தெரிவித்த யோசனைகள் அத்தனையும் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அவற்றை நிறைவேற்றுவதற்கு முயலும் என்ற உறுதியை நான் தெரிவித்துக்கொண்டு, இந்த மானியங்களில் கேட்கப்பட்ட தொகையை மிகக் குறைவாகச் செட்டாகக் கேட்கப்பட்டிருப்பதால், மேலும் அதிலே வெட்டுச்செய்தால் கட்டுப்படியாகாது. ஆகவே, வெட்டுத் தீர்மானங்களை யெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியங்களை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி : சமுதாய நல வளர்ச்சித் திட்டத்தைப் பற்றித் தெரிந்து வருவதற்காக மத்தியப் பிரதேசத்திற்கு அனுப்பப்பட்ட ஸ்பெஷல் ஆபீஸர் ரிப்போர்ட் சமர்ப்பித்த பிறகு அதை அப்படியே ஏற்றுக்கொள்வார்களா அல்லது மாற்றம் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மத்தியப் பிரதேசத்திற்கு சென்று வந்திருக்கின்ற தனி அதிகாரி அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருக்கிற அறிக்கை பரிசிலனையில் இருக்கிறது. அதைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களையும் கலந்து பேசியதற்குப் பிறகுதான் முடிவு எடுக்கப்படும் என்று ஏற்கெனவே இந்த மன்றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி மேலும் விளக்கம் கேட்கமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

கோரிக்கை எண் XXII-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் XXII-கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 20,00,000-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXIII-க்கு முன்மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் XXIII. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,61,20,700-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் XXIX-க்கு முன் மொழியப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன் உள்ள கேள்வி—

"கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள் உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,77,96,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்."

கோரிக்கை நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பிற்கு நாளை இறுதி நாள். நாளை காலை, மாலை ஆகிய இரு நேரங்களிலும் பேரவைக் கூட்டம் உண்டு என்பதை நினைவுபடுத்திக் கொண்டு, இன்றைய பேரவையின் நிகழ்ச்சிகளை இத்துடன் முடிக்கிறேன். நாளை காலை 9 மணி அளவில் மீண்டும் பேரவை கூடும். வணக்கம். இரவு. 7-18

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

*235. Notification issued with G.O.P. No. 667, Revenue, dated the 25th March 1967, making an amendment to the Madras General Sales Tax Rules, 1959, published at pages 232—280 of the Rules Supplement to Part I of the *Fort St. George Gazette*, dated the 1st April 1959, as subsequently amended. [*Laid on the Table of the House under section* 53 (5) *of the Madras General Sales Tax Act*, 1959 (*Madras Act* 1 *of* 1959).]

B. Reports, Notifications and Other Papers.

† 94. A Note on Community Development and Panchayat Development—Demand No. XXIII—1967–68 (English and Tamil).

† 95. A Review on the Working of the Stationery and Printing Department during 1966–67 (English and Tamil).

† 96. Note on Demand No. XXIX—1967–68 (English and Tamil).

† 97 Financial Supplement to Demand under Community Development—1967–68 (English and Tamil).

† 98. The Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1967(L.A. Bill No. 10 of 1967) with annexure.

† 99. The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 11 of 1967) with annexure.

100. List of Unstarred questions and answers from Numbers 1 to 34.

---

* Laid on the Table on the House on 12th July 1967.

† Despatched to all Members on 11th July 1967.

APPENDIX I.

(*Vide* Answer to Unstarred Question No. 20 at page 133)

STATEMENT.

The following implements are sold to ryots at subsidised rates as indicated below:—

Name of implement. (1)	*Rate of subsidy.* (2)
1 Melur plough	25 per cent
2 Melur plough sha (s	25 per cent
3 Mould Board plough	33 1/3 per cent subject to a maximum of Rs. 15 per cent plough.
4 Mould Board plough shares	33 1/3 per cent.
5 Wetland Puddler	50 per cent.
6 Buck scrapper	
7 Ridge plough	
8 Bund Former	
9 H.M. Guntaka	
10 Junior Hoe	
11 Burmese Setturn	
12 Role Easy Mohote Wheel	
13 Green Manure Trampler	
14 Levelling Board (where they are not popular)	
15 Japanese inter-cultivator	
16 Hand-operated sprayer	
17 Hand operated duster	

(Items 5 to 17 bracketed together: 50 per cent.)

The following implements are supplied on hire basis collecting the prescribed hire charges:—

1 Hand-operated dusters.
2 Hand-operated sprayers.
3 Wetland puddlers
4 Buck scrapers
5 Ridge plough
6 Bund former
7 H.M. Guntaka
8 Seed Testing Drum
9 Burmese Setturn
10 Groundnut Decorticator
11 Mould Board plough
12 Melur plough
13 Green Manure trampler
14 Seed Drill (for dry land areas only).

Details of hire charges are furnished below:—

These rates are applicable for all the districts in this State.

Value of the implements. (1)	*From* 1957. (2)	*Revised rate from 15th May* 1963. (3)
Rs. 5 and below ..	One anna per day	10 paise per day
From Rs. 6-10 ..	Two annas per day	15 paise per day
Between Rs. 10-40 ..	Addition of one anna for each Rs. 5 or part thereof, when the value of implement is above Rs. 10 and below Rs. 40.	Addition of 5 paise for each Rs. 5 or part thereof when the cost of implement is above Rs. 10 and below Rs. 40.

Value of the implements. (1)	*From* 1957. (2)	*Revised rate from 15th May* 1963. (3)
Between Rs. 40—100	8 annas	Fixed rate or 50 paise
Above Rs. 100	Re. 1 per day	Re. 1 per day.
Above Rs. 500 but below Rs. 1000		From 1st March 1966 Rs. 2 per day.
Above Rs. 1000.		Rs. 2·50 per day.

Power Sprayers and dusters.—

Up to 1962—50 paise per hour.

From 1963—Rs. 2.50 per day.

Hand-operated sprayers and dusters—

Up to September 1962—Re. 1 per day.

From October 1962—25 paise per day.

Tractor, Bulldoser and Matched implements—

Tractors, Bulldozers and matched implements are let out on hire to ryots under Tractor Hiring Scheme. The existing rates of hire charges for different operations are as follows:—

In all districts except Chingleput, Tiruchirappalli and Thanjavur:—

1. Ploughing	Single ploughing with tractor plough. Rs. 37·50 per Hectare.
2. Harrowing	Light cultivating and harrowing with tractor. Rs. 25 per hectare.
3. Levelling	The hire charges per hour as indicated in the hour meters for bulldozers shall be as follows—

Make of the Bulldozers.

TD. 15 ..	Rs. 25 per hour.
TD. 14 ..	
D. 7 ..	
D. 6 ..	
C. 100 ..	
T. 100 M ..	
D 4. ..	Rs. 20 per hour.
TD 9 ..	
TD 6 ..	Rs. 15 per hour.
T 6 ..	

In the districts of Chingleput and Tiruchirappalli—

Ploughing—

Make of Bulldozer or Tractor—

	Rates up to 31st March 1967 for 8 hours. RS.	Rates from 1st April 1967 onwards. P.
John Deere	30 00	Single ploughing with tractor plough Rs. 37·50 per Hectare.
W. 6.	30 00	
David Brown	30 00	
W. D.9.	50 00	

	Rates up to 31st March 1967 for 8 hours. RS.	Rates from 1st April 1967 onwards. P.
Harrowing—		
Make of the Bulldozer or Tractor—		
John Deere	30 00	Light cultivating and Harrowing with tractor Rs. 25 per Hectare.
W. 6.	30 00	
David Brown	30 00	
W. D. 9. (International) ..	50 00	
Make of Bulldozer—		
C. 100	Rs. 175 for 10 hours.	Rs. 25 per hour.
D. 7		
TD. 16		
TD. 14		
T. 100. M.		
TD. 15		
TD. 9, D. 4	Rs. 150 for 10 hours.	Rs. 20 per hour.
TD. 6., T 6.	Rs. 100 for 10 hours.	Rs. 15 per hour.

Up to 31st March 1967, fuel oil should be supplied by the party. From 1st April 1967 the fuel oil should be supplied by the Department.

Thanjavur District (*I. A. D. P. Area*)—

Levelling.	Rate up to 31st May 1966. PER ACRE. RS. P.	Rate from 1st June 1966. PER HECTARE. RS. P.
1 First ploughing (or puddling with cage wheel during June to December).	15 00	45 00
2 First ploughing (during January to May).	12 00	30 00
3 Second ploughing or puddling with cage wheel.	12 00	38 00
4 Second ploughing or cross ploughing with tiller in dry condition.	10 00	30 00

In all districts—

Sugarcane .. .. Rs. 10 per tractor per hour subject to maximum of Rs. 80 per day of 8 hours.

Implements—

(1) Mould Board Plough .. .. .. Rs. 7·50 per hectare subject to minimum of Rs. 15 per day.

(2) Disc Harrow .. .. Rs. 4 per hectare subject to a minimum of Rs. 8 per day.

APPENDIX II

[*Vide* Answer to Unstarred Question No. 21 at page 134]

Name of district. (1)	Name of division. (2)	Total cases booked. (3)	Convicted including collection of compounding feess. (4)	Acquited (5)	Others. (6)
Salem ..	Salem	204	154	5	45 (under trial).
	Assistant Conservators of Forests, Special Mobile Patrol Party, Salem.	1	1	..	..
Dharmapuri	Dharmapuri	17	10	4	3 (2 under trial and 1 undetected.)
Chingleput	Chingleput	..	..	..	..
North Arcot	Vellore East Assistant Conservator of Forests, Special Mobile Patrol Party, Vellore.	140	108	28	4 (Trial).
		8	5	..	3 ,,
	Vellore West	70	55	12	3 (under trial).
South Arcot	Cuddalore South	10	6	2	2 ,,
	Cuddalore North	..	..	..	..
Coimbatore ..	Coimbatore Central	18	17	..	1 (withdrawn by District Forest Officer).
	Coimbatore North	5	4	..	1
	Assistant Conservator of Forests, Special Mobile Patrol Party, Coimbatore.	4	4	..	.. (under trial).
					..
Tiruchirappalli ..	Tiruchirappalli	51	33	7	11 (under trial).

APPENDIX II—*cont.*

Name of district. (1)	Name of division. (2)	Total cases booked. (3)	Convicted including collection of compounding fees. (4)	Acquited (5)	Others. (6)
Thanjavur	Thanjavur	1	1	..	..
Nilgiris	Nilgiris	2	1	1	..
Madurai	Madurai South	20	14	..	6 (3 under trial and 3 undetected).
Madurai	Madurai North Assistant Conservator of Forests, Special Patrol Party, Madurai.	27	9	..	18 (Under trial).
Tirunelveli	Tirunelveli South	3	3	..	..
	Tirunelveli North	22	17	..	5 (Under trial).
Ramanathapuram ..	Ramanathapuram	25	13	9	3 ,,
	Total ..	629	456	68	105

இணைப்பு II.

மாவட்டத்தின் பெயர். (1)	கோட்டத்தின் பெயர். (2)	தொடரப்பட்ட வழக்குகளின் மொத்தம். (3)	இருக்கக் கட்டணம் வசூலித்தது உட்பட தண்டனையளித்து தீர்ப்பளிக்கப் பட்டவை. (4)	விடுதலை செய்து தீர்ப்பளிக்கப் பட்டவை. (5)	ஏனைய வழக்குகள். (6)
சேலம்	சேலம்	204	154	5	45 (வழக்கு விசாரணையி லிருக்கிறது).
	வன உதவிப் பாதுக்காவலர் இயங்கும் தனி ரோந்துப் பிரிவு, சேலம்.	1	1	..	,,
தர்மபுரி	தர்மபுரி	17	10	4	3 (2 வழக்கு விசாரணை யிலிருக்கிறது ஒன்று கண்டு பிடிக்கப்பட வில்லை).
செங்கற்பட்டு	செங்கற்பட்டு	..	..	..	..
வட ஆர்க்காடு	வேலூர் கிழக்கு	140	108	28	4 (வழக்கு விசாரணையி லிருக்கின்றது.)
	வன உதவிப் பாதுகாவலர் இயங்கும் தனி ரோந்து பிரிவு, வேலூர்.	8	5	..	3 (,,)
	வேலூர் மேற்கு	70	55	12	3 (,,)
தென் ஆர்க்காடு	கடலூர் தெற்கு	10	6	2	2 (,,)
	கடலூர் வடக்கு	..	..	..	..
கோயம்புத்தூர்	கோயம்புத்தூர் சென்ட்ரல்	18	17	..	2 (மாவட்ட வனத்துறை அதிகாரியால் திரும்பப் பெறப்பட்டது).
	கோயம்புத்தூர் தெற்கு	..	..	..	..
	கோயம்புத்தூர் வடக்கு	5	4	..	1 (வழக்கு விசாரணையி லிருக்கின்றது).

இணைப்பு—தொடர்ச்சி.

மாவட்டத்தின் பெயர். (1)	கோட்டத்தின் பெயர். (2)	தொடரப்பட்ட வழக்குகளின் மொத்தம். (3)	இருக்கக்கட்டணம் வசூலித்தது உட்பட தண்டனையளித்து தீர்ப்பளிக்கப் பட்டவை. (4)	விடுதலை செய்து தீர்ப்பளிக்கப் பட்டவை. (5)	ஏனைய வழக்குகள். (6)
	வன உதவிப் பாதுகாவலர் இயங்கும் தனி ரோந்துப் பிரிவு, கோயம்புத்தூர்.	4	4	..	..
ருச்சிராப்பள்ளி ..	திருச்சிராப்பள்ளி	51	33	7	11 (வழக்கு விசாரணையிலிருக்கிறது).
ஞ்சாவூர்	தஞ்சாவூர்	1	1	..	..
லகிரி	நீலகிரி	2	1	1	..
துரை	மதுரை தெற்கு	20	14	..	6 (3 வழக்குகள் விசாரணையிலிருக்கின்றன, 3 கண்டு பிடிக்கப்படவில்லை).
	மதுரை வடக்கு	27	9	..	18 (வழக்கு விசாரணையிலிருக்கின்றது).
	வன உதவிப் பாதுகாவலர் இயங்கும் தனி ரோந்துப் பிரிவு, மதுரை.	1	1	..	..
ருநெல்வேலி	திருநெல்வேலி தெற்கு	3	3	..	..
	திருநெல்வேலி வடக்கு	22	17	..	5 (வழக்கு விசாரணையிலிருக்கின்றது).
ாமநாதபுரம்	இராமநாதபுரம்	25	13	9	3 (,,)
	மொத்தம் ..	629	456	68	105

Appendix III.

Statement showing the list of Regulated Markets opened in each district,

[*Vide* Answer to Unstarred Question No. 23 at pages 134 and 135].

Name of the district. (1)	Name of the Regulated Market yard functioning. (2)	Total. (3)
1. South Arcot district ...	1 Tindivanam 2 Virudhachalam 3 Tirukoilur 4 Ulundurpet 5 Cuddalore O.T. 6 Villupuram 7 Panruti 8 Chinnasalem 9 Kallakurichi 10 Valavanur 11 Gingee 12 Kattumannarkoil 13 Thittagudi 14 Chidambaram 15 Sethiathope 16 Pennadam	
2. Thanjavur district ...	1 Thanjavur 2 Pattukkottai 3 Gandharvakottai 4 Aranthangi 5 Orathanad 6 Sirkali 7 Muthupet 8 Adiramapattinam 9 Mannargudi 10 Kuttalam 11 Kumbakonam 12 Tiruvalur 13 Papanasam 14 Koradacheri 15 Sembanarkoil 16 Madukkur 17 Peravurani 18 Tiruthuraipoondi	
3. North Arcot district.	1 Tiruvannamalai 2 Vellore 3 Arni 4 Arcot 5 Tirupattur 6 Gudiyatham 7 Wandiwash 8 Arkonam 9 Chetpet 10 Cheyyar 11 Vaniambadi 12 Chengam	

Name of the district.	Name of the Regulated Market yard functioning.	Total.
(1)	(2)	(3)
4. Tirunelveli district ..	1 Kovilpatti	
	2 Sankarankoil	
	3 Tuticorin	
	4 Pudur	
	5 Kalugumalai	
	6 Kadambur	
	7 Tenkusi	
	8 Ambasiasamudram	8
5, Coimbatore district ..	1 Tiruppur	
	2 Pollachi	
	3 Gobichettipalayam	
	4 Erode	
	5 Coimbatore	
	6 Palladam	
	7 Perundurai	
	8 Dharapuram	
	9 Udumalpet	
	10 Annur	
	11 Punjaipuliampatti	
	12 Vellakoil	
	13 Andiyur	13
6. Tiruchirappalli district.	1 Jayankondan	
	2 Karur	
	3 Alangudi	
	4 Ariyalur	
	5 Manaparai	
	6 Sendurai	
	7 Andimadam	
	8 Thuraiyur	
	9 Keeranur	9
7. Ramanathapuram district.	1 Virudhunagar	
	2 Rajapalayam	
	3 Sattur	
	4 Aruppukkottai	
	5 Singampuneri	
	6 Ramanathapuram	
	7 Paramakudi	8
	8 Kamudi	
	Grand total ..	84

இணைப்பு III

ஒவ்வொரு மாவட்டத்திலும் திறக்கப்பட்ட முறைப்படுத்திய சந்தைகளின் பட்டியலைக் காட்டும் விவர அறிக்கை.

மாவட்டத்தின் பெயர்.	செயல்பட்டுவரும் முறைப்படுத்திய சந்தை அமைந்துள்ள இடத்தின் பெயர்.	மொத்தம்.
(1)	(2)	(3)
1 தென்னார்க்காடு மாவட்டம்.	1 திண்டிவனம்	
	2 விருத்தாசலம்	
	3 திருக்கோயிலூர்	
	4 உளுந்தூர்ப்பேட்டை	
	5 கடலூர் ஓ. டி.	
	6 விழுப்புரம்	
	7 பண்ருட்டி	
	8 சின்னசேலம்	
	9 கள்ளக்குறிச்சி	
	10 வளவனூர்	
	11 செஞ்சி	
	12 காட்டுமன்னார் கோயில்	
	13 திட்டக்குடி	
	14 சிதம்பரம்	
	15 சேத்தியாத்தோப்பு	
	16 பெண்ணாடம்	
2 தஞ்சாவூர் மாவட்டம் ..	1 தஞ்சாவூர்	
	2 பட்டுக்கோட்டை	
	3 கந்தர்வகோட்டை	
	4 அறந்தாங்கி	
	5 ஒரத்தநாடு	
	6 சீர்காழி	
	7 முத்துப்பேட்டை	
	8 அதிராமப்பட்டிணம்	
	9 மன்னார்குடி	
	10 குத்தாலம்	
	11 கும்பகோணம்	
	12 திருவாரூர்	
	13 பாபநாசம்	
	14 கொரடாச்சேரி	
	15 செம்பனார்கோயில்	
	16 மதுக்கூர்	
	17 பேராவூரணி	
	18 திருத்துறைப்பூண்டி	
3 வட ஆர்க்காடு மாவட்டம் ..	1 திருவண்ணாமலை	
	2 வேலூார்	
	3 ஆரணி	
	4 ஆர்க்காடு	
	5 திருப்பத்தூர்	
	6 குடியாத்தம்	
	7 வந்தவாசி	
	8 அரக்கோணம்	
	9 சேத்துப்பட்டு	
	10 செய்யாறு	
	11 வாணியம்பாடி	
	12 செங்கம்	

மாவட்டத்தின் பெயர்.	செயல்பட்டுவரும் முறைப்படுத்திய சந்தை அமைந்துள்ள இடத்தின் பெயர்.	மொத்தம்.
(1)	(2)	(3)
4 திருநெல்வேலி மாவட்டம்.	1 கோவில்பட்டி	
	2 சங்கரன்கோயில்	
	3 தூத்துக்குடி	
	4 புதூர்	
	5 கழுகுமலை	
	6 கடம்பூர்	
	7 தென்காசி	
	8 அம்பாசமுத்திரம்	8
5 கோயம்புத்தூர் மாவட்டம்.	1 திருப்பூர்	
	2 பொள்ளாச்சி	
	3 கோபிசெட்டிப்பாளையம்	
	4 ஈரோடு	
	5 கோயம்புத்தூர்	
	6 பல்லடம்	
	7 பெருந்துறை	
	8 தாராபுரம்	
	9 உடுமலைப்பேட்டை	
	10 அன்னூர்	
	11 புஞ்சைப்புளியம்பட்டி	
	12 வெள்ளைக்கோயில்	
	13 அந்தியூர்	13
6 திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	1 ஜயங்கொண்டான்	
	2 கரூர்	
	3 ஆலங்குடி	
	4 அரியலூர்	
	5 மணப்பாறை	
	6 செந்துறை	
	7 ஆண்டிமடம்	
	8 துறையூர்	
	9 கீரனூர்	9
7 இராமநாதபுரம் மாவட்டம்.	1 விருதுநகர்	
	2 ராஜபாளையம்	
	3 சாத்தூர்	
	4 அருப்புக்கோட்டை	
	5 சிங்கம்புணரி	
	6 இராமநாதபுரம்	
	7 பரமக்குடி	
	8 கமுதி	8
	மொத்தம் ..	84

65024

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK CO., Mylapore, Madras-4.
Messrs. HIGGINBOTHAMS, PRIVATE LIMITED, Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & CO., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No. 2/4, Mount Road, Madras-2.

IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & CO., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & CO., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & CO., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 123, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V. NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE ASSEMBLY.

	2		
(1)	(2)	(1)	(2)